


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003-7.26
LIBRARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003-7-26
LIBRARY.

545997
24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்களுக்கென்று ஒரு குடில்

பொ. கருணாகரமூர்த்தி

ஜெர்மனி

545997

குமரன் பப்ளிஷர்ஸ்

3, மெய்கை விநாயகர் தெரு

வடபழநி, சென்னை 600 026.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு : 1999

உரிமை பதிவு :

விலை ரூ.70/-

| | | |
|---|---|---|
| Tittle | : | Avarkalukkentru Oru Kudil |
| SUBJECT | : | A Collection of Short Stories in Tamil |
| No.of Pages | : | 238 |
| Type | : | 10 Point |
| PAPER | : | 70 GSM Natural Shade |
| Binding | : | Art Board |
| Price | : | Rs. 70/- |
| Publishers | : | **Kumaran Publishers**<br>3, Meigai Vinayagar St,<br>OFF 7th Street, Kumaran Colony,<br>Vadapalani.<br>Chennai - 600 026.<br><br>P. KARUNAHARAMOORTHY<br>SKALITZER STR.142<br>10999, BIRLIN,<br>F.R. GERMANY |
| Copies also Available At | : | **PAARI NILAYAM**<br>184 Broadway<br>Chennai - 600 108. |
| Typeset | : | NAM Process, Chennai-18<br>Phone: 4331808. |
| Wrapper Design | : | Maruthu |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003-7-26
LIBRARY.

## பாலு மகேந்திராவின்
## முன்னுரை

புலம் பெயர்ந்து, பிற நாடுகளில் வாழ்ந்து வரும் ஈழத்துப் படைப்பாளிகள் நவீன தமிழ் இலக்கியத்தை இதுவரை கண்டிராத வேறு ஒரு தளத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இவர்களுள் எஸ்.பொன்னுத்துரை, அ.முத்துலிங்கம், கருணாகரமூர்த்தி போன்றோர் முக்கியமானவர்கள்.

இது, நண்பர் கருணாகரமூர்த்தியின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு. முதற் தொகுப்பில் வெளிவந்த ''ஒரு அகதி உருவாகும் நேரம்'' என்ற தலைப்புக் கதை, சர்வதேச ரீதியில் மிகவும் சிறந்த கதைகளுள் ஒன்றாகும் என்பது எனது கணிப்பு.

கருணாகரமூர்த்தியின் கதைகள் இரண்டு வகைப்படும். ஒன்று, அவரது சொந்த அல்லது நேரடி அனுபவத்தைத் தழுவிய (அதனால் உள்ளடக்க உருவாக்கத்தில் கற்பனை குறைந்த) கதைகள். மற்றவை படைப்பு ரீதியான சுயகற்பனை நிறைந்த உள்ளடக்கத்தைக் கொண்ட புனை கதைகள்.

ஜெர்மனியிலான இருபது ஆண்டுகால வாழ்க்கையில் ஆசிரியருக்கு ஏறுபட்ட அனுபவங்கள், இரண்டாவது உலக யுத்தம் ஏற்படுத்திய கொடுமைகள், இன்றும் ஜெர்மன் முதியவர்களிடம் உண்டாக்கும் துன்பியல் உணர்வுகள் - மற்றும், அந்த நாட்டின் அதீத வளர்ச்சிப் போக்குகளின் பிரதிபலிப்புகள் ஆகியவையே பெரும்பாலான கதைகளுக்குக் கருப்பொருளாக அமைந்துள்ளன.

இவைபோக, எங்கு சென்று எப்படி வாழ்ந்தாலும், பிறந்த மண்ணை மறக்க முடியாதென்பதை நிரூபிக்கும் வகையிலான,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மக்களையும், மண்ணையும் அடியொட்டிய கதைக ளும் உள்ளன.

மனித உழைப்பால் ஒற்றுமைப்பட்ட போதிலும், கலாச்சா ரத்தால் வேறுபடுவதை - ஒட்ட முடியாமல் போவதை - அழுத்தமாக ஆசிரியர் பதிவு பண்ணியுள்ளார்.

ஜெர்மனியில் வசிக்கும் இலங்கை மக்களை மட்டுமல் லாது, இவர்களைப்போல அங்கு வாழும் துருக்கியர்களையும், போலந்து நாட்டவரையும், தாய்லாந்துப் பெண்களையும் கூட கருணாகர மூர்த்தி தனது கதைமாந்தர்களாக நம்முன் உலவ விட்டிருக்கிறார்.

தமிழ் சினிமாவின் தாக்கம்கூட பாத்திரங்களாகவும், உவ மான உவமேயங்களாகவும் ஆங்காங்கே பிரதிபலிக்கின்றன.

இந்தத் தொகுதியிலுள்ள எல்லாக் கதைகளிலுமே, மேம் போக்கான வாய்பாட்டுத் தன்மை குறைந்து, அழுத்தமான ஒரு தனித்துவம் மேலோங்கி நிற்பதைக் காணலாம்.

எத்தகைய முடிவை நோக்கிச் செல்கின்றனர் என்பதை ஊகிக்க முடியாதபடி கதாபாத்திரங்கள் நகர்த்தப்பட்டிருப்பதால் சுவாரஸ்யத் தன்மை அதிகப்பட, ஆர்வமாகப் படிக்க முடிகிறது.

அப்புறம், கருணாகரமூர்த்தியின் நடை ஒரு புதிய - அவருக்கே உரித்தான - எழுத்து நடை: வெவ்வேறு இலக்கிய உத்திகளும், அணுகு முறைகளும், பன்முகப் பார்வைகளும் இருந்த போதிலும் இவையாவையும் நிரவிப் போகும் ஒரு பிரத்தியேக நடை. எடுத்துக் கொள்ளும் கதைக் கருவின் உந்த லால் அவ்வப்போது மாறுபட்டாலும், பொதுவாகப் பார்க்கை யில் 'இது இன்னாரது' என இனம்காட்டும் தனிப்பட்ட ஒரு நடை அவருக்குக் கைகூடியுள்ளது.

எந்த ஒரு படைப்பாளிக்கும் பூரண படைப்புச் சுதந்திரம் அத்தியாவசியம் என்ற கோட்பாட்டைக் கடைப்பிடிக்கும் கரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணாகரமூர்த்தியின் கதைகள் சில, மேலோட்டமாகப் படிப்பவர் களுக்கு ஆபாசமாகப் படலாம்.

இவரது கதைகளில் சமூக - தனிமனிதப் பிரச்சனைகள் பல தொடப்பட்டிருப்பது மட்டுமல்ல, அவை மிகக் கரிசனை யோடும், கவலையோடும், ஆழமாக அணுகப்பட்டும் இருக் கின்றன. கூட்டிக் கழித்துப் பார்க்கையில், ஒருவித சோக உணர்வே இவரது படைப்புகளில் சற்று மேலோங்கி நிற்பதை யும் உணரலாம்.

சிறுகதைகளோடு சிறந்த நாவல்களையும் படைக்க முயல வேண்டும் என விரும்புகிறேன். அதற்கேற்ற திறமை அவருக் குண்டு என்பதை இச்சிறு கதைத் தொகுப்பே சான்று பகரும்.

சென்னை
*25.12.1999.*

பாலு மகேந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. போதிமரம் | 1 |
| 2. ஜெயலலிதா | 19 |
| 3. பகையே ஆயினும் | 44 |
| 4. போர்களும் ரணங்களும் | 54 |
| 5. சுண்டெலி | 68 |
| 6. வீடுமாறுதல் | 90 |
| 7. உபச்சாரம் | 107 |
| 8. தெரிந்தவன் | 117 |
| 9. அக்கரையில் ஒரு கிராமம் | 128 |
| 10. அமீகோ | 146 |
| 11. அவர்களுக்கென்று ஒரு குடில் | 151 |
| 12. அவள் வரமாட்டாள் | 166 |
| 13. விண்ணின்று மீளினும் | 175 |
| 14. வண்ணத்துப் பூச்சியுடன் வாழமுற்படுதல் | 180 |
| 15. பால்வீதி | 210 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003-7-26
LIBRARY.

# போதி மரம்

ஒரு பருவத்தில் எங்கள் வீட்டுப் பெரியவளவின் வடக்காகவுள்ள வாதரவத்தை மேய்ச்சல் தரவையில் ஒரு பிளேனாவது விழாதா........... விழுந்தால் நான் அதன் சில்லுகளை எடுத்து உருட்டி விளையாடலாமே..... என்று அங்கலாய்த்ததுண்டு.

பூனை தூங்குவதை எங்கேயாவது கண்டாற் போதும்...........

தாத்தாவின் மூக்குப்பொடிச்சிட்டிகையை அசுக்கிடாமல் நகர்த்திக்கொண்டு வந்து ஒரு தபாலட்டையில் கொட்டி அதைப் பூனையின் மூக்கில் பிடிப்பேன், பொடி சிரசில் ஏறியதும் அது அச்சு..... அச்சு..... என்று தும்மிக்கொண்டு வீட்டைச்சுற்றிச்சுற்றி ஓடும். மூக்குப் பொடிக்குப் பதிலாக பரிசோதனையைப் புதுமிளகாய் பொடியிலும் மேற் கொண்டு பார்த்து மகிழ்ந்ததுண்டு.

அனேகமாக மதியம் போஷனமான பின்னால் வீட்டில் எல்லோரும் ஒரு குட்டித்தூக்கம் போடுவார்கள். அதுவே என் கிரியாம்சைகளுக்கு அனுகூலமான நேரமாகும்.

ஏனோ ஊரிலுள்ள நாய்களெல்லாம் தத்தமது பணிக ளெல்லாம் முடித்த பின்னால் எங்கள் வீட்டுக்கே சாப்பிட வரும். அம்மாவின் ஜீவகாருண்யத்தை அவைகள ளவிற்கு உணர்ந்தவ ரெவருமிலர். அவையும் சாப்பாடான பின்னால -உண்டகளையுண்டே தொண்டருக்கு மென்று- வேப்பமரத்தின் கீழோ மாமரத்தின் கீழோ சுகமாகப் படுத்துத்தூங்கும். தூங்குகின்ற நாய்களைப்பார்த்தால் ஏனோ எனக்கு கைகள் பரபரக்கத்தொடங்கும். கல்லைத் தேடித்தேடிப்போகும். லோட் டோவில் சில மில்லியன் டொலர்களை இலகுவில் வென்றிடலாம், விழிப்பாயிருக்கிற நாயொன்றைக் கல்லால் அடிப்ப தென்பது நம்மால் ஆகாத காரியம்.

அடிபட்ட நாயின் அலறல் எனக்குப் பொருட்டேயில்லை........... நான் ஒரு பத்தடி றேஞ்சுக்குள்ளாக நின்று வைக்கும் குறி மட்டும் பிசகப்படாது. நான் அடித்த கற்களின் பருமனைச் சொன்னேனாகில் நீங்கள் வீடு தேடிவந்து உதைப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஒரு நாள் எனது கல்லடி பட்டுத்துடித்துப் பதைத்து ஜெட் வேகத்தில் ஓடிய வெள்ளை உடம்பும் கண்ணைச்சுற்றி கரு வளையமும் கொண்ட மறையன் நாயொன்றுக்கு (சற்றே பழக்கமானது கூட) என் நட்டணையின் உக்கிரத்தில் பாதிவழியில் ரோஷம் வரவும் திரும்பிவந்து என் கெண்டைக்கால்தசையை ஈய்த்துவிட்டு ஓடியது.

மாலையானதும் வண்டில் குடப்பூண் வளையமொன்றை வைத்து பென்ஸ்காரின் ஸ்டியறிங் ஆகக்கற்பனை பண்ணிப் பிடித்துக் கொண்டு மாமா வீட்டுக்கும் எங்கள் வீட்டுக்கும் பொழுது போக்கு டிரைவிங் பண்ணிக்கொண்டிருப்பேன். டிர் டிர்ர் டிர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர் என்பதிலும், அடிக்கடி ஹார்ணை முழக்குவதிலும் வாயும் தொண்டையும் வலி எடுக்கத்தொடங்கிய பின்னாலேயே காரை நிறுத்திவைப்பேன்.

இந்த மெர்செடெஸ் பென்ஸ் கார் எப்போது இலங்கையில் பிரபலமானது என்ற விடயம் நாற்பதுகளின் விருப்பமில்லாத பக்கத்திற்கு வந்துவிட்ட அனேகமான கார் அபிமானிகளாகவுள்ள இளைஞர்களுக்கும் தெரியும். அறுபதுகளின் ஆரம்பத்தில் தேசியலொத்தர்ச்சபை ஆரம்பிக்கப்பட்டபோது முதன்முதலாக இலங்கரத்தினா என்றோர் மாண்புமிகுவின் உத்தியோகபூர்வ பாவனையிலிருந்த பென்ஸ் கார் ஒன்றையே முதற்பரிசாகக கொடுத்தார்கள். மேற்படி காரின் வழு வழுப்பான படம் எல்லாப் பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்தப்பட்டது. பார்த்துப்பார்த்து ரசிப்பேன்.

பின்னாளில் உஸ்தியோகம் பண்ண கொழும்பு வந்து டார்லி வீதியில் குடியிருந்தபோது அதே வீதியில்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைச்செயலகமும் இருந்தது.

அதன் தலைவி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா வெண்ணைக் கட்டி மாதிரி வழுக்கிக்கொண்டு ஒரு கிளாசிக்கல் டைப் மெர்செடஸ் பென்ஸில் அங்கே அடிக்கடி வந்து போய்க்கொண்டிருப்பார். வாழ்வில் முதன் முதலாக பென்ஸின் நேரடித் திவ்யதரிசனம் கிட்டியதும் அங்கேதான்! பார்த்துப்பரவசங்கொண்டேன்......... கம்பீரமும், ராஜகளையும் நிறைந்த பென்ஸ்காரைப்போலவே அடிக்கடி என் பால்யவயதுக் கனவுகளில் கலந்துவிட்ட இன்னோர் பொருளு முண்டு. அது எக்கோடியன் என்பதாகும்.

புத்தூர் சிவன்கோவிலின் பிரசித்தமான பூங்காவனத்திரு விழாவில் கண்ணன் கோஷ்டியின் இசைநிகழ்ச்சியின் போதே அதை முதன் முதலாகக்கண்டேன், காதலுற்றேன். அதில் ஸோலோவாக அப்போது பிரபலமாக இருந்த நௌஷத்தின் இசையமைப்பிலான – தேரே பியார் – என்ற பாடலை அபாரமாக வாசித்ததவர் ஆங்கே அங்கார்ந்து இரசித்த விடலைப்பெண்கள் பக்கம் தன் பார்வையை எறிந்து விட்டு, அதன் வெள்ளிமுகத்தில் தந்தத்தினை ஒப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்த -கீ- களில் விரல்களை அனாயாசமாக விளையாட விட்டு குரோம் சிவப்பு நிற பெல்லோவைப்பற்றி நூற்றியெட்டு விதமான ஸ்டைலில் இழுத்தும் அமுத்தியும் வாசித்து என் மனதைக் கொள்ளை கொண்டிருந்தார்.

விஷயம் விளங்கிய ஒருவரிடம் அதன் நாமம், அது கிடைக்கும் ஆரூர் என்பன பற்றி உசாவினேன். அவரோ அது ஜேர்மனியில் மாத்திரம் கிடைக்குமென்று செப்பினார். ஜேர்மனி என்ன அன்டார்டிக்குப் போயாவது ஒரு எக்கோடியன் வாங்கிவிடுவது என்று சங்கல்ப்பம் செய்துகொண்டேன்.

பின்னால் பென்ஸ்கார்கள்கூட ஜேர்மனியில்தான் தயாரா கின்றன என்ற விஷயத்தையும் நானாகவே தெரிந்துகொண்டேன்.

என் கனவுகள் எல்லாமே மறுக்க முடியாதபடி நிறைவேறின. ஆனால் அவை ஒவ்வொன்றிற்குள்ளும் ஹைக்கூ கவிதையின் முடிச் சுக்கள் போலச் சில மர்மமுடிச்சுக்களும் பொதிந்தேயிருக்கும். முடிச்சு அவிழ்க்கப்படும் போது மத்தளம் அவிழ்த்த அனுபவமே ஏற்படும்.

பென்ஸ்கார் கனவுள் இருந்த முடிச்சை அவிழ்த்து விடு கிறேனே........................

புலம் பெயர்ந்து......... புயலில் அகப்பட்ட பஞ்சுப்பொதியாய் அலைந்து அலைந்து ஒருகால் ஜேர்மனியில் வந்து தரையிறங்க நேர்ந்ததா............

கலர் கலராய் தினுசுதினுசாய் எல்லா பென்ஸ்கார்களையும் நல்லாய் ஜொள்ளுடன் பார்க்க முடிந்தது. சில காலம் கழிய...... - இந்தா நல்லாய் ஆசை தீர நாளொன்றுக்கு 8 மணித்தியாலங்கள் வைச்சு அளைஞ்சு அளைஞ்சு ஓட்டித்தொலை- என்று நிஜமாகும் பென்ஸ்காரே கிடைத்தது.

ஆனால் அதன் தலையில் தங்கத்தின் மஞ்சள் கொண்டு மின்னொளியில் துலாம்பரமாய் தகதகக்கும் 4 எழுத்துக்கள்.

எந்தக் கோணத்தில் நின்று எந்த மொழிக்குரிய முறையில்தான் வாசித்துப்பார்த்தாலும்...... அஃதை.....-T..A..X..I -என்றுதான் வாசிக்கலாம்!!!

வாலிபம் வந்த பின்னால் புதிதாய் வந்த ஆசைகள் நீங்கலாக...... நான் விஷேச ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருந்த இன்னொரு விஷயம் என்னவென்றால்...............................அது மாமிச உணவுவகைகள்தான்!!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்வனவற்றுள் வண்டிச்சில்லு, பறப்பனவற்றுள் விமானம், நீருள்ளவற்றுள் கப்பலும் நீங்கலாக.............

எல்லாமே சாப்பிடுவேன்!!!!!!!!. இவ்வதீத ஈடுபாடும் இரசனையும் என் தாத்தாவின் ஜீன்ஸ்வழி வந்திருக்கவேண்டும்.

அவர் மீன் வாங்கிய உமலுக்கான பணத்தைச் சேமித்திருந்தாலே இன்னுமொரு வீடு கட்டியிருந்திருக்கலாம், என்பாள் பாட்டி.

அவர் இலங்கை இராணுவத்தில் கட்டளை பிறப்பிக்கும் உத்தியாகத்தருக்கும் மேலாக பெரிய பதவிவகித்தவர், சொல்லப் பட்ட மாமிஷ பட்ஷிணி.

திங்கள், வெள்ளிகளில் தாத்தாவைச்சாப்பிடக் கூப்பிடுவ தெனில் நிறைய ஓடிப்பிடிக்க வேண்டியிருக்கும். வந்தாலும் முனகிக் கொண்டு தான் வேறுயாருக்காகவோ சாப்பிட நேர்ந்ததைப்போல வைத்து நன்னிக்கொண்ருப்பார்.

தாத்தாவுக்கு அவர் டேஸ்டையொத்த நண்பர்களும் அதிகம். பிரதி சனிக்கிழமையும் பெரிய கிடாய் வாங்கி அடித்து பங்குபோடுவார்கள்.

மற்ற நாட்களிலும் அவருக்கு விறைத்துக்கொண்டு நிற்கும் ஃப்றெஷான மீன் வேணும். நாங்கள் அச்சுவேலி புத்தூர்ச் சந்தைகளில் வாங்கிவருபவை சற்றுத்துவண்டால் போதும்............. தூக்கி நாய்க்குக் கடாசிவிட்டு இரும்புக்கடை போல் தோற்றம் தரும் தன் பழைய சொக் அப்சோபர்களே இல்லாத மொடல் B.S.A மோட்டார்சைக்கிளை ஸ்டார்ட்பண்ணி "புடும்.......... புடும்" என்று வெடித்துக்கொண்டுபோய் பண்ணையிலோ, பாலைதீவிலோ விளையோ, பாலையோ, கணவாயோ, நண்டோ எதுவானாலும் பெரிய உருப்படியாய் கொண்டுவந்து சேர்ப்பார்.

தேர்ந்த மிளகாயில் கூட்டு அரைத்து, உள்ளி, தாளிதம் சேர்த்து மணங்கமழ குழம்பு, பொரியல், மாங்காய்சேர்த்து சொதியென அம்மா அமர்க்களப்படுத்துவார்.

மீனோ, இறாலோ சந்தையில் அவர் மனம் தொடாமற் போயிற்றென்றால்................. இரண்டு கோழிகள் வாங்கி வருவார்.

மாமி அதிலாக்கும் கறிகளும், எலும்புகளைக்கூட்டி வைக்கும் ரசமும் நாளாவட்டத்தில் எந்நாக்கையுந்தான் அபரிமிதமாக கூராக்கிவிட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிக்கிழமைகளில் ஆரதக்கறிகளுடன் சோறுதொண்டை யால் இறங்காமல் தவிக்கும் கொடுமையைப்பார்த்து அம்மா வெளியில் அடுப்புமூட்டி -ஓம்லெட்- போட்டுத்தருவார்.

தாத்தா அடிக்கடி நண்பர்களுடன் தன் "Webely & Scotch" இரட்டைக்குழல் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு வன்னிக்கு வேட் டைக்குக் கிளம்பிவிடுவார். மானும், மரையும், காட்டுப்பன்றியும் அடிக் கடி நம் வீட்டில் அறுபடும்.

தாத்தா மகா உல்லாசி......... அடிக்கடி தன் நண்பர்களுடன் வெளியூர்ப்பயணங்கள் வேறு செய்வார். ஒரு முறை திரு கோணமலைக்கு புறப்பட்டார்கள். கூட்டாளிகளில் ஒருவர் 12 வயதில் ஒரு மகனையும் கூடவே அழைத்து வரவும் தாத்தா என்னையும் வெளிக்கிடச்சொன்னார்.

திருகோணமலையை டவுணை அடையவும் இரவாகியது. கடற்கரையோரமாக அமைந்து வீதியின் கலிங்கை கடல் அலைகள் வந்து வந்து மோதியதில் ஈரமாகிக்கொண்டிருந்த வீதியைத்தாண்டி (China Bay?) ஒரு வாடிவீட்டினுள் கார் நுழைந்ததுவும், வாசல்முகப்பில் இரண்டு பெரிய வெள்ளை அன்னங்கள் கழுத்தை ஒன்றுடன் ஒன்று பின்னியவாறு இருக்கும் பெரிய படத்துடன், முன் விறாந்தையின் முழுநீளத்திற்கும் வெளிநாட்டு குடிவகைகளின் கலர்ப்படங்கள் இருந்ததும் ஞாபகத்தில் இன்னும் இருக்கிறது.

தாத்தா எனக்கும் மற்றப்பையனுக்கும் சான்ட்விட்சுக்கள் வாங்கித்தந்தார். அவர்களுக்கு பெரிய லயன் லாகர், ஸ்ரவுட் போத்தல்கள் நுரைத்துக்கொண்டு வந்தன. பெரிய இறைச்சிறோஸ்ட் துண்டங்களை பன்றிமுட்களால் குத்தி கடித்துக்கொண்டு பியர் குடித்தார்கள்.

சாதாரணமாக வீட்டில் கோழி இறைச்சியுடன் சாப்பிடும்போது கூட ஈரல், மற்றும் நெஞ்சின் மென்மையான பகுதிகளை என்னிடம் தந்துவிடும் தாத்தா அன்று என்னையே கண்டுகொள்ளாதது வியப்பாயிருந்தது.

பிறகு அம்மாதான் சொன்னா.............. : "அடேய் அது மாட் டிறைச்சியடா!"

அச்சுவேலிவரை தனியே சைக்கிளில் போய்வர வீட்டில் பெர்மிஷன் கிடைத்தபோது முதன்முதலாக அப்பேரூரின் பேமஸ் தயாரிப்பாம் கொத்துரொட்டிக்கடைக்கே முதல் விஜயம் புரிந்தேன். அதன் சுவையோ நாவின் சுவை அரும்புகளின் ஜீன்களில் கலந்துவிட ஒவ்வொரு சனியும் டியூஷன் முடிந்த பின்னால் சைக்கிள் தானாகவே கொத்துரொட்டிக் கடைக்கேயேகியது! கொத்து சுவைத்த விஷயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் தெரியவரின் தலைவாசலுக்குள் புகுரவே அனுமதிக்க மாட்டார்கள். (தாத்தாவுக்கு மிலிடரிக்காரன் என்று விதிவிலக்கு).

எனக்கு பன்னிரண்டு வயது இருக்கும்............

ஒரு மாரிகாலம் ஊர்க்குளங்கள் எல்லாம் நிரம்பியிருந்த நேரம்.............

நுணுவில் குளத்தில் போய் நீந்தலாம் என்று நண்பர்கள் ஆசைகாட்டினார்கள்.

வீட்டில் எப்பிடியோ ஒரு டிமிக்கி கொடுத்துவிட்டு குளத்தில் போய்க்குதித்தோம். மேய்ச்சல் மாடுகள் இறங்கி தண்ணீர் குடிக்கும்படியாக குளத்தின் அடிமட்டம் சாய்வானது. மறுகரை மகா ஆழம்!

எம் பகுதியில் மாரியில் பூக்கும் ஒரு ஜாதி வெள்ளை ஓர்கிட் பூவொன்று தனியாக மறுகரையில் பூத்திருக்கவும் ஒரு சோப்ளாங்கி குளத்தின் குறுக்காக நீந்திப்போய் அதைக்கொய்து வருபவனுக்கு 5 ரூபாய்கள் பரிசளிப்பதாக அறிவித்தான்.

பிருஷ்டத்தில் 3 தபாற்பெட்டிகள் உள்ள களிசானை வரிந்து கட்டியிருக்கும் பயலிடம் ஏது ரூபாய் என்ற சிந்தனையில்லை. குதித்துவிட்டேன், பணம் கிடைக்குமா கிடையாதா எனக்குப் பொருட்டேயல்ல..........எனது நீச்சல் திறமையை இந்த சர்வதேச மத்தியஸ்தரிடையே காட்டிப்பெருமை பெறவேண்டுமென்பதே என் அவா!

நீந்திப் பாதிக்குளம் தாண்டமுன்னே மூச்சிரைத்தது, பண்ணியது மூடத்தனமென்பது நன்கு புரிந்தது...............

கையைக்காலை மேற்கொண்டு அடிக்கமுடியவில்லை. ஆழ்கடலில் சிறகு ஓய்ந்த பறவையானேன். அமிழப் போகிறோமென்ற பயத்தில் உடல்சோரவும் பாய்மரக்கப்பலாக புற்கள் குவிந்து சிறிய புற் போர்த்திண்டு ஒன்று காலில் அடியில் தட்டுப்பட்டது. அப்பாடா!......... பிழைத்தேன். அதில் நின்று இளைப்பாற்றிக்கொண்டு தகரம் பிள்ளை யாருக்கு நன்றி சொன்னேன்.

பின்னொரு விசையில் மீண்டும் புறப்பட்டுப் பூவைப் பறித்துவிட்டேன்! நண்பர்கள் என் சாகஸத்தைக்கண்டு ஆரவாரித் தனர்.

இனி திரும்பவேண்டும்................

பயமாயிருந்தாலும் நடுவில் புற்போர்த்திண்டு கை கொடுக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. திரும்பினேன். மையப்பகுதியை அடைந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீந்ததும் மூச்சிரைக்கவும் திண்டைத் தேடினேன். அது பிய்ந்தோ நகர்ந்தோ போயிருக்க வேண்டும்...................காணவில்லை......!

அவயவங்கள் சோர்ந்து முக்குளிக்கத்தொடங்கவும் நண்பர்கள் சும்மா நான் தமாஷ் பண்ணுகிறேன் என்று எண்ணி விட்டார்கள். நீந்திப்போனவன் திரும்பி வரமாட்டானா என்ன?

கத்தவென்று வாய் திறந்தால் வாய்க்குள் தண்ணீர் போனது.

மூக்கு வழியாகவும் தண்ணீர் உள்ளே போய் சுவாசக் குழாய்களில் சுட்டது. கைகள் என்னதான் பதினாறாங்காலத்தில் தவில் வாசித்தாலும் உடல் கீழே கீழே போய்க்கொண்டிருந்தது.

தண்ணீருக்குள் அமுங்கும்போது அத்திண்டு எங்காவது தென்படுகிறதா என்று பார்த்திருக்கலாம். மூளை நிதானித்து சிந்திக்கும் நேரமா அது? மரணாவஸ்த்தையை அனுபவிக்கத் தொடங்கினேன். நான் அமிழ்ந்து கொண்டிருக்கவும் பயந்து பெடியள் கூச்சல் போட்டிருக்கவேண்டும்........

அருகில் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த இளைஞனொருவன் பாய்ந்தோடி வந்து குதித்து என்னைக் கரையேற்றினான்.

நுணுவில் குளம் பல பேரைப் பலிகொண்ட திருக்குளம்.

நான் அங்கு போன, நீந்திய, தவில் வாசிச்ச விஷயம் ஏதாவது அப்பருக்கு மட்டிலும் தெரியவந்துதோ முதுகுத்தோலை உரித்து இன்னொரு தவில் கட்டிவிடுவார்.

மறுநாள் யாழ்ப்பாணம் போன தாத்தா மோட்டார்சைக்கிளின் பின்னமைந்த வலைப்பெட்டியில் கால்கள் பிணைத்துக்கட்டியபடி இரண்டு ஆமான கோழிகளுடன் வந்து இறங்கினார்.

எங்கள் வீட்டில் இறைச்சியுடனான ஒரு வேளை சாப்பாட்டுக்காகவும், தாத்தா கொடுக்கும் அரைக்கிளாஸ் மெண்டிஸ் ஸ்பெஷல் சாராயத்திற்காகவும் கோழி உரித்துத்தரும் குடியானவன் சுந்தரனுக்கு அன்று ஏதோ பிற சோலி வரவில்லை. தத்தாவே களத்தில் இறங்கிவிட்டார். மிலிட்டரிக்காரனாச்சே விடுவாரா?

பழைய நெஸ்ரோமோல்ட் பேணியொன்றில் நிறையத்தண்ணீர் கொண்டுவரச்சொன்னார். கோழியை கால்கள் பிணைத்தபடியே இருக்க இறகையடிக்க விடாமல் அமுக்கிப்பிடித்தபடி அதன் தலையை தண் ணீருக்குள் முங்கினார்.

கோழி முக்குளித்துத் திமிறியது, கால்களை உதறியது, தாத்தாவின் இடுக்கிப்பிடி யிலிருந்தும் வழுக்கிவிட்டு இறகுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்விசிறியைப் போலும் அடித்தது. சூழவிருந்த தூசும், புழுதியும் காற்றில் பறந்தன. தாத்தா இறகுகளுக்குள்ளாக அதன் இடுப்பைப்பற்றி விரல்களால் அதன் சிறுநீரகங்களை நசுக்கினார். இறகடிப்பின் வேகம் படிப்படியாகக் குறைந்தது.

இக்கோழி இப்போது அனுபவிக்கும் ஒவ்வொரு மரணாவஸ்த்தைக் கணங்களும் நேற்று நான் அனுபவித் தது............. எனக்கு ஒரு ஆபத்பாந்தவன் கிடைத்தான். பாவம் கோழிக்கு...............?

உலகத்தில் உள்ள துன்பத்துள் எல்லாம் தலையாயது மரணாவஸ்தைதான். கோழி அனுபவிக்கும் அவஸ்த்தையை எண்ணி எனக்குள் அழுதேன்.

கோழியின் சிவப்பாயிருந்த கொண்டைப்பூக்கள் கறுப்பாய் மாறவும் அதைத்தரையில் வைத்துவிட்டு மற்றக்கோழியையும் முங்கினார்.

நாவுக்கு ருசியாய் ஒரு வேளை சாப்பாடு தருவதற்காய் தன் உயிரையே தரும் அவலம்........அச்சிறு பறவைக்கு ஏன் நேர்ந்தது..

எமக்கு பழக்கதோஷத்தால் எமக்காக மரணிக்கும் உயிர்களின் அவஸ்த்தை புரிவதில்லை....... பொருட்படுத்துவ தில்லை....... தொடர்ந் தும் கொன்று கொண்டிருக்க முடிகிறது. நான்தான் பாதியாக அதை அனுபவித்தவனாயிற்றே.............

இனி எனக்காக ஒரு உயிரும் மரிக்க வேண்டாம்...........

இனி எனக்காக ஒரு உயிரும் மரிக்க வேண்டாம்...........

தீர்மானித்துக் கொண்டேன். அம்மாவிடமும் சொல்லிக் கொண்டேன். அம்மாவுக்கு என் திடீர் ஞானோதயத்தின் அடி முடி ஒன்றும் புரியவில்லை. சொன்னார்: அதொன்றும் உன்னால முடியிற காரியமில்லை போடா..................!

நான் பிடிவாதமாக இருந்தேன். பாதகமில்லை.......ஒம்லெட் ஆவது சாப்பிர்றா.......என்று எவ்வளவோ வற்புறுத்தியும் நான் மசியவேயில்லை. அம்மாவும் பாட்டுக்கு விட்டுவிட்டார்.

இரண்டு கிழமைகள் போயிருக்கும்.

உறவில் மைத்துனர் ஒருவருக்கு திருமணமாகியது. வீட்டில் புதுமணத்தம்பதிகளை விருந்துக்கு அழைத்தார்கள். விருந்தென்றால் கேட்கவும் வேணுமா? அம்மாவும், மாமியும் போட்டி போட்டுக்கொண்டு அமர்க்களப்படுத்தினார்கள். மாமிசவகைகள் ஆடு, கோழி, நண்டு, கணவாய், இறால் என அனைத்துமே குசினியுள் அணிவகுத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைச்சி வகைகள் சமைப்பதை அம்மா பொறுப்பெடுத்து கொண்டா. அவருக்குத்தான் அதில் விசேஷ நிபுணத்துவம் உண்டு.

மாமி கொழும்பில் படித்தபோது ஒரு முஸ்லிம் தோழியின் சினேகிதத்தால் குசினிவரை புகுந்து அவர்கள் பாணிச்சமையலைப் பண்ணப் பழகிக்கொண்டா.

பாலைமீனையும், அறக்குளாமீனையும் ஒரு மைக்கூட்டுப் பெட்டியின் பருமனுக்கு திண்மத்துண்டங்களாக வெட்டி, பின் ஏதேதோ மசாலைகள், வியஞ்சனங்கள், பொடிசெய்தமிளகு, கறுவா எனப்புரட்டி, சிறிது கொத்தமல்லியிலை , உள்ளி , ரம்பைக்குழை எல்லாம் போட்டு ஒரு வதக்கல் புரட்டல் பண்ணி மேசையில் பரிமாறுவதற்காய் ஒரு கண்ணாடிப்பாத்திரத்தில் இளமஞ்சள், பிறவுண் துண்டங்களென மாறிமாறி அழகாக அடுக்கப்பட்டபோது அவை என்னைப்பார்த்து ஒரு மோகினிச் சிரிப்பை வீசின!

மேலும் சாண் நீளமிருந்த, சிவப்புக்கூந்தல் களையப்பெற்ற பண்ணைக்கடல் இறால்கள், சின்னவெங்காயத்துடன் சேர்ந்து பொன் நிறத்தில் தீய்ந்தபோது சுழன்று எழுந்து வந்த நறுமணம் என் நாசியில் மொத்தி மொத்திச் சித்தம் தடுமாற வைத்தது!

இந்த மணமே வராத ஓரிடத்தில் போய் இருப்போமென்று தாத்தாவின் கார்செட்டினுள் போயிருந்தால் விக்ரமாதித்தனின் பூதம் போல் அங்கேயும் மணம் துரத்திக்கொண்டு வந்து தாக்கி என்னை நிராயுதபாணியாக்கிற்று.

எனது அவஸ்தை யாருக்கும் புரிவதாயில்லை. தாத்தா ஒரு கிளாஸ் மென்டிஸ் ஸ்பெஷலை உள்ளே இறக்கிவிட்டு, கூடத்தில் விருந்தினருடன் ஏதோ இங்கிலீஷில் விளாசிக் கொண்டிருந்தார். அக்காவை புதுப்பெண்ணைத் தனியாகத்தங்கள் அறைக்கு அழைத்துப் பேர்ய் எஸ் கொண்டை பிடிக்குமா இல்லை பொனிரெயில் பிடிக்குமா என்று செவ்வி கண்டுகொண்டிருந்தனர்.

சமையல் முடிவடைந்து சாப்பாடுகள் அனைத்தும் மேசைக்கு எடுத்துவரப்பட்டு எல்லாருமே சாப்பிடத்தயாரான போது...... – எடட்டட்டட......... சமையல் அவசரத்தில இவன் தம்பியின்ரை மரக் கறியை மறந்து போனன்.............என்றபடி குசினியுக்குள் ஓடிய மாமி வாசலில் நின்று " எங்கே மச்சாள் முழ நீளத்தில கத்தரிக்காயொன்று வைச்சன் காணேல்ல.......... " என்று கையில் ஒரு முழம் போட்டுக் காட்டி அம்மாவிடம் கேட்டா. "காணாட்டாப்போகுது............ அந்தப் புடலங்காயைக் காய்ச்சுங் கோவன்........" என்று இவ பதில் டயலொக் பேசினா. இரண்டுமே நமக்குச் சத்துராதியான காய்கள்!!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதென்ன புதிசாய் ............? எல்லாமே ஒரு செட் அப் நாடகமென்று அப்போது எனக்கு உடனே விளங்கவில்லை. முக்காற்பங்கு மனசு வேறு பலவீனப்பட்டுப்போயிருந்தது , காற்பங்கு மனசுக்கு ஏற்கெனவே சமைத்துக் களைத்துப் போயிருந்தவர்களை இன்னும் சிரமப்படுத்த இஷ்டமில்லை. தலையைக் கவிழ்ந்தபடி சொன்னேன்:" –மாமி உங்களுக்கேன் வீண் சிரமம்..............? நீங்கள் சமைச்சதையே நான் சாப்பிடுறன்............!"

மாமியும் , அம்மாவும் ஒருவரையொருவர் மேற்கண்ணாற் பார்த்து நமுட்டுச்சிரிப்பு சிரிச்சதை நான் காணவேயில்லை......... போங்கள்!

ஆரம்ப ஜெர்மனி வாசத்திலும் என்னதான் விறைத்துப் போயிருந்த கோழியானாலும் நானே அதன் அவயவங்களை முறித்தும், நெஞ்சை வகுந்தும் துண்டு பண்ணி சமைத்த பின்னால் சாப்பிட மனசு மிகவும் கஷ்டப்பட்டது. சைவனோ, பெளத்தனோ, பெளராணிகனோ மாமிசமே புசியாதவர்கள் மீது மிகுந்த மரியாதை ஏற்பட்டது. ஒருமுறை சில நண்பர்களுடன் ஹம்பேர்க்கில் வெளிநாட்டவர் வதியும் குடியிருப்பு ஒன்றிற்கு இலங்கைத் தமிழர்களும் நிறையப்பேர் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டுப் போனோம். எதேச்சையாக அவர்கள் குசினிக்குள் நுழைந்த எனக்குப் பேரதிர்ச்சி! எங்களூர்ப் பள்ளிக் கூடத்தில் என்னைவிட 2 வகுப்புக்கள் ஜூனியராகப்படித்த ஐயர்ப்பெடியன் ஒருவன் பெரிய கோழியொன்றை மல்லாக்கப் போட்டு வகிர்ந்து கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் அசடு வழிந்து கொண்டே சொன்னான்:'...........என்ன செய்யிறது இஞ்சை வந்து எல்லாத்தையும் மாத்த வேண்டியதாய்ப்போச்சு........... நீங்களெப் பவந்தனீங்கள்...........?" –மாமிச உணவுகள் மரக்கறியைவிட சுவையானவைதான். நானும் ஒத்துக்கொள்றன்...........ஆனால் பிறப்பிலிருந்தே அதன் சுவையை என்னவென்றே அறியாமல், உயிர்ப்பழி சேராமல் வாழ்ந்து விடுவதும் ஒருவகைத் தவம்............. ஒருவகைப் பாக்கியம்............ மாமிச உணவுப்பழக்கத்துக்கு நொடியில மாறலாம்........... ஆனா அதைத் துறப்பதென்பதுதான் வல்லை! ஐயர் ஏன் துறக்க வேணும்? என்பது போல் என்னைப்பார்க்க வேறொருவர் சொன்னார்:" ஐயர் பாவம்............... இரண்டு முட்டையெண்டாலும் பொரிக்காட்டில் அவர் துண்டாய்ச்சாப்பிடமாட்டார்.............."

ஒரு வாரம் கழித்து எனக்கு ஒரு கடிதம் வந்திருந்தது.

அன்பான சகோதரனுக்கு:

உங்கள் வார்த்தைகள் எந்தன் ஆழ்மனதில் தைத்து விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய ஷரி ஆ விலோ, குர் ஆனிலோ ஒரு புனித வசனம் வருகிறதாம்............... நீ தப்பான பாதையில் எவ்வளவு தூரந்தான் சென்றிருந்தாலும் பரவாயில்லை............. ஆனால் திரும்பி வந்து விடு.............! என்று.

நீங்கள் நான் திரும்ப வேண்டிய எல்லையை எனக்குக்காட்டி விட்டீர்கள். நான் திரும்பிவிட்டேன். உங்களுக்கு என் நன்றிகள் என்றும் உரியன.

இப்படிக்கு

இ.சங்கரநாராயணசர்மா "ஹம்பேர்க்"

கடிதம் வந்த நாள் முதலாய் "ஊருக்குத்தான்டி உபதேசம் உனக்கில்லையடி............" என்று இருக்க முடியவில்லை.

எனது பிரியமான ஹம்பூகர்கூட தொண்டையால் நகர மறுத்தது!!

ஐந்துபேர் கொண்ட எமது சமறியில் எனக்கு சமையற்கலை பூஜ்ஜியமாதலால் நான் கொள்வனவுப் பணிகளைத்தான் கவனித்து வந்தேன்.

ஓரிடத்தின் அட்ரசைத்தந்து அங்கே இறைச்சி அடித்து விற்பார்கள்-விலையோ நல்ல மலிவு- போய் வாங்கி வா, என்று அனுப்பினார்கள்.

அங்கோ ஆறு மாசக்கன்றுகளைக்கூட அறுப்பதற்காக கூண்டில் அடைத்திருந்தது நெஞ்சை உலுப்புவதாக இருந்தது!

"இத்தனை பிஞ்சுக்கன்றுகளைக்கூடவா அறுப்பீர்கள்?"

என்று கேட்டதற்கு "கேள்விப்படவில்லையா கால்ஃப் ஸ்ரேக் என்று....... அதற்குத்தேவையான மென்மையான இறைச்சி கன்றுகளிலே தான் கிடைக்கும்" என்று பதில் தந்தார்கள்.

என் பகுத்தறிவுக்கு எட்டாதன சில: இந்த மிருகங்கள் பலிக்களத்திற்கென்று வந்துவிட்டால் எத்தனை நாட்கள்தான் குடலைக் காயப்போட்டாலும் ஒன்றுமே தின்னாதாம்!

ஊரிலும் மாடடிக்கும் ஆசாமியொருவன் எங்கள் தெருவுக்கு வந்தாலே போதும்........ மாடுகள் எல்லாம் சிவப்புத்துணி காட்டியது போல மிரளும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறை மாடுகள் கூட்டமாக மேய்ச்சல் தரவையிலிருந்து திரும்பிக் கொண்டிருக்கையில் இவன் சைக்கிளில் வந்து அவற்றிடையே புகுரவும் அவை சிதறித்தறிகெட்டு ஓடத்தொடங்கின.

அவற்றை ஓட்டி வந்த அம்மணியோ அகராதிகள் எதிலும் அடங்காத அரும்பொருள் வார்த்தைகள் சேர்ந்தாற்போல தொடர்ந்து அணிவகுத்துவர அரைமணிக்கும் மேலாக அவனைத் திட்டித்தீர்த்தாள்!.

அவன் அயலூர்தான் போனாலும் மாடுகள் அவனைக்கண்டால் மிரளுமாம்!

இப்போவெல்லாம் அசைவமுள்ள மேசை அருகே போனாலோ பிளேட்டில் நான் முன்பு ஆசையாய் வளர்த்துப் பின் நாயோ , பேயோ கொண்டு போய்விட்ட அழகான வெள்ளைச் சீமைமுயல் சிவப்புக்கண் களுடன் என்னைப் பாந்தமாய்ப் பார்த்தபடி லேசாக நடுங்கியபடி படுத்திருக்கிறது........... ஆவலாய் தூக்கினால் அதன் வயிறு பிளந்து கிடக்கிறது! கை இரத்தத்தில் தோய்ந்து சொட்டுகிறது...........!

சில வேளைகளில் இன்று புதிதாய்ப் பிறந்த குஞ்சுகள் வெள்ளையும், மஞ்சளும், சிவப்புமாய்..........நிறைந்திருக்கின்றன.

சாணே உயரம் வரும், பால் மணக்கும் ஆட்டுக்குட்டிகள். அலங்க மலங்க விழிக்கும் பார்வையில் உயிர்வழிய, அலை அலையாய்ச் சுழித்தோடும் ரோமம் நெஞ்சோடு நெருக்கிக் கட்டிக்கொள்ள வேண்டும்போலிருக்க..........கை நீட்டித்தொட பயமா யுள்ளது............. மறுபடி விரல்கள் குருதியில் தோயுமோ......? ”

இதை யாரிடமும் சொல்லவும் முடியாது. சொன்னால் குண்டுக்கட்டாகத் தூக்கிக்கொண்டு போய் சைக்கியாட்டிஸ்ட் முன்னால் போட்டுவிடுவார்கள்.

படுத்தாலும் தூக்கம் முன்பு போல் வந்துவிடுவதில்லை மான்குட்டிகளும், வாத்துக்குஞ்சுகளும், பெங்குயின் தவ்வல் களும், உடம்பை என்னில் தேய்த்துக்கொண்டு வந்து ஏதேதோ பேசுகின்றன!

அவை என்மனச்சாட்சியிடம் என்ன பேசுகின்றன.......... எதை யாசிக்கின்றன...... என்று தெளிவாக புரிகின்றது. நான் பாசாங்கு பண்ணமுடியாது!

நான் அவற்றிடம் வாக்குறுதி பண்ணியதை என் டயறியில் எழுதிப்பார்க்கிறேன்:

எனவே இனி.

எனக்காக ஒரு கன்றும் அலறவேண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுநசியின் பின்னிரவில் ஒரு ஆடும்

தலை அறுந்து துடிக்க வேண்டாம்..................இனி

ஒரு குஞ்சும் மூச்சடங்கிப் பதைக்கவேண்டாம்!

வெள்ளிச்சிறுமீன்களே சுறாக்களே

நண்டுக்கனவான்களே .................... இம்சிக்கேன்

இனி நும்மை நானே!

நான் விழையும் சுதந்திரம் உம்மையும் சேர்த்தது தான்!

போராளியே சுதந்திரத்தைப் பறிப்பதா?

வெட்கம்......! வெட்கமிது......!

இளமார்பாய் விளைமீன்கள் தருமோகம்

வாள்கொண்டு துள்செய்தேன் சத்தியம்!

ஓ! என் பட்டு வெள்ளாட்டுப் பூங்குட்டியே.........

நீயும் நானும் இந்தப்பக்கம் வருவது...

இம்முறை மட்டிலுமாய் இருக்கலாம்!

ஆதலால் கை கொடு.........

விளையாடி நாம் ஓய்ந்த பின்பு

நட்புடன் நாம் விடைபெறுவோம்!

எனவே இனி......... எனக்காக........

எழுதி முடித்த உடன் உள்ளூர்ப் பத்திரிகை ஒன்றுக்கு அனுப்பிவைத்தேன். மறுவாரமே பிரசுரமாகியது.

சில நாட்கள் செல்ல...............லண்டனில் இருந்து உறவும், நண்பனும், மார்க்சிஸ்ட்டுமான விசாகன் ஒருவாரம் ஈஸ்டர் விடுமுறையென்று பெர்லின் வந்தான்.

"ஆமாங்......... கவிதை பார்த்தேனே.....–சிறகு.–....லே! எல்லாம் நிஜமா....."? என்றான்.

"ஓம்–என்றேன்."

"நீதான் பூனையாச்சே........... எப்பிடிச் சாத்தியமாயிற்று...."?!

"எல்லாம் மனதில் வந்துவிட்ட ஒரு மாற்றந்தான்........."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்போ முன்பெல்லாம் ஏன் மாற்றம் வரவில்லை.........?"

"மனதில் பாவம் பண்ணுகிறோம் என்ற சிந்தனை இல்லாத நாளே இல்லை. இருந்தும் சுவை உணர்வுகளுக்கு அடிமைப்பட்டு அதை வெல்லமுடியாதவனாக இருந்துவிட்டேன் தோழரே!"

"உலகத்தில பயோலொஜிகல் பலன்ஸ், ஃபுட் செயின் என்று சில விஷயங்களிருக்கு....... அதில வெஜ், நொன் வெஜ், என்கிற விஷயங்களுக்கே இடமில்ல..................... மனுஷங்கிற லாஸ்ட் லிங்....... விலங்குகள்ல சில பெர்செண்ட் வெஜிடேரியன்ஸா மாறிடதால உலகத்தில எதுவுமே புதிசாய் ஆகிடப்போறதில்லே............ அத்தோட ஆத்மீகிகளுக்கு........ ஐ..... மீன்.... அத்வைதிகளுக்குக்கூட பாவம் , புண்ணியங்கிறது இருவேறு சங்கதியளில்லைத் தெரியுமோ.........!"

"தெரியும்.......... என் எளிமையான சிந்தனை எப்பிடியென்றால்........ஜீவகாருண்யம் என்கிற உணர்வு மனிதன் என்கிற விலங்கிலதான் வேறெந்த விலங்கையும் விட சிறப்பாய் வளர்ந்து விட்டிருக்கு....! நீ சொன்ன விஷயங்களும் இதே மனுஷன் அறிவில பட்ட விஷயங்கள்தான்.......... ஆனால்... அறிவாலயோ புத்திசாலித் தனத்தாலோ இல்லை தர்க்கத் தாலேயோ விளக்கப்பட முடியாதது ஜீவகாருண்யம்!.......... நீ தியறிரிகலாய் சரி என்று சாதிக்கிற ஒரு காரியத்தை ஒரு சமயத்தில உன்னாலகூட பண்ண முடியாமல் போகும் பார்...........!"

"நான், அப்பிடியில்லை...... எனக்குச் சரியென்று பட்டதை எந்தக்கட்டத்திலும் செய்யத்தயங்கிற ஆள் நானில்லை....."

"இல்லைத்தோழரே.... உன்னாலும் இயலாமப்போகலாம்.!"

என் மறுப்பு அவன் தன்மானத்தை மிகவும் சுட்டிருக்கவேணும்..........

எழுந்து "1000 டொய்ச் மார்க்ஸ் பெட்....." என்றான்.

"விஷயத்தைக் கேளாமலே........பெரிய்ய்ய பெட்.....லாம் பிடிக் கிறியே....."

"சரி.....சொல்லு....."

"கண்ணா நீ கால்ஃப் (கன்று இறைச்சி) சாப்டுவாயில்ல.........! –

"யெஸ்........வை......நொட்...........................!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பிடியென்றால்.......சரிதான்.........நீ வந்த களைப்புத்தீர முதல்ல குளிச்சு சாப்பிடு........ நம்ம விஷயத்தைப் பின்னேரம் வைச்சுக்கொள்ளலாம்........"

சாப்பாடானதும் அவன் சற்றே தூங்கினான். நானும் அவன் அங்கிருந்து எனக்காக வாங்கிவந்த சி.டி.டிரோமில் இருந்த கொம்பியூட்டர் புரோக்கிராம்களைப் போட்டுப் பார்த்துக் கொண் டிருந்தேன்.

தூக்கம் கலைந்து கண்விழித்ததும் சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துகொண்டு.......

"என்னாச்சு....பெட்....! – என்றான்.

நான் மறந்தாலும்........ அவன் விடுகிறமாதிரியில்லை....!

அவனை நேராக குசினிக்குள் அழைத்துப்போனேன். அங்கு ஷெல்ஃப் ஒன்றைத்திறந்து அங்கிருந்த ஆறேழு தினுசான கத்திகளில் ஒன்றை எடுத்துக்கொள்ளச் சொன்னேன்.

ஒரு மாதிரி முழித்துப்பார்த்தபடி "என்ன சொல்ற நீ........!" என்றான்.

"வேறொன்றுமில்ல.......... பெர்லின் புற எல்லையில ஒரு பெரிய ஃபார்ம் ஒன்று இருக்கு........... இப்ப போனமென்டால்......... நல்ல மலிவில கன்றோ, ஆடோ, இல்லை பன்றியோ எது வேணுமென்றாலும் உயிரோட வாங்கலாம்......... நான் ஸ்பெஷல் பெமிஷன் எடுத்துத்தர , நீ என்ன பண்ணிறாய்....... அதை வெட்டித்தாறே............. மேல நான் றோஸ்டோ, குழம்போ, ஸ்ரேக்கோ எதுவேணுமென்றாலும் உன் இஷ்டம்போல பண்ணித்தாறன்....!"

"நீ என்ன விளையார்றயா.......... நானென்ன புட்சரா........!"

"ஒரு நாளைக்கு புட்சராத்தான் இருந்து பாரன்....... கன்று சாப்பிர்றது உனக்கு உடன்பாடுதானே கண்ணா........!"

"எனக்குப் பழக்கமில்லாத ஒன்றைப் பண்ணச்சொன்னால்.....!"

"உன்னை இதைப்பழகி பெர்லினில இறைச்சிக் கடை யொன்றா வைக்கச்சொல்றன்.....? கொள்கையில சரியென்று நீ ஒத்துக்கொள்ற ஒரு காரியத்தை ஒரு நாளைக்கு ஒரேயொருதடவை செய்கையில பண்ணிக்காட்டு என்கிறதுதான் என் கட்சி..!"

"நீ என்னை அதிகமாய்த்தான் சோதிக்கிறாய்..!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் முழிசலையும், அசடு வழிந்ததையும் பார்க்க சங்கடமாயிருந்தது.

"கொலையை நாம தூர இருந்து பார்க்கிறதாலே....... அல்லது பார்க்காமலே விடுறதாலேதான் அந்த வலி அவஸ்த்தை எம்மை அவ்ளவாய் பாதிக்கிறதில்லை....... ருவண்டா படு கொலைகள் மாதிரி...... நேர்ல மகா கொடுமைடா............. நீ இஷ்டப்பட்டா நாளைக்கு உன்னை ஒரு இடத்துக்குக் கூட்டிப்போறன் வாறியா..?"

"ஏன் ஜெர்மனியில இப்பவும் மரணதண்டனை கொடுக்கிற வழக்கம் எல்லாமிருக்கா......!"

"மனுஷருக்கில்லை...."

இப்படியே நாம் பேசிக்கொண்டிருக்க மற்றைய அறைவாசிகளும் ஒவ்வொருத்தராக வந்து சேரவும் எல்லோருக்கும் இது......விசாகன்....... பயோகெமிஸ்ட் என்று அறிமுகப்படுத்தினேன்.

இரவு முழுக்க நண்பர்களுடன் தினவுதீர –பிக் பாங் தியறி , ஒளி வருடங்கள் , றிலேட்டிவிட்டி தியறி என்று பிரபஞ்சவெளியில் அகப்பட்ட எல்லாவற்றையுந்தான் ஆராய்ந்தார்கள்!

மறுநாள் ஒரு சனிக்கிழமை. இறைச்சி வாங்கலாமென்று (எம் வாடிக்கையான இடத்திற்கு) இருவரும் புறப்பட்டோம்.

அப்போது பார்த்து பெரிய லொறியொன்றில் மாடுகள் வந்து இறங்கிக்கொண்டிருந்தன.

மாடடிக்கும் கூடங்களை அவர்கள் என்னதான் தண்ணீர் பீய்ச்சிக்கழுவிக் கொண்டிருந்தாலும் காற்றில் இரத்த வெடில் இருந்தது. மரணம் காலடிக்கு வந்துவிட்டதை உணர்ந்து கொண்டன போலும்! மாடுகள் மிரண்டன! சில கண்ணீர் உகுத்தன.

லொறியால் இறங்கவே மறுத்தன!! விட்டுவிடுவார்களா?

கண்கள் தெரியாதபடிக்கு மாட்டின் முகத்தை ஈரத்துணியால் மூடிவிட்டு, கழுத்தில் இரும்புச்சங்கிலியை பிணைத்து மின்மோட்டோர் இணைக்கப்பட்ட கப்பியால் இழுத்து இறக் கினார்கள். இழுப்பிற்கேற்ப நடக்க மறுத்துக்கால்களைப் பரப்பியும், முன்னூன்றி உதைத்தும் பிறேக் பிடித்தவை லொறியிலிருந்து மடாலென கீழே விழுந்து இழுபட்டன.

எந்த ஆபத்பாந்தவனுமே வரமுடியாத சூனியத்தில் இருமருங்கிலும் இரும்புக்குழாயாலான கிராதிகளின் வழிகாட்டலில் அவை வேறுவழியின்றிப் பரிதாபமாக உள்ளே சென்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மாடும் உள்ளே சென்று மறையவும் "ஷுக் " என்றொரு சத்தம் மட்டிலும் கேட்கும்......... பின் அக்கூடத்தின் கூரைவழியே பொருத்தப்பட்ட குழாய்களில் வழுக்கிக்கொண்டு வரும் கொக்கிகளில் இறைச்சியாய் தொங்கிக்கொண்டு குளிரூட்டப்பட்ட அறைகளுள் நுழைந்தன.

நாங்கள் வந்த நோக்கம் மறந்து இதையே பார்த்துக் கொண் டிருக்கவும்............ கரட்டி ஓணான் போல சிவந்து பார்த்தவுடனேயே போலந்துக்காரர் என்று யாரும் சொல்லிவிடக் கூடிய தடியான இரு ஆசாமிகள் அக்கூடத்திலிருந்து வெளியே வந்தார்கள். கையில் கொண்டுவந்த சிறிய றொக்கட் லோஞ்சர்கள் போலிருந்த கொலைக்கருவிகளை ஓரமாக இருந்த மரக்குற்றி யொன்றில் சாய்த்துவிட்டு சிகரெட் பிடித்தார்கள்.

அவர்களிடம் போய் பவ்யமாகவே........... "....எப்படி இவ்வளவு சீக்கிரத்தில் இறைச்சி வெட்டுகிறீர்கள் என்பதை நாங்கள் பார்க்கலாமா.........!" என்றோம்.

"முடியாது...... தடுக்கப்பட்டுள்ளது.... ! "என்றனர் இருகுரலில்!

தமிழராய்ச்சே........விட்டுவிடுவோமா...? ஒரு பியர்க்குலைக்கு ஆனதை கையுள் வைத்து அமுக்கி னோம்........ காவிப்பற்களை ஒரு தரம் முழுமையாகக் காட்டிவிட்டு உள்ளே கூட்டிப்போயினர்.

காங்கேயன்காளை மாதிரி வளைந்த பெரிய கொம்புகளுடன் ஒரு வெள்ளை எருது வந்தது.

ஒருத்தன் அக்கருவியை மாட்டின் நெற்றிப்பொட்டில் வைத்துக்கொண்டு அதன் விசையை அழுத்தவும்.........–ஷஜக்– என்று ஒரு சத்தம் வந்தது......... அவ்வளவுதான்!

அவ்வுலோஞ்சருள்ளிருந்து ஒரு மாட்டுவண்டியின் அச்சு அளவுக்கு இருக்கக்கூடிய உலோகக் கதிர்உரு ஒன்று புல்லட் மாதிரிப்புறப்பட்டு நெற்றிப்பொட்டைத் தொளைத்துப் பிடரிவரை போய் மூளையைச்சிதைத்து விட்டுத் தேமே என்று திரும்பவும்......... மாடு தொபுகடீர் என்று பாட்டில் விழுகிறது....!

ஒரு சிறு துடிப்போ......... அசைவோ இருக்க வேணுமே......ஊகூம்......!

ஒரு மரக்குற்றியைப் போல மாடு இன்னொரு பட்டறைக்கு தானுயர்த்திகளால் மாற்றப்பட................ தோலுரித்தலும் , இரைந்து கொண்டுவரும் மின்வாள்களால் துண்டாடலும் கண்முன்னே கணத்தில் நிகழ......... இறைச்சியாக குளிரூட்டல் அறைக்குள் நுழைகிறது............!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாகன் "இந்த ஒரு வாரம் பெர்லினில் இருக்குமட்டும் உனக்கு கொம்பனி தாறேன்" என்று தானும் மரக்கறியையே சாப்பிட்டான்.

இலண்டன் போன பின்னால் எழுதினான்

"அது என்னவோ தெரியவில்லை சாப்பிடவென்று அமர்ந்தால்...... அந்த வெள்ளை எருதும், கன்று களுந்தான் மேசையில் நெடுக்காகப் படுத்துக்கொண்டு என்னைப் பரிதாபமாய்ப் பார்க்குதுகள்......... என்னால இனிமேல் இந்த ஜென்மத்தில மாமிசம் சாப்பிடலாமென்று தோன்றேல்ல... ".

**(கிழக்கும் மேற்கும், இலக்கியச் சஞ்சிகை, இலண்டன் 1997)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா

## (1)

ஜெயலலிதாவுக்கு பூஞ்சையான அனீமியாத்தேகம். இடை வயிறு பிருஷ்டம் எல்லாம் ஏகத்துக்குப் பேதமின்றி சுள்ளல் வாழை போலிருக்கும். குடிசை வாசி. தென்னகத்து ஜெயலலிதாவின் ஐஸ்வரியஙகளைக் கனவு காணக் கூடத் தெரியாது. என்ன போகிற போகிற இடங்களில் ஏதாவது அவளுக்கு சுவாரஸிமானதாய் பட்டு விட்டால் போதும் மணிக்கணக்கில் அதையே விடுப்புப் பார்த்துக கொண்டு நிற்பாள். அவளுக்கு சுவாரஸியம் தரும் விஷயம் இன்னதுதான் என்றில்லை. அது நடுங்கல் சின்னவிக்கிழவனின் தலையோடு சேர்ந்து குலுங்குகிற குருவிக்குடுமியாயிருக்கலாம், தெள்ளு உதறத் துள்ளும் ஒரு நாயாயிருக்கலாம், அல்லது கைலாசநாதர் வீசி எறிந்த சிகரெட்டுப் பக்கெற்றாகக்கூட இருக்கலாம். பார்க்கத் தொடங்கினாளானால் ஒரு தபஸாக அதனுடனேயே ஒன்றிப்போய்விடுவாள்.

பிறகு அவளை இந்த லோகத்துக்குத் திருப்ப எவராவது அவள் காதுக்குள் கூக்காட்டினால் சரி அல்லது அவளாக எப்போது மீளுவாள் என்று சொல்ல முடியாது.

அவள் தாய் லெச்சுமியோ அவளது இந்தப் பேய்ப்பார்வை பேச்சியம்மனின் குறைபாடென்று எத்தனையோ தடவைகள் அம்மனுக்கு கண்மடல் செய்வித்து அர்ப்பணித்தும் பூசாரியைக்கொண்டு கயிறு மந்திரிச்சுக்கட்டியும் விட்டாள். அம்மனும் குணமாக்கிவிட்ட பாடாயில்லை.

புத்தர் கலட்டி பௌத்த பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தவள் 1968 ஏப்றில் கலவரங்களுக்காக தொடர்ந்தாற்போல் பத்துநாட்கள் மூடியிருந்த பாடசாலை மீண்டும் திறந்தபோது –சேகுவேராக்காரங்கள் பள்ளிக்கூடத்துக் குள்ளே பூந்து புள்ளங்களை அள்ளிக்கொண்டு போறாங்களாம் – என்று கள்ளம் பண்ணிக்கொண்டு பள்ளிக்குப்போக மறுத்துவிட்டாள்.

உள்ளதுக்குள்ள ஆளுமோ அச்சுப்பிச்சு, அதுவும் படிப்பு மில்லையென்றால் இவள் எப்படித்தான் தன் காலத்தைத் தள்ளு வாளோ என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையில் தகப்பன் பொன்னனும் எவ்வளவோ சொல்லி அவளைப் பள்ளிக்கு அனுப்பிவைக்கப் பார்த்தான். அவனால் முடியவில்லை.

"அம்மாவுக்கும் படிப்பு பத்தாதுதானே............... கையெழுத்து வைக்கத்தெரியா............ அவவைப் போகச்சொல்லு முதல்ல."

மடுத்தது மடுத்ததுதான்.

சிங்கப்பூர் பென்சனியர் கைலாசநாதர் புத்தர் கலட்டியில் மேற்குத்தெரு வெள்ளாளரின் பள்ளக்காணி ஒன்றுள் கொட்டில் போட்டு குடியிருந்த பொன்னன்–லெச்சுமி குடும்பத்தை மாதம் இருநூற்றைம்பது ரூபாய் சம்பளம் பேசி அந்திரானை ஏற்றத்தில் தன்னுடைய தென்னந தோப்புக்கு காவலாய் குடியிருக்கச்சொல்லி கொட்டிலும் போட்டுக் கொடுத்துக் குடிவைத்ததிருக்கிறார். லெச்சுமி ஆரம்பத்திலேயே பென் சனியரிட்டை நிபந்தனையாய் சொல்லிப் போட்டாள்.

"சம்பளத்தை என்ர கையிலதான் தரவேணும். அந்தக்குடிகார ஏக்கி கையில கொடுத்திட்டு என்னை அலைய விட்டிடாதையும்."

கைலாயரும் நல்ல மனுஷன். அவர்களுக்கு வெளியில போய் வேறு வேலைகள் செய்யப்படாது இப்பிடியிப்பிடியென்று எந்த நிபந்தனையுமே விதிக்கவில்லை. ஒவ்வொரு மாதமும் காணி பார்க்க வரும்போதே காசை எண்ணி அவள் கையில் கொடுத்துவிடுவார்.

பொன்னனும் லெச்சுமியும் தோப்புக்கு குடிவந்தது முந்தாநாள் மாதிரியிருக்கு. இன்றைக்கு பதினேழு வருடங்களாகிவிட்டன.

அவர்கள் அங்கே குடிவந்த வருஷம் பிறந்தவள்தான் ஜெயலலிதா. ஆயிரத்தில் ஒருவன் படத்தில் எம். ஜி. ஆருடன் வந்து தெறித்த ஜெயலலிதாவைக் கண்ணோடு பொன்னன் கொண்டுதிரிந்த வேளைபார்த்து இவளும் பிறக்க உடனே ஜெயலலிதா என்று பெயர் வைத்துவிட்டான்.

பென்சனியர் கொடுக்கிறது கவுண்மேந்துச்சம்பளம் மாதிரி மாதாமாதம் அவர்களுக்கு வள்ளீசா சாப்பிட்டுப் பிழைக்க போதும்.

லெச்சுமியும் வெங்காய வைப்பு, தாளரிவை, மிளகாய் பிடுங்க என்று அச்சுவேலி இடைக்காடு வளலாய் ஈறாகப்போய் ஏதாவது சம்பாதிப்பாள். சம்பாதிச்சு பொன்னனுடைய கண்ணில காட்டாமல் சேர்த்துச்சேர்த்து வைச்சிருந்திட்டு எங்கையாவது வட்டிக்கு கொடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருக்குகிறே னென்று கொடுத்து ஏமாந்துவிடுவாள். பொன்னனுடைய பாஷையில தாயும் மகளும் படு பேச்சியள். விபரம் பத்தாததுகள்.

பொன்னன் பேர்போன குளிவாள் அரிவுகாரன். நல்ல உழைப்பாளி. அதுவும் தான் மேல்வாள் அரிவுகாரனென்று அவனுக்கு சரியான லெவெல். நீர்வேலி திருநெல்வேலி அரிவு பட்டறைகளிலே சாதாரண முட்டாள்தர தொழிலாளிகளுக்கு 20 அல்லது 30 ரூபாய் சம்பளமென்றால் பொன்னன் அவர்களுடன் சதுரஅடிக்கணக்கில் வேலை யைப் பொருத்தத்தில் பேசி எடுத்து தினம் 50 ரூபாய் உழைத்துக் கொண்டு வருவான். எவ்வளவுக்கெவ்வளவு உழைப்பாளியோ அவ்வளவுக்கவ்வளவு சோக்காளி.

முப்பது ரூபாய்க்கு எப்படியும் குடித்துவிடுவான். லெச்சுமி கையிலேயும் காசு புழக்கமிருக்கென்று தெரிந்தால் அவளிடம் ஒரு சதமும் தரமாட்டான். வேலை முடிந்த பின்னால் ஊரிலுள்ள கள்ளுக்கொட்டில் எல்லாம் தடவிக்கொண்டு அவனால் சைக்கிள் எனச்சொல்லப்படும் துருவேறிய அந்த இரும்புக்குழலில் ஏறி

"அச்சம் என்பது மடமையடா

அஞ்சாமை திராவிடன் உடமையடா

ஆறிலும் சாவு நூறிலும் சாவு

தாயகம் காப்பது கடமையடா – உன்

தாயகம் காப்பது கடமையடா.............. " என்று பாடிக்கொண்டு வீடுவந்து சேர இரவு ஒன்பது பத்து மணியாகும்.

பொன்னனின் லைட் இல்லாத அந்த வாகனத்தை அதை அவன் ஓட்டி வருகையில் அதன் சக்கரங்கள் தோசை சுடுவதுபோல ஒரு மாதிரி ஓவலாய் சுற்றிச் சுற்றிவர பெல்லைத் தவிர்த்து அதன் ஏனைய பகுதிகள் அனைத்தும் ஒவ்வொரு வகையான சத்தம் எழுப்பும். அதை பொன்னனைத் தவிர வேறுயாரும் நல்ல சைக்கிள் சேர்க்கஸ் வித்தை தெரிந்தவர்களன்றி மற்றவர்களால் எல்லாம் ஓட்டிவிட முடியாது.

கோழி கேருவது மாதிரி கேரிக்கொண்டு அவன் சைக்கிள் தூரத்தில் வரும்போதே தாயும் மகளும் கண்டுபிடித்துவிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாவதொரு நினைப்பு வந்து வடையோ, வாய்ப்பனோ அல்லது வேறேதாவது தின்பண்டமோ வாங்கிவந்தால் வாசலிலேயே "லலிதாக்குட்டி........... லெச்சுமிச்செல்வம்" என்று அன்பு பெருகச் சத்த மாகக் கூப்பிட்டுக்கொண்டு வருவான்.

லெச்சுமியும் நல்ல மூடிலிருந்தால் "ஓய்..........ஓய்.........ஓய்" என்று சொல்லிக் கொண்டுபோய் வாசலுக்கே வந்து வரவேற்பாள்.

பொன்னனுடைய ஒரு நல்ல பழக்கம் எத்தனை மணிக்குத்தான் இரவு வந்து படுத்தாலும் அடுத்த நாள் புத்துணர்ச்சியுடன் எழுந்து வேலைக்குப்போவான். அதனால் அவனது வேலை வட்டகையிலும் நம்பகமான ஒரு தொழிலாளியென்று அவனுக்கு நல்ல பெயர்.

பொன்னன் மனம் மிக மகிழும் மற்றொரு விஷயம் சினிமா.

நாடோடி மன்னன், மனோகரா, ஹரிதாஸை 50 தடவையும், மன்னாதிமன்னன் , பக்கீஷா, அஞ்சானாவை, கீத்தை 40 தடவையும், , பாசமலர், மர்மயோகி , சித்திரலேகா, அனார்க்கலி, சர்வாதிகாரி, உத்தமபுத்திரன், வணங்காமுடியை 30 தடவையும் பார்த்ததாகச் சொல்லுவான்.

பொன்னனுக்கு நல்ல குரல் வளம். கொஞ்சம் கள்ளு உள்ளேபோய் பிசிறுகள் எடுபட்டு தொண்டை திறந்த பின்னால் எடுத்த எடுப்பிலேயே மேல் ஸ்தாயியிலேறி–

"எங்கள் திராவிடப்பொன்னாடே

கலை வாழும் தென்னாடே

இயலிசை நாடகம் அறம் பொருளின்பம்

இலங்கும் செந்தமிழ் நாடே........... " என்று பாடினானேயானால் சும்மா டி. ஆர். மஹாலிங்கமே உயிர் பெற்று வந்துவிட்டது போலிருக்கும்.

"இவ்வளவு படம் பார்த்திருக்கிறியே.............. படத்துக்கு லெச்சு மியைக் கூட்டிக்கொண்டு போறேல்லையே?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கட்டின புதிசில அவளையும் மூன்று நாலு படத்துக்கு கூட்டிக்கொண்டுதான் போனானணை............... அது பேய்க்கு கதை ஒண்டும் விளங்காதும். இடையில நாரியுக்கை உளையுது வீட்டைபோவம் எண்டுவள்........... கரைச்சல். இப்பிடித்தான் எங்க வீட்டுப்பிள்ளை பட இடைவேளைக்குப் பிறகும் கேக்கிறாள் இது வேறை படமோவெண்டு............. எனக்குச் சங்கையீனமாய்போச்சும்."

தனியப்போய் ஒரு சின்ன(அரை)ப்போத்தல் எடுத்து மடியிலை சொருகி வைத்துக்கொண்டிருந்து இடைசுகம் தொண்டையை நனைச்சுக்கொண்டு ஃபோர் ஏசெஸ் புகையை நெஞ்சுக்கு ஏத்திக் கொண்டு (அப்போதெல்லாம் தியேட்ருக்குள் சிகரெட்டுப் பிடிக்கலாம்) படம் பார்க்கிற சுதிக்கு லெச்சுமி மாதிரி ஆட்களின் கூட்டெல்லாம் பேரிடைஞ்சல்.

எம். ஜி. ஆரின் ஃபைட்டுகளுக்கு, லவ் சீன்களுக்கு எவ்வளவுதான் விசிலடிச்சிருந்தாலும், சிவாஜியின் எத்தனையோ படங்களுக்கு வெறியில்லாமல் அழுதுமிருக்கிறான். எம்.ஜி.ஆரோ சிவாஜியோ என்று விவாதம் வந்திட்டால் மாத்திரம் பொன்னன் எப்போதுமே எம். ஜி. ஆரின் சைட்தான்.................. சிவாஜி ரசிகர்களை ஓரம் கட்டவே பார்ப்பான்.

அதுக்கொரு தக்க காரணமில்லாமலுமில்லை.

–ரசிகர் மன்றப்பத்திரிகைகள் எல்லாம் படிக்கிற, விஷயம் விளங்கின– யாரோ சொன்னவையாம்.

சிவாஜியை ரசிகர்கள் அபிமானிகள் என்று சாமானியர் யாரும் போய் இலேசில் நெருங்கவோ பேசவோவெல்லாம் முடியாதாம். ஆனால் பொன்மனச்செம்மல் அப்பிடியில்லையாம். அவரைப் பார்க்க வென்று எந்தவொரு மனிதன் அவர் வீட்டுக்குப்போனாலும் ஒரு நிமிஷமென்றாலும் பார்த்து பேசி விசாரிச்சு சாப்பிடவைத்துத்தான் அனுப்புவாராம். சிலபேர் அவர் சும்மா பேருக்காகக் கொடுத்தார், புகழுக்காகக் கொடுத்தார், வாரிசு இல்லாததால கொடுத்தார் என்றெல்லாம் விமர்சிப்பாங்கள்தான்........... காரணங்கள் ஒரு பக்கம் இருக்கட்டுமே................. மனுஷன் கொடுத்தான் அதுவல்லோ முக்கியம். அதனாலே அந்த வள்ளல் மேலே அவனுக்கு அபரிமிதமான அபிமானம், பக்தி .

அவர் குண்டடிபட்டு இருந்தபோது இவன் இரண்டு நாள் சாப்பிடவேயில்லை. பிறகு இந்தியாவுக்கு போன யாரிடமோ அவருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு போத்தல் ஹோர்லிக்ஸ் வாங்கிக்கொடுத்து விட்டிருக்கிறானென்றால் பாருங்கள்.

பொன்னன் சனிக்குச்சனி எந்த ஊரிலிருந்தென்றாலும் கிடாய் பங்கெடுத்து முழுகத் தப்பமாட்டான். முழுக்கு நாட்களில் அவன் பாவிக்கிறதெல்லாம் வெள்ளைப்போத்தல் தான். அவன் அப்பிடி முழுகி கீறி சாப்பிட்டு நல்ல மூட்டோடு இருக்கிற மாலை நேரங்களில் பாடச்சொல்லியோ, பழைய படக்கதையோ கேட்டுப்பார்க்கவேணும். பிறகு படத்திற்கே போகத்தேவையில்லை.

படம் பிடிச்ச டைரக்டரே அத்தனை சீன்களையும் ஞாபகம் வைத்திருந்து அப்படி முழக்காட்சிகளையும் ஒழுங்காய் விபரித்துவிடுவாரோ தெரியாது. பொன்னன் மிக நுணுக்கமாக விபரித்து சரியான கட்டத்தில சரியான பாடலைப்பாடி அசத்துவான். நித்திரையில்தான் எழுப்பிக்கேட்டாலும் மனோகரா, பராசக்தி, மஹாதேவி வசனங்கள் அனைத்தையும் பிசகாமல் பேசிக்காட்ட அவனால் முடியும்.

இவர்கள் வதியும் தோப்பை அடுத்திருப்பதுதான் முருகேசர் வளவு. இவர்கள் நயநட்டங்கள் நல்லது கெட்டதுகள் எல்லாத்துக்கும் ஒருவகையில் அந்தக்குடும்பம் ஒரு போக்கிடம் மாதிரி. முருகேசர் மனைவி நல்லபிள்ளையிடந்தான் லெச்சுமி பொன்னனைப் பற்றிய புகார்களையெல்லாம் கொடுத்து வைப்பாள். புகார்கள் அங்கே கோப்புக்கள் நிரம்பும்போது நல்லபிள்ளை பொன்னனைக் கூப்பிட்டு புத்திமதிகள் சொல்லுவார்.

லெச்சுமியும் விவரம் மட்டான ஆள்தான். கிழக்கே மட்டுவில் கண்ணகை அம்மன் கோவில், மேற்கே புன்னாலைக்கட்டுவன், வடக்கே மறவன்புலவு (பிறந்தகம்), தெற்கே வல்லிபுரக்கோவிலுக்கு அப்பால் இப்புவிப்பந்தில் வேறொரு சிற்றூரைத்தானும் அவள் பாதங்கள் பரவியதில்லை. வற்றாப்பளை அம்மனை ஜீவிதத்தில் ஒரு தடவையாவது தரிசித்துவிட வேணுமென்ற தீராத கனவு ஒன்று அவளுடன் எப்போதுமே உண்டு.

நல்லபிள்ளை வீட்டுக்கு ஒரு நாள் ஏதோ அலுவலாக வந்த லெச்சுமி இரண்டு பக்கமும் பார்த்துவிட்டு அவரிடம் குரலைத் தாழ்த்திக்கொண்டு கேட்டாள்:

“மெய்யாலுமணை............... இனிமேல் சின்னத்தம்பிதான் (அரியாலையிலிருந்து வந்து இவர்களது குடியிருப்புத் தோப்புக்குள் கள்ளுக்கட்டிறவர்) சி.ஐ.டியாம் எங்கவூருக்கு...............?”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆர்............ சொன்னது?"

"இல்லை ஊருக்கை பரவலாய் பறையினம்............ எதுக்கும் என்னத்துக்கும் வீண் வில்லங்கத்தை......... நீரெதுக்கும் ஆளோடை கண்டபடி கதை வச்சுக் கொள்ளாதையும்..........."

குறைந்தது ஒரு நாளைக்கு இரண்டு தட்வைகளாவது தண்ணி அள்ள, சமையாத நாட்களில் கொஞ்சம் கறி சோறுவாங்க, துண்டு பொறுக்க (தைத்து மீந்தவை) என்று இப்படி ஏதாவது அலுவல் ஜெயலலிதாவுக்கும் அங்கு இருக்கும்.

ஜெயலலிதாவுக்கு அப்போது ஒரு பத்து வயதிருக்கும். ஒரு நாள் அவள் முருகேசர் வீட்டு முற்றத்தில் முழிசிக்கொண்டும் மயிந்திக் கொண்டும் நிற்கிறாள். அவர் நடுவில் மகன் ஆனந்தராகவன் கண்டு அவளை என்ன விசயமென்று விசாரித்திருக்கிறான்.

"ரெண்டு ஈச்சங்கொட்டையை விழுங்கிப்போட்டன்................. அது தான் என்னாலும் செய்யுமோவெண்டு................."

"எத்தினை?"

"ர்ர்ர்ரெண்டு"

"அட நாசமே இனி வயித்துக்க முள்ளீஞ்சு முளைச்சு வாயாலே யெல்லே குலை தள்ளப்போகுது................. அதுவும் ரெண்டு விழுங்கியிருக் கிறாய் ஒண்டு முளையாட்டிலும் மற்றது கட்டாயம் முளைக்குமென்ன......... எப்பிடியும் கட்டாயம் ஒப்பிறேஷன் செய்துதான் கொட்டையளை எடுக்கவேணும்......."

"என்ர ஐயோ.............!"

குழறிக்கொண்டு வீட்டுக்கு ஓடிப்போய் அங்கும் தாயோடு சொல்லி குத்தி முறிஞ்சிருக்கிறாள்.

இரவு பார்த்தால் அழுது ஓய்ந்து விக்கிக்கொண்டிருந்த ஜெயலலிதாவை போர்த்தி மூடிக்கொண்டு கை லாம்பு வெளிச்சத்தில் கூட்டி வந்தாள் லெச்சுமி.

545997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மெய்யத்தான் இவளுக்கு ஒப்பிரேசன் பண்ண வேணுமோவும்?”

“போங்கடி வேலையத்த இவளுகளே..............”

நல்லபிள்ளை இருவரையும் ஏசி அனுப்பினார்.

(2)

இன்று பொன்னனும் வேலைக்குப்போய்விட்டான். தாயும் காய் (வெங்காய) நடுகைக்கு எங்கேயோ போய்விட்டாள். காலையிலே தாய் சுட்டுக்கொடுத்த தோசையைச் சாப்பிட்டுவிட்டு இருந்தவளுக்கு மொய்த்த மாதிரி ஒரு குட்டித்தூக்கம் சுழற்றிக்கொண்டு வரவே பாயை விரித்துப்படுத்தாள். பன்னிரண்டு மணிக்கு மேல் தற்செயலாக விழிப்பு வரவும் தாய் தன்னைக் கருவாட்டுக் குழம்பும் வைத்து சோறும் வடிக்கச்சொன்ன விஷயம் ஞாபகம் வந்தது. அரக்கப்பரக்க எழுந்து அலுமினியக் குடத்தை எடுத்துக்கொண்டு தண்ணிக்காக முருகேசர் வீட்டுக்கு ஓடினாள்.

அங்கே ஆனந்தராகவன் பல்கலைக்கழக புகுமுகத்தேர்வுக்கு இரண்டாந்தடவை தோற்றுவதற்குத் தயார் பண்ணிக் கொண்டிருக் கிறான். சோதனைக்கு இன்னும் எண்ணிப் பதினொருநாட்களே இருக்கின்றன. ஒவ்வொரு பாடத்திலும் மீட்பதற்கு மலையளவு விஷயங்கள் இருக்கின்றன. ஜெயலலிதா வழக்கம்போல ஆனந்தராகவன் படித்துக் கொண்டிருந்த அறை ஜன்னல் எதிரில் வந்து நின்றுகொண்டு வெள்ளோந்தி போலத் தலையைச் சாய்த்துக்கொண்டும் கண்வெட்டாதும் அவனைப் பார்த்துக்கொண்டு நிற்பதைக் கண்டதும் அவனுக்கு எரிச்சல் பீறிட்டுக்கொண்டு வந்தது.

அவளின் துவணை தவாளிப்புகள் ஏதுமற்ற நோஞ்சான் உடம்புக்குச் சம்பந்தமில்லாதவாறு கொந்தாலி மாதிரி முகைச்ச அவள் மார்புகள் சரியாக கவசமிடப்படாததால் செவ்வனே தெறியோ ஊசியோ குத்தப்படாத சட்டையூடாக துருத்திக்கொண்டு “வண் கேர்ள் ஷோ“ காட்டுகின்றன. பார்வையை மட்டும் எங்காவது ஃபோகஸ் விட்டாளேயென்றால் இதுமாத்திரமல்ல அரையான்தான் அவிழ்ந்து விழுந்தாலும் அவளுக்கு ஸ்மரணை இராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தராகவன் முன்பொரு தடவை அவளுடையை டிறேட் மார்க் பார்வையைப் பரிசோதிக்கப்போய் 1000கிலோ வோல்ட்ஸ் மின்சாரத்தால் தாக்குப்பட்டுமிருக்கிறான்.

ஒரு நாள் மாலை, வீதியால் எங்கேயோ தன்னுடைய ஊர் வாசிகசாலையில் மாலைவேளைகளில் நண்பர்களுடன் சேர்ந்து வைக்கும் அரிவரங்கத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறான். எதிரில் வந்த ஜெயலலிதா இவனைப் ஃபோகஸ் பண்ணுகிறாள். அவளைத்தான் கடந்துபோன பின்னாலும் தன் பின்பக்கத்தையும் அப்படி ஃபோகஸ் பண்ணிக் கொண்டுதான் நிற்பாளோ என்றொரு ஐமிச்சம் இவனுக்கு. சட்டெனத் திரும்பிப்பார்த்தான். அவள் நின்று அவனையே பார்த்துக் கொண்டுதான் நிற்கிறாள்.

ஏதாவது விஷமம் பண்ணவேணும் போலிருக்கவே மெல்ல ஒற்றைக் கண்ணை சுருக்கினான். சட்டெனப் பதிலுக்கு ஜெயலலிதா மின்னி அடித்தாளே கண். மார்லின் மன்றோ கெட்டாள் போங்கள்.

போலந்து வொட்கா ஒரு லிட்டர் தனியே "றோ" வாக இறக்கின மாதிரி தலைக்குள் கிறுகிறுத்தது அவனுக்கு.

அம்மா நல்லபிள்ளை மதியம் சமையலுக்கு மீன் வாங்கிவர காரைக்கூடல் வைரவர்கோவில் புளியடிப்பக்கம் போயிருக்கிறார். தம்பியும் தங்கையும் பள்ளிக்கூடம் சென்றுவிட்டிருந்தனர். அக்கா நீலாவதி மாதவிலக்கு இரண்டு மாசத்துக்குமேல் தள்ளிப்போனதால் ஐந்தாவது தடவையும் பிள்ளையோ என்ன கோதாரியோ என்ற பயத்தில் செக் பண்ணுவிக்க கிளினிக்குக்கு போய்விட்டாள்.

அவர்கள் திரும்புவதற்குள் முன் ஒரு கோல்ட் லீஃப் புகைக்கவேணும்.

இந்த நேரம் பார்த்து இவள் மோகினிப் பார்வையோடு வந்து நிற்கிறாள்.

"என்ன...?" வெறுப்பாகக் கேட்டான்.

கண்களை ஒரு நடன பாவத்துடன் தாழ இறக்கி குடத்தைக் காட்டினாள்.

அவன்தானே கிணற்றடிக்கு எழும்பிப்போய் அவள் குடத்திற்கு தண்ணீர் அள்ளி வார்த்துவிடவேண்டும். எரிச்சல் வராதா பின்னே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ ஏன்டி புத்தர் கலட்டிக்குள்ள வந்து பிறந்து தொலைச்சாய்?"

(ஜெயலலிதா மனதுள் "ம்.............. இல்லாட்டி வந்து தாலி கட்டிப்போடுவர்,)."

"என்ன அங்க முணுமுணுப்பு?"

"எணே சாத்திரியும் மெய்யாலும் சொன்னவர் என்ர குறிப்புப் பலனுக்கு எனக்குச் சீமையில பிறக்கிற யோகமாம்.............. துர்க்கிரக மொண்டு எங்கையோ குறுக்கால பாத்து கணக்கைக் கெடுத்து போட்டுதாம்.........."

போலியாக நீளப்பெருமூச்செறிந்தாள்.

"ஆரை............ ?"

"..........என்னை........."

ஊருக்கென்னவோ ஜெயலலிதா பேச்சிதான். அவளுடன் பழகுகிறவர்களுக்குத்தான் சரியான ரைமிங்கில் தடாலடிப்பதில்கள் தர அவளுக்குள் ஒரு ராணி அப்புக்காத்து இருப்பது தெரிய வரும்.

"வீட்டில ஒருதருமில்லை நீ சத்தம்போடாமல் தண்ணியை அள்ளிக்கொண்டு போ.."

"ஆத்தே..... கமக்காறிச்சி கண்டால் கிளிச்சுக்காயப் போட்டிடும்."

(அவள் "கமக்காறிச்சி" , "எசமாட்டி" என்று கிண்டல் மிகை யாகுபெயர் கொண்டு அழைப்ப தெல்லாம் அவனது தாயைத்தான்.)

"அவ ஒண்டுங்காணமாட்டா............ நான் சொல்றன்....... நீபோய் அள்ளெண்டிறன்......... எனக்கு கனக்கப்படிக்க வேணும்."

"நீ என்னத்துக்கு படிக்கிறாய்..............?"

"ஆங்............ என்னத்துக்கெண்டு இப்ப சொல்லேலுமே பன்னி ரண்டாம் வகுப்பெண்டு வையன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA LIBRARY

"பெறவு........ பெரிய உத்தியோகம் கிடைக்குமாக்கும்................"

"நீ இதில நிண்டு ஞாயம் பண்ற நேரத்திற்குத் தண்ணி அள்ளிக் கொண்டு போகிடுவாய்......... போடி. "

ஏதோ எதிர்காற்றில் நடப்பவள் போலப் பிரயத்தனப்பட்டு நடந்து போனாள். கிணத்தடிக்குப் போனதும் துலாவில் தண்ணியிறைக்கும் சத்தம் கேட்டு யாராவது மற்ற வளவுக்காரர்கள் பார்க்க நேரலாமென்று அவளுக்கு பயம் வந்தது. நல்ல நீளக்கயிறொன்று வளையமாடி கிழுவங்கதியாலில் கொழுவியிருந்தது. அதை எடுத்து தனது குடத்தில் கட்டி மெல்லக் கிணற்றினுள் இறக்கினாள். உருவுதடம் கழுத்தில் சரியாக இறுகவில்லை. குடம் தண்ணி மொண்டுகொண்டதும் கிணற்றுள்ளேயே நின்று கொண்டது.

"போச்சு போச்சு................ ஓடியா........... ஓடியா." என்று கைகளைக் காற்றில் வீசியபடி கத்திக்கொண்டு திரும்பி ஓடிவந்தாள்.

"என்னடி போச்சு...............?"

"குடம் கிணத்துக்க விழுந்து போச்சு."

"ம்....... கெட்டிக்காரி......... அதையேன் போட்டுத்தொலைச்சனி?"

விழிகள் வெளிப்பிதுங்க முழுசினாள்.

இவளிடம் விசாரணை வைக்க இது நேரமில்லை. வீட்டுக்கோடிக்கு ஓடிப்போய் அங்கு அசப்பிலிருந்த கொக்கைத்தடியை எடுத்துவந்து கிணற்றுக்குள் இறக்கினான் ஆனந்தராகவன். குடமிருந்த பக்கம்நிழல் விழுந்து இருட்டாகவிருந்தது. குடம் சரியாகத் தெரிய வில்லை. அதன் வாயுள் சத்தகத்தைக் கொழுவ பகீரதப்பிரயத்தனம் வேண்டியிருந்தது. திரும்பத் திரும்ப முயன்றான். முதுகால் வியர்த்து வழிந்தது.

தானே தண்ணியை இறைத்துவிட்டிருந்தால் இந்த விபரீதமெல்லாம் ஏற்பட்டிருக்காதேயென்று தன்னையே நொந்துகொண்டு மீண்டும் கொக்கையை கீழே இறக்கினான். அது குடத்துக்கு வெளியே எங்கேயோ போனது.

"உனக்கு எடுக்கத்தெரியாது போலை கிடக்கு...................."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது விமர்சனத்துக்கு காது கொடுத்தால் இப்போ காரியமாகாது. மீண்டும் முயற்சித்தான்.

"உனக்கு எடுக்கத்தெரியாது போலதான் கிடக்கு..................."

அவன் எரிச்சலுடன் நிமிர்ந்து அவளைப்பார்க்க.........

ஜெயலலிதா அவனை மேற்கண்ணால் ஒரு கிண்டல் பார்வை பார்த்துக்கொண்டு நிற்கிறாள்.

இம்முறை ஒருவாறு கொக்கைச்சத்தகத்தின் அலகு குடத்தில் கொளுவிவிட்டது. மெல்ல மெல்ல மேலே தூக்கினான்.

"அட............க்கெட்டிக்காறன்தான்................ ஆரும் எடுக்கிற மாதிரி எடுத்தா எடுபடுமென்ன...................."

"உன்னுடைய பாராட்டுக்கு மிச்சம் நன்றி. நீ கெதியாய் தண்ணியைக் கொண்டு இடத்தைக்காலி பண்ணு...... ?"

"எஎஎஎன்ன கலைக்கிறாய்.............. என்னை............... நீயெல்லே முந்தி வளைச்சனி............?"

ஏதும் முற்பிறப்பு ஞாபகத்திலிருந்து பேசிறாளோ............. இந்த நவீன சகுந்தலையைக் கண்டு ஆனந்தராகவனுக்கு திகில் உண்டானது.

"என்னடி........... என்ன பேத்துறாய்...........?"

"இல்லை......... முந்தி நீ என்னை வளைச்சதை அயத்துப்போனியோ என்டிறன்..........."

"பேந்து.........?"

"ம்ம்ம்ம்.............பேந்து.............. நான் வளைய............... தான்............ விட்டிட்டு. "

"நில்லிஞ்சை வேசைக்குமரி.............. எப்படி நானுன்னை வளைச்சனான்.................... இண்டைக்கு உனக்கு இதால தராமவிடன்.........." என்றுகொண்டு அவள் குடத்துக்குப் போட்ட கயிற்றை நாலாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடித்துக்கொண்டவன் துரத்தத்தொடங்கவும் தண்ணிக் குடத்துடன் ஓடி மறைந்தாள்.

இது வெறும் முசுப்பாத்தியல்ல. வரவர ஜெயலலிதா நல்லாய் கெட்டுத்தான் போனாள். பேச்சுத் தொனி மாத்திரமல்ல அவளின் போக்கு வாக்குகளிலும் ஏகப்பட்ட மாற்றங்கள். ஆனந்தராகவனுக்கு இவள் ஏதாவது வில்லங்கத்துள் தானாகவே போய் மாட்டிவிடுவாளோ என்று பயமாகவிருந்தது. இதைப்பற்றி யாருடன்தான் பேசமுடியும்?

ஒரு வயதுக்கு வந்திட்டமே என்ற பாங்கினை இல்லாமல் தன் பாட்டுக்கு குதிச்சுக்கொண்டும் குலுக்கிக்கொண்டும் திரிந்த ஜெயலலி தாவை நீலாவதி ஒரு நாள் கூப்பிட்டு "நீ இனிமேல் இதைப் போட்டுக் கொண்டுதான் ஆட்களுக்கு முன்னால் வரவேணும்" என்று சொல்லி தன்னுடைய இரண்டு உட்சட்டைகளைக் கொடுத்தனுப்பினாள்.

அடுத்து தீபாவளி வந்த கையோடு பொன்னன் கையிலும் நல்ல காசுப்புழக்கம். ஜெயலலிதாவுக்காக நிறைய துணிமணிகள் வாங்கினான். நீலமணியும் அவைகளில் நல்ல நவீன பாணிகளில் சட்டைகள் தைத்துக்கொடுத்தாள்.

புதுச்சட்டைகள் கிடைத்த பின்னால் ஜெயலலிதாவும் நல்லாய் ஸ்டைல் பண்ண வெளிக்கிட்டிட்டாள். எப்போ பார்த்தாலும் கியூட்டிகுரா பவுடர் வாசம் தூக்கியடிக்குது அவளிலை. மங்கி குறொப்பெல்லாம் வெட்டியிருக்கிறாள். பின்னலைப்பின்னி இப்போவெல்லாம் முன்னுக்குத் தான் விடுகிறாள். பாவாடைக்கு மாட்சாக அடிக்கடி அரைத்தா வணிகளை மாற்றிக்கொள்கிறாள். கூப்பன் கடைக்கு போவதென்றாலும் மறவாமல் கியூடெக்ஸ் எல்லாம் அடிக்கிறாள். மறவன்புலவிலிருந்து மாத்திரமல்ல வதுரி விழான் பக்கமிருந்தெல்லாம் விடலைப்பெடியள் இப்போ அடிக்கடி பொன்னன் வீட்டுக்கு மாமா மாமியென்று முறைகள் சொல்லிக்கொண்டு வருகினம். இரவிலை பத்துப்பதினொரு மணிக்குப் பிறகும் ஒரே அமர்க்களமாய் அந்தப்பக்கம் கதைச்சுச் கேட்குது.

ஆனந்தராகவனும் ஊரவர் எல்லோரும் வந்து கிணத்தில தண்ணி அள்ளிக்கொண்டுபோக அனுமதிக்கவேணும் என்று வீட்டில் பலதடவைகள் போராடித் தோற்றுப் போயிருக்கிறான்.

"ஊரோடினால் ஒத்தோடு.............. தனித்தோடினால் பார்த்தோ டென்றிருக்கு........... ஊரோடேக்கை நாங்களும் ஓடுவம். இப்ப தனித்தோடேலாது மகன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்கள் முன்மாதிரியாய் செய்துகாட்டுவம்......... ஊரும் பின்பற்றும்."

"உடுவில் எம்.பி வீட்டில(அப்போது ஒரு தலித்து இருந்தார்) ஒரு பத்துப்பேர் போய் எங்கட வீடு ஒழுக்காய் கிடக்கு.............. இண்டைக்கிஞ்சை படுக்கப்போறமென்று கேட்டுப்பாருங்கோ............. இதென்ன பொதுமடமோ என்று உங்களைத்துரத்தாமல் படுக்க விட்டிட்டார் எண்டால் நானும் விடுகிறன்............ உன்ர வீட்டுக்கை உள்ளட்டுப்படுக்கிறன் என்கிறதும் உன்ர கிணத்தில தண்ணி அள்ளுறன் என்றதும் ஒருவகை அராஜகம் அத்துமீறல் மகன். தருமமில்லை. வீட்டுக்கிணறு வேறை பொதுக்கிணறு வேறை. என்னுடைய கிணத்தில யாரை அள்ளவிடுகிறதெண்டது என்னுடைய சுதந்திரம். இதில யாரும் தலையிடேலாது."

தகப்பன் தத்துவம் பேசினார்.

இந்த விடாக்கொண்டர் இருக்கும்வரை அது சாத்தியப்படப் போவதில்லை என்றுதான் அப்போது நினைத்தான். (பிறகு இந்த குலக் கொழுந்து முருகேசரின் சாதி அபிமானம் கோத்திரம் மரபுகளெல்லாம் மண்ணில் கொட்டுண்டு பரவுப்படுகிற மாதிரி ஆனந்தராகவன் பின்னாளில் வேறொரு காரியம் பண்ணினான். அவ்வூரில் ஜாதியத்தின் உக்கிரம் தணியும்படியாக அதுபோல் வேறும்பல சம்பவங்கள் நடந்தேறின. அவை பிறிதொரு சந்தர்ப்பத்தில் தனியாக.)

## (3)

பொன்னனும் லெச்சுமியும் வருஷத்தில் அனேகமான நாட்கள் சந்தோஷமாகவே இருப்பார்கள். எப்போதாவது பொன்னன் மிகையாக குடித்துவிட்டு வரும்நாளில் லெச்சுமி சமைக்காது விட்டிருந்தால் மட்டும் வந்ததும் ஏறுப்பாடுதான். அவர்கள் சண்டை கேட்க சுவாரஸியமாயுமிருக்கும். அடிக்கடி அவர்கள் வீட்டிலிருந்து கேட்கும் வசனம்:

"தங்காளைக்காட்டி அக்காளைக்கட்டி வைச்ச நாய்க் கூதியள்தானேடி நீங்கள்? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எட........... பனங்கள்ளு மொய்ப்போட பொம்பிளை பாக்க வந்து தலையைக் கவிண்டுகொண்டிருந்திட்டு தங்காளைப் பாத்திட்டுப்போன சொரமணையத்த சீமனோட வந்த என்னைக்கேளன்."

சண்டை உக்கிரம் அதிகமானால் பனங்காய் விழுந்தமாதிரி லெச்சுக்கு மொத்திக்கேட்கும். அனேகமாக அவனுக்கு அகப்படாமல் தோப்புவேலியிலிருக்கும் நீக்கலை விரிசலாக்கிவிட்டு ஆனந்தராகவன் வீட்டுக்கு ஓடிவந்து நல்லபிள்ளையிடம் முறையிடுவாள்.

மறுநாள் நல்லபிள்ளையின் பஞ்சாயத்து நடக்கும்.

"ஏன்ரா தின்னி........... நீ உழைக்கிறதை அப்பிடியே கோப்பிறேசனில குடுத்திட்டு வந்தா உன்ர பெண்டில் பிள்ளையள் என்ன காத்தையே குடிக்கிறது?"

"எணே கண்ணாணை நேத்தும் அவளிட்டை அம்பது ரூபாய் குடுத்தனானும்................ அதைமுடிஞ்சு மறவன் புலவுக்கு அனுப்பிப்போட்டு இண்டைக்கு அரிசியில்லை சமைக்கேல்ல என்று மாய்மாலம் வடிக்கிறாள் நீலி கேளும்."

பிறகு லெச்சுமிக்கும் தனியாக அர்ச்சனை விழும்.

"மோளையுமெல்லோ வேலைக்கு கூட்டிக்கொண்டு போறனி............. பிறகென்ன அரிசிப்பஞ்சம் வந்ததுங்களுக்கு........... பசியோட வாறவனுக்கு ஒரு சுண்டு வடிச்சுப் போடிறதுக்கென்ன உனக்கு...........?"

"............. ம்ம்ம்ம் அவளெங்கையணை உழைக்கிறாள்.............. காய் அரிய வந்தால் மோட்டைப் பார்த்துக்கொண்டிருப்பள். மோட்டைப் பார்க்கிறதுக்கும் ஆரும் சம்பளம் குடுக்கினமே?"

ஒரு இரவு நல்லபிள்ளைக்கு மாவிடிக்க உதவிக்கு ஜெயலலிதா வந்திருந்தாள். வீட்டிலிருக்க லெச்சுமிக்கும் பொழுதுபோகவில்லை. சற்றுநேரம் கழித்து அவளும் அங்கே வர ஜெயலலிதா தாயைக்கேட்டாள்: "எணை நான் அடுக்களைத் தட்டியைச் சாத்தாம வந்திட்டன்............. இக்கணம் கோழி உள்ளட்டுக் கொத்தப்போகுது................ நீ வரேக்க சாத்தின்னியேணை."

"ம்ம்ம;...................... அங்கே என்ன கிடக்கு கொத்த.................?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றை வாக்கியத்தில் வீட்டு நிலமை பிரத்தியட்ஷம்.

லெச்சுமி விறாந்தையில் சுவரோடு சாய்ந்து கால்களை நீட்டி உட்கார்ந்தாள்.

"காட்டிலே நரி முயலைப் பிடித்து இரையாகக்கொள்வது பழியில்லையென்றால்................

புலி மானைப் பிடித்துப் புசிப்பது பாவமில்லையென்றால்.................

நான் மஹாதேவியை அடைய விழைவது மட்டும் அதர்மமாகுமோ? ஹ∴ஹ∴ஹ∴ஹா...............!!!!!!!! அடைந்தால் மஹாதேவி..........!!!!!! அன்றேல் மரணதேவி...........!!!!!!"

பொன்னனின் உணர்ச்சிகரமான மஹாதேவி பட வசனங்கள் அவர்கள் வீட்டுலிருந்து வந்தன.

"வசனங்கள் தூள் பறக்குது................கொப்பன் வந்திட்டான் போலை...?" நல்லபிள்ளை கேட்டார்.

"ஏதோ கோப்பிறேசனிலை வேளைக்குக் கள்ளொழிஞ் சுதாக்கும்.............." என்றுவிட்டு கழுத்தை நொடித்தாள் ஜெயலலிதா.

"வேலையாலை வந்தவனுக்கு பசிக்காதே.............. இந்தப் மாவைக் கொண்டுபோய் அவனுக்கு புட்டைக்கிட்டைக் குத்திக்குடு." என்று அவர் அரித்த மாவில் கொஞ்சத்தை பொட்டலம் பண்ணிக் கொடுக்கவும் லெச்சுமி வாங்கிக்கொண்டு போனாள்.

தாய்போன பின்னால் நல்லபிள்ளையுடன் பெரிய மனுஷித்தோரணை யில் தகப்பனைப் பற்றிப்புகார்களை அடுக்கிக்கொண்டே மாவிடித்தாள்.

"உவர் ஒரு பிள்ளையெண்டு என்னத்தை எனக்குத் தேடிவைச்சிருக்கிறார்.................. கோடி நிறைய சாராயப் போத்திலுகள்தான் கிடக்கு............ எவன் வரப்போறான் உதுக்கு?"

நல்லபிள்ளை வேறேதோ அலுவலாய் சற்றே விலகியதும் ஆனந்தராகவன் ஜெயலலிதாவைக் கேட்டான்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெளியூர் நாய்களும் இந்தப்பக்கம் இப்ப கனக்கப் புழங்குது போலை.................?"

"..........ம்ம்ம் உள்ளூர் நாய் கடியன் எண்டால் ஏனாமணை வெளியூரானுகள் சுத்துது?"

பொல்லைக் கொடுத்து வாங்கிக்கொண்ட அடி வேகமாய் அவனை அறைக்குள் செலுத்திற்று.

மாவிடித்து முடிந்து சாப்பாடானதும் ஜெயலலிதா காலால் நிலத்தில் வட்டம் போட்டுக்கொண்டு நல்லபிள்ளையிடம் சொன்னாள்.

"நாளைக்கு வல்லிபுரக்கோயில் சித்திரைப் பௌர்ணமி விசேசமாமணை. சனம் கொஞ்சம் வான் பிடித்துப்போகுது. நாங்களும் பொங்கப்போறம்."

நல்லபிள்ளை நாலாக மடித்த பத்து ரூபாய் நோட்டொன்றை அவளின் கைக்குள் வைக்கவும் இருட்டுள் ஓடி மறைந்தாள்.

அடுத்த நாள் பொங்கலுக்கு புதிய பானையும் வேண்டிய ஏனைய சாமான்களையும் வாங்கிக்கொண்டு ஜெயலலிதாவும் லெச்சுமியும் சிற்றுந்தி லேறிக் குதூகலத்துடன் கோயிலுக்குப் போனார்கள். ஜெயலலிதாவிடம் தனியாக பத்து ரூபா பொன்னனும் கொடுத்துவிட்டிருந்தான்.

சிற்றுந்தில் ஆரவாரமாய் வல்லிபுரக்கோவிலில் போயிறங்கிய ஜெயலலிதா அடுப்புக்கல்லுகளை நகர்த்தி வந்து பொங்கல் உலை யேற்றும் வரையில் தாய்க்கு ஒத்தாசை பண்ணிக்கொடுத்தாள். உலை கொதிக்க நேரமாகும் போலிருக்க ஜெயலலிதா ஆசையாய் தேன்முறுக்கு ஒன்றை வாங்கிக்கடித்துக்கொண்டு கோயிலைச் சனத்தை கடைகளைச் சுத்திப்பார்ப்பமென்று புறப்பட்டாள்.

லைட் இஞ்ஜின்காரர் குலையுடன் நாட்டியிருந்த வாழைமரங்களில் உலக்கைநாத வெளிச்சங்களைப் பொருத்திக்கொண்டிருந்ததை சற்று நேரம் வேடிக்கை பார்த்தாள்.

அது அவ்வளவு சுவாஸியமாய்ப் படவில்லை அவளுக்கு. அப்பாலே மெல்ல நகர்ந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுவேலி பஸ்நிலையத்தில் வாடகைக்கார் வைத்திருக்கும் பிரபல உள்ளூர் கொசப்பும் அங்கே சந்தையில் இரவில் உறையும் குறப் பெண்களைத் தூங்கவிடாது துரத்திக்கொண்டிருப்பவனும், மேற்படி சந்தைக்கு அம்பனிலிருந்து பார்வைக்கு அம்சமான நல்ல கட்டுடம்புடன் பனங்கட்டி வியாபாரத்துக்கு வரும் கனகாவை கூட்டாளிகளுடன் பந்தயம் கட்டிக்கொண்டு கடத்தியவனுமாகிய பரதன் கோயில் வளவின் ஒரு மூலையில் நிறுத்தியிருந்த தனது காருக்குள் காற்றோட்டமாக ஒற்றைக் கதவைத்திறந்து வைத்துக் கொண்டு சிகரெட்பிடித்துக்கொண்டு திறந்த மார்புடன் படுத்திருக்கிறான்.

தற்செயலாக அதற்குள் எட்டிப்பார்த்த ஜெயலிதாவை அவன் தில்லான் மீசையும் புலிப்பல்லுச் சங்கிலியும் கண்ணில்பட்டு அவை உலகமகா அதிசயங்களாக மயக்கித்தொலைக்க.................

"என்ன கிளி பார்க்கிறாய்............?"

"சும்மாதான்.................."

"அப்ப இஞ்சையுள்ள வந்துபாரன்."

போகிறாள்.

சற்று நேரத்துக்குள்ளெல்லாம் ஜெயலலிதாவையும் இன்னொரு நிசும்பனையும் ஏற்றிக்கொண்ட பரதனின் கார் உடையார்கட்டை நோக்கி அம்புருவிப் பறக்கிறது.

## (4)

அன்று பொன்னன் வேலை முடிந்து திரும்புகையில் வழக்கமான கோப்பிரேசனுக்குள் போய் அமர்ந்து தாகந்தீர முதல் போத்தல் கள்ளைக் குடித்துவிட்டு அடுத்த போத்தலுக்கு ஓடர் பண்ணிவிட்டு பீடி ஒன்றைப் பற்றவைக்கையில்தான் வேலைத்தலத்தில் பெடியள் அச்சுவேலி லிபேட்டியில் அன்று குலேபகாவலி கடைசி நாளென்று கதைத்தது ஞாபகம் வந்தது.

மற்றைய போத்தலையும் வாங்கி அவசரமாகக் குடித்துவிட்டு சைக்கிளை அச்சுவேலிப்பக்கமாக விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுப்பிறின்டாக இருக்கவேணும். படம் முதன்முதல் வந்த காலத்தில் இருந்த மாதிரியே வலு கிளியராயிருந்தது. மஹா சந்தோஷம். அனுபவித்துப்பார்த்தான்.

"சய்க்.............. இளமையும் அலையலையாய் தோள் நீளத்துக்கு தலைமயிரும் மந்தகாசப்புன்னகையும் எம். ஜி. ஆர் உண்மையில் ஆணழகன் தான். அந்த மகராசன்தான் உண்மையான ஏழைப்பங்காளி. என்ன கடவுள் ஒரு குழந்தையை குருத்தைக் கொடுக்காமல் விட்டிட்டுது. பரவாயில்லை. தலைவர் படத்தில இருக்கிற மாதிரி என்றைக்கும் இளமையாய் ஆரோக்கியமாய் இருக்கவேணும். "

மனதார வேண்டிக்கொண்டான்.

படம் முடிந்து வாகனத்தில் ஏறியதும் பொன்னனுக்கு பாட்டுப்பாட்டாய் வந்தது. சத்தமாய் எடுத்து விட்டுக்கொண்டு சைக்கிளை மிதித்துக்கொண்டு வந்தான்.

''மயக்கும் மாலைப்பொழுதே நீ போ........போ..........

இனிக்கும் இன்ப இரவே நீ வா......... வா..........

இன்னலைத் தீர்க்க வா.............

பால் போலும் நிலவு தேனூறுமே...........

பசும்புல் படுக்க பாய் போடுமே............

உண்மை அன்பு தெரிந்ததாலே........."

''டாய்............ யாற்றா அவன் பண்டி இருட்டில பாட்டெழுப்பிறது.............. இறங்கடா சைக்கிளாலை கழட்டடா காத்தை.........."

''காக்.........காக்.......... காத்தைக்கழட்டிறது சரி............ பிறகு அடிச்சுவிடப் பொம் வைச்சிருக்கிறியோ...........?''

கேட்டுவிட்ட பின்னாலதான் கிராம சபை லைட்டுக்கம்பத்து வெளிச்சத்தில நிற்பது இரண்டும் பொலீஸ்காரர்களென்று தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக்கிளால் அவசரமாய் குதித்தான்.

"ஐயா............... தெரியாமலொரு பிழை நடந்துபோச்சு........... நா......நா........நா........ நானாரோ பெடியள்தான் பகிடி பண்றாங்களெண்டு நெனைச்சிட்டன்........"

பொன்னனைப் பார்த்த பொலிஸ்காரருக்கும் சிரிப்பு வந்தது.

"சரி போ..........போ.........."

தொண்டைமானாற்றில் இருந்து வல்லை வெளியால் செம்மணி நோக்கி நடந்த ஊதல் காற்று பொன்னனில் குளிரைப் போர்த்தியது.

சைக்கிளை உருட்டிக்கொண்டு ஒரு பதினைந்தடி போனவனுக்கு வாய் நமநமத்து பீடி ஒன்றடிச்சால் உவப்பாய் இருக்கும் போலிருந்தது. பொக்கெற்றைத் தடவிப்பார்த்தான். பீடிக்கட்டைக் காணவில்லை. சைக்கிளால் குதிக்கையில்தான் கீழே விழுந்திருக்கும். திரும்பிவந்து லைட்டுக்கம்பத்து வெளிச்சத்தில் தேடினான்.

"என்ன தேடிறாய்............?" பொலிஸ் கேட்டது.

"பீடிக்கட்டு விழுந்து போச்சையா.............."

எல்லாவிடத்திலும் தேடிப்பார்த்தான். காணவில்லை. இரவில் இனி எந்தக் கடையும் திறந்திருக்காதே................ என்பதை நினைக்கத் தாகம் அதிகமாகியது. பொலிசுக்காரரும் நல்லவர் போலயிருக்கு.......... ஒன்று கேட்டுப்பார்ப்பமோ.............

சைக்கிளை மெதுவாய் உருட்டிக்கொண்டு வந்து ஒரு பொலிஸ்காரர் அருகில் சாரத்தை ஒதுக்கி பவ்வியமாக நின்றுகொண்டு கேட்டான்.

"ஐயாவிட்ட பீடியிருந்தால் எனக்கும் ஒன்று தந்து நீங்களும் ஒன்றைப் பத்திறது......."

ஒரு பத்து இருபதுக்காவது வகைசெய்யும் வகையில் கிழக்கிலிருந்து ஒரு வைக்கோல் லொறிகூட வராத எரிச்சலில் இருந்தவனுக்கு கோபம் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போடா எண்டுவிட்டால் குசும்பா பண்றாய் றாஸ்கல்...........?" பொன்னனின் இரண்டு செவிகளையும் பிடித்து இழுத்து அரப்பு கசக்குவதுபோல் கசக்கி முறுக்கி விட்டான்.

கன்னங்கள் இரண்டு பக்கமும் எரியஎரிய வீடு வந்துசேர்ந்தவனுக்கு வளவுக்குள் பத்துப்பன்னிரண்டு பேர் நின்றுகொண்டிருப்பதைக் கண்டு ஒன்றுமாய் புரியவில்லை.

லெச்சுமி பொன்னனைக் கண்டதும் அழுதாள். பொன்னன் மேலும் கலவரமாக அங்கு நின்றவர்களில் ஒருவன் சொன்னான்.

"ஜெயலலிதா................ "

" எ எ எ என்ன................ ஜெயலலிதா? "

" கோயிலடியில யாரோடையோ மாறிவிட்டாள்."

"ஆ......ஆரோடை மாறினவள்.............?"

"அது தெரிஞ்சா விட்டிட்டு வந்திருப்பமே.....?"

" லசுப்பீக்கரிலை சொல்லித் தேடினியளோ.........?"

"லசுப்பீக்கரிலை சொல்லியும் வராததிலைதான் எங்களுக்கு சமசியம் வலுத்தது."

"அவளைத் தன் பாட்டுக்கு போகவிட்டிட்டு நீ எந்தப் பிரியனோடையடி பறைஞ்சு கொண்டிருந்தனி தோறை?"

இன்னும் என்னென்னவோ கெட்டவார்த்தைகள் எல்லாம் சொல்லி லெச்சுமியைத் திட்டினான்.

யாருடன் ஓடியிருப்பாள் என்று எவருக்குந்தெரியவில்லை. பொன்னன் மறுநாள் வதுரிக்கும், மறவன்புலவுக்கும் போய் சந்தேகத்துக்குரிய பெடியங்கள் எல்லாரும் நிற்கிறாங்களோ என்று பார்த்து வந்தான். அவர்களைச் சோகம் விசாரிக்க வந்த உறவினர் பலரும் உணாவில் யோகர்சுவாமியாரிடம் போய் அருள்வாக்கு கேட்கும்படி சொன்னார்கள். போனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியாரைப் பல பிரச்சனைகளையிட்டும் தரிசிக்க வந்தமக்கள் கூட்டம் கோயிலுக்கு வெளியில் அலைமோத இறைப்பு மிஷின் திருட்டொன்றைப் பிடிக்க போயிருந்த சுவாமியார் நல்ல வெறியில் காரிலிருந்து இறங்கினார். இறங்கியதும் "ஆச்சி...... ஆச்சி........." என்றுகொண்டு கோவிலுக்குள் புகுந்தவர் கையில் கொஞ்சம் விபூதி எடுத்துக்கொண்டு வந்து பொன்னன் நின்ற திக்கில் கையை நீட்டி "ஒரு குஞ்சைக் காணேல்லையென்று தேடிவந்தவன் முன்னை வா." என்றார்.

சாமியாரின் பூடகப்பேச்சு புரியாமல் பொன்னன் திகைக்க அவனோடு போன ஒருவன் அவனை முன்னே போகும்படி சொன்னான்.

தயங்கித் தயங்கி முன்னே போய் அவருக்கு முன்னால் நின்றான்.

சாமியார் கண்களை மூடிக்கொண்டு அருள்வாக்கு அருளினார்,

"உன்ரை குஞ்சு மணவினைகாண வீட்டை விட்டு வெளிக்கிட்டிருக்கு. முடிஞ்சிருக்கிற மணம் நிலைக்காது, குஞ்சு வீடுதேடிவரும். ஆச்சியை அனுப்பி வைப்பா..................... எப்பவென்று கேளாதை, ஒருவெள்ளைக்கான "வெள்ளைப்போத்தல் சாராயம்" தட்ஷிணையை வைச்சிட்டு நம்பிப்போய்க்கொண்டே இரு."

இரண்டு நாளாய் லெச்சுமி ஒன்றும் அடுப்பிலேயே ஏற்றவில்லை. பொன்னன் கூட எதுவும் சாப்பிடாமலே இருந்தான். கிட்டவிருந்த உறவுகள் கடையில் தோசை பலகாரங்கள் என்று வாங்கிக்கொண்டு வந்து கொடுத்திருந்தார்கள். எதுவும் சீண்டப்படாமலே கிடந்து காய்ந்தன. என்னதான் குடித்துப்புரண்டாலும் அவனுக்குள் இருந்த பிள்ளைப்பாசம் எல்லோருக்கும் ஆச்சர்யம் தருவதாயிருந்தது.

தினமும் பொழுது பட்டானபின் நல்லபிள்ளையிடம் போயிருந்து அரற்றிக்கொண்டிருப்பான்.

"எனக்கு மனசுல சோகம் முட்டிப்போச்சுதும். விளங்காத பிள்ளையெண்டாலும் நான் பெத்த பிள்ளை எங்கே போச்சென்டு தெரியேல்லை............."

பொன்னனின் கண்கள் கலங்குவதைப்பார்க்க ஆனந்தராகவனுக்கு பரிதாபமாயிருந்தது. தேற்றினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒண்டுக்கும் யோசியாதை பொன்னு அவள் நல்லபடி திரும்பி வருவாள்."

"உணாவில் யோகியாரும் சொல்லியிருக்கிறார்................ உசுருக்கொரு வில்லங்கமுமில்லையாம். மணவினை நாடிப்போன நீ யாரோட எங்கையெண்டு சொல்லிப்போட்டுப் போயிருந்தால் இந்தப் பரிதவிப்பு எங்களுக்கு இருக்காதில்லை. நானே கவுரதையாய் பேசி முடிச்சுவைச்சிருப்பனில்லை. இப்பிடி நாலு சனம் பல்லிலை போடுற மாதிரி வந்திருக்காதே................ அவளுக்கிப்ப என்னவும் பதினேழுதானே நடக்குது. இன்னும் கொஞ்சம் உலகம் பிடிபடட்டும் எண்டுதான் விட்டிட்டிருந்தனான். இப்பிடி நாறடிச்சுப்போட்டாளே................ எனக்கிண்டைக்கு கள்ளுக்கும் மனமில்லை."

சஞ்சலமும் ஏகாந்தமுமாய் மேலும் நாலு நாட்கள் கழிந்தன. ஐந்தாம் நாள் மாலை கருக்கட்டி ஒரு மைம்மல் நேரம். சாவகச்சேரிப் பக்கமிருந்து வந்த ஒரு சாம்பல் நிற சம்மர்செட்கார் நிதானமாக ஜெயலலிதாவை அவள் வீட்டுவாசலில் இறக்கிவிட்டுத் திரும்பிப்போனது.

ஜெயலலிதாவைக்கண்ட சின்னிக்கிழவிதான் முதலில் "ஓ........" வென்று ஒப்பாரி வைக்கவும் சனம் அதிலே கூடிவிட்டது.

" உனக்கேன் புத்தி இப்படிப் பேதலிச்சுப்போச்சு பிள்ள...........?"

லெச்சுமி ஓடி வந்து மகளைக் கட்டிப்பிடித்து அழுதாள்.

கூட்டத்தில் ஒருத்தி மூளியாயிருந்த அவளைப் பார்த்ததும் துணுக்குற்று கேட்டாள்

"எங்கையடி காதான்."

"அதைப் பரந்தனில வித்துப்போட்டு போத்தல் , சாப்பாடு எடுத்துக்கொண்டுதானே அங்காலை கூட்டிக்கொண்டு போனவை."

எங்கேயோ இருந்து ஓடி வந்த பொன்னன் ஜெயலலிதாவைக் கண்டு வாயடைத்துப்போய் நின்றான்.

சின்னிக்கிழவி கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆரடி உன்னைக் கூட்டிக்கொண்டு போனது.............. என்ன சொல்லிக்கூட்டிக்கொண்டு போனவங்கள்...........?"

சனம் தெருவில் அமளிப்படுவதைக் கண்டு வெளியில் வந்த ஆனந்தராகவனைக் காட்டி –

"ரெண்டுபேர். ஒராள் உவரை மாதிரி இருக்கும், அவர்தான் கூட்டிக்கொண்டுபோய் கலியாணங்கட்டிறன் எண்டவர். பெரீய்ய்ய மீசை வைச்சிருக்கிறார்.........."

மோவாயில் விரலால் மீசை வரைந்து காட்டினாள்.

பின் சைக்கிள் கான்டிலில் பிரம்புக்கூடையைக் கொழுவிக்கொண்டு கடைக்குப் போகப்புறப்பட்டு வந்த எதிர் வீட்டு சின்னத்துரை அண்ணை (வயது 45) யைக்காட்டி –

"என்னை வச்சிருந்த மற்றவருக்கு உவற்றை வயதிருக்கும்."

அவர் "என்ரை வாய்க்கால் தரவைக்கொம்பா..............." என்று தலையில் கை வைத்து அலறினார்.

மற்ற நாள் மறவன்புலவிலிருந்து உறவுக்காரர் வந்து ஜெயலலிதாவைக் கூட்டிக்கொண்டு போனார்கள். பேச்சியம்மனின் கோவிலில் அவளுக்கு ஐந்தாறு நூல்கள் மந்திரிச்சுக் கட்டப்பட்டன.

இரண்டு வாரம் கழிந்து அவளுக்கு சோறுகொடுப்பித்தல் (கல்யாணம்) என்று சேதி காற்றோடு வந்தது. மாப்பிள்ளை மறவன்புலவை வாங்கக்கூடிய பணக்காரனாம்.

கடைசிப்பாடம் சோதனை நன்றாக எழுதிய திருப்தியில் ஆனந்தராகவன் சைக்கிளில் வந்துகொண்டிருந்தான்.

ஜெயலலிதா பட்டுப்புடவை உடுத்திக்கொண்டு கல்யாணக்களையோடு எதிர்திசையில் வந்துகொண்டிருந்தாள்.

மைனர்சங்கிலி , டெர்லின்சேர்ட், ஒற்றை விபூதிக்கீற்றின் மேல் சந்தனப்பொட்டு சகிதம் மெட்டாக இருந்த மாப்பிள்ளைக்கு முப்பத்தைந்து வயது இருக்கும், குள்ளமாயிருந்தான். ஒருகாலும் மற்றையதைவிட குள்ளம்போலும். அவளுக்கு பத்தடிகள் பின்னே விந்தி விந்திக் கொண்டு நடந்து வந்தான்.

இப்போதும் ஃபோகஸ் பண்ணித்தொலைப்பாளோ...................?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தராகவனுக்கு மனதுள் சங்கடமாகவும் பயமாகவுமிருந்தது. அவனின் சைக்கிள் அண்மித்ததும் அவள் சட்டென வீதியின் மற்றப்பக்கத்திற்கு மாறினாள். நிலத்தைப் பார்த்துக்கொண்டு போகிற அவள் முகத்தில் வெட்கம் வழிந்து சொட்டுகிறது. ஜெயலலிதா முதன்முதலாக வெட்கப்பட்டதை கண்டு ஆனந்தராகவன் ஆச்சர்யம் தாளமுடியாமல் அவர்களைக் கடந்த சென்ற பின்னாலும் திரும்பிப்பார்க்கிறான். அவர்கள் ஒருவர் கையை ஒருவர் பாந்தமாகப் பற்றிக்கொண்டு சென்று கொண்டிருந்தார்கள்.

**(பெர்லின் 1999)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகையே ஆயினும்

இந்த வீட்டுக்கு ஆறுமாசத்துக்கு முன்னர் குடிவந்திருந்தோம். வரும் போதே எதிர்வீட்டுத் துருக்கிக்காரன் மாடிப்படிகளில் பெரிய பலகை ஒன்றை வைத்து இறைச்சி வெட்டிக்கொண்டிருந்தான்.

தரையெங்கும் திட்டுதிட்டாக இரத்தமும், இறைச்சியும், எலும்புத் துகள்களும் பறந்திருந்தன.

"ஏன் உள்ள வைச்சுத்தான் வெட்டிறதுக்கென்ன.............?" என்றேன்.

"சுவர் பழுதாகிவிடாதா.......? " என்று பதில் கேள்வி போட்டான்.

"எல்லாருமே படியில வைச்சுத்தான் இறைச்சி வெட்டுவாங்களோ இங்கே........? " என்றேன்.

அவன் ஒரு கருடப்பார்வை பார்க்க....... மனைவி சொன்னாள்: "அவனோட என்னத்துக்கு வீண் பேச்சு" துஷ்டனைக் கண்டால் தூரவிலகென்றிருக்கு....... இந்த வீடு எமக்குத் தோதுப்படாது....... வேற வீடு பார்த்துப்போயிடுவம்.... "

தளபாடங்களை ஏற்றி இறக்கின என் தேக நோ எடுபடவே இன்னும் மாதமாகும் போல இருந்தது, இந்த வீடு எடுக்கப் பட்ட மாய்ச்சல் ஒன்றும் அவள் அறியாததல்ல.

இருந்தும் ஏதோ நூறுமார்கிற்கு டசின் வீடு கிடைப்பதான தோரணையில் பேசினாள்........... .

"முடிஞ்ச வரைக்கும் சமாளிச்சுப்பார்ப்பம்........ அறவே ஏலாமப்போனால் பிறகு பார்ப்பம்..... "

"ம்ம்ம்ம்ம்.......எல்லாம் உங்களுக்கு பிறகு பார்ப்பந்தான்....." கழுத்தை நொடித்தாள் பெரிய அம்மாமி மாதிரி!

அடுத்த சனிக்கிழமை முழுவதும் சுவரில் எலெக்றிக் டிறில்லரால் தொளைகள் போட்டுக்கொண்டிருந்தான். சத்தம் நாராசமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதைத்தொளைக்கவும் இளையவள் சாம்பவி (ஆறுமாதம்) பயந்து வீல் என்று அலறினாள்.

இன்றைக்கு வீட்டில் இருக்கமுடியாதென்று தோன்ற......

கனகாலமாய் எங்களைத் தங்களிடம் விசிட் பண்ணுவதேயில்லை என்று குறைப்பட்டுக்கொண்டிருந்த நண்பன் ஒருவனுக்குப் போன்பண்ணினேன்.

“உனது நெடுங்காலத்தைய குறை இன்று தீர்க்கப்படுகிறது” மனைவி ஓடிவந்து ரிசீவருக்கு மறுபுறமிருந்த காதில் கிசுகிசுத்தாள்.

“--சொல்லாமல் கொள்ளாமல் போய் நிக்கப்போறம்...... கறிபுளி இருக்கோவென்றெல்லாம் கேளுங்கோ--“

“சாய் கேட்டாலுந்தான்........ இல்லையென்டு ஆரும் சொல்லுவினமே.....எதுக்கும் வழியில இறங்கி மீன் வாங்கிக் கொண்டுபோவம் “.

போனோம்.

சனி விடுமுறைநாள் முழுவதாய் நண்பன் குடும்பத்துடன் முடிந்தது.

மறுநாள் ஞாயிறு பிள்ளைகளுக்கு தமிழ்ப்பள்ளிக்கூடம். மனைவி கூட்டிப்போய்விடுவாள். நான் வீட்டில் தனியே சாம்பவியைப் பார்த்துக்கொள்ள வேண்டும். அவளோ தூங்க மறுத்து ஈரத்துவாலையைப் பிழிவதைப்போல் உடம்பை முறுக்கிக் காட்டி என்னைப் பயமுறுத்திக் கொண்டிருந்தாள்.

போதாக்குறைக்கு துருக்கிக்காரன் பாக்கியிருந்த தொளைகளைப் போடத்தொடங்கினான். அந்த டிரில்லரோ நிமிடத்திற்கு 500 தடவைகள் அடித்து அடித்து தொளைபோடும் வகையானது.

சைரன் பிடித்தது போல் சத்தம் வரவும் சாம்பவி மீண்டும் பயந்து அலறினாள்!

நேரே அவனிடம் போனேன்.

“உனக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கா........ குழந்தை தூங்கமுடியாமல் அழுகிறது....... நேற்றுப்பூராவும் வீட்டிலேயே இருக்க முடியாதபடி பண்ணினாய்..... போதாக்குறைக்கு இன்றைக்கு வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்து விட்டாய்! ஓய்வுநாளில் அமைதியைக் கெடுக்கக் கூடாதென்று சட்டமிருக்கு......... தெரியாதா உனக்கு? "

"சட்டத்திற்கு எனக்கு இன்றைக்கு மட்டிலுந்தான் இதுகள் பண்ண நேரம் கிடைக்குமென்ற சங்கதி தெரியுமா? "

அதிபுத்திசாலித்தனமாகப் பேசுவதாக நினைத்துக்கொண்டு பதில்கேள்விபோட்டான். இனி இவனோடு குஷ்தி போடுவதில்தான் வாழ்வின் பெரும்பகுதி கழியப்போகிறது என்று எண்ணிக்கொண்டேன்.

யார்தான் போன் பண்ணினார்களோ........... சற்று நேரம் கழித்து 2 பொலிஸ்காரர்கள் வந்து அவனை விசாரித்து இரைய வேண்டாமென்று எச்சரித்து விட்டுப்போனார்கள்.

பொலீஸ் போனதும் பஸ்ஸர் ஒலித்தது. கண்ணாடியினூடு பார்த்தேன். இறைச்சி வெட்டும் கத்தியை வைத்துக்கொண்டு துருக்கி நிற்கிறார்.

என்னிடமும் திரிசூலமொன்று ஒன்றரை மீட்டர் நீளப் பிடியுடன் (பண்ணைகளில் உருளைக்கிழங்கு கெலிக்கப்பாவிப்பது) கூரிய இலைகளுடன் இருந்தது , அதை எடுத்துக்கதவின் பின்னே தயாராக வைத்துவிட்டு கதவைத்திறந்தேன்.

"பொலிஸியேயா கொம்பிளெயின் பண்ணிறாய்............... பாக்கிஸ்த் தானி.........? இன்னொரு தரம் பண்ணினேயென்றால்......... சொருகி விடு வேன்....சொருகி..! "

என்றுவிட்டுக்கத்தியின் வாதாரையை சௌவுரக்கத் தியைப்போல் உள்ளங்கையில் தடவிக்காட்டினான்.

"என்னட்டும் இருக்கு ஐட்டம்...... "

லபக் எனத்திரிசூலத்தை எடுத்தேன். மிரண்டு போனான்.........!

"நீ சொருக முன் உன் குடல் என்ர கையில வளையமாடிக் கிடக்கும்...... " என்றேன்.

"உன்னை பிறகு கவனிக்கிறமாதிரி கவனிக்கிறன்.......... "

"உப்பிடி எத்தனையோ வீரசிங்கங்களைக் கண்டிருக்கிறன் ........ நீ மாறு.........! "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரையில் காலை ஓங்கி உதைத்துவிட்டு வந்தவேகத்திலேயே திரும்பிப்போனான்.

கடைக்குப் போயிருந்த மனைவியிடம் துருக்கி ஆவேசம் பொங்கிக் கெம்பின விஷயம் நான் சொல்லவேயில்லை. சொன்னால்

வேற வீடு....... என்று உடனேயே ஆரம்பித்து விடுவாள்!

அடுத்த நாள் மாலை நான் வேலையால் வந்தும் வராததுமாய் மகன் கிரிதரன் ஓடி வந்து சொன்னான் "

"இன்றைக்கு ஹாஸன்ட பப்பா ஒரு பெரீய்ய்ய ஆடு வாங்கியாந்தவர்.........! "

"என்னடா உளர்றாய்........? "

"ஒன்றும் உளறேல்ல.......உம்மை...... வேணுமெண்டால் அக்காவையும் கேட்டுப்பாருங்கோ.......... "

அக்கா ஆர்த்தி உடனே ஓடி வந்து தம்பிக்கு சாட்சிக்கு ஆஜரானாள்.

".........ஓமப்பா...... உசிர்ர்ர்ர்...... ஆடு......! இவ்வளவு உயரம்... "

என்று கையை தரையிலிருந்து இரண்டடி உயரத்தில் பிடித்துக்காட்டினாள்.

"அவை ஆடே வாங்கியிட்டினம்..... நீங்களெனக்கு இன்னும் நாயிக்குட்டி வாங்கித்தரேல்லை யென்னா.......? "

தன் நீண்ட நாள் ஆதங்கத்தை முன்னூற்றி மூன்றாவது தடவையாகக் என்னிடம் கொட்டினான்.

அன்றிரவு முழுவதும் அவர்கள் வீட்டு பாத்றூம் கடாமுடா என்று குருஷேஷ்திரக் களேபரமாயிருந்தது.

மறுநாள் காலை குப்பைக் கொன்ரயினருள் ஆட்டின் மண்டையோடும் , தோலும் , கொம்புகளும் , நகங்களும் கிடந்தன.

ஹவுஸ் வார்ட்டிடம் (வீடு பரிபாலிப்பவர்) புகார் செய்தேன்.

அவனுமோ "நானும் பல தடவைகள் அவனுக்கு எடுத்துச் சொல்லியாயிற்று...... அழிச்சாட்டியம் பிடிச்சபயல் கேட்கிற மாதிரியில்லை..... துருக்கிக்காரன் ஆட்டை உள்ளுக்குக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வா்றதைக்கண்ட இரண்டு உறுதியான சாட்சிகள் இருந்தால் நாங்கள் பொலிசில முறைப்பாடு கொடுக்கலாம்......... கொடுப்போமா" என்றான்.

மனைவி மீண்டும் தொணதொணக்கத் தொடங்கினாள்.

"கூலிக்கு நாற்று நடப்போய் எல்லைக்கு வழக்குப் பேசின கதையாய் இனி உங்களுக்கு பொலிசும் கையுமாகத்திரியத்தான் நேரம் சரியாயிருக்கும்......... பேசாமல் வேற வீடு பாருங்கோப்பா..........நல்ல அயலான் அமையிறதும் பதினாறு வகைச்செல்வங்களில ஒன்று...... எல்லாத்துக்கும் கொடுப்பினை இருக்கவேணும்.......! " பெருமூச் செறிந்தாள்.

துருக்கிக்கும் ஆடு அடிக்கிறது, புல் தரையில் கிறில்மூட்டி இறைச்சி வாட்டிறதையும் தவிர வேறு வேலையேதும் இருப்பதாகத் தெரியவில்லை. சதாகாலமும் வீட்டிலேயே கிடந்தான்.

ஒரு முறை இரவுநடுச்சாமம் தன் வீட்டிலிருந்து அப்புறப்படுத்த வேண்டியிருந்த ஒரு பழைய அலமாரியையும், ஸெற்றியொன்றையும் எப்படித்தான் நகர்த்தினானோ, நகர்த்திக் கொண்டு போய் கீழே வீட்டின் பிரதான நுழைவாசல் அருகில் வைத்துவிட்டுப் போய் போர்த்துக்கொண்டு படுத்துவிடடான் (முறைப்படி உரிய இடத்தில் கொண்டுபோயே போட வேண்டும், அல்லது அபராதம் எல்லாம் உண்டு).

மேற்படி கைங்கரியம் பிதாமகருடையதுதான் என்பதைக் கண்டுபிடிக்க ஹவுஸ்வார்ட்டுக்கும் சிரமமிருந்திருக்காது.

விடிந்ததும் விடியாததுமாய் போய் அவனிடம் சத்தம் போட்டான்!

அவனோ அவை –தன்னுடையதேயில்லை.... தான் போடவேயில்லை– என்று சாதித்தான்.

பின்னேரம் முகத்தில் ஆத்திரம் பிரவகிக்க வந்து கதவைத்தட்டினான்.

"என்ன...? "

"ஹவுஸ்வார்ட்டிடம் என்னைக் காட்டிக்கொடுத்தது நீதானே......? ஒரு வெளிநாட்டுக்காரனாய் வேண்டாம் ஒரு இஸ்லாமியச் சகோதரனாய் இப்படி நீ செய்யலாமா.......? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொஞ்சம் பொறு..... நீ சொல்றபடிக்கு நான் எதையாவது செய்திருந்தால்..... நீ சொல்வது நியாயம் என்றாகும்...... நான்தான் எதுவுமே செய்யவில்லையே......! "

"சும்மா புழுகாத....... முந்திப் பொலிஸுக்கும் போன் பண்ணின ஆளல்லா நீ....! "

"உன்னட்ட திட்டு வேண்ட வேண்டியிருக்கிறதும் எந்நேரம் பார்.....! முந்தி நீ எவ்வளவுதான் சத்தம் போட்டபோதும் நான் சகித்துக் கொண்டேன்.... பொலீஸுக்குப் போகவேயில்லை...... இப்பவும் நீ அலமாரியைத்தான் போட்டியோ...... ஆட்டுத் தலையைத்தான் போட்டியோ எனக்குக் கவலையில்லை ஹாஜி....! "

என் வார்த்தைகள் எதையுமே நம்பவில்லை என்பதை "உர" ரென்ற அவன் உறங்குட்டான் முகம் காட்டியது.

"இந்த வீடு நமக்குச் சரிப்பட்டு வராதெண்டு இன்னுமாப்பா உங்களுக்குப்புரியேல்லை.......? "

"புரிஞ்சு போச்செண்டுதான் வையுமன்..... இப்ப என்னை என்ன செய்யச்சொல்லுறீர்........? "

"ஆங்....... ஆனந்தி வீட்ல போய்ப் படுக்கச்சொல்றன்......! "

ஆனந்தி, என் கலலூரி சகமாணவியொருத்தி. என் இலக்கிய நண்பி. அவ பெயரே இவள் நான் சொல்லித்தெரிந்து கொண்டதுதான். பாத்திர அறிமுகம் போக மீதிக்கற்பனைகள், இயக்கம் , தயாரிப்பு எல்லாம் இவளே! எனக்கு ஆத்திரமூட்ட வென்று எண்ணும் போதெல்லாம் இவள் ஆனந்தி சஹஸ்ரநாமம் உச்சரிப்பதுண்டு.

சமயங்களில் துருக்கிக்காரனே தேவலை .

எங்களுக்கு வீடு கிடைத்துவிட்டதென்று பார்க்க வந்து விட்டு

".....பழசுதான் புது வீடென்றில்லை...... கட்டிப் பத்துவருஷ மென்டாலும் இருக்கும்...... ஆகப் பெருத்துப்போச்சு............, ஹைசுங் (கணப்புக்கானஎரிபொருள்) காசெல்லே கனக்க வரப் போகுது........, "

"ஊஃபாணுக்கு (சுரங்கரயில்) இன்னும் கொஞ்சம் கிட்ட வெண்டால்.......... சோக்காயிருக்கும்......." –.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றெல்லாம் விமர்சனங்களை அள்ளித் தெளிப்பவர்கள் ஒவ்வொருவரிடமும் தவறாது மனைவி துருக்கிக்காரன் பண்ணுகிற நட்டணைகளையும் சொல்லிவைக்க அவர்களும் --இதென்ன எங்கட தேசமே......... விரும்பின இடத்தில வீடுகட்டி குடியிருக்க..... எங்கையும் ஒரு நெகரிவ் பொயின்டும் இருக்கத்தானே செய்யும்-- என்று சொல்லி உள்ளூர மகிழ்ந்தனர்.

துருக்கி இப்பவும் வாசலிலோ, லிஃப்டில் கண்டாலோ வழியில் எதிர்ப்பட நேர்ந்தாலோ, ஒரு Guten Tag (வந்தனம்) சொல்வதோ, அல்லது ஒரு மில்லி மீட்டரளவிலாவது புன்னகைப்பதோ கிடையாது. பார்வையை வேறெங்காவது திருப்புவான். எதிராளியைக் கண்டுவிட்ட முள்ளம்பன்றி மாதிரிச் சிலிர்த்துக்கொள்வான்.

வீட்டின் கொம்பவுண்டினுள் சிறுவர்களுக்கான ஒரு விளையாட்டிடம் உண்டு. ஒரு மணற்குழியும், சறுக்குச்சாய்வும் அங்குண்டு. எங்கள் பிள்ளைகள் அங்கே எப்போதாவது விளையாடப்போனால் நாங்கள் யாராவது கண்காணித்தபடி இருக்க வேணும் அல்லது அடுத்த பத்தாவது நிமிஷத்துள் ஹாஸன், தலையில் மண்ணை அள்ளிக்கொட்டிக் கொட்டிவிட்டானென்றோ அல்லது பாக்கீர் நிக்கருக்குள் தண்ணீரை வார்த்துவிட்டானென்றோ திரும்பி வருவார்கள். (அவன் பிள்ளைகள்தான்).

சின்னக்குஞ்சுகளென்றாலும் பெரியவர்களையும் மரியாதை பண்ணத்தெரிந்தே வைத்திருந்தார்கள். வழியிலோ , படியிலோ கண்டால் முந்தையரை மறந்துவிடாது நினைவுறுத்தி முகத்தை அஷ்டகோணலாக்கி நைக்காட்டவோ, முழு நாக்கையும் வெளியே நீட்டி பழிப்புக்காட்டவோ தவறுவதில்லை.

மனைவி சொல்லுவாள்: "விரியனின் குட்டி நாகம்....... அதன் குட்டி நட்டுவக்காலி.......... ஆரேனும் எங்கட தமிழ்ப்பிள்ளையளாய் இருந்திருக்கோணும் அதிலேயே துவைச்சுக் காயப்போட்டிருப்பன்! "

"பாவம் அவர்கள்......... குழந்தைகள்! பெரியவர்களே பண் பாட்டு விழுமியங்களை அறியாதவர்களாக இருக்கும்போது குழந்தைகள்தான் என்ன செய்யும்.......? "

"ஐயோ......ஐயோ.........இந்த மனுஷனை வேற வீடு பார்க்கச் சொன்னால்....... விளங்காத மாதிரி என்னென்னவோ எல்லாம் பேத்து தே.........! கோத்திரத்தில ஆருக்கும் இந்தமாதிரி மேற்படியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிசகியிருந்திருக்கோ என்று ஆராயாமல் அப்பர் அவசரப்பட்டு காலை விட்டிட்டாரே.........! " அடித்துக்கொண்டு புலம்புவாள்.

யானையிடமிருந்தும் தப்பித்துவிடலாம்........ நுளம்பிடம் முடியு மோ....?.

இவ்வாறு பரிதவித்துக் கொண்டிருக்குங்காலம்...........

ஒரு ஞாயிறு காலை தூக்கமும் விழிப்பும் கலந்த மோனநிலையில் பெட் கா∴பிக்கான காதலுடன், கட்டிலிலிருந்த படியே குலாம் அலிகானின் கஜல் இசையில் கிறங்கியிருக் கையில்.........

தற்செயலாக முன்னராக எழுந்துவிட்ட கிரிதரனுக்கும் ஆர்த்திக்கும் யார் முதலில் கேம் போயை விளையாடுவது என்பதில் பெரும் போர் மூண்டது. கட்டிலில் கட்டிப்பிடித்துப் புரண்டு இழுபறிப்படுகையில் ஆர்த்தி சற்றே தன் பிடியைத்தளர்த்த கிரிதரன் நெற்றியில் இடித்துக்கொள்ள நேர்ந்தது. இதனால் கடுஞ்சினமுற்ற தாய் ஆர்த்தியின் முதுகில் "பொளாச்" என்று சாத்தினாள். சாத்தலில் துடித்துப்போனவள் விசித்துக் கொண்டு போய் தன் அறைக்குள் ஸோலோவாக –வயோலா– வாசிக்க ஆரம்பித்தாள்.

"கஜலில் துய்க்க முடியாதபடிக்கு ஆர்த்தியின் ஆலாபனை எரிச்சலூட்டிக்கொண்டிருக்கவும்............ பஸ்ஸர் வேறு "கிர கிர " என்கிறது.

"ஆர்த்திக்கண்ணா போய் கதவைத்திறவடா" என்றேன்.

"ங்ங்ங்ங்.... நான் இன்னும் அழுது முடிக்கேல்ல டாடி......! " என்று விட்டு விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்தாள்.

இன்று ஞாயிறு கடிதங்கூட வராதே..... யாராயிருக்கும்.......?

யோசனையுடன் சாரத்தை இறுக்கிக் கட்டிவிட்டு , ஒரு ஷர்ட்டை எடுத்துப் போட்டுக்கொண்டு போய் கதவைத் திறந்தால்........

நான் என்றுமே காணாதபடி "டிப் டொப்" கோட்ஸஜட்டில் துருக்கி, ஏற்றாற்போல் மெட்டாக உடுத்திய மனைவியும், பிள்ளை களுமாக சோமாஸ்கந்தக்கோலத்தில் எங்கேயோ தொலைப்பயணம் புறப்பட்டவர்கள்போல் காட்சிதந்தான்.

எதுக்கிப்ப இங்க வாறான்..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஒன்றுமே புரியாதபடிக்கு நெற்றியைச் சுருக்கவும்...................

"நாங்கள் ஊருக்குப் புறப்படுகிறோம்...... அதுதான் குட் பை சொல்ல வர்றோம்........ " என்றபடி கையை நீட்டினான்.

நீண்ட அவன் கைகளைக் குலுக்கியபடியே கேட்டேன்.

"என்ன Urlaub (விடுமுறையா)பா..... துருக்கிக்கா...... " என்றேன்.

"Keinen Urlaub......fuer immer....! "

(விடுமுறைக்கல்ல..... நிரந்தரமாய்......!) முகம் ஓடிக்கறுத்தது.

"என்ன........!!!! "

" ஜா....... கொலிகே...... எங்கள் அகதி விண்ணப்பம் மூன்றா வது தடவையும் இறுதி நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டு விட்டது....... இனி அப்பீல் எடுக்கமுடியாது......... கிளம்புவதைத்தவிர வேறு மார்க்கமேயில்லை....... " அவன் குரல் உடைந்து கரகரத்தது.

என் கண்முன்னேயே பனிமலை ஒன்று தகர்ந்து தண்ணீராய் ஓடியது. இதயம் இனம்புரியாத வலியில் துவண்டு துடித்தது.

அவன் மனைவி "உங்களுக்கு ஆட்சேபம் இல்லையென் றால்......... எங்களிடமுள்ள சில பொருட்களை உங்களுக்குத் தரலாமென்று விரும்புகிறோம்...... " என்றபடி ஒரு பிளாஸ்டிக்பை ஒன்றை மனைவியிடம் நீட்டினாள்.

தயங்கி அவள் என்னைப்பார்க்க "பரவாயில்லை வாங்கும் " என்றேன்.

"Danke"

என்றபடி வாங்கிக்கொண்டு உள்ளே போனவள் கிரிதர னுக்கு பாடசாலை ஆரம்பிக்கும்போது போடுவதற்கு வாங்கிய புதிய செற் உடுப்பொன்றை இன்னொரு பிளாஸ்டிக்பையில் வைத்து ஹாஸனிடமும் , ஒரு சொக்கலேட்பாரை பாக்கீரிடமும் தந்தாள்.

மீண்டும் "குட் பை" சொல்லியபடி கைலாகு தந்தான், துருக்கியர் பாணியில் என்னைக் கட்டிப்பிடித்து இரண்டு கன்னங்களிலும் மாறிமாறி முத்தமிட்டான்.

எல்லோர் கண்களுமே தளும்பி நின்றன. பிரிவு இன்னாததுதான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பிரிந்து போவதை எம்வதியும் அறை ஜன்னலால் கண்மறையும் வரையில் எட்டிப்பார்த்துக் கொண்டு நின்றோம். பின் மனைவி அவர்கள் தந்துவிட்டுப்போன பையை ஆராய்ந்தாள்.

அடியில் கனதியாக இருப்பது உருளைக்கிழங்கும் வெங்காயமுமென்று ஊகத்திலேயே புரிந்தது. மேலே பிரித்தும் பிரியாமலும் சில மா, சீனிப்பக்கெட்டுக்கள், கொஞ்சம் வாட ஆரம்பித்துவிட்ட காய்கறிகள், எண்ணெய்ப் போத்தல்களின் நடுவே நிறுதிட்டமாய் வெள்ளியென பளபளத்து நீட்டிக்கொண்டு கிடந்தது அவனது கத்தி!.

(அம்மா - 1997)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்களும் ரணங்களும்.

நமக்குத்தொழில் டாக்ஸி.

ஆனால் இமைப்பொழுதும் சோராதிருத்தல், செலுத்தல் என்றெல்லாம் சொல்லமுடியாது.

சற்று முன்னர்தான் ஒருத்தன்

".......... என்ன பொண்டாட்டி யோசனையில ஓட்டுறியா....... என் வண்டியில தேய்க்கப்பார்க்கிறியே..........! "

என்று வைதான்.

ஹார்ணை அடித்து எரிச்சலூட்டாமலும், வைதல் ஜெர்மனில் வடிகட்டப்பட்டே கூறியதாலும் கொஞ்சம் "சுரீர்" குறைவாயிருந்தது. தப்பு என்மேலதான். வையட்டும். நான் பொண்டாட்டி ஞாபகமா வண்டியோட்டினேன் என்பதை பயல் எப்படித்தான் அச்சொட்டாய் கண்டுபிடித்தான் என்று வியக்கையில் எனக்கு அவன் மீது அவ்வளவு கோபம் வரவில்லை.

வாகனம் ஓட்டும்போது எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும் என்பது பால பாடந்தான். ஆனால் ஓட்டுதலையே தொழிலாகப் பண்ணும்போது கஷ்டம். சாரதிகள் இதுபோன்ற கவனயீனப் பிசகுகளால் பிறரின் வைதல்களை அனுபவிப்பது சகஜம். டாக்ஸி டிரைவராக ஆறுமாதம் இருந்து விட்டால் ஜெர்மன்பாஷைதான் பிடிபடாவிட்டாலும் இவ்வகை வைதல்களுக்கான கெட்ட வார்த்தைகளில் டிப்ளோமாவே பண்ணிக்கொண்டுவிடலாம்.

மேலும் டாக்ஸி தேடி ஆட்கள் வருகிறார்களா என்று பார்த்துப்பார்த்துக் கண்களில் அதீத பிரகாசம் வேறு வந்துவிடும். யாராவது வீதியோரமாக நின்று சும்மா கக்கம் சொறியத்தான் கையை உயர்தினாலும்................ டாக்ஸி மறிப்பதாகவேபடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைக்கு எல்லா பெர்லின் பிரஜைகளையும் போலவே என் மனைவி சித்திராவும் மழை பெய்யப்படாது, குளிரப்படாது, காற்று வெதவெதப்பானதாக இருக்கவேண்டும் என்றெல்லாம் வேண்டிக் கொண்டிருப்பாள். டாக்ஸிக்காரர்களுக்கெல்லாம் நாலு காசைக்கண் ணால் பார்ப்பதென்றால் காலநிலை எரிச்சலூட்டுவதாக இருந்தாலே சாத்தியம். ஊதற்காற்றும் மழையும் வேண்டும். அல்லது பனி நன்கு கொட்டி நிலம் சளக்கு புளக்கென்று சகதியாகவோ இருத்தல் அவசியம். பனி இருத்தல் கெட்டியாகி காலை வைத்ததும் சொரீரென்று வழுக்குவதாகவோ இருத்தல் உத்தமம்.

காலநிலை உவப்பானதாயின் "ஹா....... ஃபைன் வெற்றர" என்று விட்டுச் சனம் தங்கள் தங்கள் அலுவல்களுக்கு நடந்தே போய்விடும். எங்கள் பக்கம் திரும்பவே மாட்டார்கள்.

இன்றும் சித்திராவை ஸ்ரேக்லிட்ஸ் தாவரவியல் கார்டனுக்குக் கூட்டிப்போவதாக வாக்குறுதி கொடுத்துள்ளேன். கல்யாணமாகி இந்த ஆறுமாதத்திற்குள்ளாக இந்தக் கார்டன் விஜயமுயற்சி மட்டும் ஏனோ ஐந்தாவது தடவையும் முடியாமல் போய்விட்டது. இந்த கார்டனுக்கத்தான் என்றில்லை. சித்திரா அடிக்கடி வெளியே போகவேண்டுமென்று விரும்புகிறாள். கனவில் ஏதாவது செய்யவிரும்புவோம் ஆனால் எதையுமே பண்ணமுடியாது போகும். இங்கும் அப்படித்தான் ஆகிவிடுகிறது. ஒவ்வொரு சறுக்கலையும் சித்திரா தன் விருப்புகளின் மேல் எனக்கிருக்கும் அலட்சியமாக பெருக்கல் விருத்தியில் கணக்குப்பண்ணித்தானே தனக்குள் ரணமாகி இன்றும் கொதித்துக்கொண்டுதான் இருக்கப்போகிறாள்.

"இன்று வருமானம் சுமார்தான்....... இன்னும் இரண்டு ஓட்டம் வாய்த்தால் செலவுக்குச் சௌகர்யமாயிருக்கும்........" எண்ணிக் கொண்டு றூாடோ சந்திப்பால் நொய்கேர்ண் பக்கமாய் திரும்புகிறேன். பஸ்தரிப்பில் நின்ற ஒரு கிழவி கையை அசைக் கிறாள். இங்கே பையில் பணத்தை நிரப்பி வைத்துக்கொண்டு சீமாட்டிகளாய் செலவு செய்வபவர்களென் றால் பென்ஷன் கிழவிகள் தான்.

"குட்டென் ராக் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குட்டென் ராக்......"

கதவு கிளிக்கியதும் -

"சேலன்டோஃப் பிற்றே"

ஜோரான சவாரி. ஐம்பது மார்க்காவது தேறும். புதிய பென்ஸ்டாக்ஸி காற்றில் மேவிப்பாய்கிறது.

கிழவி அப்போதான் உலகத்தைப் பார்க்கிற பச்சைக் குழந்தைமாதிரி வலமும் இடமும் திரும்பிப் பார்த்த வண்ணம் வந்தாள்.

பிறிட்ஸர் பூங்காவை அண்மிக்கவும் திடீரென உடைந்து அழுதாள். எனக்கோ ஒன்றுமாய்ப் புரியவில்லை.

"என்ன பிரச்சனை......?" என்றேன்.

வார்த்தைகள் வெளிவரக் கஷ்டப்பட்டன.

"வேண்டியவர்கள் யாருக்காவது கஷ்டமா.....?"

என்றேன் ஆதரவாக

"இல்லை.........நான்தான் அதிகம் இழந்துவிட்டேன்..... "என்றாள் கேவலுடன்.

மீண்டும் கண்ணீர் கொப்பளிக்கிறது. கைக்குட்டையால் கண்களை ஒத்திக்கொள்கிறாள். கிழவி அழுகையை நிறுத்திவிட்டிருந்தபோது "ஏதோ இழந்துவிட்டதாகச் சொன்னீர்களே........... " என்றேன்.

"நான் யுத்தத்தில் என் ஐந்து தம்பிகளையும் இழந்து விட்டேன்......... என்போன்ற துர்ப்பாக்கியசாலிகள் இலட்ஷத் தில் ஒருவர் தான் இருக்கமுடியும்......." என்றவளால் தொடர்ந்து பேசமுடியவில்லை.

"ஐந்துபேரையும் இழக்க நேர்ந்தது எப்படி......?"

"இரண்டு பேர் போர் தொடங்க முதலிலேயே தேசியப்படையில இருந்தாங்கள்... .......... போரில ஜெர்மனி பின்வாங்க நேர்ந்தபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிச்சப்பேரையும் இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.......... பிறகு யாருமே வீடுதிரும்பேல்ல...... "

பிறிட்ஸர் பூங்கா நடுவில் ஒல்லாந்திலிருப்பது போன்ற அமைப்பில் ஒரு புராதன காற்றாலை ஒன்றிருக்கு. அதைக்காட்டி "அங்கேதான்....... அங்கேதான் நான் தம்பிமாரோட விளையாடு வேன்.......... இங்கே விளையாடுவதென்றால் எமக்குப் பெருங்குதூ கலம்.... இந்தக் காற்றாலையைச் சுற்றிச்சுற்றி எத்தனை தரம் ஓடியிருப்போம்............."

மீண்டும் கண்ணீர். ஆண்டுகள் ஐம்பதைக் கடந்தும் இவ்வளவு விசும்பலையும், கண்ணீரையும் கொட்டவல்ல ரணத்தின் ஆழந்தான் என்ன?

ஏதாவது பேசிக்கொண்டு வந்தால் அவள் அழுகையை நிறுத்தலாம் போலிருந்ததால் காற்றுவெளி ஒன்றிலேயே இருக்க வேண்டிய அந்த காற்றாலை இவ்வளவு செறிவான மரங்களின் மத்தியில் அமைய நேர்ந்ததெப்படியென்று கேட்டேன்.

"மரமாவது.......... காடாவது....... இங்கெல்லாம் முன்பு வெட்டவெளியாயிருக்கும்............அப்போ இந்தக் காற்றாடி எம்மாம் வேகத்தில சுற்றும் தெரியுமா.......? " என்றவள் சற்று நேரம் மீண்டும் பழையநினைவுகளில் தோய்ந்தாள்.

மூன்றுநாலு கிலோமீற்றர் கடந்திருக்கும். ஒரு அப்போதிக் கேரியை(மருந்தகம்)க் கையை நீட்டிக்காட்டி

"அங்கேதான்...... அங்கேதான்.......அங்கதான்........... முன்ன எங்கள் சொந்த வீடு இருந்தது.................. இந்தப்பக்கம் பங்கர் இருந்தது....... விமானங்கள் வரும் சத்தங்கேட்டு நாங்கள் ஓடி ஒளிஞ்சுகொள்வோம். போர் தீவிரமாகிக்கொண்டேபோக நாங்கள் பெர்லினைவிட்டே ஓடிவிட்டோம். போர் ஓய்ந்து நாங்கள் திரும்பி வந்து பார்த்தபோது...... இங்க பூரா மண்மேடும் சாம்பலுந்தான் பரவியிருந்தது........ சிறுமியாய் நான் தவழ்ந்த புரண்ட மண்ணிது ...... "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் கண்ணீர் பிரவகிக்க வெளியில் வெறித்துப் பார்த்தபடி மௌனமாக வந்தாள்.

சேலண்டோ:ப் எல்லைக்குள் வந்ததும்கேட்டேன்:

" சேலன்டோஃபில எந்த றோட்டுக்கு போகவேணும்..........? "

என்னையே திருப்பிக்கேட்டாள். "சேலன்டோஃபில எந்த றோட்டுக்குப்போகிறோம்.......?

"நீங்கள் எந்த றோட்டில் எத்தனையாம் நம்பர்வீட்டில் வசிக்கிறீர்கள் என்று சொன்னால்தானே நாமங்கு போகமுடியும்.........? "

இலக்கணச்சுத்தமாய் ஜெர்மனில் எடுத்துவிட்டேன்.

"என்னுடைய வீடெங்கே இருக்கு..............? "

போச்சுடா. இன்றைக்கு உழைப்புக் கோவிந்தாதான்........

அரைமணிக்கும் மேலாக அனேகமாய் சேலன்டோஃப்பின் எல்லாவீதிகளாலும் ஓட்டியிருந்திருப்பேன்.............

திடீரென ஒரு கியோஸ்க்கைக் கடக்கும்போது சொன்னாள்.

"இந்தக்கடையை எனக்குத்தெரியும்.. ...இங்கதான் பேப்பர் சொக்கிளேட்டெல்லாம் வாங்கு வேன்......."

அப்பாடா என்றிருந்தது. கியோஸ்க்கார மாதுடன் பொழுதுபோகாத இரண்டுபேர் பியர்ப்போத்தலும் கையுமாய் அரட்டையடித்துக்கொண்டு நின்றனர். கிழவியைக்காட்டிப் பிரச்சனையைச் சொன்னேன்.

கியோஸ்க் மாது சொன்னாள்:

"தெரியும்........ ரெல்ரோவர் டாம் பெர்லினர் ஸ்றாஸ மூலையில உள்ள பழைய வீட்டில விசாரிச்சுப் பாருங்கள்........ "

அந்த வீட்டண்மையில் போயும் கிழவி வண்டியால் இறங்கிற மாதிரியில்லை. தப்பான விலாசமோ........ எதற்கும் ஹவுஸ்வார்ட்டையும் ஒரு வார்த்தை கேட்பதுதான் நல்லது. கேட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐந்து வருஷத்திற்கு முன்னே இந்தக்கிழவி இங்க இருந்ததுதான்........ பிறகுதான் ஸீனியோறன் ஹைமுக்குப் (முதியோர் இல்லம்) போயிட்டுதே........ "

சித்திராவுக்கு எப்படியும் மூன்று மணிக்குள்ளாக வீட்டுக்கு வந்துவிடுவதாகச் சொல்லியிருந்தேன். நாலு மணியாகிவிட்டிருந்தது.

சேலன்டோ ப் ஸீனியோறன் ஹைமுக்கு ஓட்டினேன்.

அங்கேயும் உதட்டையே பிதுக்கினார்கள்.

கிழவியின் அறிமுக அட்டையை வாங்கி அதிலிருந்த பெயரை கொம்பியூட்டரில் கொடுத்துப் பார்த்தபோது ஒருவிபரமும் அறிய முடியவில்லை.

அவர்களே பொலீஸுக்கு விபரம் அறிவித்தபோது பொலீஸ் கிழவியின் தற்போதைய சரியான விலாசம் "நொய்கேர்ண் சீனியோறன் ஹைம் " என்றது.

மீண்டும் புறப்பட்ட திக்குக்கே போகவேணும். ஓட்டினேன்.. வேலை முடிவடைந்து வீடுதிரும்புவோரின் வாகன நெரிசலில் அகப்பட்டுப் பயணம் ஒன்றரைமணி நேரத்திற்கு மேலாக எடுத்தது. விலாசத்தை அடையவும் கிழவி இனி எனக்குத்தெரியும் என்பது போலிறங்கிக் கம்பீரமாக ஹைமுள்ளே நடந்தாள். அங்கே ஹைம் லைட்டரிடம் (பொறுப்பாளர்) நடந்த கூத்தை விபரித்தபோது முதலில் வெளிநாட்டுக்காரன் என்றதாலேயோ என்னவோ நம்ப மறுத்தார்கள். பின் சேலன்டோஃப் ஹைமுக்கும் போன் பண்ணி உறுதிசெய்த பின்னாலும் ஒரு டசின் தாள்களில் கையெழுத்து வாங்கிக் கொண்டுதான் பணம் தந்தார்கள்.

டாக்ஸியை உரிய இடத்தில் ஒப்படைத்துவிட்டு வீடுதிரும்பவும் பொழுது செக்கலாகிவிட்டிருந்தது. பஸ்ஸரை ஒருதரம் அமுக்கிவிட்டு கதவைத்திறந்துகொண்டு உள்ளே போனேன். சித்திரா வதியுமறை லைற்றைக்கூடப்போடாமல் ஷபனா ஆஷ்மி மாதிரி முகத்தில் ரௌத்ரமும் சோகமும் சரிவிகிதத்தில் கலந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்தாள். அழுதழுது கண்மை கரைந்து முகமெல்லாம் தாறுமாறாக அப்பிவிட்டிருந்தது.

எதுசொன்னாலும் உடைவாள்.

சங்கடமான நிமிஷங்களைத்தவிர்க்க

"சொறி..... டார்லிங்.....................!" என்றுவிட்டுத் துவாயை எடுத்துக்கொண்டு வேகமாக குளியலறையுள் நுழைந்தேன்.

வெளியே வந்தபோது.................

"உங்களை மன்னிக்க நான் யார்.............? நீங்களோ பிஸியான மனிதன்... தப்பான இடத்துக்குள் வந்து புகுந்துகொண்டதுதான் என் தப்பு........ "

ஜன்னல்பக்கம் போய் வெளியே பார்த்துக்கொண்டு நின்றாள். நிஜமாகவே ஒரு விபத்தைப்போலும் கண்ணாடிக்கூண்டொன்றுள் அகப் பட்டுக்கொண்டுவிட்ட ஒரு பறவை இயலாமையுடன் வெளியே பரிதாபமாக பார்த்துக்கொண்டு நிற்பது போலிருந்தது.

பக்கம்போய் மெதுவாக தோள்களைத்தொட்டு

"நடந்த கதையைக்கேட்பீரானால் உமக்கே என்நிலமை புரியும்." என்றேன்.

"கதையும் வேண்டாம்....... ஒரு மண்ணும் வேண்டாம்........ இந்த ஆறுமாதம் அளந்தகதையள் போதுமென்னப்போதும்........ கல்யாணங் கட்டினாப்போலதான். ஒவ்வொருத்திக்கும் சுதந்திரமே கிடைக்கிறது......... இஞ்ச யென்னென்டா நாலு சுவருக்க அடைபட்டு நித்திய சிறை........... சித்தப்பாவே நான் பகல் முழுவதும் தன்ரை பிள்ளையைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்று தான் வேலையால் வந்த உடன என்னை எங்கேயாவது அவுட்டிங் கூட்டிப்போவார்........ "

"நீர் இருக்கிறது உலகத்திலேயே அதிகூடிய ஒரு போக்குவரத்துவசதியுள்ள ஒரு நகரத்திலயாக்கும்... "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுக்கு.....? "

"இவ்வளவு வாயடிக்கிறனீர் பொழுது போறடிச்சா ஒருக்கா வெளிக்கிட்டு ஒரு சுத்துச்சுத்திப்போட்டு வாறது...... "

"அப்பிடித்தனியச் சுத்திறண்டால் பேர்லினில எனக்கென்ன அலுவல்...... நான் பிராங்பேட்டுக்கே போறன்......... என்னை என்ர பாட்டில விடுங்கோ......... "

தன்னுடைய சூட்கேஸை கட்டில் மேல் எடுத்து வைத்து உடுப்புகளை வேகமாக அடுக்கத் தொடங்கினாள்.

"எங்க போறதெண்டாலும் போம்....... டிவோர்ஸ் பேப்பரில ஒரு சின்னக்கையெழுத்து வைச்சுத்தந்திட்டு........ பிறகு இதுக்காக எனக்கு உமக்குப்பின்னால அலையேலாது....... "

"கையெழுத்தெல்லாம் நான் சித்தப்பா சித்தியைக் கலக் காமல் வைக்கமாட்டன்........... அதுகள்தான் செலவழிச்சு என்னை இங்ககூப் பிட்டதுகள்........ "

"எங்க சுத்தினாலும் உவள் ஒதுங்கிறதுக்கு கடைசியாய் என்ர குடிலுக்குத்தானே வரவேணுமெண்ட ஆணகந்தையில பேசிறியள்... இதுக்கை பெண்ணிலைவாதம் வேற....... இது எல்லா ஆம்பிளையளும் தாங்கள் தப்ப கட்டிற வேஷந்தான்............ இதுகூடி விளங்காத அச்சுப்பிச்சில்லை நான்.. "

வீம்பு எவ்வளவுதான் இருந்தாலும் இப்போதே கையெழுத்தை வைத்தால் தப்பாய்விடுமோ என்ற விளிப்பும், ஒரு மூலையில் இருக்கத்தான் செய்தது.

"கையெழுத்து வாங்கக்கூட அவர் பிராங்பேட்டுக்கு வர மாட்டாராம்.......... அவ்வளவு கர்வமும் அகங்காரமும்............ "

"விலாசமாய் கல்யாணத்துக்கு தங்கடை நகையளைப்போட்டு அலங்கரிச்சிட்டு மற்ற நாளே ஒரு சோடி காப்பைக்கூடி விடாமல் உருவிக்கொண்டு மூளியாய் உம்மை பெர்லினுக்கு அனுப்பின பெருமக்களல்லே....... "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள்தான் சீதனமும் வேண்டாம்........ ஒன்றும் வேண்டாமென்ற புரட்சிக்காரனாச்சே......... பிறகேன் ஆற்றையும் பொருளுக்கு அவாவுறியள்......? "

"நானொன்றும் அவையின்ரை ஒரு சோடிகாப்புக்கு கிடந்து வீங்கேல்லை........ அட கல்யாணம் முடிந்து அவள் புதுப்பெண்ணாய் ஒரு புது இடத்திற்குப் போகிறாள் மூளியாய் அனுப்பப்படாது என்ற எண்ணம் ஆரோ பெத்தபிள்ளை என்றதாலதானே வரேல்லை.... தங்களுடைய பிள்ளையையும் இப்பிடி அனுப்புவினமே ..........."

"அப்பிடிக்குணம் அவையிட்ட இல்லை......."

"அப்ப பின்னையென்ன...... ஒரு சோடி காப்போடதான் ஆளைவிட்டாலும் இவன் திருட்டுப்பயல் பிடுங்கி எடுத்துப் போடுவான் என்று உருவினவையோ....... அப்பிடி ஒரு சந்தேகமுள்ள இடத்தில ஏன் ஒருத்தியை ஆற்றையனபிள்ளைதானே தங்கடை சுமை தீர்ந்தால் சரியெண்டு அனுப்பினவையோ........ "

"போர் எ வைல்......... நடந்தது முடிந்தது தப்பென்றுதான் எடுத்தாலும் ஒரு நாகரீகமாக மனுஷனென்டால் அதையே காலத்துக்கும் தூக்கிப்பிடிச்சுக்கொண்டு நிற்பினமே...... "

"நான் நாகரீகம் தெரியாதபயலாயே இருந்திட்டுபோறன்....... ஆனா... என்னை ஒரு திருட்டுப்பயலாய் எடைபோட்ட அந்த மனிஷருக்கு முன்னால இன்னொருதரம் வந்து நிக்கிறதென்டது ஏலாது...... அவ்வளவுதான்........... "

"சும்மா......... நான் சீதனம் வேண்டேல்ல பெரீய்ய தியாகியாக்கும் என்று தற்பெருமை அடிக்கத்தான் என்னைக் கட்டினீங்களே தவிர உண்மையான மனசில தியாகமுமில்லை..... ஒரு மண்ணுமில்லை.......... "

"நான் எங்கையப்பா தமுக்கடிக்கிறன்.......? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பின்னயேன் அண்டைக்கு பாலேந்திரனுக்கு நான் சீதனம் வாங்கேல்லையென்று விலாசம்எழுப்பினீங்கள்............ எவ்வளவு அவமானமாயிருக்கெனக்கு?-

"இதுதான்.......இதுதான்........ஒன்றும் அடிமுடி தெரியாமல் கதைக்கிறது........ அதப்பா அவன் ரமணியின்ரை தங்கையைக் கட்டிறன் என்று போட்டோவெல்லாம் பார்த்து அவளை கொழும்புக்கும் எடுப்பிச்சுப்போட்டு தன்னால ஸ்பொன்ஸர் பண்ணேலும் என்ற திமிரில இப்ப ஐம்பதாயிரம் மார்க் சீதனம் கேட்டு டிமாண்ட் பண்றானாம்........ சொல்லியழுதான். அதுதான் நல்லதுகளை மனதில வாங்கக்கூடிய பயலென்றால் வாங்கட்டும் என்று மறைமுகமாய் போட்டு வைச் சனான்.... அது உம்மைப் பாதிச்சிருந்தா....... ஐ அம் ரெறிபிளி சொறி. "

"பின்னயேனாமனை கொக்காவை முதல் விசிட்ல நகையென்ன போடுறியளெண்டு கேட்டவை.........? "

"எகென் ஐ பெக் யுவர் பார்டன் ஃபோர் த இன்சி டென்ற்.......... ஏனென்றால் சின்ன வயதிலேயிருந்தே என்னட்ட சீதனத்துக்கெதிரான ஒரு பொலிஸி இருக்கிற விஷயம் அவையளுக்குத் தெரிஞ்சிருக் காது......... சும்மா வந்தவிடத்தில பேட்டிக்குலராய் இல்லாமல் சம்பிரதாய மான பேச்சுக்காய் ஒரு வார்த்தையை விட்டிருக்கலாம்......... "

அன்றைய நம்மீதி விவாதத்தை கட்டிலில் இருவரும் அமர்ந்து விவாதித்தோம். பின் வந்த வார்த்தைகளில் நெஞ்சில் வலிகுறைந் திருப்பது தெரிந்தது.

இடைக்கிடையே நினைவில் ஜெர்மன் மூதாட்டியின் துக்கித்த முகம் தோன்றியது.

பின்னிரவு மழைபெய்து இதமான குளிர்தந்தது.

பனிக்குளிரானால் தேள் கொட்டுவது மாதிரியிருக்கும். ரசிக்கவே முடியாது. மழைக்குளிரின் சுகமே தனி.

நெருக்கம் கிடைத்தது. எனக்குப்பிடித்த அவளின் வெல்வெட் வயிற்றை ஸ்பரிசித்தபோது ஆட்சேபம் ஒன்றும் வரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவின் கதகதப்பு விடியலில் ஏராளம் அயர்ச்சியை வாரி வழங்கியிருந்தது.

சுகமாகப் போர்த்திப் படுத்திருந்த என்னைச் சித்திரா ஏழு மணியாகுதென்று எழுப்பினாள்.

"வேண்டாண்டா... எழுப்பாத...... இன்றைக்கு வேலைக்குப் போகேல்லை..... "

"ஏன்....? "

"இன்றைக்கு நாங்கள் ஸ்ரேக்லிட்ஸ் பொட்னிகல் கார்டனுக்குப்போகிறோம். "

"உண்மையாய் "

"உண்மையாய் "

சந்தோஷம். திக்குமுக்காடல். கூச்சலிட்டபடி கோல் போட்டுவிட்ட ஆட்டக்காரனைப்போலக் காற்றில் எம்பிக் கட்டிலில் குதித்தாள். மின்னல் வேகத்தில் சமைத்து எடுத்துக்கொண்டு பிக்னிக் போவதுபோல் ஆர்ப்பாட்டமாய் புறப்பட்டுப்போனோம்.

செயற்கைச் சீதோஷ்ணத்தில் கமுகையும், வாழையையும், வெற்றிலைக்கொடியையும், கரும்பையும் கண்டு குதூகலித்தாள்.

அராபியன் நைட்ஸ், றோஸ் ஹிப்ஸ் பந்தல்களூடாகவும், ஓர்க் கிட்டுகளுக்குள்ளாகவும் அவள் புகுந்து புகுந்து குசலம் விசாரித்துக் கொண்டு வருகையில் அவளறியாமல் நிறையவே கிளிக்கினேன்.

நடந்து நடந்து கால்கள் ஓயவும் ஓரிடத்தில் சாப்பிட அமர்ந்தோம்.

எங்கிருந்தோ ஒரு சுண்டெலி கீச்......கீச்...... கீச்......கீச்........ சென்று விட்டுவிட்டு ஈனஸ்வரத்தில் அழுதது. சாப்பிட முடிய வில்லை. சுற்றுமுற்றும் தேடிப்பார்த்தும் எங்குதான் இருக்கென்று கண்டுபிடிக்க முடியவில்லை. கடைசியில் சத்தம் ஒரு குப்பைவாளிக்குள் இருந்து வருவது போல் தோற்றவும் எட்டிப் பார்த்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பிவலையாலான குப்பைவாளி ஒன்றுள் புகுந்த சுண்டெலி ஒன்று இடுப்புப்பகுதியில் அகப்பட்டிருந்தது. அதனால் உள்ளேயும் வரமுடியவில்லை வெளியேயும் போகமுடியவில்லை.

கழுத்திற்பிடித்து உள்ளே இழுக்கலாமென்றால் கடித்து விடுமோவென்று பயமாகவிருந்தது. வாலில் பிடித்து வெளியே இழுத்தேன். உள்ளே எதையும் சாப்பிட்டுதோ தெரியவில்லை. உப்பியிருந்த வயிறு வலைக்குள்ளால் வெளியேவர மறுத்தது.

இன்னும் கொஞ்சம் பலமாய் இழுத்தேன். ஒரு செப்பு மின்வயரின் பிளாஸ்டிக் லூப்பைப்போல வாலின் தோல் கழன்று கையோடுவர எலி வலியில் கிறீச்சிட்டு அலறியது........... நம்மால் செய்வ தற்கு இனி ஒன்றுமில்லை. வேணுமானால் அடித்துக் கொன்று விடலாம். காந்தியே அனுமதித்தது. எனினும் மனம் வரவில்லை. யோசனையைச் சொன்னதும் சித்திரா அலறினாள்.

சுண்டெலி தொடர்ந்தும் கத்திக்கொண்டிருந்தது.

அவ்விடத்தை விட்டு நகர்ந்துபோய் வேறு இடத்திலமர்ந்து சாப்பிட முயற்சித்தோம். முடியவில்லை.

எழுந்து நடக்க ஆரம்பித்தோம். ஷார் மன்னன் நாட்டியது, ஜவகர்லால் நேரு நாட்டியது, சுகர்ணோ நாட்டியது, மாவோ நாட்டியது என்று பித்தளைத்தகட்டிலான குறிப்புக்களுடன் மரங்கள் விருட்ஷங் கொண்டிருந்தன. அவற்றைக்காட்டலாமென்று சித்திரா வைப் பார்த்தால் அவளைக்காணவில்லை. வேறேதோ வகைப் பூங்கன்றுகளைத் தேடிப்போய்க் கொண்டிருந்தவள் கார்டனின் மத்தியில் வெகுசெறிவாக வளர்க்கப்பட்டிருந்த பசும் புல் மைதானத்தின் மற்றப்பக்கத்தில் நின்றிருந்தாள். என்னைக்கண்டதும் குறுக்காக ஓடிவர எத்தனித்தாள்.

"வேண்டாம் சுற்றிவா புல்லை மிதிக்கப்படாது....... " என்று இந்தப்பக்கமிருந்து நான் காட்டுக்கத்தல் கத்தியும் அதைக்காதில் போடாது பாதித்தூரத்திற்கு குழந்தை மாதிரி ஓடியேவந்துவிட்டாள்.

"குறுக்க ஓடப்படாதென்று சொன்னனில்ல........ "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆஹ்ங்..... போங்கோ அந்தப்பக்கம் எலி நிக்கு......! "

"புல்லை மிதிக்கப்படாது" என்று தரையின் பதினாறுதிசை யிலும் சுற்றிச்சுற்றி துலக்கமாய் எழுதியும் வைத்திருக்கிறார்கள். அங்கே நின்ற ஜெர்மன் சனங்கள் வேறு நரிக்குறவரைப் பார்த்தமாதிரி எங்களை வேடிக்கை பார்க்குதுகள்.

வந்த கோபத்தில் "பட்டிக்காடு மாடு ............! " என்றேன்.

மைக்கிரோ செக்கன்டில் சித்திரா கண்களில் நயாகரா முகம் நாவலாய் கன்றி உதடுகள் விட்டுவிட்டுப் படபடக்கின்றன.

வேறுவிதமாய்க் கண்டித்திருக்கலாமென்று பட்டது. பிறகென்ன கார்டனா பார்த்திருக்கமுடியும்?

வீடு திரும்பினோம். வழியில் பஸ்ஸுக்குள்

"பெண்ணியவாதியின் கண்டுபிடிப்புக்கு தாங்ஸ்.......! " என்றாள்.

இரவு படுக்கைக்குப்போனால் சுண்டெலியைக் கொன்று அதன் அவஸ்த்தைக்கு முடிவுகட்டாது வந்தது பெருந்தவறாகப் பட்டது.

எனக்குத்தெரியும் இனித்தூக்கம் வராது.

யாருக்காவது கண்ணுக்குள் சொட்டு மருந்து விடுவதென்றால்கூட அவர்களைவிட கண்ணீர் அதிகமாகவே எனக்குக் கொட்டும்.

முன்பும் ஒரு முறை என் டாக்ஸியில் சற்றே போதையுடன்..........

போரில் என் மனைவியையும், மூன்று குழந்தைகளையும் ஒரே ஷெல்லில் தொலைத்தேன்.............. என்று முகஞ்சிவந்து அழுது என் தூக்கத்தை விரட்டிய பொஸ்னியாக்காரனின் கண்ணீர் மணி களும்.....................

நாகர்கோவிலிலும், நவாலியிலும் கூறாக்கப்பட்ட மழலை களின் தாய்மார் உகுத்த கண்ணீர்மணிகளும்...........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறிட்சர்பூங்காவைக் கண்டவுடன் ஜெர்மன் மூதாட்டிக்குப் பீறிய கண்ணீர மணிகளும்....... முடிவிலாது நீண்டவோர் மாயச்சரட்டில் கோர்க்கப்பட்டு சித்திராகொண்ட நயாகராவுடன் சேர்ந்து சங்கமித்துப் பிரபஞ்சவெளி நிறைக்கும் சமுத்திரமாகிப் பர்வத அலைகளென எம்பியெம்பி ஆர்ப்பரித்து என் கபாலத்துள் ஓர் ஜலப்பிரளயம் நடாத்துகின்றன. அந்த ஊழிக்கூத்துக்கு ஓராயிரம் வயலின்கள் அதியுயர் ஸ்ருதியில் ஒத்திசைத்தாற் போல சுண்டெலியின் ஈனஸ்வரம் நாராசமாய் செவிவழி புகுந்து குருதி சொட்டும்படி இதயத்தைப் பிழிகின்றது.

நான் புரண்டு புரண்டு படுத்ததைப்பார்த்த சித்திரா தலைமாட்டுவாசிக்கும் விளக்கைப் போட்டுவிட்டு என் முகத்தைப் பார்க்கிறாள்.

கண்கள் பனிப்பில் மினுங்கியிருக்கலாம்.

குரலில் பரிவு கலந்து சொன்னாள்:

“ஐ took everything easy dear............, don’t be too emotional........ “

(பாரீஸ் ஈழமுரசு 04.10.1997)

UNIVERSITY OF PERADENIYA
2003-7-26
LIBRARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுண்டெலி

## (1)

சற்றேனும் நான் எதிர்பாராமல் ஒரு கனவில் கிடைத்துவிட்ட புதையலைப்போல வேலைக்கான நியமனக்கடிதத்தைக் கையில் பெற்றுக் கொண்டு அந்தக் கட்டிட ஒப்பந்தக்கம்பனியின் படிகளில் இறங்கு கையில் பூமியில் அன்று பல சூரியன்கள் உதித்திருந்தன.

புவனமெங்கும் இசையும் இன்பமும் நிறைந்து என்னைப்போலவே உலகத்து மாந்தர் அனைவருமே ஆசீர்வதிக்கப்பட்டும் ஆனந்தித்தும் இருப்பதாகப் பட்டது.

வேலை தேடி அவ்வளவுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்கள், பாக்டரிகள், ஹொட்டல்கள், பண்ணைகளென கால்கள் விட்டுப்போகும்படி அலைந்தாயிற்று. எவ்வளவு நம்பிக்கையுடனும் எதிர் பார்ப்புகளுடன் காத்திருக்கும் என் குடும்பத்திற்கு இன்னும் எத்தனை வருஷத்திற்குத்தான் "வேலை இன்னும் தேடிக்கொண்டிருக்கிறேன்..... சீக்கிரம் கிடைத்துவிடும் " பல்லவியை எழுதிக்கொண்டிருப்பது?

அன்றைய காலைப்பொழுது நிச்சயமாக வாழ்வின் மறக்க முடியாத ஒரு காலைப்பொழுதாகவே விடிந்துவிட்டிருந்தது..

என்னை நேர்முகம் செய்த அந்த கம்பனியின் உரிமையாளனும் இயக்குனனுமாகிய ஜேர்மன்காரனுக்கு என்னை விடச்சில அகவைகள் குறைவாகக்கூட இருக்கலாம். மழுங்க ஷேவ் பண்ணிய முகத்தில் ஒரு சீதேவிக்களை. "கொழும்பில் கட்டிடக்கலைத்துறையில் படவரைஞனாக பத்து ஆண்டுகள் பணிசெய்த அனுபவம் உண்டு" என்றேன்.

"உனக்கு வசதிப்படுமென்றால் அடுத்த திங்களே வேலையை ஆரம்பிக்கலாம்." என்றான்.

மூன்றே மாதத்தில் என்கடின உழைப்பு, திறமை, விசுவாசம், மற்றும் பல்துறைகளிலும் எனக்கிருந்த ஆர்வம் என்பன அவனுக்குப் பிடித்துப்போக அஸெஸர் அல்லது எஸ்ரிமேட்டர் என்று சொல்லக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய ஒரு பதவியில் போட்டான். அந்த ஆண்டிலேயே கம்பனி பத்தரை மில்லியன் ஜெ. மார்க்குகள் தேவையென மதிப்பிட்டிருந்த தொடர் மாடிக்கட்டிடம் ஒன்றை ஏழு மில்லியனுள் முடித்துக் காட்டினேன்.

"படு கில்லாடிப்பயலாய் இருக்கிறியே நீ!." என்று பாராட்டியவன் அன்றே ஆர்க்கிரெக்ட் இஞ்ஜினியர்களுக்கு நிகராய் என் சம்பளத்தையும் உயர்த்தியது காரியாலயத்தில் பலரது புருவங்களையும் மேலே உயர்த்தியது.

விருப்புக்குரிய பொஸ் சமர்த்துப்பிள்ளையென்று இருந்த எமது உறவு ஹொலிடே பாரடைஸ் என்று என்றைக்குத்தான் ஸ்ரீலங்காவுக்குப் போய் வந்தானோ அன்றிலிருந்து விரிசல்காண ஆரம்பித்தது.

"எங்கெங்கெல்லாம் சுழியோடலாம்" என்று என்னிடம் விபரம் கேட்டுப்போன பிரான் ஒக்ஸிசன் சிலிண்டரை எங்கேயோ ஓரமாக வைத்து விட்டு தூண்டில் போடுவதில்தான் முழுநேரமும் மினைக்கெட்டிருக்கிறார்.

விடுமுறையால் அங்கிருந்து திரும்பியதும் காரியாலயத்தில் எல்லோருக்கும் கைகொடுத்துக்கொண்டு வரும்போது (இவர்கள் வழக்கம்) "எப்படியிருந்தது பாரடைஸ்?" என்றேன்.

கட்டைவிரலையும், சுட்டுவிரலையும் குவித்து "ஸுப்பர்!" என்றவன் அத்துடன் நிறுத்தாமல்

"ஒரு ஐந்நூறுமார்க் போதும்............ ஒரு வாரத்திற்கே காலடியில்

கிடப்பாளவை........" என்று அனைவர் முன்னிலையிலும் கொழும்புச் சாக்கடையைக் கலக்கினான். அதைக் கேட்டவர்கள் எல்லோரும் பல்வேறு தினிசுகளில் சிரித்தார்கள்.

உள்ளூரக்கோபம் வந்து தகிக்க மனது வருத்தத்தில் தோய்ந்தது.

மறுநாள் காப்பி இடைவேளையின் போது கேட்டேன்:

"ஸ்ரீலங்காவில் போர் நிலைமைகள் எப்பிடியிருக்கு.............. ஏதாவது அறிந்தாயா................?" (இங்கே கூட்டாக வேலை செய்பவர்களை தோழமையுடன் du என்று ஒருமையில்தான் அழைப்பதுதான் வழக்கம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன போரா........... ஸ்ரீ லங்காவிலா................ யார் சொன்னது? அப்படி ஒரு சத்தமும் என்காதில் விழவில்லையே............ நான் கேட்டதெல்லாம் அம்மே......ஹம்மே........அம்மே.........ஹம்மேதான்."

கண்களை ஒருமாதிரி மேலே சொருகிக்கொண்டு திரும்பத்திரும்ப முனகிக்காட்டியதோடு "I like their moanings" என்றான் இங்கிலிஷில்.

சாக்கடையில் தோய்த்த விளக்குமாற்றை என் முகத்திற்கு முன்னே பிடித்து ஆட்டுவதை அறியாமல் பேசிக்கொண்டே போனவன் இடையில் "நல்ல நாடு வீணே சீரழியுது" என்றான்.

என்ன அர்த்தத்தில சொல்கிறானென்று புரியவில்லை. கேட்டேன்:

"எப்படி? "

"உலகத்தில ஒவ்வொருத்தரும் தன்னுடைய மொழியால, மதத்தால, இல்லை வேறொரு அடையாளத்தால தனிநாடு கேட்கத்தலைப்பட்டால் அரசுகளின் எண்ணிக்கைதான் அதிகரித்துக்கொண்டுபோகுமே தவிர பிரச்சனைகள் எதுவும் தீர்ந்தபாடாக இருக்காது.............. உங்களின் தனிநாட்டுக்கான போராட்டம் அர்த்தமற்றது......... குழந்தைத்தன மானது."

இப்பிரானுக்கு அங்கே யாரோ நன்கு மூளைச்சலவை செய்துவிட்டிருக்கிறார்கள். தான் பிரச்சனையை தெரிந்துகொண்ட கோணத்தில் விவாதத்தை வளர்த்தினான்.

"நீயும் ஒரு மாதமென்றாலும் ஒரு தமிழனாய் வாழ்ந்து பார்த்தால்தான் உன்னால் எங்கள் பிரச்சனையின் முழுப்பரிமாணத் தையும் உணர முடியும், எங்கள் கோரிக்கைகளின் போராட்டத்தில் உள்ள நியாயத்தை புரியமுடியும்."

"போராட்டந்தான் நியாயமென்றால் அங்கேயே நின்று போராடவேண்டியதுதானே ............ இங்கே ஏன் வாறியள்?"

"உனது வீடு திடீரென தீப்பற்றிக்கொண்டால் முதல்ல என்ன செய்வாய்?"

மௌனமாயிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கள் தீவு தீப்பற்றிக்கொண்டுவிட்டது, இன்றைக்கு மூன்று இலட்சம் மக்கள் தங்கள் குழந்தைகளுடன் கூரைகளை இழந்து காட்டிலும் மரத்தின் கீழும் நிற்கிறார்கள் ஐயனே!"

"பிரச்சனை எப்படித்தானிருந்தாலும் அங்கு நின்று முகங்கொடுத் திருக்க வேண்டுமே தவிர இங்கு வருவது தப்பு. பிரச்சனையால்தான் வந்தோமென்று விவாதிப்பது அதைவிடவுந்தப்பு."

"நாளை ஒருநாள் ஜெர்மனியில ஒரு அணுக்குண்டொன்று வெடிக்குதென்று வைப்போமே............... நீங்கள் அங்கே வருகிறீர்கள்........ நீங்கள் ஏன் வருகிறீர்கள் இங்கே என்று அப்போது நாங்கள் கேட்கப்போவதில்லை."

"நிறையவே கனவு காண்கிறாய்!"

"வரலாற்றில் நிகழ்வுகள் சொல்லிக்கொண்டு இடம்பெறு வதில்லை.............. இரண்டாம் உலகப்போரின் உக்கிரம் தாங்காது எத்தனை பேர் நாட்டை விட்டு ஓடினீர்களென்று தெரியுமா................?"

"நான் போருக்குப்பின்னால் பிறந்தவன்........... போரின்போது நடந்த சம்பவங்கள் எதையும் நான் பார்த்ததில்லை............... என்னுடன் போர்பற்றி விவாதிக்காதே. அது நான் சம்பந்தப்படாத விஷயம். நான் ஜெர்மன்காரன் எனக்கே போரைப்பற்றிச் சொல்லுறியா?"

"இருக்கட்டும்.......... நீ விவாதிப்பது ஒரு Historian னுடனாக்கும்."

"நான் ஜெர்மன்காரன்." (Ich bin Deutsch! எனக்கு அதிகம் தெரியும் என்ற அர்த்தத்தில்)

"இப்படி நான் ஜெர்மன்காரன் நீ வெளிநாட்டவன், நான் வெள்ளையன் நீ நிறங்கொண்டவன், நான் வேறு வர்க்கம் நீ வேறு வர்க்கம் என்று பேசும் பார்வைக்குறுக்கம் கொண்டவர்களுக்கு எனது மொழியில் வேறுபெயர்.......... இவர்களுடன் விவாதிப்பதில் எனக்கு இஷ்டமில்லை."

விவாதம் இப்படிச்சூடாகுமென்று எண்ணியிருக்க மாட்டான். திடுமென முகம் இருண்டு கன்றிப்போனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் ஜாதி அபிமானம் மாதிரி இவர்களுக்கும் பொதுவாக "நான் ஜெர்மானியன் " எனக்குத்தெரியாதது ஒன்றில்லை என்ற மிதப்பான எண்ணம் தவிர்க்க முடியாதபடியுண்டு. இருப்பினும் அது வெளிப்படை யாகத் தெரிவதை மறைத்துக் கொள்ளும் நாசூக்கும் கைவராததால் சமயங்களில் அவ்வப்போது வெளிப்படச்செய்யும்.

தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்ள அவ்வப்போ என்ன தான் முதுகில் தட்டியே கொடுத்தாலும் இவர்கள் மெலிதான ஒரு இடை வெளிவிட்டே பழகுவதை ஒரு வெளிநாட்டுக்காரனால் உணருவதில் சிரமமிருக்காது.

அந்த விவாதத்தின் பின்னால் அவ்விடைவெளி இன்னும் அதிகமாகியதை உணர முடிந்தது.

வேலை அதிகம் இருக்கும் நாட்களாயின் முன்பெல்லாம் வாசல் வரை வந்து அழைத்துப்போவான். இப்போது நான் வருவதையே கண்டுகொள்ளாதிருந்தான்.

"Guten Morgen" சொன்னாலும் வேறுயாருக்கோ சொல்வது போலவே சொன்னான்.

முந்திய அரட்டைகள், கிண்டல்கள், எல்லாம் திடுப்பென நின்று போனது.

இரண்டு நாட்கள் கழித்து காரியாலயக் காரைப்பாவனைக்கு எடுக்கும்போதும் திரும்பக் கொண்டுவந்து விடும்போதும் நேரம் பதிவுசெய்ய வேண்டுமென்று எனக்கு மட்டும் தனிச்சுற்று வந்தது.

அதுவரை பொறியியலாளர் தரத்திலுள்ள வேறு எவரும் அப்படி நேரப்பதிவுசெய்தல் வழக்கமில்லை. நான் காரியாலயக் காரைப் பாவிப்பதை முற்றாகவே தவிர்த்தேன்.

என்னதான் பணத்தைக்கொட்டிக் கொடுத்தாலும் ஒரு பகலெல்லாம் பொழுதைச் செலவிடும் காரியாலயத்தில் பாகுபாடும் பழக்கத்தில் சுமுகமும் இல்லையென்றால்.......... போகப்போக வேண்டாப் பொண் டாட்டி கதையாகிவிடும்.

ஒரு நாள் " நான் நின்றுகொள்கிறேன். " என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குச் சற்றே உள்ளூர அதிர்ச்சி. அதைக் காட்டிக் கொள்ளாதபடி சொன்னான்.

"நான் உன்னை நிற்கும்படி சொல்லவில்லையே............"

"இல்லை........... நின்றுவிடுவதே நல்லது."

" நீ விரும்பினால் தொடர்ந்தும் வேலை செய்யலாம்... The choice is your's........... ஆனால் நீ போய்விடுவதால் நான் கம்பனியை இழுத்து மூடிவிடுவேன் என்று மட்டிலும் எண்ணிவிடாதே!"

மூளையில் யாரோ துருப்பிடித்த ஊசியைச் சொருகுவது போலிருந்தது.

" Auf wiedersehen."

" Auf wiedersehen." ( Good bye).

அதுவும் வாழ்வில் மறக்கமுடியாத ஒரு நாளாகவே ஆகிப்போனது.

**(2)**

மீண்டும் அந்தகாரம் சூழ்ந்து கொண்டது. பூரணமாக ஒரு வருஷம் பணியில் நிலைத்திருந்தாலாவது கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் மூன்றிலிரண்டு அளவிலான தொகையை இரண்டு வருஷங்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் தரும். இதுதான் நடு உழவில் நந்தக்கயிறு அறுந்த கதையாயிற்றே !

வேலையற்ற நாட்கள் முன்னரைப் போலவே சோம்பேறித்தனமாக கழிய ஆரம்பித்தன. உடல் நிறை மாத்திரம் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு கிலோவால் கூடிக்கொண்டு போனது. இருந்தும் "இனி எவனுக்கும் மாடாய் அடித்துக்கொடுப்பதில்லை" என்பதில் தீவிர மாயிருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் விறாந்தையை தேய்க்கத்தொடங்க வேண்டியதாயிற்று. இடையிடையே பாண் பேக்கரி கள், மரவேலைப்பட்டறைகள், கார் மோட்டோர்சைக்கிள் றிப்பேர் கராஜுகள், நாய் பூனைத்தீவன விற்பனை நிலையங்கள் என்று நீக்கல் தெரிந்த கதவுகள் அனைத்தினூடாகவும் புகுந்துவெளியேறினேன். சிலர் அனுதாபமாகப் பார்த்தார்கள், சிலருக்கு வேலைதேடும் வெளிநாட் டவனுடன் பேசவே பிடிக்கவில்லை.

ஒரு பிஸ்ஸா கடையின் கண்ணாடிச்சுவரில் வெளி ஓடர்களுக்கு பிஸ்ஸா விநியோகம் செய்ய ஆள்தேவை என்று நோட்டிஸ் எழுதி ஒட்டிருந்தது. உடனே உள்ளே நுழைந்தேன். அந்த இத்தாலி யனுக்கும் என் நிறம் பிடிக்கவில்லைப்போலும். "ஆள் எடுத்து விட்டோம்." என்று பச்சைப்பொய் சொன்னான்.

மாதாந்த சோஷல் உதவிப்பணம் பெறுவதாயினும் ஒவ்வொரு மாதமும் வேலைவாய்ப்பு அலுவலகம் போய் வேலை இன்னும் கிடைக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் ஸ்டாம்ப் குத்திக் கொள்ள வேண்டும்.

அதற்காக ஒரு முறை வே.வா.அலுவலகம் போய் காத்துக் கிடக்கையில் யாருமில்லாமல் காலியாயிருந்த ஒரு கணினியில் ஏதாவது வேலை வாய்ப்பு இருக்கிறதா என்று நோண்டிப்பார்த்தேன்.

"கிளீனிங்" என்ற நிரையில் ஒரு "பப்பில" வேலை காலியாக இருப்பதாக கணினி தெரிவித்தது. அவ்விளம்பரம் வே.வா. அலுவலகத்திறகு மூன்று மாதத்திற்கும் முன்னே வந்திருந்தும் இன்னும் அவ்வெற்றிடம் நிரப்பப்படாது காலியாகவிருந்ததுவும் கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தது. காலியாக இருக்கிறதென்றால் ஏதாலும் கோல்மால் பிடித்த இடமாகவிருக்கும். மேலும் ச்சீ....... படவரைஞன் பஞ்சத்திற்காக துடைதுண்டைப் பிடிப்பதா? மனசில் அவ்வளவாய் ஆர்வம் பிறக்கவில்லை.

நான் அடுத்த மாதம் போனபோதும் கணினியைப்பார்க்கிறேன். அந்த வேலை இன்னும் காலியாகவே கிடக்கிறது! சுங்கஇலாகா அதிகாரியாயிருந்த ஆனந்தராஜா "தம்பி தொழில்ல கௌரவம் பார்த்தன் என்டால் என்ரை குமர் நாலும் கரையேறாது." என்றுவிட்டு டென்னிஸ் கோர்ட்டில் பந்து எடுத்துக்கொடுக்க வில்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த றிஸ்க் என்றாலும் எதிர்கொள்வதென்று மனம் வேறு குறுகுறுக்கிறது. "எதற்கும் என்னதான் நடக்குதென்று பார்ப்பமே......... அப்பிடித்திரும்பிவரவிடாமல் என்ன கட்டியா போட்டுவிடப் போகிறார்கள்.......... "என்றுவிட்டு அதில் தரப்பட்டிருந்த விலாசத்தை குறித்து எடுத்துக்கொண்டு இரைந்துகொண்டுபோனேன்.

சிலந்திவலைச் சிக்கலாய் பேர்லினுக்குக் குறுக்காகவும், நெடுக்காகவும் ஓடும் சுரங்க" வேக ரயில்ப்பாதைகளின் சந்திப்பொன்றில் அமைந்த Gesundbrunnen எனும் ரயில் நிலையத்தின் எதிரில் அமைந்திருந்தது அந்த "பப் ".

வேலைக்காக வந்திருக்கிறேன் என்று தெரிவித்தபோது அதன் சொந்தக்காரன் (ஜெர்மானியன்) "தற்போது தனியார் கம்பனி ஒன்றைக் கொண்டு அந்த வேலையைச் செய்விப்பதாகவும் தினமும் இருநூறு மார்க்குகள் பறப்பதாகவும்" ஓலமிட்டான். இரவுப்படி நீங்கலாக தினம் நூற்றியிருபது மார்க்குகள் தந்தால் வேலையை ஒப்புக்கொள்வதாக "டிமான்ட்" பண்ணினேன்.

சவுக்குக்காடு மாதிரியிருந்த தலைமுடிக்குள் பென்சிலைச் சொருகி சொறிந்தபடி யோசித்தவன் என்ன நினைத்தானோ சட்டென "ஓகே" என்றான்.

எனது பணி இவ்வளவுதான். இரவு "பப்பின்"வியாபாரம் முடிய எல்லாம் போட்டது போட்டபடி போய்விடுவார்கள். நான் "பப்பை" ஒழுங்காக்கி மறு நாள் வியாபாரத்திற்கேற்றபடி தயார் பண்ணி வைத்து விட்டு காலை அவர்கள் யாராவது வந்து பப்பைத் திறக்கும்வரை காவலிருக்க வேண்டும்.

அந்தப் பணியில் எனக்கு வாசிக்க நிறையவே நேரங்கிடைக்குமாதலால் எந்தன் மகிழ்ச்சி இரட்டிப்பானதாக விருந்தது.

(3)

இந்த பப்பில் வேலை ஆரம்பித்த நாளிலிருந்து பார்க்கிறேன். மழையோ உறை பனியோ............ டாணென்று 3 மணிக்கு ரயில் நிலைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்விதானத்தை ஒட்டியுள்ள "கியோஸ்க" பக்கமாக நீளக் கோட்டுப்போட்ட ஒரு கிழவன் ஆஜராகிவிடுவான்.

வந்ததும் பூட்டியிருக்கும் கியோஸ்க்கின் வெளிநீட்டமான விற்பனைத்தட்டில் ஒரு முழங்கையை ஊன்றிக்கொண்டும், கால்களை " எக்ஸ்" மாதிரி வைத்துக்கொண்டும் நின்று புகைபிடிப்பான். கோட்டுப் பையிலிருந்து பியர் கானை எடுத்து ஒருதரம் உறிஞ்சுவது........ பின் சிகரெட்டை இழுப்பதுமாயிருப்பான். தீவிரமான புகைப்பிரியன் போலும்...... சிகரெட் தவிர........... சாண் நீளத்தில் பிறேசில் சுருட்டு, சில வேளைகளில் சுங்கான் என்று மாறிமாறிப்புகைப்பான்.

அவன் வயசு காரணமாய் வற்றலான கன்னங்களோடு சற்றே குள்ளமாகவிருப்பான். அதை விடுத்துப்பார்த்தால் படியாததலை, பாதி நரைத்துவிட்டதாடி, அடர்ந்த புருவங்கள் என்று எல்லா அம்சங்களிலும் எனக்கு அவன் எப்போதுமே ஒரு வாழும் கார்ள் –மார்க்ஸையே நினைவு படுத்திக்கொண்டிருந்தான்.

சதா எதைப்பற்றியோ ஆழ்ந்து யோசிப்பவனைப்போலிருப்பான். கண்களிலும் வெகு தீட்சண்யம். ஆனால் அவை எதிலுமே நிலை கொள்ளா. பார்வையை மறுபக்கம் திருப்புவதென்றாற்கூட அணிலைப் போல "சட் " டென்று தலையை வெட்டித்தான் திருப்புவான். அவன் அசைவியக்கங்களிலும் சுறுசுறுப்பிலுங்கூட ஒரு அணில்தான்.

ஏதோ காலஅட்டவணை போட்டு வைத்திருப்பவனைப்போல இந்தக்குளிரிலும் அதிகாலை தூக்கசுகத்தையும் துறந்துவிட்டு மூன்றுமணிக்கே வந்துவிடுகிறானே........... தூக்கம் பிடிக்காத கேஸென் றால் பைத்தியமாக இருப்பானோ என்றெல்லாம் முதலில் எண்ணினேன்.

அவனது முதலாவது பியர்கான் காலியாக அந்த கியோஸுக்கு தினசரிப்பத்திரிகைகள், மாதாந்திகள், வாராந்திகள் விநியோகிக்கும் சிற்றுந்து வரும்.

பொலித்தீனில் "பாக்" செய்யப்பட்ட பத்திரிகைக்கட்டுக்களை அவர்கள் இறக்க, கிழவனும் ஏதோ இறக்கை கட்டிக்கொண்டவன் மாதிரி பறந்து பறந்து தானும் கட்டுக்களை இறக்கிவைப்பான்.

சற்று நேரத்தில் சாக்கலேட்டுக்கள், பிஸ்கட், மதுக்குப்பிகள், பியர், சிகரெட் போன்றவற்றை விநியோகிக்கும் மற்றொரு சிற்றுந்தும் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவன் மறுபடி சுறுசுறுப்பாவான். கியோஸ்க் வாசலில் இறக்கி பரப்பிவைக்கப்பட்டிருக்கும் பொருட்களையெல்லாம் ஒரு ஓரமாகச் சீராக அடுக்கிவைப்பான்.

சொல்லி வைத்தாற்போல 03. 35 க்கு கிழவன் சன்னமான குரலில் " "குட்டன் மோர்கன்" சொல்லிக்கேட்கும். கியோஸ்க்கின் சொந்தக் காரர்கள் (ஒரு நடு வயதுத்தம்பதியர்) வந்துவிட்டார்கள் என்பதே அதன் அர்த்தம்.

அவர்கள் கியோஸ்க்கைத் திறந்ததும் பேனைக்கத்தியால் பத்திரிகைக் கட்டுக்களின் பிளாஸ்ரிக் நாடாக்களை "சடக் "சடக்" கென வெட்டவும், கிழவன் கட்டுக்களைப் பிரித்து உள்ளே எடுத்துப்போய் தினசரிப்பத்திரிகைகளில் ஸ்டான்டுகளில் கொழுவ வேண்டியதைக் கொழுவியும் தட்டில் அடுக்கவேண்டியதை அடுக்கியும் வைப்பான்.

பின் கியோஸ்க்கை உள்ளே பெருக்கி "மொப் " செய்துவிட்டு, அகன்ற துடைப்பத்தை எடுத்து வந்து ஏதோ தன்வீட்டு வதியும் அறைபோன்ற சிரத்தையுடன் அந்த ரயில்நிலையத்தின் முன்விதானம் முழுவதையும் பெருக்குவான்.

பெருக்கிமுடியவும் கியோஸ்க்காரன் ஒரு ஷுல்தைஸ் பியர் கானைக் கொடுப்பான்.

அதைத்துளிவழி அவன் ரசித்துரசித்துக் குடித்துக் கொண்டிருக் கவும் 04. 01க்கு வரும் முதலாவது சுரங்க ரயிலைப் பிடிக்கும் பயணி கள் மெல்ல மெல்ல வந்து சேருவர்.

அதைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு ஆறு நிமிஷத்திற்கொரு தடவை சுரங்கத்தினூடாக குளிரைத் தள்ளிக்கொண்டு "உபிக்" உபிக்" கென்று வழுக்கிக்கொண்டு வரும் விரைவு ரயில்களின் சேவை இருதிசைகளிலும் ஆரம்பிக்க ஆளரவமற்றிருந்த ரயில் நிலையம் திடீரென உயிர்பெற்று "ஜே" "ஜே" என்றாகிவிடும்.

கியோஸ்க்கின் எதிர்ப்புறத்தில் ஃபாஸ்ட்ஃபுட் ஸ்டோலிலும் வியா பாரம் சூடுபிடிக்கத்தொடங்க கிழவன் மாறிவிடுவான். அவன் எங்கே போகிறான், அல்லது எங்கிருந்துதான் வருகிறான் என்பது கியோஸ்க் தம்பதியுட்பட எவருக்கும் தெரியாது. அக்கறையுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் முதலில் "பப்பின் பார்" இலுள்ள கண்ணாடி விறாக்கை களில் காலியாகிவிட்ட விஸ்க்கி, பிராண்டி, றம், வொட்கா, பக்காடி யா, கோனியாக், சம்பூக்கா போத்தல்களைக் கவனித்து களஞ்சிய அறை யிலிருந்து கொண்டுவந்து அடுக்குவேன். பின் பியர்களுக்கான குளிர் அறையில் காலியான பீப்பாய்களை அப்புறப்படுத்திவிட்டு புதிய பீப்பாய் களுடன் "கொக" குகளுக்கான குழாய் இணைப்புகளைக் கொடுப்பேன்.

"பார்" இல் துலக்கம் குன்றியிருக்கக்கூடிய வெள்ளிப் பகுதி களையும், "கொக"குகளையும் "பொலிஷ்" பண்ணிவிட்டு, "ஆஷ்டிறே" களைப்பொறுக்கி அலம்பிவைத்துவிட்டு, தரையைப் பெருக்கி ஈரத்துணியால் லேசாக "மொப்" பண்ணிய பின்னால் எஸ்பிரஸ்ஸோ அல்ல நெஸ்கஃபேயோ ஒன்று சூடாகத் தயாரித்து குடித்துக்கொண்டு ஏதேனும் வாசித்துக்கொண்டோ............ இல்லை தெருவை வேடிக்கை பார்த்துக்கொண்டோ உட்கார்ந்திருக்க வேண்டியதுதான்.

நேரத்துடன் தன் பாட்டுக்குச் சம்பளம் ஏறும்.

இலையுதிர் காலமானால் "பப்" பிற்கு முன்னாலுள்ள சிறிய "ரெறாச"வில் மரங்கள் இலையுதிர்ந்திருக்குமாதலால் அவற்றைச் சுத்தப்படுத்த வேண்டியிருக்கும்.

அப்படித்தான் ஒரு முறை பெருக்கிக்கொண்டிருந்தேன். "குட்டன் மோர்கன்" என்று சொல்லிக்கொண்டு வந்த கார்ள் மார்க்ஸ் "லபக்" கென என்னிடம் துடைப்பத்தைப் பறித்துக்கொண்டு பெருக்கத் தொடங்கினான்.

பெருக்கிமுடிந்ததும் ஒரு பியர்க்கானை அவனிடம் நீட்டினேன். "வேண்டாம்" என்று சைகை காட்டிவிட்டு போய்க்கொண்டே யிருந்தான்.

சில நாட்கழித்து நான் காப்பி குடித்துக்கொண்டு தினசரியுள் புதையுண்டிருக்கிறேன். வாசலில் எவரதோ நிழலாடுவது போலிருக் கவும் எட்டிப்பார்தேன். கார்ள் மார்க்ஸ்தான் "குட்டன் மோர்கன்" என்றபடி நின்றிருந்தான். உள்ளே வரச்சொன்னேன். வந்தான்.

"ஏதாவது குடிக்கிறியா............? "

" நன்றி."

"காப்ஃபி, டீ, பியர், ஸ்நப்ஸ்............? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி......... நான் காப்ஃபியே குடிக்கிறேன். மன்னிக்கவேணும்............. அன்று நான் உன்னிடம் பியரை வாங்கிக்கொள்ளவில்லையென்று கோபமா? "

"கோபமில்லை.......... ஆனால் ஏன் வாங்கிக்கொள்ள வில்லை யென்று............. "

"வேறொன்றுமில்லை.......... அந்த பியரை அன்றைக்கு நான் வாங்கியிருந்தால் அந்த பியரிற்காகத்தான் உனக்கு உதவிசெய்தேன் என்றாகியிருக்கும்."

கிழவனது ஜெர்மன் உச்சரிப்பில் "சு" ல் அழுத்தம் அதிகமாகவிருந்தது. பயேர்ண் மாநிலத்தவர்களும், கிழக்கு ஐரோப்பியர்களுந்தான் அப்படிப்பேசுவார்கள்.

" நீ பயேர்ண் மாநிலத்தவனா? " என்றேன்.

"........ச்சே.......... நானும் உன்னைப்போல் ஒரு வெளிநாட்டவன் தான்.......... புல்கேரியன். ஜெர்மனிக்கு வந்து முப்பத்தாறு வருஷங் களாச்சு............ எழுபதுகளில் நடந்துகொண்டிருக்கிற இளைஞன் நான்..........." என்றுவிட்டு முன் நெற்றியைச் சுருக்கினான்.

ஒரு பாட்டம் ரில்லரால் உழுத வயல்போல அங்கே குறுக்காக ஏகப்பட்ட சால்கள்.

இந்த வயதிலும் இவ்வளவு சுறுசுறுப்பா என நான் வியக்கவும் அவன் தொடர்ந்தான்.

"ஐந்து வருஷமுன்னே பென்ஷனைத்தந்து வீட்டிலே போய்த்தூங்கடா என்று அனுப்பிவிட்டார்கள்............. ஐம்பது வருஷம் உழைச்ச உடம்பு உழைக்காமல் எப்பிடித்தூங்கும் சொல்லு......?"

" தூங்காதுதான்..........."

"உழைச்சுக்கொண்டேயிருந்தால் நான் இன்னும் எழுபது வருஷங்கள் சீவிப்பேன்......... உழைப்பை என்றைக்கு நிறுத்தினேனோ அன்றைக்கு மரணம் வந்து கதவைத்தட்டும்........... உட்கார்ந் திருக்கவே மாட்டேன். உழைத்துக்கொண்டே செஞ்சுறி அடித்துக் காட்டிறேனா இல்லையா பார்..........."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உட்கார்ந்திருப்பது யாருக்கும் கஷ்டமான காரியந்தான்.......... அப்பிடி என்னதான் வேலை பார்த்தாய்...... காம்றேட;?”

“Steinsetzer” இதனை நடைபாதை , பேவ்மெண்ட் அமைத்தல் என்று இலகுவாகச் சொல்லிவிடலாந்தான். ஆனால் வளர்ந்த நாடுகளில் நகர நிர்மாணிப்பு, அழகுபடுத்தல் துறையில் இதற்கெனத் தனிப்பிரிவும் விஷேட படிப்புக்களும் உண்டு.

“அப்போ ஊரைப்பார்த்துப் போறது.”

“அங்கே எனக்கு யாரிருக்கா ............. எனக்கு யாரைத் தெரியும்...........?”

வெடுக்கென கோபம் கலந்து வந்த பதிலில் “கௌரவம்” சிவாஜி தெரிந்தார்.

“பிரமச்சாரியாகவே இருந்திட்டாயா காம்றேட;? ”

“இல்லையில்லை.......... சம்சாரிதான், மனைவி பன்னிரண்டு வருஷத்துக்கு முன்பே புறப்பட்டிட்டா”

“அப்போ பிள்ளைகளென்று.................?”

“ஒரேயொரு மகள்............ இங்கதான் “நர்ஸ“ வேலை பார்க்கிறா.......... கிளாடோவில ஒரு ஜெர்மன்காரனைக் கட்டிக் கொண்டு புருஷன்கூட தனியா............”

கர்ஃப்பி குடித்தானதும் நான் எவ்வளவோ தடுத்தும் தானே கோப்பையை அலம்பிக் கவிழ்த்தும் வைத்தான்.

“இன்னும் ஏராளம் சக்தியுள்ள மனிதன் நான் என்னாலே ஓய்ந்திருக்க முடியாது பேபி” என்றபடி தரையை “மொப் “ செய்வதற்காக நான் மேசைமேல் கவிழ்த்திருந்த கதிரைகளை எல்லாம் திரும்ப இறக்கி வைத்தான்.

பின் “ஷுயிஸ்” என்றுவிட்டுப் போய்விட்டான்.

## (4)

ஜெர்மனிக்கு வந்த புதிதில் எண்பதுகளின் ஆரம்பத்தில் வேலையேதுமில்லாது அறைக்குள் குமைந்துகுமைந்து கிடக்க நேரிட்டபோது எங்களுக்கும் இதேமாதிரி அனுபவம் ஏற்பட்டதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்களிருந்த ஹொட்டல்களின் சுற்றுப்புறங்களில் தென்பட்ட கட்டிட நிர்மாணவேலைத்தலங்களிலும், கேற்றுகள் கிறில்கள் கதவுகள் செய்யும் தொழிற்சாலைகளிலும் போய் "மூன்று நாலு மணித்தியாலங் கள் சும்மா வாலண்டியராகவே பண்றோம் வேலை தாருங்கள்," என்று கூடக் கேட்டுப்பார்த்தோம்.

அவர்கள் எம்மைக் கண்டே பயப்பட்டார்கள்.

"இங்கத்தைய சட்டத்தில் அதற்கெல்லாம் இடமே யில்லை............. இங்கு மருத்துவக்காப்புறுதி, விபத்துக்காப்புறுதி, பொதுக்காப்புறுதி என்று பல காப்புறுதிகள் செய்த பின்னாலேதான் ஒரு தொழிலாளி ஒரு வேலைத்தலத்துள்ளேயே நுழையவே முடியும்............. நீங்கள் இங்கு வந்ததே சட்டப்படி தப்பு." என்று சொல்லி வாசல்வரை கூட்டி வந்து பக்குவமாக வெளியனுப்பி விட்டார்கள்.

நான் வேலை முடிந்து காரில் வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது பார்த்தேன் இந்த நொடுநொடுத்த கிழவன் "அல்டி மார்க் கெட்டின" சிறிய தள்ளுவண்டியொன்றை சீனி, மா, பியர்க்குலைகள், கிழங்கு, வெங்காயம், அப்பிள்ரசம், பட்டர் இத்யாதி பாரமான சாமான்களுடன் தள்ளிக்கொண்டு எதிர்திசையில் வேகமாக வந்துகொண் டிருந்தான். நான் காரை மெல்ல ஓரங்கட்டி நிறுத்தவும் கண்டு கொண்டான்.

"ஏதேது இவ்வளவு சாமான்கள்................ ஏதோ பெரிய்ய பார்ட்டிக்கு ஏற்பாடு போல?"

" இல்லை அப்பிடியில்லை............. என்னுடைய கட்டிடத்தொடரில ஒரு குடும்பத்திற்காக வாங்கிப்போறன்............ பாவம் அவர்களுக்கு நேரமில்லை. தினமும் இருவருமே வேலைக்குப்போகிறார்கள்."

"எப்போதும் நீதான் சாமான் வாங்கிக்கொடுப்பாயோ?"

"இவர்களைப்போன்று தெரிந்தவர்களுக்குத்தான் என்றில்லை. உடம்புக்கு முடியாதவர்கள், நோயாளிகள், வயசானவர்கள் (இதைச்சொல்லும்போது கண்ணைச்சிமிட்டினான்) இப்படி யார்தான் என்னை நாடினாலும்."

" விசித்திரமான மனிதன்தான்............. போ."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு – மேற்கு ஜெர்மனிகளின் இணைப்பிற்குப் பிறகு, மதில் ஓடிப்பிரித்துக்கொண்டிருந்த "பொட்ஸ்டாமர் பிளாட்ஸ் என்ற இடத்தில் நூறு ஏக்கர் நிலப்பரப்பொன்றை ஒரு அழகான பூங்காவாகப்பண்ணி அருகே வழிந்துகொண்டிருக்கும் ஒரு சிறு கால்வாயைத்திருப்பி அங்கமையும் தடாகத்தினூடாக வழியவிட்டு அழகான ஒரு சதுக்கமாக்கிச் சூழவும் தங்கள் காட்சியறைகளை அமைப்பதற்கு மெர்ஸிடஸ் பென்ஸ், ஸொனி, கஜிமா, டிஸ்மன் போன்ற பத்து அசுரக்கொம்பனிகள் இரவுபகலாக வேலை செய்துகொண்டிருக்கின்றன. அச்சதுக்கத்தின் அருகாக அமைந்த லேட்டர் பாண்ஹோஃப் எனப்படும் ரயில் நிலையத்திலிருந்து Transrapid எனப்படும் மின்காந்தப்புலத்தில் மிதந்து தம் பாதையில் தொட்டுந்தொடாமலும் பறந்து 300கி.மீட்டர் தொலைவிலுள்ள ஹம்பேர்க்கை 50 மணித்துளிகளில் அடையப் போகும் வேக ரயில்கள் 2003ம் ஆண்டு புறப்படவுள்ளன.

பொட்ஸ்டாமர் பிளாட்ஸில் அமையும் இச்சதுக்கத்தையும் லேட்டர் பாண்ஹோஃபையும் இணைப்பதற்கான சுரங்கப்பாதையை அமைப்பதற் காக இராட்சதப்புழு உருவிலான நாலு றொபொட்கள் நிலத்தை அறுத்துக் குடைந்துகொண்டிருக்கின்றன.

இச்சுரங்கத்தோண்டுதலால் அங்கமைந்திருக்கும் "எஸ்பிளனாட" என்னும் புராதன இசையரங்குக்கு ஏதேனும் சேதாரம் வந்துவிடுமோ என்ற ஜாக்கிரதை உணர்வில் உருக்கிகாலான வெட்டுக்கிளியொன்று அதை நிலமட்டத்திலிருந்து ஐந்து மீட்டர் உயரத்தில் பிள்ளையைப் போல் தூக்கிவைத்திருக்கிறது.

அந்த இராட்சத அறக்கொட்டியான்கள் நான்கும் எப்படி மில்லிமீட்டர் வழுவாமல் பிசகாமல் துளைக்க கொம்பியூட்டர்கள் எவ்வாறு உத்தரவுகள் வழங்குகின்றன எப்படிக்கட்டுப்படுத்து கின்றன, அகழுகையில் வரும் மண், ஊற்றெடுக்கும் நீர் என்பனவற்றை அறக்கொட்டியான் றொபோட்களுள் சென்று வெளியேறும் பாரஉந்துகள் எப்படி வெளியேற்றுகின்றன என்பதை வெளியே நிர்மாணிக்கப்பட்டுள்ள பாரிய மொனிட்டர்களில் யாரும் பார்க்கலாம். தமிழ்நாட்டிலிருந்து ஒரு இலக்கியக்கூட்டத்திற்காக வந்திருந்த ஒரு எழுத்தாள நண்பரை ஐரோப்பாவிலேயே பிரமாண்டமானதென வியக்கப்பட்ட அந்நிர்மாணத் தைக் காட்டுவதற் காகக் கூட்டிப்போனேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விடத்தில்தான் வரலாற்றிலிடம் பெற்றுவிட்ட பெர்லின் மதிலின் சிறிய பகுதியை எதிர்காலச்சந்ததியினர் பார்ப்பதற்காக இன்னும் விட்டுவைத்திருக்கிறார்கள் என்பதுவும் இன்னொரு விஷேடம்.

அப்பூங்காவைச் சுற்றி அமைக்கப்பட்ட நடைபாதைகளை ஸ்பெயினிலிருந்து வருவிக்கப்பட்ட வெண்கற்களாலும், இத்தாலியிலிருந்து வருவிக்கப்பட்ட கருங்கல்லாலும், வேறேதோ நாடொன்றிலிருந்து வருவிக்கப்பட்ட **Bordeaux** நிறத்தில் கரும்புள்ளிகள் செறிந்து படிகம்போல மின்னுகின்ற ஒருவகைக்கல்லாலும் வேய்ந்து "மொசைக்" தரைபோலும் முகம் பார்க்கும்படி "பொலிஷ்" பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். உங்களில் சிலருக்கு "சந்தனம் மிஞ்சிப் போச்சாம்.......... எதிலேயோ தடவினானாம்" என்கிறது ஞாபகத்துக்கு வரலாம்.

நாம் அத்தொழிலாளரைக் கடந்து போகையில் எதேச்சையாகப் பார்க்கிறேன். நம்ம கார்ள் மார்க்ஸ் அவர்களிடையே பம்பரமாகச் சுழன்றுகொண்டு அவர்களுக்குத் தேவையான கற்களையெல்லாம் எடுத்துக்கொடுத்து உதவிக்கொண்டிருக்கிறான். நெற்றியில் வியர்வை துளிர்த்திருந்தது. எம்மைக் கண்டதும் "என்ன நண்பனா?" என்று கேட்டபடி அவருக்கு ஒரு சலூட் வைத்தான். எமக்கு "சூயிஸ்" சொல்லிவிட்டு கோட் பையிலிருந்து ஸ்டைலாக பியர்கானை எடுத்து ஒரு மிடறு குடித்தான். மீண்டும் "பிஸி" யானான்.

## (5)

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் பெர்லின் உட்பட ஜெர்மனியின் அநேக நகரங்கள் தரை மட்டமாகிப்போனபோது இவர்களுக்கு என்னதான் அமெரிக்காவின் பொருளாதார உதவிகள் இருந்த போதிலும், மீண்டும் நகரங்களையும், வீதிகளையும், பாலங்களையும் நிர்மாணிப்பதற்கு ஏராளம் மனிதசக்தியும் தேவைப்பட்டது.

"கெஸ்ட் வேக்கர்ஸ்" என்ற பெயரில் ஏராளம் தொழிலாளர்களை துருக்கியிலிருந்தும், போலந்து, யூகோஸிலாவியா, புல்கேரியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் வருவித்தார்கள். இந்தியாவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து கூட முயற்சித்தார்களாம். இந்தியர்கள் தொழிலாளர்களை ஏற்கெனவே வருவித்திருந்த இலங்கை, தென்னாபிரிக்கா, மலேஷியா போன்ற நாடுகளில் அவர்களின் நிலையைக் மேற்கோள்காட்டி காந்தி மறுத்துவிட்டாராம்.

எல்லா நகரங்களும் மீண்டெழுந்து, உற்பத்தி ஏற்றுமதிகளால் பொருளாதாரமும் ஸ்திரமாகிவிட்டதா? இந்தத் தொழிலாளர்கள் வேண்டாதவர்கள் ஆகிவிட்டனர். ஐம்பது ஆண்டுகளின் பின்னால் வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரிப்பதற்கும், வீட்டுவசதிகளில் நெருக்கடி ஏற்படவும் வெளிநாட்டவர்களும், துரிதகதியில் பெருகிய அவர்களின் சந்தானமுமே காரணமென இன்று பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் கூச்சல்போடுகின்றார்கள்.

ஒரு நாள் "பப்பிற்கு" வந்த கார்ள் மார்க்ஸைக்கேட்டேன்: "தாமாகவே வலிய நாடு திரும்பும் துருக்கிக்காரர்களுக்கு தலைக்குப் பத்தாயிரம் மார்க்குகள் உபகாரப்பணமாகத் தரப்போகிறார் களாமே, இது சரியா?"

அவன் சரியென்றோ, தப்பென்றோ அபிப்பிராயம் எதுவும் கூறவில்லை. இயல்பில் யாரையும் குறைகூற மாட்டான். எனினும் இவன் "நாம் இங்கிருக்காவிட்டால் சந்தோஷப்படக்கூடிய பேர்வழி களுக்காக" இன்னும் மாய்ந்து மாய்ந்து தேய்ந்து கொண்டிருப்பது பைத்தியக்காரத்தனமாகவே எனக்குப் பட்டது.

இனத்துவேஷம் எங்குதான் இல்லை?.

அரசியலமைப்புச் சாஸனத்திலேயே புத்தமதத்தை முதன்மைப் படுத்தும் ஸ்ரீலங்காவின் தார்மீக அரசுகள் 150 ஆண்டுகள் மாடாய் உழைத்த இந்தியத் தோட்டத்தொழிலாளர்களின் வாக்குரிமையைப் பறித்து அவர்களை வெளியேற்ற இந்திய அரசுகளுடன் ஒப்பந்தங் களைச் செய்யவில்லையா? அகம்பாவமும் , துவேஷமும் ஐரோப் பியனிடம் இருப்பதில் என்னதான் வியப்பு?

கார்ள் மார்க்ஸ் வெறுமனே புன்னகைத்துப்போய்விட்டான்.

பின்னொரு நாள் சனி–ஞாயிறுகளில் மட்டும் கூடும் பழம்பொருள் அங்காடி ஒன்றில் விற்பனைக்கு உதவி பண்ணிக் கொண்டிருந்தான். வியாபாரம் முடிந்தபோது பொருட்களையெல்லாம் மூடைகட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுபோய் காரின் டிரெயிலருக்குள் வைக்க கடைக்காரருக்கு உதவினான். மறுநாள் காலையில் கண்டபோது கேட்டேன்: "பழம் பொருள் அங்காடிவரைக்கும் "சேவை" விஸ்த்தரிக்கப்பட்டிருக் கிறாப்போல..............?"

ஆமோதிப்பதாய் ஒரு புன்னகையை மாத்திரம் உதிர்த்தான். அவன் சேவைக்கு நேரங்காலமிருக்கவில்லை. ஒரு இரவு விரைவு ரயிலில் பார்க்கிறேன். ஒரு பெரீய பிளாஸ்டிக் கூடை நிறைய பழைய உடுப்புக்கள் வைத்திருக்கிறான். விசாரித்தபோது யாருக்காகவோ லோன்டிறிக்கு எடுத்துப்போவதாகச் சொன்னான்.

"உடம்பு உளைஞ்ச கழுதைதான் " ஞாபகத்திற்கு வந்தது. பின்பொரு நாள் வீதியில் நான் சிக்னலுக்காக காத்து நின்ற போது "விசுக் "விசுக்" கென்று வீதியைக் கடந்து போனான். விசாரித்தபோது முதியோர் இல்லமொன்றுக்கு சும்மா பேச்சுத்துணைக்குப் போவதாகச் சொன்னான்.

சமூகஓட்டத்தினின்றும் விலக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட மது, போதைவஸ்த்து அடிமைகள், மனநோயாளர்கள் இவர்களைப்போன்று வாழ்வில் தனித்துப்போனவன் அதைவிரட்ட உதவியோ ஏதோ ஒரு சாக்கை வைத்து சமூகத்தினின்றும் விடுபட்டுப்போகாமல் மக்களுள் மக்களாய் கலந்தும் சேர்ந்தும் வாழ விரும்புகிறான். மக்கள் கூட்டம் கூடும் இடங்களில் எல்லாம் தானும் கலந்திருக்க விரும்புகிறான். பல தடவைகள் மாலை வேளைகளில் வீல்சேரில் வைத்தொருபெண்ணை உலாத்த தள்ளிக்கொண்டு போவதையும் கண்டிருக்கிறேன்.

இவை மனிதநேயம் கலந்த சேவைகள். ஒரு பகை நாட்டில் கூடச் செய்யலாம். மறு நாள் இதற்காக அவனைப் பாராட்டவேணும் போலிருந்தது. காலை 3.30 ஆகிவிட்டிருந்தும் அவனைக்காண வில்லை. என் பணிகளை முடித்துவிட்டு காஃப்பி சாப்பிடும்போது மறுபடியும் பார்த்தேன். ஆளைக்காணவில்லை. இரண்டு நாள், மூன்று நாள், நாலாம் நாளுமாகியது. கார்ள் மார்க்ஸைக்காணவில்லை. யாரைக்கேட்பது? கியோஸ்க்காரருக்கும் தெரிந்திருக்கப்போவ தில்லைத்தான். இருந்தும் விசாரித்தேன்.

"யாரைக்கேட்கிறாய்................ சுண்டெலியையா?" என்றுவிட்டு உதட்டைப் பிதுக்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ......... அப்படியும் ஒரு பெயரிருக்கா உனக்கு...........?" அந்தப்பெயரும் கிழவனின் துருதுருப்புக்குப் பொருத்தமாகவே பட்டது.

இரண்டாந்நாள் கேட்டபோது தோள்களைக்குலுக்கினான். நானும் விடாமல் மூன்றாம் நாளும் கேட்டடேன்.

வெகு சாதாரணமாக "காணவில்லைத்தான்.............. செத்திருப் பான்." என்றான்.

கிழவனை அப்போது மனதார வைதேன். "அட.......... இந்த அற்பனின் கடையையா தினமும் "மொப் " பண்ணிச்சலித் தாய்.............?"

இவன் கோணத்தில் "சுண்டெலி" என்ற பெயருக்கு இப்படியும் அர்த்தம் இருந்திருக்கலாம். நீ இறந்துவிட்டால்கூட ஒரு சுண்டெலியின் மரணத்தைப்போல ......... is nothing.......... அதற்கு எந்தப்பெறுமானமும் கிடையாது. அது எதுவிதத்திலும் எம்மை இம்மியும் பாதிக்காது.

கார்ள் மார்க்ஸ்......... உனக்கும் இந்தச்சமூகத்திற்கும் இருந்த உறவுதான் என்ன? நீ இறந்துகிடந்தால் உன்னைத்திரும்பி ஒருகண் பார்க்கவோ இல்லை. உன் இழப்பைத்தான் அறிவிக்க வேண்டிய அவசியமோ இச்சமூகத்திற்கு ஏன் இல்லாது போனது?

கியோஸ்க்காரன் சொன்ன பின்னால் "கார்ள் மார்க்ஸுக்கு அப்படி ஏதும் அவலம் நேர்ந்திருக்குமோ" என்று மனதில் சிறு பயம் உண்டானது. "நான் 100 வயதுவரை சீவித்திருப்பேன்" என்றானே என்னிடம்.

என்னூரிலும் ஒரு பெரியவரும் இப்படித்தான். தன் எண்பத்தொன்பதாவது வயதுவரை மரவேலை செய்துகொண்டே யிருந்தார். "எதற்கு இனிமேலும் வேலை செய்கிறீர்கள்............ நன்கு ஓய்வெடுக்கலாந்தானே?" என்றால்................ "இனி இலை உதிர்காலந்தான் எனக்கும் தெரியும். சின்ன ஒரு தனியன் இலை இருக்கும் வரையில் இந்த மரம் உறங்காது" என்றுவிட்டு மடியில் வண்டிக்குடத்தை வைத்துப் பொளி அடித்துக்கொண்டிருப்பார். உடம்புக்கு இயலவில்லை என்று ஒரு நாள்தானும் அவர் ஆயுளில் படுத்திருந்ததை யாருமே கண்டதில்லையாம். தன் பட்டறைக்கு வராமலிருந்த ஒரு நாளில் அவர் இறந்து போனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அப்பராவது திருத்தலங்களில்தான் உழவாரத்தொண்டு செய்தார். கார்ள் மார்க்ஸ் நீயே பெர்லின் வீதிகள் அனைத்தையும் வாங்கிவிட்டதைப்போல் உறை குளிர்காலத்திலும் வெப்பநிலை பூஜ்ஜியத்திற்கும் கீழே 10 டிகிரி இருந்த நாட்களிலுங்கூட பனி தள்ளிக்கொண்டிருப்பாயே................ கிழவா என்னவாயிற்று உனக்கு............? எங்கு ஐயனே போய்விட்டாய்?”

கார்ள் மார்க்ஸ் இல்லாத கியோஸ்க் மூலை எனக்கு சூனியமாகப்பட்டது. மனதில் ஒரு வகை அந்தகாரம். அந்தத்திசையை நோக்குவதையே தவிர்த்தேன் எனினும் கார்ள் மார்க்ஸ் நினைவிலிருந்து அகல மறுத்தான்.

## (6)

ஒரு மாதம் போயிருக்கும். ஒரு காலை கியோஸ்க்காரன் வந்து வெளிச்சம் ஏற்றிய போது எதேச்சையாகப் பார்க்கிறேன்................ அட என்ன ஆச்சர்யம். அங்கு கார்ள் மார்க்ஸ் கால்களைப் பின்னிக்கொள்ளாமல் தலையில் முண்டாஸ் கட்டிவிட்ட மாதிரி பெரிய பாண்டேஜ் கட்டுடன் பரம சாதுவாக ஒடுங்கிப்போய் ஒரு மூலையில் நிற்கிறான். ஓடிப்போய் கட்டி அணைத்தேன்.

“ஹா.........ஹா........ வலதுகையை அழுத்தாதே வலிக்கிறது.......” என்றான்.

முகத்திலும் பல சிராய்ப்புக்கள்.

“என்னப்பா நடந்தது? ஏதாவது விபத்தா...........?”

“ஜா..............ஜா............. விபத்துத்தான்........... சில மனிதர் களால..........”

“எப்படி?”

“பிறென்ஸ்லவர்பேர்க் பக்கமாய் நியோ நாஜிப்படை ஒன்றிடம் தனியாக மாட்டிவிட்டேன். துவைத்துவிட்டார்கள்.”

“அட இந்தப்பாவி மனிதனையா...............?”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கன்ன மண்டையில் ஏழு இழைப்பிடிக்க வேண்டியதாயிருந்தது. வலது தோட்பட்டை எலும்பு உடைந்து ஸ்குறூ ஆணியால் பொருத்தியிருக்கு."

"எப்போ பொருந்துமாம்..........?"

"இளைஞன்தானே விரைவில் பொருந்திவிடும் என்றிருக்கிறார் டாக்டர்."

கண்ணடித்துவிட்டுச் சிரித்தான்.

"அன்று அரைமணிநேரம் அம்புலன்ஸ் வரத்தாமதமாகியிருந்தால் இப்போது என்னுடன் நீ பேசிக்கொண்டிருக்கவே முடியாது."

மீண்டும் பலமாகச்சிரித்தான்.

வேலைக்குப் போக ரயிலேற நின்ற அப்பாவித் தமிழ் இளைஞனை ஓடும் ரயில் முன்னால் தள்ளிவிட்டுவிட்டு அவன் அறுபட்டு அரைபட்டதை வேடிக்கை பார்க்க முடிந்தவர்களால் இந்தக் கிழவனை அடித்துப்போடுவது ஒன்றும் முடியாத காரியமில்லை. பப்பினுள்ளே அழைத்து வந்து ஸ்டீமில் எஸ்பிரஸ்ஸோ காஃப்பி வடித்துச் சூடாகப்பால் கலந்து கொடுத்தேன். அவன் அதை இடது கையால் ஏந்தி ஊதி ஊதிக் கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடுவதைப் பார்க்கப் பாவமாக இருந்தது. மனம் நெகிழ்ந்து போனது.

"பட்டது போதும்........... இந்தக் கிரஹாதகர்கள் வாழும் சமூகத்திற்கு இனிமேல் சோஷியல் சர்வீஸ் செய்யவெல்லாம் போகாதே கெட்ட மிருகங்கள்." என்றேன்.

"பாவம் அவர்கள்.............. மானிடர்களாகப் பிறந்தும் மனிதப் பண்பின் நல்ல கூறுகளை அறியாமலிருக்க சபிக்கப்பட்டவர்கள்.........." என்றான் ஒரு தத்துவஞானியைப்போல.

"நீ நல்லாய் ஓய்வெடுக்க வேண்டும்......... அப்போதுதான் விரைவில் உடம்பு குணமாகும்" என்றேன்.

"ஆகட்டும்..........." என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெர்மனிகளின் இணைப்புக்குப்பின் இங்கு நோக்கும் திசை எங்கிலும் கட்டிடங்களின் கட்டுமானப்பணிகளும் சாலை விஸ்தரிப்புப் பணிகளுந்தான்.

பப்பிலிருந்து என் வீட்டிற்குப் போகும் வழியிலும் "நாலு பருவகாலங்கள்" என்ற பெயரில் பாரிய ஹொட்டல் ஒன்று எழும்பிக் கொண்டிருக்கிறது. இதனால் அவ்விடத்தில் அவர்களின் கிறேன்கள், டிறெட்ஜெர் மிஷின்கள் என்பன நின்று வேலை செய்வதற்காகவும், தற்காலிக கொன்டயினர் ஆபீஸ்களை வைத்திருப்பதற்காகவும் சாலையை சற்றே ஒடுங்கலாகப் பண்ணி யிருந்தார்கள். இதனால் அவ் விடத்தில் அடிக்கடி போக்குவரத்து நெரிசலாகும். அன்றும் அப்படித் தான். ஊர்ந்து ஊர்ந்து கொண்டிருந்த வாகனங்கள் நின்று போயின. ஹொட்டல் கட்டிடத்துக்கான பாரிய லின்டர்களையும், கட்டி முடிக்கப்பட்ட சுவர்களையும் கொண்டுவரும் 24 சக்கரங்களைக் கொண்ட நீளமான கொன்வேயர் டிரக் ஒன்று அந்த வளவுக்குள் திரும்பு வதற்குச் சிரமப்பட்டுக்கொண்டிருந்தது.

வளவுக்குள் சீமெந்து கலக்கும் இயந்திரங்கள் , பைப்லைன்கள் என்று இறைந்து வேறுகிடந்ததால் டிரைவர் மிகவும் பிரயத்தனப்பட்டு கொண்டிருந்தான்.

திடீரென ஒரு சன்னமான குரல் " இன்னும் கொஞ்சம் இடதுபுறம் மடித்துத் திருப்பிக்கொண்டு பின்னுக்கு வா" என்று ஆணையிட்டது.

"நிறுத்து........... இனி நிமிர்த்திக்கொண்டு சுவர் ஓரமாய்ப் போ...........

போதும் போதும்.............. நிறுத்து! இன்னுமொருமுறை கொஞ்சம் முன்னுக்குப்போய் இன்னும் கொஞ்சம் மடித்துக்கொண்டு பின்னுக்கு வா!........ ஆங்........ரைட்................ரைட்............ரைட்........ஆங்.......... ரைட்........ ரைட்........ரைட்........ரைட்............ அப்பிடித்தான்............ஜோராய்..........!"

குரலில் சந்தேகம் வர காருக்கு வெளியே எட்டிப்பார்த்தேன்.

டிரக் ஓரமாக டிரைவரின் கண்ணாடியில் தெரியும்படியாக நின்றுகொண்டு கைகளால் பலவித முத்திரைகளும் , சமிக்கைகளும் காட்டி "ரைட்...........ரைட்..........ரைட்.........." என்றுகொண்டு நிற்கிறான் கார்ள் மார்க்ஸ்.

(சூரிநிகர் 1999)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு மாறுதல்

எந்த 'ஓரை'யில்தான் ஜனித்தேனோ . . . . இப்படியொரு விசேட ஜாதகம் எனக்கு.

வாடிய ஒரு பயிரைக் காணும்போது அதை விடவே வாடிப்போகிறது என் மனது . . . . வள்ளலார் தோற்றார் போங்கள்! மனது வாடிற்றா . . . ? வாடட்டும். நான் அதற்கு என் அனுதாபத்தை மட்டிலும் கொஞ்சம் போல் வார்த்துவிட்டுப் போய்க்கொண்டேயிருக்க வேண்டும்.

சற்று மிகையாக மனுதர்மமென்றோ, மானிடநேய மென்றோ சிந்தித்து அதற்குக் கொஞ்சம் பசளை தந்து, நீர்வார்த்து விசிறிக் கொடுக்கப் போனேனோ . . . அதிலிருந்து புதிய வினையொன்று எதிர்பாராத கோணத்தில் ஜனிக்கும். ஜனித்தது எழுந்தேயிருக்க முடியாதபடிக்கு எதிர்பாராத நேரத்தில் என் முகத்திலேயே மொத்தும்!

பெர்லினுக்கு வந்து சேர்ந்த வருஷமோ மறுவருஷம் ஒரு நாள். வேலைமுடிந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கையில்........

பெட்டிக் கடையில் ஒரு (கு)ஃபன்ரா வாங்கி அங்குள்ள பார்க் பெஞ்சில் அமர்ந்து குடித்து ஆசுவாசப்படுத்திக் கொண்டு போகலாமென்ற எண்ணத்தில் அங்கே நுழைகிறேன் . . . . இது வரை யார் கண்ணிலும் படாமல் எனக்கென்றே காத்திருந்ததைப் போல உப்பிய ஒரு பெரிய மணிப்பர்ஸ் தரையில் சிரித்துக் கொண்டு கிடக்கிறது! எடுத்துத் திறந்து உள்ளே பார்த்தால் . . . . நிறைய விசிட்டிங் காட்டுகள், வங்கி அட்டை, டெலிபோன் இன்டெக்ஸ், டிரைவிங் லைசென்ஸ், கார்பதிவுப் புத்தகம், அறிமுக அட்டை, ஏதேதோ பிஸினஸ் குறிப்புக்கள், (வீட்டுச் சாவியாயிருக்கலாம்) இரண்டு சாவிகள், தாளும் சில்லறையுமாக ஐம்பது மார்க் வரையில் பணம் என்று பொருட்கள் உள்ளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனம் பதைக்கத் தொடங்குகிறது.... பாவம் தொலைத் தவன் என்ன கஷ்டமெல்லாம் படப் போகிறானோ? எப்படித்தான் வீட் டினுள் போவான்? எங்குதான் தூங்குவான்? Schlüssel Dienst (Emergency Key Smithy) ஐ அழைத்துத்தான் கதவைத் திறப்பதாயினும் அறிமுக அட்டை கேட்பார்களே? ஒருவன் பர்ஸ் என் கையில் கிடைத்த பின்னால் அவனை இத்தனை கஷ்டங்களும்பட வைப்பது ஒரு மனிதன் தன் தார்மீகக் கடமையொன்றிலிருந்து வழுவுவதாகாதா? டாக்ஸியொன் றைப் பிடித்துக் கொண்டு அறிமுக அட்டையிலிருந்த அட்ரசுக்குப் பறக்கிறேன். வீட்டில் யாருமில்லை. ஒரு மணி நேரம் காத்துக் கிடக்கிறேன். சீட்டியடித்துக்கொண்டு வருகிறான் ஒரு ஆசாமி! நன்கு கவனிக்கிறேன். அறிமுக அட்டையிலுள்ள அதே உருவம்! குதவண் டை போய்நின்று ஜெர்க்கினினுள் கைவிட்டுத் திறப்புக்காகத் துழாவி விட்டுத் திடுக்கிட்டுப் போய் நிற்கிறான்! பேரைக் கேட்டு ஊர்ஜிதம் செய்து கொண்டு பர்ஸைக் கொடுக்கிறேன். வாங்கிப் பார்த்தவன் "ஆ ,, வென்று அலறினான். "அதிலிருந்த ஆயிரம் மார்க்கும் எங்கே............ இன்றுதான் வங்கியிலிருந்து எடுத்த பணம்....." என்று குதிக்கிறானே பார்க்கவேணும்!

பின்னால் பொலீஸ் – கேஸ் என்று அதையிட்டு நாலுதடவைகள் நடக்க நேர்ந்தது!

அப்போது என்னுடன் அறையைப் பங்குபோட்டுக் கொண்டிருந்த தியாகு என்று ஓர் நண்பன் தன் சகோதரியை இங்கே கூப்பிட்டு திருமணம் செய்து வைப்பதற்குப் பணம் வேண்டி அலையோ அலையென்று அலைந்துகொண்டிருந்தான். என்னிடம் உடனடியாக எடுக்கக்கூடியவாறு அதிகஅளவில் பணமில்லை என்பது அவனுக்குத் தெரியும். என் இருபத்தைந்து வருஷக் கனவொன்றை (கார் வாங்குதல்) நனவாக்க வேண்டிச் சிறுகச் சிறுகச் சேமித்து நாலாயிரம் மார்க் போஸ்ட் ஒபிஸில் சேமித்து வைத்திருந்ததுவும் அறவே தெரிய நியாயமில்லை. தெரியாது. 'வருகிற ஆகஸ்ட் மாதம் முடிய பேர்லின் போடர் வேறு பூட்டப் போகிறார்களாம்' என்ற செய்தி வேறு பரவிக் கொண்டிருக்கிறது . . . . .

"ஐயோ போர்டரை மட்டும் பூட்டிவிட்டார்களானால் எப்படி அவளைக் கூப்பிடுவேன் . . . . ? எப்படித் திருமணம் செய்து வைப் பேன் " என்று தலையில் கைவைத்துக் கொண்டு உட்கார்ந்துவிடுகிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள்.! என் விஷேஷ ஜாதகமும் நினைவுக்கு வருகிறது . . . நானாக வலிந்து உதவப் போனதால் என்னைவிட்டே பிரிந்துபோன நண்பர்கள் முகங்கள் ஞாபகத்தில் வருகின்றன.. இருந்தும் பாருங்களேன் . . . என் பாழும் மண்டைக்குள் மீண்டும் குறுகுறுக்கிறது!

உதவிகளின் பிரதிபலனாய் அப்பப்ப அனுபவிக்க நேர்ந்த Kahushi 'கிக்' குகளும் Snake Robert 'ஷொட்' களும் பல எச்சரிக்கைகளும், சந்தேகச் சமிக்கைகளும் விடுத்துக்கொண்டிருந் தாலும்........... என் கார்க்கனவு கனவாயே இருக்க தியாகுவே ஜெயித்து விடுகிறான்.

'சரி . . . ஒரு கன்னி கரைசேரும் காரியம்' என மனம் பாட்டுக்கு ஆறிக்கொள்கிறது . . . .

அவள் தங்கை வந்து ஜோராய் இறங்குகிறாள் . . . அடுத்தமாதமே திருமணம், அடுத்த ஆண்டு ஆண்குழந்தை பிரசவம், அடுத்த ஆண்டு தடல்புடலான பிறந்த நாள் விழா . . . அதற்கு அடுத்த ஆண்டு பிறந்தநாள்விழா, அதற்குமடுத்த ஆண்டு பிறந்த நாள்விழா . . . . பல பிறந்த நாட்கள் கண்டு இப்போ பயல் உதை பந்தைத் தூக்கிக் கொண்டு தோழர்களுடன் விளையாடப் போய் விடுகிறான்.

தியாகு எங்காவது பொது வைபவங்களில் கண்டால் கூட இந்தப்பணம், காசு , நாலாயிரம்மார்க், திருப்பிக் கொடுத்தல் போன்ற வார்த்தைகளை அல்லது அதன் அர்த்தத்திலாகிவரும் வேறு வார்த்தைகளைச் சாதுர்யமாகத் தவிர்த்து என்னிடம் பேசும் ஜோரை நீங்களுந்தான் கேட்கவேணுமே!

இப்போது என் மனைவி சொல்கிறாள் . . . . என்னைப் பிழைக்கத் தெரியாத ஏமாளி என்று.

எனக்கு வாய்த்த முகமிருக்கே . . . அவ்வளவு மோச மில்லையென்றுதான் நானும் நினைத்துக் கொண்டிருக்கிறேன் . . . . . ஆனால் அதைப் பார்த்து இலகுவில் இவளை ஏமாளியாக்க லாமென்பதை மற்றவர்கள் சுலபத்தில் தெரிந்து கொண்டுவிடு கிறார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இலக்கியவாதி அடிக்கடி சொல்வார். "வாழ்க்கைக்குப் பயந்து உன் சுபாவத்தை மட்டும் மாற்றிக் கொண்டுவிடாதே . . . . மற்றவர்கள் உன்னை ஏமாளியென்றே எண்ணிவிட்டுப் போகட்டும் . . . உன் தோற்றம் இந்த உலகத்தை இன்னும் சீராக அளக்க உனக்கு வாய்த்த வரப்பிரசாதம் என்று நினை!"

பிரமச்சாரியாக இருந்தபோது பெர்லின் நகரின் இதயம் என்று சுட்டக்கூடிய அதன் நடுப்பகுதியில் சிறிய அப்பார்ட்மெண்ட் ஒன்றில் குடியிருந்தேன். திருமணமாகிக் குழந்தையுமொன்று பிறந்தபோது அந்தக் குட்டிவீடு போதாமலிருந்தது. வசதியான வீடுகள் கொண்ட குடியிருப்புத் தொடர் ஒன்றில் வாழும் என் இலக்கிய நண்பரும், கவிஞருமாகிய ஒருவரிடம் என் வீட்டுப் பிரச்சினையைப் பற்றிச் சொல்லி வைத்திருந்தேன். அவரும் தம் குடியிருப்புத்தொடரில் வீடேதும் காலியாகும் பட்சத்தில் எனக்குத் தெரிவிப்பதாகச் சொல்லியிருந்தார். ஐரோப்பாவின் ஏனைய நகரங்களைப் போலவே பெர்லினிலும் அதுவும் வெளிநாட்டவர் ஒருவர் வீடு எடுப்பது என்பது அத்தனை இலேசான காரியமல்ல!

திடீரென ஒரு நாள் இந்நண்பரிடமிருந்து போன் கோல்! "எங்கள் வீட்டிற்குக் கீழே மூன்று அறையில் ஒரு வீடு காலியாகிறது . . . . உடனே வேண்டிய எல்லாப் பத்திரங்களையும் எடுத்துக் கொண்டு வாருங்கள் . . . நிர்வாகத்தினிடம் நேரில் போய்ப் பேசிப்பார்ப்போம்"

எமக்கோ இன்ப அதிர்ச்சி! . . . . இருந்தும் ஒருபுறம் சிறிய சந்தேகமும் கூட இருக்கவே செய்தது. ஊ:பானினுள் (சுரங்க ரயிலில்) நண்பரைக் கேட்டேன் "அத்தனை சுலபத்தில் தந்து விடுவார்களா . . . . இல்லை வெளிநாட்டவரென்று தட்டிக்கழித்து விடுவார்களா . . .. ? "

"எங்கள் Hauswartin (வீடு பராமரிப்பவர்)க்கு சிறீலங்காத் தமிழரை நல்லாய்ப் பிடிக்கும். அவைதான் தன்னுடன் எந்தப் பிரச்சனையையிட்டும் சண்டை பிடிக்க வரமாட்டினம் என்பதால் புதிதாக இன்னுமொரு சிறீலங்கா குடும்பம் அங்கு குடிவாறதில் தனக்கு ஆட்சேபம் ஏதுமில்லையென்று நிர்வாகத்துக்குச் சிபார்சு வேற பண்ணியிருக்கிறார். . . இதனால எனக்கு நம்பிக்கையிருக்கு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நண்பர் வாக்குப் பலித்தது. வீட்டு ஒப்பந்தத்தில் அன்றே கையெழுத்துமிட்டேன்.

எங்களுக்கு வீடுகிடைத்த விஷயம் தமிழர்வட்டம் முழுவதும் பரவ எங்கள் வீட்டு போன் ஓயாது அலறியது.

"எப்படி எடுத்தனீங்கள் . . . . ? இருக்கிற வீட்டை யாருக்குக் கொடுக்கப் போறியள்?"

நாங்கள் இருக்கிற வீட்டின் நிர்வாகிகளோ கெடுபிடி மிக்கவர்கள். இப்போது வெளி நாட்டவர் எவருக்கும் வீடு வழங்கு வதையே முற்றாகவே நிறுத்தியிருந்தார்கள். அத்துடன் வெளிநாட்டவர் யாராவது வீட்டைவிட்டு வெளியேறுவதானாலும் மகா சந்தோஷம் அவர்களுக்கு! இதே அப்பார்ட்மெண்ட் தொடரில் இருந்த வேறு தமிழர்களுக்கு நிர்வாகம் கொடுத்த அலுப்புக்களின் பட்டறிவுகளிலிருந்து அவர்கள் மனோபாவம் எனக்கு நன்றே தெரியுமாதலால் எல்லாருக்கும் இதைச் சொல்லிச் சொல்லியே என் தொண்டை வரண்டு போனது.

இறுதியாக எனக்குப் புதுவீடு எடுத்துத் தந்த கவிஞரும் போன் செய்தார். 'அண்மையில்தான் திருமணமான அருந்தவமென்பவருக்கு மிக அவ்சியமாக வீடு ஒன்று தேவைப் படுவதாயும், அவர் இப்போது பல அசௌகரியங்களுடன் தற்காலிகமாக ஒரு சிறிய அறையில் வதியும் விபரத்தையும் சொல்லி அவர்களுக்கு கொடுக்க முடியுமா? ' என்றும் கேட்டார்.

நான் சில மாதங்களுக்கு முன்னர் இதே தொடர் வீட்டில் இருந்த இன்னொரு தமிழ்க் குடும்பம் வேறு வீடுமாறிப் போனபோது, அதை இன்னொரு தமிழருக்குப் பெற்றுக் கொடுக்கும் விடயமாக நிர்வாகத்தினரிடம் மொழிபெயர்ப்பாளராகப் போனபோது, அவர்கள் "நாங்கள் இனிமேல் எந்தத் தமிழருக்குமே வீடு கொடுக்கப் போவதில்லை' என்று நெற்றிப் பொட்டிலடித்தாற் போல் சொன்னதை எடுத்துக் கூறினேன்.

அவர் அருந்தவத்துடன் பேசிவிட்டு ஒரு கால்மணி நேரம் கழித்து மீண்டும் போன்பண்ணி 'வீடு உங்கள் பெயரிலேயே இருக்கட்டும் அவர்களுக்கும் ஒரு வசதியான வீடு கிடைக்கும் வரையாகுதல் அங்கே அவர்களைத் தங்க மட்டும் அனுமதியுங்கள்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேட்டார். அவர்களின் வீட்டுப்பிரச்சினையின் உச்சநிலை விளங்கியது . . . . சம்மதித்தேன்.

ஆனால் ஒரு நிபந்தனையுடன் . . . . . .

இந்த வீட்டிற்கான ஒப்பந்தத்தில் நாம் வீட்டை நிர்வாகிகளிடம் திரும்பக்கையளிக்கும் போது சுவர்களுக்கு வர்ணமும், கதவுகள், ஜன்னலிற்குத் தீந்தையும் பூசியபின்பே விடவேண்டுமென்று ஒரு ஷரத்து உள்ளது. நான் இந்தவீட்டில் ஒரு வருஷத்திற்கும் குறைவாகவே யிருந்திருக்கிறேன். இந்த வீட்டிற்கு நான் குடிவந்த போது சுவர்கள், கதவுகள் மிக அழுக்கான நிலையிலேயே இருந்தன.

வர்ணங்கள், தீந்தைகள் எல்லாம் நான் என் சொந்தச் செலவிலேயே செய்தேன். அதனால் அருந்தவம் குடும்பம் இவ்வீட்டில் ஒரு வருஷத்திற்கும் மேலாக இருக்க நேரின் வீட்டை எப்போது விட்டுப் போகிறாரோ அப்போது அதை வர்ணம் தீந்தை பூசிக்கொடுக்கும் பொறுப்பை ஏற்கவேண்டும் என்றேன்.

'அதிலொரு பிரச்சினையுமில்லை . . . . அது நாம் சிறப்பாகச் செய்து விடுவோம்' என்று சம்மதித்து மிக விரைவிலேயே குடியும் வந்தனர். அருந்தவம் உண்மையில் நீதி, அநீதி தெரிந்த ஒரு கண்ணியமான மனிதன். அவரின் நல்ல உள்ளத்திற்காகவே போலும் . . .

எங்கள் வீட்டிற்கு வந்து இரண்டு மூன்று மாதங்களிலேயே அவர்களுக்கு வேறு இடத்தில் நல்ல வீடு கிடைத்துவிட்டது. அவர் புதுவீடு போக ஆயத்தங்கள் செய்து கொண்டு ஒருநாள் போன் பண்ணினார். தனது ஊர்பெடியள் இருவர் அறையில்லாமல் படும் அவஸ்தையைச் சொல்லி அவர்களை அவ்வீட்டில் தன்னைத் தொடர்ந்து இருக்கச் சம்மதிக்க முடியுமாவென்றும் கேட்டார்.

'முன்பின் தெரியாதவர்களாயிற்றே . . . . ' நான் முதலில் மறுத்தேன். அருந்தவம் விடுவதாயில்லை . . . "எனக்கு அவர்களைக் கனகாலமாய்த் தெரியும் . . . ஒரு தண்ணி, சிகரெட் கூட இல்லாத தங்கமான பெடியள் நீங்கள் என்னை நம்பின மாதிரி அவர்களுக்கும் வீட்டைக் கொடுக்கலாம் . . . ஒரு பிரச்சினையும் தரமாட்டார்கள் " என உறுதிமேல் உறுதியளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில அனுபவம் வாய்ந்த நண்பர்கள் சொன்னார்கள். “வீடொன்றால் வாடகைப் பிரச்சினையள், இழுபறிகள் வருவது சகஜம். நீர் பேசாமல் Kündigung (அறிவித்தல்)ஐக் கொடுத்துவிட்டு வீட்டை நிர்வாகத்திடமே ஒப்படைத்துவிடும் . . . . பிரச்சினை தீர்ந்தது” என்றார்கள்.

நான் பிடிவாதமாகவே இருப்பதாகக் கண்ட அருந்தவம் அவர்களிடம் ‘நீங்களே நேரில் போய் அவரைக்கேட்டுப்பாருங்கள் . . உங்களைக் கண்டால் சிலவேளைகளில் மனிசனுக்கு மனமிழகிச் சம்மதிக்கலாம்’ என்று என்னிடமே அனுப்பிவைத்தார்.

ஒரு நாள் காலை “என் பெயர் சந்திரன்” என்று சொல்லிக் கொண்டு வாட்டசாட்டமான இளைஞர் புன்சிரிப்புடன் வந்து நின்றார். அவர்கூட பயூன் மாதிரி இன்னொருவரும் ஒட்டியபடி . . . . கோணிக்கொண்டு நின்றார். இருபது வயதுக்குள்ளாகத்தானிருக்கலாம். அவர்தன் பெயர் கருணாநிதியென்றார். அவரை முன்பு எங்கோ பார்த்தமாதிரியிருந்தது. அவர் சொன்னார் “எனக்கு பேப்பர் போடிற வேலை . . . . காலமெ உங்கள் வீட்டுப்பக்கமாய் வருகிற பஸ் எடுத்தேனேயென்றால் பத்து நிமிஷத்தில் வேலைக்குப் போயிடுவன். இவர் சந்திரன் அண்ணைக்கும் பக்கத்தில இருக்கிற உஃபாண் ஸ்டேசனாலை வேலைக்குப் போய்வர வலு வசதியாயிருக்கும் . . . ! ”

அவர்கள் மிகப் பெரிய நம்பிக்கையுடன் வந்திருக்கிறார்கள் . . . . அதைத் தட்டிவிடுமளவுக்கு வைராக்கியம் கொண்ட மனது நிச்சயம் என்னிடம்இல்லை. மனம் வேறு ‘கடல்கடந்து வந்து ஒரு தமிழன் இன்னொரு தமிழனுக்கு உதவக்கூடாதா? ’ என்று எங்கோ ஓரிடத்தில் மிதத்தியது. வுந்தவர்களுக்குத் தேநீர் கொடுத்து உபசரித்துவிட்டு என் ‘டிவி’ பார்க்கும் ஷோபாவிலிருந்து சிந்தித்தேன். மனதில் மெதுவாக இந்தக் கருணாநிதியைத் தியாகு ஒரு நாள்தன் நண்பன் என்று சொல்லிக்கொண்டு முன்பு நாமிருந்த அறைக்குக் கூட்டிக் கொண்டு வந்தது நினைவுக்கு வந்தது. அப்போது எம்.ஜி.ஆரைப்பார்த்து என்.டி.ராமராவும் அரசியலில் புகுந்திருந்த நேரம். அவர் பற்றிய பேச்ச வந்த போது இதே கருணாநிதிதான் திருவாய் மலர்ந்தார் . . .

‘இப்ப என்.டி.ராமராவ்தான் இந்தியாவின் எதிர்க்கட்சித் தலைவர்’

“சாய்க்..................“

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரோ விடுவதாயில்லை. பேச்சுப்பின்னர் தமிழ்ச்சினிமாவின் பக்கம் திரும்பியது.

"நல்ல தமிழ், சுத்தத் தமிழ் , அதாவது இலக்கணத்தமிழ், அடுக்குத்தமிழ் யாரும் படிக்க வேணுமென்றால் டி.ராஜேந்தரின் படங்களைப் பார்க்க வேணும்.........." என்றார் கருணாநிதி.

"டேய் பார்றாமச்சி . . . உன்னைப்போடுவன் பிய்ச்சி . . . இந்த வகைத் தமிழையா சொல்லுறீர்? என்றனர் அறையில் யாரோ.

பேச்சு இந்தத் திக்கில் சொதப்பலாய் போய்க் கொண்டிருக்க பெர்லின் மறுகோடியில் Wedding என்ற இடத்தில் ஒரு நண்பரைப் பார்க்க வேண்டிய சந்திப்பு ஒப்புதல் ஒன்றிருந்தது. இந்தக் கருணாநிதியையும் துணைக்குக் கூட்டிச் சென்றால் இன்னும்பல அரிய கருத்துக்கள் அவரிடமிருந்து கொட்டுவதைக் கேட்கலாம் எனப்படவே...........

"தம்பி கருணாநிதி வாறீரோ Weddingக்குப் போய் வருவம் மோட்டார்ச் சைக்கிளிலை . . ." என்றேன். முதலில் சற்றுப் பயந்தவர். "நான் ஒருநாளும் மோட்டார் சைக்கிளில் போனதே யில்லை .... நீங்கள் மெதுவாக ஓடினால் வாறேன் . . . ." என்றார்.

போய்க் கொண்டிருக்கையில் சொன்னார்.

"என்னுடைய இடம் வடமராட்சி . . . . நீங்கள் வட மராட்சி பற்றி என்னதான் கேட்டாலும் நான் பதில் சொல்லுவன் . . . அங்கு எனக்குத் தெரியாத இடமே கிடையாது! "

எனக்கு உடனே அங்கத்தைய பிரசித்தமான கல்லூரிகள் தான் ஞாபகத்திற்கு வந்தன. கேட்டேன் "உமக்கு ஹாட்லிக் கல்லூரி தெரியுமோ? "

"சய்க்! "

"இந்து லேடீஸ் . . . ? "

"பச்! "

"மெதடிஸ்த மிஷன் . . . ? "

". . . . . "

UNIVERSITY OF PERADENIYA
2003-7-26
LIBRARY.

“உடுப்பிட்டி யூனியன் . . . ?” “. . . . .”

“பின்னை என்னதான் தெரியும் வடமராட்சியிலை?”

“வடமராட்சியென்றால் நெல்லியடிதான் அதன் சென்ரர் . . . அதனால் நீங்கள் நெல்லியடியைப் பற்றித்தான் என்னிடம் கேட்டிருக்க வேணும் . . . .”

“அப்பிடியும் ஒரு சப்கொண்டிஷன் இருக்கோ . . . . எனக்குத் தெரியாமல் போய்ச்சே . . . . அப்போ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் எங்கிருக்கு . . . . ?”

“ ........... “

“புனித இருதயக்கல்லூரி எங்கேயிருக்கு...............? “

“ ........................... “

“அப்படி ஒரு பள்ளிக்கூடம் நான் அங்கு கேள்விப் படேல்லை . . . என்னோட பிராக்காய் பேசிக்கொண்டே நீங்கள் D.D.R க்குள்ள (இணைப்புக்கு முந்திய கிழக்கு ஜெர்மனி) வந்திட்டியள் போல கிடக்கு நிப்பாட்டுங்கோ . . . .”

“எதை வைத்துச் சொல்லுறீர் . . . ?”

“அங்கைதான் இப்படி மரங்களும் காடுகளுமிருக்கு!”

“போர்டரோ, செக் – பொயின்ரோ ஒன்றும் வராமல் எப்படி D.D.R வரும்?”

“இல்லையண்ணை இது D.D.R தான் ... நீங்கள் விளங்காமல் வந்திட்டியள் . . . . வாங்கோ திரும்பிப் போவம் . . . பொலீஸ் வந்தால் பிடித்துச் சிலோனுக்கு அனுப்பிப் போடுவாங்கள்!”

மோட்டார் சைக்கிளிலிருந்து குதித்து விடுவாரோவென்று பயமாயிருந்தது. முதல்நாள்தான் பெர்லின் Ausländer Behörde ஐ (வெளிநாட்டவர் அலுவலகம்) நாசகாரர்கள் தீமூட்டியிருந்தார்கள். அந்தச் செய்தியை ‘டிவி’ யில் பார்த்த ஞாபகம் வரவும் . . . சரி மேற்கு ஜேர்மனிக்குள்ள போவோம் என்று அவரை தாஜாபண்ணிக் கொண்டே சைக்கிளை வேறொரு பாதையில் திருப்பி அந்த அலுவலகம் நோக்கிச் செலுத்தினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய கட்டிடமொன்று பரிதாபகரமாக எரிந்து தரை மட்டமாகியிருந்தது. ஒரு பக்கம் சாம்பர் மேடாகவும், இன்னொரு பக்கம் கரிமேடாகவும் இருக்க சேதனப் பொருட்களின் தகனத்தில் கிளம்பும் துர்மணம் இன்னும் வீசிக்கொண்டிருந்தது.

"பார்த்தீரா அவலத்தை?" என்றேன்.

"என்ன இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது தீவைத்துவிட்டார்களா?" என்றார் கருணாநிதி.

"நேற்று நெருப்பு வைத்து விட்டார்களாம்" என்றேன்.

"ஏனிதென்ன நாசிகளின் குடியிருப்போ?"

"உமக்கு இடம் குறிப்புத் தெரியவில்லையோ? கடைசித் தடவையாய்க்கூட இங்கை வந்துதானே விசா புதுப்பித்திருப்பீரே?"

"சய்க் . . . . நானிங்கை வாறேல்ல .... எனக்கு வேறயிடம்"

"அது எங்கையோ?"

"அது Amrumer Strasse Bahnhof (சுரங்க ரயில் ஸ்ரேஷனு)க்குப் பக்கமாயிருக்கு"

மோட்டார் சைக்கிளைச் சற்று உருட்டிக் கொண்டு போய் அங்கு தெரிந்த ரயில் ஸ்ரேஷனைக் காட்டி அதன் பெயர்ப் பலகையை வாசிக்கச் சொன்னேன். வாசித்தார் சிரமத்துடன்.

"A ..M...R...U...M...E...R...S...T...R...A...S...S...E"

"அப்ப உம்முடைய Ausländer Behörde யைக் காட்டும்."

" ஓ . . . . இதுதான் போல அது! . . . எரிஞ்சு போச்சு! நீங்கள் வேறை ஒரு பக்கத்தால சுத்திக் கொண்டுவந்து நிப்பாட்டினியள் அதுதான் என்னால மட்டெடுக்க முடியாமல் போச்சு!"

"ஏன் நீரென்ன வாக்குமாறிப் போன கிழவனோ . . . முன்னாலை பாரும் போன கிழமையும் நீர் காசெடுக்க வந்த சோஷல் ஒபீஸ், பக்கத்தில இருக்கிற மற்றக் கட்டடங்கள், நிற்கிற றோட்டு, பக்கத்தில ஓடுற இந்தப் பெரிய தண்ணீர்க் கனால் இதுகளைப் பார்த்தும் விளங்கேல்லையோ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாதிரி அசட்டுச் சிரிப்பை வழியவிட்டுக் கொண்டு கழுத்தில சொறிந்தார். Wedding இல் சந்திக்க வேண்டியவரைச் சந்தித்துக் கொண்டு திரும்புகையில் மோட்டார் சைக்கிளை பெற்றோல் நிலையத்திற்கு செலுத்தினேன். "அண்ணை என்ன பெற்றோல் அடிக்கப் போறியளோ?"

"ம் . . ."

"டீசல் அடியுங்கோ!"

"ஏன்?"

விலைகள் எழுதியிருந்த எரிபொருட்களின் போட்டைக் காட்டிச் சொன்னார்.

"அதுதான் மலிவு"

"டீசல்ல இந்த மிசின் ஓடாதேப்பா . . ."

"நீங்கள் அடிச்சு ஓடிப்பாராமல் எப்படிச் சொல்லுவியள்?"

இந்தப் பிரகிருதியையிட்டு நான் அழுவதா . . . இல்லை சிரிப்பதா? இவன் காரிய அசடா இல்லை நிஜமாயே அசடா? குழம்பினேன். வீடு எடுக்கும் மட்டும் மிக்க சுவாதீனமானவன் போல் பேசிவிட்டுப் பின்பொரு பிரச்சனை உருவெடுக்கும்போது இதுபோல் அசடாக நடித்தால் . . . ? பொல்லைக் கொடுத்து அடிவாங்கிய கதையாகிவிடும். மனைவியையும் கலந்தாலோசித்தேன். "நல்ல பையன்கள் போல கிடக்கு . . . . மூன்று மாதம் அட்வான்ஸ் வேண்டிக் கொண்டு கொடுங்கோ" என்றார்.

"தம்பியவை இந்தவீடு திருப்பிக் கொடுக்கும் போது வர்ணம், தீந்தை எல்லாம் அடித்துப் புதுப்பித்தே கொடுக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனை நிர்வாகத்திடமிருக்கு . . . ."

"அப்படித்தான் அருந்தவமண்ணை விளக்கமாய் சொன்னவர் . . . அதெல்லாம் கிளியராய் செய்து விடுவம் . . . அதைப் பற்றி நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்கவே வேண்டாம் . . ."

"எதுக்கும் நீங்கள் மூன்று மாத அட்வான்ஸ் தந்து வைக்க வேணும் . . . வாடகை பாக்கி எதுவுமில்லாமல் . . . வீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணமெல்லா மடிச்சுத் திறப்பு என் கையில் தாற நேரம் மற்றக் கையில் அட்வான்ஸ் பணம் வைப்பன்''

இதுவரை அதிகம் பேசாமலிருந்த சந்திரன் இப்போ வாய் திறந்தார். "அந்தக் காசுக்கு நீங்கள் ஒரு நோட்டு எழுதித் தரவேண்டும;! "

"தாராளமாக . . ."

இரண்டாயிரத்துச் சொச்சம் பணம் தந்தார்கள். நோட் எழுதிக் கொடுத்தேன். "இன்னொன்று இந்த வீடு தொடர்ந்தும் என் பெயரில இருந்தால் மேலும் இங்கே ஒரு ஆளுக்குத்தான் Anmeldung (வீட்டுப்பதிவு) செய்யலாம் . . . அது யாருக்கு என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேணும்''

இருவரும் கூடிப் பேசிவிட்டு கருணாநிதிக்குத்தான் Anmeldung தேவை என்றார். அதற்கான பத்திரத்திலும் கையெழுத் திட்டுக் கொடுத்தேன்.

மூன்று ஆண்டுகள் எதுவித பிரச்சனையுமில்லாமல் ஒழுங்காக வாடகை கட்டிக் கொண்டு இருந்தார்கள். ஒரு நாள் வேறேதோ அலுவலாக அந்தப் பக்கம் போக வேண்டி வந்தது. அவர்களையும் எட்டிப் பார்க்கலாம் என்று போனேன். மதியம் சாப்பாடு முடித்துக் கொண்டு இருவரும் அப்போதுதான் எழுந்தனர். கருணாநிதி சொன்னார்.

"அண்ணை . . . சோறு முடிஞ்சு போச்சு . . . கொஞ்சம் கறிபோட்டுத் தாறன் சாப்பிடுறியளோ? "

" No . . . Thanks . . . அப்பன் உபசாரத்திற்கு நன்றி! எனக்குக் காரக்கறி சாப்பிட்டால் வயித்தை ஒரு மாதிரிப் பண்ணும்'' என்று விட்டு வந்தேன். மேலும் சில மாதங்கள் கழிய கருணாநிதியின் மூளை என்ன பாணியில் வேலை செய்துதோ . . . யாரையும் கலந்தாலோசியாமல் தனது Anmeldung - ஐக் கான்சல் செய்து கொண்டு வேறு எங்கேயோ யாருடனோ தான் இருப்பதாகப் பதிவு செய்து கொண்டார். அவ்விடத்தின் புதிய ஏரியா பொலிஸ், விடயத்தை வீட்டு நிர்வாகத்திற்கு தெரிவிக்க எழுந்தது சிக்கல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மேலும் விடயத்தைக் கிளறப்போக நான் இப்போ அவ்வீட்டின் பிரதான குடியிருப்பாளரல்ல என்பதும் அங்கு வேறு இருவர் குடியிருப்பதும் அவர்களுக்குத் தெரிய வந்து ஒரு மாத அவகாசத்தில் (தை மாத முடிவில்) வீட்டைக் காலி செய்ய வேண்டுமென்று பதிவுத் தபால் அனுப்பினார்கள். ஆப்பிழுத்த கருணாநிதிக்கு இப்போதுதான் முழி பிதுங்கியது! இனிமேல் என்னால் எதுவுமே செய்ய முடியாது. நிர்வாகத்தினிடம் போய் உண்மையை ஒப்புக்கொண்டு மேலும் ஒரு மாதம் அவகாசம் வேண்டிக் கொடுத்தேன். மாசி மாதம் முதல் வாரத்தில் சந்திரனும், கருணாநிதியும் எனக்குத் தெரிவியாமலேயே வேறு வேறு வீடுகள் பார்த்துப் போய் விட்டார்கள்.

மாசி மாதம் இறுதியில் நிர்வாகம் மீண்டும் கடிதம் எழுதியது. தை, மாசி மாத வாடகைகள் கட்டப்படவில்லை. மேலும், வீடு வர்ணம் பூச வேண்டுமென்தை இத்தால் நினைவுறுத்துகிறோம்.

இந்தப் பிரகிருதிகளை இனி நானெங்கே தேடுவது . . . ? அருந்தவத்திற்குப் போன் பண்ணி விடயத்தை சொன்னேன். அவரும் "சந்திரன் வேலை பார்க்கும் ரெஸ்ரோறன்ட் தெரியும் . . . நான் அவருடன் பேசுகிறேன்" என்றார். பங்குனி மாதம் முதல் வாரம் நிர்வாகத்திலிருந்து ஒரு உத்தியோகத்தன் நேரே என் வீட்டிற்கு வந்து 'தாம் ' 'தீம்' என்று குதித்தான்.

"மாசி மாதத்துடன் உங்களுக்கு நாங்கள் தந்த கெடு முடிந்து போச்சு . . . இன்னும் பழைய தளபாடங்கள் எதுவும் அப்புறப்படுத் தவில்லை, வீடு வர்ணம் பூசவில்லை, வாடகை கட்டவில்லை . . . இதையெல்லாம் நாங்கள் ஒரு FACH FIRMA (ஒப்பந்த வேலை செய்யும் கம்பனிகள்) வைக் கொண்டு செய்வித்து விட்டு 'பில் ' லை அனுப்பினால் எப்படிக் கட்டுவீர் . ? நாங்கள் ஏன் வெளிநாட்டுக் காரருக்கு வீடுகள் தர்றதில்லை என்று இப்போ தெரியுதோ . . . ?"

என்னையே அவன் திருப்பிக் கேட்டான். தலையைக் குனிந்து கொண்டு கேட்க வேண்டியதாயிற்று. அவரைச் சாந்தமாக்கி "மன்னிக்க வேண்டும் . . . ஏதோ நேரமில்லாததில் செய்ய முடியாமல் போச்சு இன்னும் இரண்டு வாரத்தில் எல்லாம் ஒழுங்காய் முடித்துத் திறப்பை உங்களிடம் ஒப்படைப்பேன்" என்று உறுதி கூறினேன். மீண்டும் ஒரு முறை போன் பண்ணி அருந்தவத்திற்கு நடந்ததைச் சொன்னேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் கருணாநிதி போன் பண்ணினார். "என்ன தம்பி இப்படிப் பண்ணி விட்டியள் . . . உங்கள் பழைய வீட்டுத் தளபாடங்களை அப்புறப்படுத்தவில்லை . . . வாக்குத் தந்தபடி வீடு வர்ணம் பூசவில்லை. மனத்தில என்ன நினைத்துக் கொண்டிருக்கிறியள் . . . ?"

"சந்திரனுக்கு மாதம் முப்பது நாளும் வேலை . . . . நான் தனிய எப்படி வெள்ளையடிக்கிறது . . . அதோடை இரண்டு கிழமை யாய் Krank (சுகமில்லாமல்) இல் கிடந்தனான். Es tut mir sehr leid (என் அனுதாபங்கள;!) " என்று ஜேர்மனியில் சொல்லி விட்டுப் பேச்சைக் கட் பண்ணப்போனார்.

"தம்பி பாரும் . . . . இதுகள் சரியான காரணங்களில்லை . . . நீங்கள் வீடு பொறுப்பு ஏற்க முதல் தந்த வாக்குறு திகள் என்ன . . . இப்ப எல்லாத்தையும் மறுதலித்து 'ரௌடி' மாதிரிப் பேசிறதென்ன...? "

"ஏன் உமக்கு நாங்கள் பழைய தளவாடங்கள் எடுத்துக் கொண்டும் போறமெண்டு சொன்னாங்களோ . . . . இப்ப நாங்கள் எடுத் திருக்கிற வீட்டில எல்லாத்தளவாடங்களும் புதிஸ்ஸாக் கிடக்கு........ பழசுகளை நாங்கள் ஏத்திக்கொண்டு போய்த்தான் என்ன செய்யிறது....? முல் (Trash) இலே கொண்டுபோய்ப் போடுற தெண்டால் என்ன செலவு பிடிக்கும் . . . சும்மா வெருட்டிச் சாதிக்கலா மென்று பாராதையுங்கோ . . . . எங்களிட்டையும் ஆட்களிருக்கினம் . . . ! "

விவகாரமாய்ப் பேசும் போது 'அசடு' வேடம் எப்படிக் காணாமல் போகிறது?

வீடு விட்டுப் போகும் போது சுத்தமாய்க் காலி பண்ணிக் கொடுக்க வேணுமென்ற விவஸ்தையின்றிப் பேசுறானே . . . .

இது டி.ராஜேந்தரிடம் தமிழ் படித்த கேஸ்! . . . இன்னும் பேசினால் மரியாதை இன்னும் ஏறினாலும் ஏறும். டெலிபோனைத் துண்டித்தேன்.

'ஒரு வான் வாடகைக்கு எடுத்துக் கொண்டு வாங்கோ ஒரு நாளைக்கு நாமெல்லாரும் சேர்ந்து அவற்றை ஏற்றிக்கொண்டு போய் அப்புறப்படுத்துவோம்' என்ற விதத்தில் பேசியிருந்தாலாவது நானும் உதவியிருப்பேன். தளபாடங்கள் அப்புறப்படுத்தும் வரை குடியிருப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலிருப்பதாகவே நிர்வாகம் கருதும். வாடகை மாதாமாதம் கட்டியாக வேண்டும்.

இதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி என்னை இவ்வீட்டுப் பிரச்சனையிலிருந்து தயவு செய்து விடுவிக்குமாறு மீண்டும் அருந்தவத் திற்குப் போன் பண்ணி விட்டுக் காத்திருந்தேன். இரண்டு வாரங்கள் கழித்து அருந்தவம் போன் பண்ணினார். "அவர்கள் சாமான்கள் எல்லாம் எடுத்துவிட்டு வெள்ளை எல்லாம் அடித்துவிட்டார்களாம். போய்ப் பாருங்கள்"

நான் போய் வீட்டை என்னிடமிருந்த திறப்பைக் கொண்டு திறந்து உள்ளே போய்ப்பார்த்தேன். தரை பூரா எங்கும் வர்ணத் துளிகள். ஒரு வாளி வர்ணத்தை வாங்கி நம் ஊர் தும்புக் கட்டையைப் போல ஒரு பிறஷினால் தம்முடைய இஸ்டத்திற்கு இழுத்திருக்கிறார்கள். அதுவும் தீர்ந்து விட்டது போலிருக்கு. முன் கொறிடோரும், பாத்றூம் கூரையுட் பகுதியும் பூசப்படவேயில்லை. கட்டிலும், அலுமாரியும் அப்புறப்படுத்தியிருந்தார்கள். பாத்றூமில் பேஸ்ட், சோப், பிறஷ் வைக்கும் சிறிய பெட்டியும், பெரிய உடைந்த கண்ணாடியொன்றும், சில தரையோடுகள், இன்னும் சில பொருட்கள், பிளாஸ்டிக் வாளி என்பன வீடு முழுதும் இறைந்து கிடந்தன. இந்த அலங்கோலத்தைப் பார்த்துக் கொண்டிருக்கையில் யாரோ கதவு 'பஸ்'ஸரை அமுக்கினார்கள். பார்த்தால் . . . . நிர்வாகத்திலிருந்து ஒரு அதிகாரி வந்து வாசலில் 'பைலோடு' நின்றான். நெஞ்சு 'திக்'கென்றது! 'Darf ich rein (உள்ளே வரலாமா?) ' என்றபடி உள்ளே வந்தான்.

வந்தவன் அறையின் கோலத்தைப் பார்த்து 'இடி இடியென்று இடித்து' ச் சிரித்தான். "சிறீலங்காவில் இப்படித்தான் வீட்டுக்கு வர்ணம் பூசுவார்களோ? " அவன் கேள்வியின் ஏளனத்தால் நான் நெளிய தரையில் தடித்த திட்டுகளாகக் கொட்டியிருந்த வர்ணம் அவனது சப்பாத்துக்களை ஒட்டி இழுத்தது.

"Scheisse . . . . Scheisse" என்றவன் (வசவு) "Es geht's Nicht Kamerad (இது சரிப்படாது)" என்று விட்டுத் திரும்பிப் பாராமலே போனான்.

இரண்டு நாட்கள் கழித்து நிர்வாகத்திடமிருந்து கடிதமொன்று வந்தது. வர்ணம் பூசுகிறேனென்று நீங்கள் வீட்டினுள் அரையும் குறையுமாக இறைத்து விளையாடியிருப்பதை நிர்வாகம் ஏற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளாது. உடனடியாக தரை சுத்தமாக்கப்பட்டு வீட்டின் சுவர்களும் கதவுகளும் வர்ணம் பூசப்பட வேண்டும். மேலும், அங்குள்ள கண்ணாடி, பாத்றூம் பெட்டி, தரையோடுகள், பிளாஸ்டிக் வாளிகள் என்பன அப்புறப்படுத்த வேண்டும். அதற்காக பங்குனி 30ம் தேதிவரை உங்களுக்கு அவகாசம் தரப்படுகிறது.

மீண்டும் அருந்தவத்திற்கு போன் பண்ணி விஷயத்தை எடுத்துச் சொன்னேன். பங்குனியும் முடிந்தது. அவர்களிடமிருந்து ஒரு பதிலுமில்லை! ஒரு நாள் எதேச்சையாக சந்திரனை உ-்பாண் ரயிலுள் பார்த்தேன். என்னை ஒரு ஜென்மத்திலுமே பார்த்திராதவர் மாதிரியான பாவனையில் எங்கோ பார்த்துக் கொண்டு நின்றார்.

கிட்டப் போய் "என்ன ஐயா . . . இப்படிப் பண்ணிப் போட்டியளே . . ? " என்றேன்.

"அண்ணை நானென்ன செய்யேலும் . . . ? எனக்கோ லீவு எடுக்க முடியாதபடி வேலை . . . சவடால் கருணாநிதியைத் தெரியுந்தானே . . . ? அவனுக்கும் பெயின்ட் அடிக்கத் தெரியாது . . . "

"நீங்கள் அசிங்கம் பண்ணியிருக்கிறதாயெல்லோ நிர்வாகம் எழுதியிருக்கு . . ! "

"பரவாயில்லை . . . அவங்களுக்குத் திருப்தியில்லையென்றால் அவங்கள் Fach Firma வைக் கொண்டு செய்விக்கட்டும் . . .பிறகு பார்த்து அவங்கடை பில்லைக்கட்டுவம் . . . "

"ஏதோ யோசித்துச் செய்யுங்கோ . . . . பெருந்தொகையாய் 'பில்' வந்து தொலைக்கப் போகுது . . . ! "

"எனக்கு வேலைப்பிரச்சனை . . . இதை விட இப்போதைக்கு வேற வழியேயில்லை! " அவர் இறங்க வேண்டிய இடம் வந்தது. இறங்கிப் போய்க் கொண்டேயிருந்தார்!

சித்திரை மாதம் நடுப்பகுதியில் நிர்வாகத்திடமிருந்து பெரிய கடிதமும் அதோடு இணைத்து ஒரு 'பில்'லும் வந்தன. பங்குனி மாதம் 30ம் தேதிவரை வீடுவர்ணம் பூசுவதற்கு அவகாசம் தந்தும் நீங்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. சித்திரை மாதத்திலேயே Fach Firma தனது திருத்த வேலையை ஆரம்பித்தது. ஏற்கனவே செலுத்தப்படாத மூன்று மாத வாடகை பாக்கியுடன் சித்திரை மாதத்திற்கான வாடகையும் சேர்த்தே நீங்கள் செலுத்த வேண்டும் என்பதை நாம் விளங்கப்படுத்த வேண்டியதில்லை, இப்படிக் கடிதம் போக . . . .

பின்னாடி இணைத்திருந்த 'பில்'லைப் பார்த்தேன். நாலு மாத வாடகைப் பாக்கி, தரையும் வீட்டையும் துப்பரவு பண்ணிய கூலி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணத்தினதும் தீந்தைகளினதும் விலைகள், அவற்றைப் பூசிய கூலி, கரப்பான் பூச்சி மருந்து அடித்த கூலி, நிர்வாகத்திற்கு ஏற்பட்ட மேலதிகச் செலவுகள், வரி, தபாற் செலவுகள் என 7756 டொச் மார்க்கிற்கு மொத்தக் கணக்கு. பணம் செலுத்த இரண்டு வாரங்களே அவகாசம் தந்திருந்தார்கள்.

கடிதத்தை எடுத்துக் கொண்டு சந்திரன் வேலை செய்யும் ரெஸ்ரோறன்டுக்குப் போனேன். அவர் ஒரு வாரம் விடுப்பில் இருப்பதாக முதலாளி சொன்னார். அக்கடித உறையில் 'திரு.சந்திரன் அவர்களுக்கு' என்று எழுதி முதலாளியிடம் கொடுத்து விட்டு வந்தேன்.

இப்போது மூன்று வருஷங்களாகின்றன. 'தமிழன், தயாளம், தன்மானம், உதவி' என்று பேசிய அம்மறவோரை நான் இன்னுமே காணவில்லை! அவர்களுக்கு 'இப்பணத்தைத் திருப்பி விடவேண்டும்' என்ற உள்ளுணர்வோ, உறுத்தலோ இருந்திருந்தால் இதுவரை என்னிடம் வந்து பேசியிருப்பார்கள்! நான் நிர்வாகத்திடம் எனது நிலமையை வருமானத்தை எல்லாம் விளக்கியதன் பேரில் மாதம் நூறு மார்க் வீதம் அக்கடனைச் செலுத்த அனுமதித்தார்கள்............ செலுத்திக் கொண்டிருக்கிறேன்.

சந்தர்ப்ப ரயில்களில் கட்டணம் செலுத்தாமலே சாதுர்யமாகப் பயணிக்கத் தெரிந்தவர்கள் வேண்டிய தரிப்புக்களிலும், சந்திப்புக் களிலும் சொல்லிக் கொள்ளாமலே மாறிவிடுகிறார்கள்! அப்பாவிகள் மட்டும் மானுஷீகம் பற்றியும் அதன் விழுமியங்கள் பற்றியுமான நினைப்புக்களுடன் அதே பழைய தடத்தில்........................

(பாரீஸ் –ஈழமுரசு 16.01.1997.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபச்சாரம்

அதொன்றும் வழக்கமான விஷயமல்ல.

ராகுலனை செ.்ப்பே(முதலாளி) வலியக்கூப்பிட்டு "உனக்கின்னும் ஒரு கிழமை ஊர்லாப்(விடுமுறை) இருக்கு...... மேலதிமாய் இன்னும் ஒரு கிழமை தாறன்...... இந்த மாதம் நீ வெளியில எங்காவது போக விரும்பினால் போய் வரலாம்........... " என்றான்.

"ஓ........ஜா.....!"

மனதுள் சந்தோஷப்பனி தூவ அதைத்தாங்கமுடியாத தவிப்புடன் ராகுலன் விசிலும் வாயுமாய் வீடுவந்து சேர்ந்தான். இரவுமுழுதும் மனைவி லதாவுடன் பிரான்ஸுக்குப் போவதா, இல்லை சுவிஸுக்குப் போவதா என விவாதித்தும் ஒரு தீர்மானத்திற்கும் வரமுடியவில்லை. சுவிஸில் லதாவின் அண்ணன் குடும்பமிருக்கிறது. பிரான்ஸிலோ ராகுலனுக்கு உறவுகள் ஏராளம்.

கடைசியில் என்றும் போல் லதாவே வென்றுவிட எண்ணிறந்த பலகாரவகைகளாலும், அண்ணனின் குழந்தை மயூரனுக்கு வாங்கிய ஏராளம் பரிசுப்பொருட்களாலும் டிக்கி நிரம்பி வழியவழிய அவர்களது கார் அஷ்டமி,நவமி, மரணயோகம், கரிநாள் தவிர்த்த ஓர் நல்லோரையில் ஷுரிச் நோக்கி கோலாகலமாய் புறப்பட்டது.

எட்டு மணிநேரச்சவாரிக்களைப்போடு ஷுரிச்சில் அண்ணன் வீட்டுவாசலை அடைந்தும் உள்ளே அடிஎடுத்து வைக்க மேலும் நாலு மணிநேரம் நற்றவமியற்ற வேண்டியிருக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அண்ணனும் அண்ணியும் வேலைக்குப் போனதாக ஏப்றன் கட்டிக்கொண்டு கண்ணாடி ஜன்னல் கதவுகளைத் துடைத்துக் கொண்டு நின்ற அயல்வீட்டுக்காரி செப்பினாள்.

"அப்போ அவர்கள் பேபி....? "

"எங்காவது ஹோர்ட்டில் (குழந்தைகள் பராமரிப்பகம்) விட்டிருக்கலாம;!."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் நிலமையை அறிந்தும் சுவிஸ்க்காரி அந்நியரை அதுவும் கறுத்த வெளிநாட்டுக்காரரை தன் வீட்டுக்குள் அழைத்து உட்காருங்கோ என்று உபசரித்துவிடுவாளா என்ன.......

தன்பாட்டுக்குக் கதவைச்சாத்திக்கொண்டு உள்ளே போனாள்.

அண்ணியும் வேலைக்குப்போய்விடுவாள்...... பகலில் யாரு மிருக்க மாட்டோம் என்பதை முதலிலேயே சொல்லித்தொலைத் திருந்தால்....... இரவு வந்துசேரும்படியாகப் புறப்பட்டிருக்கலாம். இப்படிக் கைக்குழந்தையுடன் தெருத்தூங்கவேண்டியிருந்திராது. "சுவி ஸுக்கு வருகிறோம்." என்று ரெலிபோன் பண்ணியபோதே அண்ணன் உள்ளுக்கிழுத்தது ஏனென்று இப்போதான் லதாவுக்கு மெல்ல ஓடி வெளித்தது. எனினும் ராகுலனை மேலும் குழப்பவேண்டாமென்று சமர்த்தாயிருந்தாள்.

ராகுலன் லதாவைக் கல்யாணம் கட்டுவதற்கு முன் அவனை ஷுரிச் ரெயில்வேஸ்டேசனுக்கே வந்து காத்துக்கிடந்து வார்த்தைக்கு வார்த்தை "அத்தான்.........அத்தான்........." என்று அன்பொழுக அழைத்து நிலபாவாடை விரிக்காத குறையாக அழைத்துப்போனதும் இதே மைத்துனன்தான்.

பயணத்திற்கான ஏற்பாடுகளைக் கவனித்ததில் முதலிரண்டு நாளும் இருவருக்குமே சரியான தூக்கமில்லை. பயணத்தின்போது உட்கார்ந்தது போதாதென்று மேலும் தொடர்ந்து காரில் உட்கார்ந் திருக்க முதுகுத்தண்டுவடம் ஜிவ்ஜிவ்வென்று வலித்தது.

கொஞ்சம் நடந்து திரிந்தால் நல்லாயிருக்கும் போலிருந்தது. ஆனாலும் களைப்பும் அசதியும் அனுமதிப்பதாயில்லை.

குளிர்வேறு. காரைச்சூடுபண்ண அடிக்கடி ஸ்ரார்ட் பண்ணவேண்டியிருந்தது. எப்போதான் உடம்பைக்கொண்டுபோய் கட்டிலில் எறிஞ்சுபடுப்போம் என்றிருந்தது.

அவர்கள் எப்போதுதான் வருவார்கள்.......... இது எப்போசாத்தி யமாகும் என்று தெரியாமல் வெட்டிக்கு வீதியில் காத்திருப்பது இரத்த அழுத்தத்தை உச்சத்திற்குக்கொண்டுபோக குழந்தைவேறு பசியெடுத்து அலறத்தொடங்கினாள். அவளுக்குப் பால் கரைக்க வேண்டிய வெந்நீர் வேறு தீர்ந்துவிட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ரெஸ்ரோறன்டைத் தேடிப்போய் கேட்டபோது அவன் உள்ளே பைப்பில் பிடித்திருக்கவேணும் "வெந்நீர்" என்று சொல்லிக் கொண்டு வந்து கொடுத்தான். அச்சூட்டில் மா கட்டிபட்டுக் கரைய மறுத்தது.

"வேறேதாவது கடையில கேட்டுப்பார்ப்பமே..... " என்று காரைக்கிளம்பவும் ஒருவாறாக விருந்தோம்புவார் காரும் வந்து லான்ட் பண்ணியது. இவ்வளவு நேரம் தெருவில் காக்கவைத்ததிற்காக ஒரு "சொறி"யாவது சொல்லவேணுமே...... ஊஹூம்! இத் தனை மணிக்கு வந்துசேர்வோம் என்று உறுதியாக முன்பே சொல்லாதது உங்களது தப்புத்தான்" என்றார்கள். அதையிட்டு ஒருவிவாதம் நடத்த அவர் களிடம் மேலும் சக்தியில்லை. மௌனம் காத்தனர்.

வழியில் சாப்பிடுவதற்காகப் பண்ணிக் கொண்டுவந்த சான்ட்விச்சுகள் நிறையவே மிஞ்சிக்கிடந்தன. எல்லோருக்கும் இரவுச்சாப்பாட்டிற்குப் போதுமானதாக இருந்தது.

மறுநாள் காலை அண்ணன் வேலைக்குப்புறப்பட தானும் வெளிக்கிட்டுக்கொண்டு வந்த அண்ணியார்சுகுணா லதாவுக்குச் சொன்னாள்.

"நானும் ஓரிடத்தை போகவேணும்...... வரக்கொஞ்சம் செல்லும்"

ஓரிடத்துக்கு என்றால்...... "அதைப்பற்றி மேலே கேளாதே" என்பதுதான் அதற்குரிய உளவியல். இது லதா அறியாததா?

அவர்கள் குழந்தை மயூரனையும் இழுத்து வைத்துச் சட்டையை அணிவிக்கையில் மட்டும் சொன்னாள்:

"மயூரன் நிற்கட்டும் அண்ணி நான் பார்த்துக் கொள்ளமாட்டனே...... "

"வேண்டாம் லதா அவன் பயங்கரக் குழப்படிவிடுவன், ஒருவருக் கும் அடங்கான்........ "

அதற்கு முனனேபின்னே ஒருநாளும் முகம் பார்த்திராமலேயே லதாவைக்கண்டதிலிருந்து அவன் குழைஞ்சு குழைஞ்சு அவளுடன் சேர்ந்தமாதிரியைப் பார்க்க அப்படி அது அடம்பிடிக்கிற குழந்தை மாதிரியே தெரியவில்லை. இயல்பில் குழந்தைகளில் அதீதபிரியமுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லதாவுக்கு மொழுமொழுவென்றிருந்த அவனுடன் விளையாடவும் ஆசையாயிருந்தது. இருந்தும் அவனையும் அவர்கள் வெளியே இழுத்துக்கொண்டு போவதன் சூத்திரம் முழுவதும் அறியாமல் வற்புறுத்திக்கேட்கத் தயங்கினாள்.

அவர்கள் புறப்பட்டுப் போனபின்பு குசினியுள் போய்ப் பார்த்தார்கள். நார்முடையொன்றுள் கொஞ்சம் முளைவிட்ட உருளைக்கிழங்கு, புருவமெனக் குனித்தும் வாடியும்போன ஒரு கூர்க்கன் (கெக்கரிக்காய்), ஒரு பிளாஸ்டிக் பைக்குள் (எழுதித்தான் எடுப்பித்தார்களோ?) கோழிகூடக் கொறிக்கத் தயங்கும் ஒரு சுண்டு குறுணல்அரிசி தவிர வெளியாய் வேறொரு சமைக்கக்கூடிய வஸ்த்தும் இருக்கக்கூடிய தடயங்கள் புலப்படவில்லை. பிறிட்ஜைத் திறந்து பார்த்தார்கள். யார்சாபமோ ஐஸூடன் ஐஸாய் கல்லாய்ச் சமைந்துபோய் மல்லாக்கக் கிடந்தது ஒரு கோழி (அதுவும் கிறில் பண்ணுவதற்கான மலிவுப்பதிப்பு). அதையங்கிருந்து பெயர்த்தெடுக்கக் கூடிய ஈட்டியோ, வேலன்ன ஒருபோர்க்கருவியோ, கடப்பாரையோ தென்படுகிறதா என்று தேடினார்கள்.

திடீரென கி.செ.துரையின் கதையொன்றில் சிவபதமடைந்த தேதி தெரியாத கோழியைச்சாப்பிட்ட ஒருவர் வயிற்றுள் கடுஞ்சமர்மூண்டு கலக்கி அவதிப்படுத்திய சம்பவம் ஞாபகம் வரவும்.........

அந்த எண்ணத்தை அதிலேயே போட்டுவிட்டு Migros Markt தேடிப்போய் ஆட்டிறைச்சி மற்றும் சாமான்கள் வாங்கிவந்து சமைத்துச் சாப்பிட்டார்கள்.

மாலையானதும் அண்ணன்குடும்பம் வந்து சேர்ந்தது. சாப்பாடானதும் அண்ணன் செற்றிக்குள் சாய்கோணத்தில் இருந்துகொண்டு ராகுலனிடம் ஜெர்மனியில் தனிநபர் வருமானம், சேமிப்பு சாத்தியஅசாத்தியங்கள், நடப்பு வட்டிவீதங்கள், மற்றும் அத்யாவசிய நுகர்ச்சிப்பண்டங்களின் விலைதலைகள் பற்றி உசாவினார். பின்னொரு கோழித்தூக்கம் போட்டார். அலாம் வைத்தது போல் ஏழு மணிக்கு எழும்பி பாத்றூம் போனார். பின் ஜாக்கெட்டை மாட்டினார்.

"எனக்கு ஒரு அலுவலிருக்கு வெளியில." என்று வெளியேறி யவர்தான் எல்லாரும் படுக்கைக்குப்போனதன் மேல் பதினொரு மணிக்கு வந்துசேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாளும் இதே செயன்முறைகள் நேரசூசிகை போட்டது போல் நடந்தேறின. ஆனால் அண்ணியார் சுகுணாமட்டும் கொஞ்சம் மாற்றி தான் தையல்கிளாஸுக்குப் போவதாகச் சொன்னாள்.

மூன்றாம்நாள் காலை புறப்படமுதல் அண்ணியார் லதாவிடம் சொன்னாள்: "மயூரனை கின்டர் ஹோர்ட் ஒன்றில கொஞ்சநாளாய் விடுகிறனாங்கள்........ புதுசில தனிய நிக்கிறானில்ல அழுகிறான்....... அதுதான் நானும் போய்க்கூட நிக்கிறனான்........தனிய நிற்கப்பழகிட்ட னென்றால் நானுமெங்கையென்டாலும் பார்ட் டைம் ஜொப்புக்குப் போகலாமென்றார் இவர்......... அவரும் தனியாளாய் அடிச்சு என்னத்தைத்தான் மிச்சம் பிடிக்கிறது இந்த நாட்டில இருக்கிற விலைவாசியில...... "

அன்று மாலை அவர்கள் வந்திறங்கக்கூடிய நேரந்தான்....... ரெலிபோன் அடிக்கிறது. எடுப்பதா விடுவதா என்று லதா குழம்பவும்..... மீண்டும் மீண்டும் மீண்டும் அடிக்கிறது.

ராகுலன் சொன்னான் "போய் எடும் சிலவேளை கொண்ணனாய்கூட இருக்கலாம் "

போய் எடுத்தால் மறுமுனையில்.........

"குறுய்ஸ் கொட்..... நான் சூசாரா.... மன்னிக்கவேணும் அப்போது உறுதிப்படுத்த மறந்துவிட்டேன்.........துகுணா........ நீ முன்னர் ஒத்துக்கொண்டபடி அடுத்த வார இறுதிநாட்கள் இரண்டும் என்னுடைய ஷிப்ட் வேலையையும் சேர்த்துச்செய்வாய்தானே....?"

(வியட்னாமோ தாய்லாந்துக்காரி....... வார்த்தைகளை நசித்தும் சப்பியும் மழலை பேசினாள்.)

"மன்னிக்கவேணும் நான் சுகுணாவல்ல..... அவர் வீட்டுவிருந்தாளி. இது சுகுணா வாறநேரந்தான் நீங்கள் அவர் வந்த பிறகு பேசுவது நல்லது. குறுய்ஸ் கொட்.....! "

அண்ணியாவது ஏற்கெனவே உறவுக்காரி கொஞ்சம் வாஞ்சையாய் இருப்பாள், அணைப்பாள், சிரிச்சுக் கலகலப்பாய் கதைப்பாளென்று எதிர்பார்த்து வந்த லதாவுக்கு அவள் ஏதோ கடன்காசைக் கேட்கப் போயிருக்கிறவர்களிடம் பேசுவதுமாதிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகங்கொடுக்காமல் கதைக்கிறதும் திருப்பிறதும் பெரும் ஏமாற்றமாயும் அவமதிப்பாயுமிருந்தது. ஆனாலும் ராகுலனிடம் சொல்லமுடிய வில்லை.

அவர்கள் வீடு திரும்பவும் லதா அண்ணியாரிடம் சொன்னாள்:

“சூ....சாரா என்று யாரோ போன் எடுத்தார்கள்”

திடீரென்று அவள் முகம் கலவரமாகியது. மறைத்துக் கொண்டு ஆனால் குரலில் சற்றுப்பதட்டத்துடன் கேட்டாள்:

“எ...எ..எ.என்னவாம்..........? ”

எனக்கு அவள் பேசிய ஜெர்மன் ஒண்டும் விளங்கேல்லை...... எதுக்கும் “நீங்கள் வந்தாப்போல எடுங்கோ என்றன்...வைச்சிட்டாள்” என்ற பிறகுதான் அவளுக்கு மூச்சு வந்தது.

உதட்டை வலிந்து மலர்த்தி எமது தலைவி சந்திரிகாவைப் போலொரு சிரிப்பை உதிர்த்துவிட்டு “என்னோட தையல்கிளாஸுக்கு வாற ஒரு தாய்லாந்துப்பிள்ளை..”என்றாள்.

நாலாம்நாள் மாலை அண்ணன் சாப்பிட்டபின்னால் பான்பராக் போட்டுக்கொண்டு கோழித்தூக்கம் போடமுதல் திருவாய்மலர்ந்தார். “ஜெர்மனியைப்போல இல்லை..... இஞ்சை........ கண்டகண்டபாட்டுக்கு ஆக்களைப் பிடிச்சு அனுப்பிறாங்கள்....... நீங்களும் அறிஞ்சிருப்பியள் தானே....... எந்த நேரமும் காட்டைப்பிடுங்கிக்கொண்டு ஊருக்கேத்திற நிலமை எங்களுக்கும் வரலாம்........ முந்தி உளைச்சதுகளை அப்பிடியே வீட்டுக்குக் குடுத்தன்........ அடுத்தவளுக்குச் சீதனங் கொடுத்தன்........ லதாவைக் கூப்பிட்டன் கையிருப்பு காலி. இனிமேற் கொண்டு பார்ட் டைம் ஜொப் ஏதாவது பண்ணிக்கிண்ணினால்த்தான் நாலு காசைப்பார்க்கலாம். அதுதான் இப்ப கொஞ்சநாளா பின்னேரத்தில பார்ட் டைம் ஜொப்பொன்றுக்குப் போறனான்............. ”

ராகுலனுக்கு அவர் கையிருப்பை அறிவதில் ஒரு சுவாரஸ்யமுமில்லை. அவன் பேச்சில் அசிரத்தையாய் முகட்டைப் பார்த்துக்கொண்டிருந்தான். அண்ணாச்சி தொடர்ந்தார்..........

“அங்கை சமையலெண்ணை லீற்றர் ஒண்டரை மார்க்கென்றியள்.........இஞ்ச லீட்டர் அஞ்சு பிராங்கெல்லே.........வரேக்க மட்டும் உந்தப்பெரிய கொம்பியில பத்து லீற்றர் கேசில ஒரு பத்து அடிச்சந்திருந்தா....... சும்மா ஐநூறு மார்க் வெளிச்சிருக்கும்.......... ”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ராகுலன் மனதுள் -யாருக்கு.....?-)

கதை மீண்டும் பொருண்மியத்திக்கிலே செல்ல அறுவை தாங்காமல் ராகுலன் கேட்டான்:

"உங்கடை ஷுரிச்சில என்னதான் விஷேசம்........ அதைச்சொல்லுங்கோ......... "

" விஷேசமெண்டு......?- "

"இங்க யாரும் ரூரிஸ்ட்டுக்கள் வந்தால் என்னத்தைப் போய்ப்பார்க்கிறவை....? "

" நானூறு கிலோ மீட்டர் தள்ளி..........ஜெனீவா என்றால் யூ.என்.ஓ கட்டிடத்தைச்சொல்லலாம்......... இஞ்சை ஒரு நூற்றைம்பது இருநூறு கிலோமீட்டரில ஒரு சேர்ச் இருக்காம் ........எங்கட சனமும் சிலது போறது......... வடக்கை ஷௌகவுசனில ஒரு நீர்வீழ்ச்சி யிருக்காம்.......... நானென்றால் இதொண்டுக்குமின்னும் போகேல்ல......... இருக்கிற வேலைக் கரைச்சலுகளுக்கை எங்களுக் கெங்கால நேரம்.........? "

லதா ஆற்றாமல் கேட்டாள்:

"அப்ப ஒரு ஆபத்து அந்தரத்துக்குத்தன்னும் உங்களுக்கு லீவு எடுக்கேலாதோ அண்ணை? "

"இப்ப மற்ற வேலைக்குத்தான் லீவெடுத்தாலும்.......பார்ட் டைம் வேலைக்கு எடுத்தேனென்டால் எங்கை யெண்டிருக்கிற நம்ம சனமே ஓடிப்போய் புகுந்திடும்.......... பிறகு கோவிந்தா தான்........... கிறிஸ்மஸ் லீவுக்கை வந்திருந்தியளெண்டால் சோக்காய் எல்லாம் பார்த்திருக் கலாம்........ "

(ராகுலன் மனதுக்குள் " இதுதான் ஸ்னோ மலையாய் கொட்டிக்கிடக்கு பார்.......- " என்றிருப்பான்.)

இவர்கள் ஒரு நாளாவது லீவு போட்டுவிட்டு தம்மோடு சந்தோஷமாக நிற்பார்கள் அல்லது ஏதாவது ஒரு இடத்திற்குக் கூட்டிப்போவார்கள் என்ற நம்பிக்கை அறவே பொய்த்துப்போய் அவர்களது -பொருள் முதல் உலகம்- வேறென்பதும் புரிந்து போயிற்று.

சடுதியான காலநிலை மாற்றம் ஒத்துக்கொள்ளவில்லையோ என்னவோ லதாவின் குழந்தைக்கு பகல் முழுவதும் லேசாக உடம்பு காய்ந்தது. பின்னேரமும் கொஞ்சம் சிணுங்கிக்கொண்டிருந்தாள். மயூரனுக்கும் காய்ச்சல் தொற்றிக்கொண்டுவிடும் என்ற பயத்தில்போலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணனும், அண்ணியும் மாலை முழுவதும் மாடியில் இருந்த தம்படுக்கையறையே கதியென்று கிடந்தார்கள். கீழிறங்கவேயில்லை.

அண்ணன் பார்ட் டைம் வேலைக்குப்போய்வந்து மீண்டும் கடுவன் பூனைமாதிரி மாடிக்கு ஏறிப்போனான்.

அண்ணி குசினிக்குள்ளிருந்து சாப்பாடு எடுத்துக்கொண்டு போய் அவனுக்குக் கொடுத்தாள். ஒரு சம்பிரதாயத்திற்குக்கூட அவர்கள் "என்ன..... குழந்தைக்கு எப்பிடியிருக்கு....?" என்று விசாரிக்கவில்லை. லதாவும் தன்னுள் உதிர்ந்து போயிருந்தாள். ராகுல் தன் குடும்பத்தைப் பற்றி விருந்தோம்பும் பாங்குபற்றி மிக மட்டமாக எடைபோடப்போகிறான் என்ற பயத்தில் மௌனம் காத்தாள். ராகுலுக்கும் அவர்கள் போக்கால் அங்கே மேற்கொண்டு தங்க அதைரியமாகவும், கூச்சமாகவும் இருந்தது.

இரவுமுழுவதும் குழந்தை அடிக்கடி சற்றே கண்ணயர்வதும் பின் எழும்பி அழுவதுமாயிருந்தது. இருவரும் மாறிமாறி தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு சிறிய கூடத்திலும் ஆளோடியிலும் உலாத்தினார்கள்.

குழந்தையின் அழுகையில் அண்ணன்காரனுக்கு வந்த உறக்கம் கலைந்து கலைந்து போனது. அடுத்த தடவை கலைந்தபோது எரிச்சலுடன் எழும்பி வெளியேவந்து மாடிப்படியில நின்று அதட்டினான்.

"ஏய்........ லதா உந்தப்பிள்ளையைக் கொஞ்சம் அழாமல்தான் பாரன்....... மனுஷர் விடியவேலைக்குப் போகவேணுமல்லே.......– "

"பிள்ளைக்குச்சாடையாய் மேல் காயுது அண்ணை...... அதுதான் அழுகிறாள்.... "

"சுகமில்லையெண்டால் நேரத்தோட டொக்டரிட்டை காட்டியிருந்திருக்கலாமில்லை! "

அற்பப்பயலே அவர்கள் உனது விருந்தினர்கள். நீயல்லவா டாக்டரிடம் கூட்டிப்போயிருக்க வேணும்.

"பராசெற்றோமோல் ஒன்று குடுத்திருக்கிறன்...... தணியுதோ பார்ப்பம்...."

"என்ன குடுத்தியோ....... இனியும் கத்தினால் மயூரனும் எழும்பி வாசிக்கத்தொடங்கிடுவான்........ பிறகெனக்கு வெளியில குதிக்கிறதைத்தவிர வேறை ஒண்டுஞ்செய்யேலா..........."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையே பெற்றுக்கொள்ளாதவன் மாதிரி அவன் பொழிந்துவிட்டு உள்ள போகவும் ராகுலன் லதாவின் காதில் மெல்ல ஆனால் உறுதியான குரலில் சொன்னான்:

"..... நாங்கள் உறவென்று நம்பி பிழையான இடத்துக்கு வந்திட்டம்........... இப்ப பிள்ளைக்குச் சட்டையைப் போட்டிட்டு...... நீரும் உடன வெளிக்கிடுறீர். இதுக்கு மேலயுமிங்கை ஒரு நிமிஷந்தன்னும் என்னால தங்கேலாது........ "

லதா ஒரு மறுப்பும் சொல்லவில்லை. அவனோடு ஓசைப் படாது வெளிக்கிட்டாள். குழந்தையின் சாமான்கள் எல்லாம் சரிதானா வென்று இன்னொருதரம் சரிபார்த்துவிட்டு சூட்கேஸ்களை எடுத்துக் கொண்டு மெதுவாய் வெளியேறிக் கதவைச்சாத்தினார்கள்.

காரில் போய் அமர்ந்த பின்புதான் இயல்பாக மூச்சேவிடவே முடிந்தது. நிம்மதி உண்டானது.

கார் சுவிற்சலாந்து–ஜெர்மனி எல்லை நகரமான பாசலை அண்மிக்கவும் மலைகளும், அதன் சாரலில் அமைந்திருந்த அழகழ கான வீடுகளும், பள்ளத்தாக்குகளும், தூரிகையால் இழுத்துவிட்டது போலிருந்த நதிகளும், பாலங்களும், சுரங்கப்பாதைகளும் மறைந்து விடை பெற்றன. சமதரையிலான விரைவுசாலையில் மணிக்கு 120 கி.மீ வேகங்கொள்ள அனுமதித்திருந்தார்கள்.

எதிர்த்திசையில் ஆபிரிக்க இறக்குமதியான வெள்ளாடுகளை நிறைத்துக்கொண்டு வேகமாக வந்த பாரவுந்தொன்று அவர்களது காரையும் சற்றே குலுக்கிவிட்டு சுவிஸ் நோக்கி அம்புருவிப்பறந்தது.

சற்றே பயந்துவிட்ட லதா சொன்னாள்:- "கண் மண் தெரியாதமல் அவன் பறக்கிற வேகத்தைப்பார்த்தியளே........?"

"எல்லாம் கொண்ணன் கோவிச்சுக்கொள்ளப்போறா ரெண்ட பயத்திலதான்........"

"என்ன அண்ணை கோவிக்கப்போறாரெண்டோ....... என்னப்பா சொல்லுறியள்.......? "

"அதெல்லாம் அவர் எங்களுக்காக ஓடர் பண்ணின ஆடுகளல்லே....... அதுதான் விருந்துக்கு லேட்டானால் கோவிச்சுக் கொள்ளப்போறாரேயெண்டு கிலியில பறக்கிறான்......."

சுவிஸ் நோக்கிக் கார் திரும்பியதிலிருந்தே சிரிப்பைத் தனியாகவே கழற்றி வைத்திருந்த லதா கண்களில் நீர் முட்டும்வரை கனிந்து குலுங்கிக்குலுங்கிச் சிரித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னவோ தெரியாதப்பா அண்ணை முந்தி முந்தியிப்படி யில்லை..... இப்ப சரியாய் மாறித்தான் விட்டார். அண்ணியோட சேர்ந்து எதுக்கெடுத்தாலும் , ஒரு இடத்தை போறம், ஒரு சாமான் வேண்டவேணும், ஒரு ஆக்கள் தந்தவை, ஒரு பகுதி வரும், ஒரு அலுவலிருக்கு....... என்று சஸ்பென்ஸ் வைத்துத்தான் கதைக்கிறார். "

"அது சஸ்பென்ஸ் மாத்திரமில்லை....... மற்றவர்களை நாங்கள் ஒரு டிஸ்டென்ஸிலதான் வைத்திருக்கிறம் என்கிறதின்ற படிமம் அது..! "

அண்ணாச்சி அவர்கள் வீடு தேடிவந்து "நாங்கள் வேலைப்பழுவில உங்களைச் சரியாய் உபசரிக்காம விட்டிட்டம்....... மன்னிச்சுக்கொள்ளுங்கோ." என்று வந்து சாஷ்டங்கமாய் காலிலெல் லாம் வீழ்ந்துவிடப்போவதில்லை. சிலவேளை ரெலிபோனில் ஏதாவது பெனாத்தலாம். வீட்டுக்கு வந்ததும் முதலில் ரெலிபோன் இணைப்பைப் பிடுங்கிவிட்டார்கள்.

குழந்தையை டாக்டரிடம் கொண்டுபோய்க் காட்டியதில் அன்று மாலையே காய்ச்சல் சுகமாகித் தவழ்ந்தோடித்திரிந்தது.

மறுநாள் மாலை தோட்டத்தில் சாய்வுகதிரையைப் போட்டுக்கொண்டு ராகுலன் ஹேர்மன் ஹெஸ்ஸவின் சித்தார்த் தாவை வாசித்துக் கொண்டிருக்கையில் அங்கே சிற்றுண்டியும் சேமியாப் பாயாசமும் கொண்டு வந்து லதாவைக் கேட்டான்

"ஊர்லாப்தான் இன்னும் ஒரு கிழமை இருக்கே பாரீஸுக்குப் போவமே ".?

எப்போ அவனை லதா மேற்கண்ணால் பார்த்த ஓர் பார்வையிருக்கே சொச்சொ!

நாங்கள் மெல்ல மாறுவோமே ராகுலன் அதை தனியே ரசிக்கட்டும்.

(ஜெர்மனி - பூவரசு 1997ல் முதல் பரிசுப் பெற்ற கதை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்தவன்

கைலைவாசனும் சிவகுமாரனும் பெர்லின் நகருக்கு ஒதுக்குப்புறமான அந்த அப்பார்ட்மெண்டுக்கு வந்து மூன்று மாதத்திற்கு மேலாகிவிட்டது. நியோ நாஸிகள், ரீபப்பிளிக்கானர்கள், மற்றும் இருட்டடி இளவல்களின் தொந்தரவுகள் இல்லாத ஒரு அமைதியான இடம்.

என்ன வேலைக்குப் போகிறதுக்குத்தான் தினமும் ஊ∴பாண் எடுக்க ஒரு கிலோ மீட்டர் நடக்கவேணும். திரும்ப ஒரு கிலோ மீட்டர் மொத்தம் இரண்டு கிலோமீட்டர் நடந்தேயாகவேணும். ஆனாலும் பரவாயில்லை.

டொக்டரும் சிவகுமாரனுக்குச் சொல்லிப்போட்டார் தினமும் குறைந்தது ஐந்து கிலோமீட்டர் என்றாலும் நடக்கவேணுமாம். அல்லாவிட்டால் இந்த இளந்தாரி வயதில தவில்கட்டிவிட்ட மாதிரி வண்டி உப்பிக்கொண்டு போறதுக்கு வேறொரு வைத்தியம் செய்யேலாதாம்.

அதே கட்டிடத் தொடரிலே நாஷனாலிட்டிக்கு அப்பிளிக் கேஷன் கொடுத்துவிட்டு ஜெர்மன் தேர்தலிலே வோட்டுப்பண்ணுகிற கனவுகளோடு இருக்கிற இரண்டு உறவுக்காரத் தமிழ்க்குடும்பங்கள் இருக்கினம்(சகலன்கள்). அவை தாங்கள் ஊரிலேயே சொம்பெடுக் கத்தக்க இடங்களிலதானாம் பழகுவினம். வெளியாட்களோட புழங்கிறதில்லையாம். வந்த புதிதில் ஊர்மாதிரி வெய்யில் எறித்த சம்மரில் ஒருநாள் சுல்தைஸ் பியர் கொம்பனிக்காரன் பெரிய மரபீப்பா பூட்டின குதிரைவண்டியிலே விளம்பரத்துக்காக இலவச பியர் திருவாளர் பொதுசனத்துக்கு வார்த்தபோது அந்த கியூவில அச்சகலன்களில் ஒருவரும் சிவகுமாரனோடு நின்றபோது தம் கொள்கை விளக்கமளித்தவர். ஆனால் "தம்பி நான் சொல்லிறன் என்று குறையாய் நினையாதையும்.......... தெரிஞ்சவை செறிஞ்சவை யெண்டு மாத்திரம் இந்த புளொக்கில வேறை யாரையும் எங்கட சனத்தைக் கொண்டு வந்து சேர்த்துப்போடாதையும்........... மிச்சம் நல்ல Hausverwaltung

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வீட்டுகளின் நிர்வாகம்)... நம்ம சனம் கூடிச்செண்டால் எல்லாத்தையும் நாறடிச்சுப்போடும் தெரியுந்தானே?"

ஊஃபாணுக்குப்போகிற பிரதான வீதியிலேயிருந்து கிழக்கே நோக்கிப் பிரிகிற கிளை வீதியிலே பேதை, பெதும்பை, கன்னிப் பருவங்களில் ஒரே பெண்பிள்ளைகளாய் நிறைச்சு வைச்சிருக்கிற வேறும் இரண்டு குடும்பங்களைத் தவிர அந்தச் சுற்றுவட்டத்திலேயோ பிராந்தியத்திலோ வேறும் தமிழ்ச் சனமிருப்பதற்கான எந்த அசுமாத்தமும் இல்லை.

மந்திரிக்கு இருபத்தையாயிரம் கட்டி கிளறிக்கல் சேர்விஸில கொழுவுப்பட்ட மாப்பிள்ளைகளே சீதனம் ஐந்து இலட்ஷம், பத்து இலட்ஷம் இனாம் என்று டிமாண்ட் பண்ணிக் கல்யாணங்கள் செய்த காலமெல்லாம் மலையேறி இப்போ முப்பத்தைஞ்சுக்கு மேலே இளந்தாரிகளே இல்லையில்லை முதிர்தாரிகளே போட்டி போட்டுக் கொண்டு சந்திரனுக்கு வந்த பெண்ணைச் சுந்தரன் தட்டிக்கொண்டு பறக்கிற இந்நவயுகத்தில இனி பெண்பிள்ளைகளை வைத்திருக்கிறவை யாரெண்டாலும் முன்வந்து இளந்தாரிகளோட பழகமாட்டினந்தானே?

எப்பிடித்தானென்றாலும் காணக் கதைக்க நாட்டுநடப்புகளை அறிய அயலில ஒரு தமிழ்ச்சனமில்லாதது ஒரு பொச்சம் அடங்காத மாதிரித்தான் இருந்தது அவர்களுக்கு.

சிவகுமாரன் நிமிஷம்கூடத் தவறாது வேலைக்கு ஆஜராகும் ஒரு விசுவாசமான தொழிலாளி.

வேலைக்குரிய நேரத்திற்கு அரைமணித்தியாலம் என்றாலும் முன்னதாகப் போய் குந்தியிருந்துகொண்டு கோப்பி குடித்துக்கொண்டிருப்பான்.

ஒருநாள் மதியம் சாப்பாடெல்லாம் முடித்து பீடா போட்டுக்கொண்டு வழமைபோல் வேலைக்கு இறங்கிப்புறப்பட்டவன் வழியில் மற்றுமொரு ஈழமறவன் எதிர்த்திசையிலிருந்து வந்து கொண்டிருப்பதைக் கண்டு சந்தோஷப்பட்டான். அவன் கால்கள் வளையக்கட்டைகள்போல் ஒன்றையொன்று நோக்கி உட்குழிவாய் வளைந்திருந்தன. கைகளை பக்கவாட்டில் காகங்கலைப்பது மாதிரி வீசிக்கொண்டு ஒரு விசுக்கல் நடையுடன் வந்துகொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சமீபித்து வந்தபோது சிநேகசுபாவம் குன்றித் தோன்றிய "உர்" ரென்ற கடுப்பு முகத்தைக்கண்டு ஒரு கணம் தயங்கினாலும் எதற்கும் தமிழனாய்ச்சே ஒரு அந்நியநாட்டில் இதுகூடச் செய்யக் கூடாதாவென்று சிவகுமாரன் ஒரு நீளமான சிரிப்பை அவனை நோக்கி உதிர்த்தான். மனிதன் ஒரு ஜடத்திற்குரிய எதிர்வினை–தெறிவினை கூடவின்றித் தொடர்ந்து "உர" என்று முகத்தை வைத்துக்கொண்டு போனான்.

மறுநாளும் சிவகுமார் வேலைக்குப்போகும் அதேவேளை அவன் வந்தான்.

நேற்றுத்தான் மனிதன் ஏதாவது யோசனையில் போய்க் கொண்டிருந்திருக்கலாம், சரியாக என்னைக் கவனிக்காமல்கூட இருந் திருக்கலாம் இப்ப என்னதான் வரப்போகுதென்று முதல்நாள் போல இன்னொரு புன்னகையை எடுத்து அவர்மேல் வீசினான்.

மனுசன் அவனைப்பார்த்து முழிசிக்கொண்டு போனான். அட இளைய தலைமுறையில் இப்படியொரு பிறப்பா? பதிலுக்கு ஒரு சிறு தலையசைப்பு, குறைந்தது ஒரு கடைக்கோடி முறுவல் இருக்கவேணுமே............... ஊஹூம்!

அடுத்த நாளும் அவன் வந்தான். மனிதன் படு வெக்கறை பிடிச்சவனாக இருப்பான்போல. வருவதுவரட்டும். அன்றும் அவன் வலிந்து புன்னகைத்தான். மூன்று தலையுள்ள ஒரு மனிதனைப்பார்க்க நேர்ந்தது மாதிரி விநோதமாய் அவனைப் பார்த்துக்கொண்டு போனான்.

சிவகுமாரனும் அன்று ஆற்றவில்லை. வேலையால் திரும்பியதும் சாமம் என்றும் பாராது தூக்கத்திலிருந்த கைலைவாசனை எழுப்பி நடந்ததனைத்தையும் சொல்லிவிட்டு

"சிலவேளை யாரும் பங்களாதேஷ்காரன், சூரினாம்காரனாக இருப்பானோ........... பாஷை தெரியாமல் என்னத்தைப்பேசுறதென்டு போயிருப்பானோ?" என்ற தன் குறைந்த பட்ச சந்தேகத்தையும் கிளப்பினான்.

"சினேகமான ஒரு புன்னகைக்கு ஏன் அயல் பாஷை?............... அது சரி எப்பிடியெப்பிடி ஆளின்ர சாயல் ..........ஒரு நல்ல கறுவல், பின்னுக்கிழுத்த தலை, போர்த்தேங்காய் மாதிரி நீண்ட முகம், ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜபார்ட் நடை அவன்தானே............... விளங்கிப்போச்சு நீ சொல்ற ஆளாரெண்டு."

"காலைப்பகிடி பண்ணாத............ அது இளமையில சரியான போஷாக்குக் கிடையாததாலகூட வளைஞ்சிருக்கலாம். ஆரெண்டு சொல்லன்."

"நானெங்க பகிடிபண்றன்................. ஒரு அடையாளத்திற்காகச் சொல்லுறன். தெரியும் தெரியும் ஆள் வந்து ......................... இயக்கத் துக்கு நிதிசேர்க்கிறவர். உங்க நாஷனாலிட்டி பார்ட்டி யிட்டை ஆள் கல்லிலை நாருரிக்கத்திரியுது . பேயாய் அலைஞ்சும் வாய்க்குதில்லையே என்ற எரிச்சல்லை போயிருந்திருப்பான்"

" அதுக்கு ஒரு மரியாதைக்காய் ஒருத்தன் சிரிச்சால் அல்ல தலையை அசைத்தால் பதிலுக்குத்தானும் தலையை அசைத்து விட்டுப்போகிற ஒரு குறைந்தபட்ச நாகரீகம் கூடத்தெரியாமல் இருப்பானோ ஒருத்தன் இந்த நாட்டில? "

"அவன் எங்களைத் தங்களின்ரை எதிர்முகாமென்று கருதியிருக்கலாம்."

" அதுக்காக..................இப்பிடியொருத்தி........."

"சாமத்தில எழுப்பிவைச்சு மனிசனை அரியவெண்டு வந்திருக்கிறாய் என்ன.............. ஏதும் ஊத்திக்கொண்டு வந்திட்டி யோ........... பேசாமல் மூடிக்கொண்டு பட்றா டேய்........... மனுசன் வேளைக்கெழும்பவேணும்! "

நாலாம் நாளும் சரியாக இவன் வேலைக்கு போகிற நேரம் பார்த்து அவன் வருகிறான். இன்றைக்கும் என்னதான் செய்கிறா னென்று பார்க்கவேணும் போலிருந்தது. எதிர்கொண்டு புன்னகைத் தான். கவனியாதவன் போல கீழே பார்த்துக்கொண்டு போனான்.

எது வந்தாலும் ஐந்தாம் நாளும் புன்னகைப்பதாகவே இருந்தான்.

இவனைத் தூரத்தே கண்டதும் அப்பிரகிருதி வெட்டிக் கொண்டு வீதியின் மறு பக்கத்துக்கு மாறின அழகை நீங்கள் பார்த் திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பின்னாலும் இரண்டு மூன்று வருஷங்கள் அவன் தான் அப்பிராந்தியத்தின் நிதிசேகரிப்பாளராக இருந்தான். வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சிவகுமாரனுக்கு பல தடவைகள் அவனை நேரெதிர் கொள்ள நேர்ந்தபோதெல்லாம் பழக்கதோஷத் தால் புன்னகைத்துப் பார்த்து தோல்வி யடைந்திருக்கிறான்.

சில காலமாக அவன் அந்தப்பகுதிக்கு வருவது நின்றுபோய் விட்டது. விசாரித்ததில் அவன் இயக்க வேலைகளுக்காக இலங் கைக்குப் போய்விட்டதாகச் சொன்னார்கள். இந்திய அரசு விளை யாடிய அரசியல் சதுரங்கத்தால் அமைய நேர்ந்த இடைக்கால அரசு தேர்தலின்போது அவன் பெயர் கட்சியின் தேசியப் பட்டியலில் இருப்பதாகவும்ம் அவன் மந்திரியாக வரலாமென்றுங்கூடப் பேசிக் கொண்டார்கள்.

பின் இடைக்கால அரசு என்ற ஒன்று ஏற்பட்டிருந்த போது பரதேசங்களில் இடம்பெயர்ந்திருந்த பலரும் செய்ததைப்போன்றே கோடைவிடுப்பில் ஒரு நாள் சிவகுமாரனும் ஊரைப்பார்த்துவிட்டு வரவென்று ஆவலுடன் புறப்பட்டான்.

பின்னிலவுக்காலம். காட்டுப்பனி குளிராகவிருக்க வவுனியா நோக்கிய மெயில்வண்டி பக்கவாட்டில் பயணிகளை ஆட்டியாட்டி இழுத்துச் சென்றுகொண்டிருந்தது. கொழும்பிலிருந்து சிவகுமாரனை யாழ்ப்பாணம் அழைத்துப்போக வந்தவன் மணிக்கூட்டைக் கவிழ்த்துப் பார்த்துவிட்டு கொட்டாவியுடன் "வவுனியா வருகுது" என்றான். சிவகுமாரன் ஆவலுடன் எட்டி வெளியே பார்த்தான். காடுகள் முற்றாக வெட்டிச்சாய்க்கப்பட்டு நிலவில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் வெட்டையாயிருந்தது. ரயில் நிலையத்தை அண்மிக்க அண்மிக்க அந்த இடம் வவுனியாபோலவே இருக்கவில்லை. தூரத்தில் பரவலாக தென்பட்ட கொட்டில்களில் மினுக்மினுக்கென்று வெளிச்சங்கள் தெரிந்தன.

" என்ன வெளிச்சமென்று தெரியுதோ..........?"

" இல்லை . "

"எல்லா இடத்தில எங்கட அம்மானவைதான் இருக்கினம்............ புலியள் ஊடுருவியிடலாமெண்டு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாவில் ரயிலைவிட்டிறங்கியதும் ஆமிக்காரர்களின் முதலாவது செக்போஸ்ட் அவர்கள் இரண்டு சூட்கேஸுளையும் திறந்து கொட்டிக்கிளறிவிட்டு அள்ளிக் கொள்ளச் சொன்னார்கள். அதிலொருவன்

"*போறின்ல இருந்து வாறபோல இருக்கு............ இரண்டு விஸ்க்கி பொட்டில் கொண்டாரப்படாதா?" என்றான்.

"கொண்டுவரப்படாதென்றார்களே. "

"கொண்டு வரலாம்............... கொண்டுபோகப்படாது............. நித்திரை முழிச்சு வேலைசெஞ்சற எங்களுக்குத்தரோணும்.............! "

பெரிய நகைச்சுவையை உதிர்த்துவிட்டவன் போல அந்தப் படையினன் மஞ்சள் பழுப்புப்பல்லு முழுவதையும் காட்டிச்சிரித்தான்.

"காஷ் எவ்வளவிருக்கு?"

சிவகுமாரனும் அதைக்காதில் போட்டுக்கொள்ளாமல் மற்றப்பையன் உதவியுடன் சாமான்களை அள்ளி சூட்கேஸில் அடைந்து கொண்டிருந்தான்.

"அதுக்கும் ஏதோ வில்லங்கந்தான் போலகிடக்கு" மனதில் லேசான பயம் பரவ கொஞ்சம் உயர்தரத்திலான அதிகாரி அவர்களைப் போகும்படி கைகாட்டினான்.

ஆயிரத்தெட்டு சோதனைகளும் முடிந்து தாரெல்லாம் அள்ளுப்பட்டுக் குன்றும் குழியுமாயிருந்த வீதிகளில் ஒடித்து ஒடித்து ஓடிக்கொண்டிருந்த சிற்றுந்தில் குடல்வாய்க்குள் வரும்படியாகக் குலுக்கிக்கொண்டு வரும்போது நாமென்ன சொந்த நாட்டுக்குத்தான் வருகிறோமா இல்லை ஏதோ அன்னிய நாட்டுக்குள் புகுந்து கொண்டிருக்கிறோமா என்றிருந்தது.

பத்து ஆண்டுகளில்தான் எவ்வளவு சிதிலங்கள், அழிவுகள், மாற்றங்கள். ஊரில் யாருக்கும் இவனைத் தெரிந்திருக்கவில்லை. சிறுவர்கள் அனைவரும் புதியவர்களாயிருந்தனர். பெரிவர்கள் பலரை இவனாகத் தெரிந்துகொண்டான். இவனுக்குத் தெரிந்த முதியவர்கள் எவரையும் காணவில்லை. விசாரித்ததில் பலரும் விடைபெற்றுக் கொண்டுவிட்டதாகக் கூறினர். இவ்வாழ்க்கைதான் எவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுகியது. இதற்குள்தான் மனிதன்தான் எத்தனை விஷயங்களுடன் மல்லுக்கட்டுகிறான். ஆணவம், ஆதிக்கமனோபாவம், ஆட்சி அதிகாரம், இனவாதம், ஜாதி-அபிமானம், காட்டிக்கொடுப்புகள், கழுத் தறுப்புக்கள், காலுக்குள்மிதித்தல்கள்.

இவன் வந்தது வீட்டில் எல்லோருக்கும் மகிழ்ச்சியே ஆயினும் எங்கே இந்தியன் ஆமியிடம் இசகுபிசகாக மாட்டி விடுவானோ என்று பயந்துகொண்டிருந்தனர். இரவில் அங்கங்கே கேட்கும் வெடிச்சத்தங்களாலும் , நேரகாலமின்றி உறுமித்திரியும் கவச வாகனங்கள், டிரக் வண்டிகளின் இரைச்சலாலும் சிவகுமாரன் மிரண்டான். பழக்கமில்லாத இவ்வதிர்வுகளால் தூக்கம் குழம்பி படுக்கையில் எழுந்திருக்கும் போதெல்லாம் தாயாரும் எழுந்து தேனீர் போட்டுத்தருவாள். மறுபடி தூக்கம் பிடிக்க வெகுநேரமாகும்.

பொழுது புலருமுன்னரே "தம்பி............. தம்பி" என்றுகொண்டு வளவுக்குள் இந்தியப்படையினர் எந்தவேலியாலாவது புகுந்துவிடுவார்கள். முற்றத்தில் நிற்பார்கள், கோடிக்குள் என்னகிடக்கென்று ஆராய்வார்கள். கோழி, விறகு, என்று கையில் அகப்படும் எதை யாவது சுருட்டிக்கொண்டு போவார்கள். மதியம் வந்தார்களாயின் பின் வளவில் முன்னர் ஆடுமாடுகள் கட்டுவதற்குப்போட்ட தொழுவத்துள் வெய்யில் வேளை இளைப்பாறுவார்கள். பின் ஏதோ தங்கள் வீட்டுச்சொத்து மாதிரி யாரையும் கேட்டுக்கொள்ளாது கிணத்தில் தண்ணீர் இறைத்துக்குளிப்பார்கள். குளித்தபின் கிணற்றடியிலுள்ள தென்னையில் ஏறி இளனீர், முட்டுக்காய், தேங்காயெல்லாம் பறித்துக்கொண்டு போவார்கள்.

"இவர்கள் இப்படியெல்லாம் செய்வதைப் பொறுத்துக் கொள்ளவேணும் என்றில்லை ........... விடுங்கோ நான் போய் ஆமியிலை பெரியவனிட்டை இப்படியான அத்துமீறல்கள் இங்கே நடக்குதென்டு கொம்பிளையின் பண்ணிப்போட்டுவாறன்."

"வேண்டாம் ராசா நீ விளங்காமல் கதைக்கிறாய்.... கொண்டுண்டுபோவாங்கள் வீடுவாசலுக்கை நுழையாத வரையிலும் என்னென்டாலென்ன செய்திட்டுப்போகட்டும்......... அப்பிடியொரு முறைப்பாடு குடுத்திட்டம் என்று அறிஞ்சால்தான் அவங்களின்ர தொந்தரவு இன்னும் அதிகமாய்ப்போயிடும்.............. நீ ஜெர்மனி திரும்பிற வரைக்கும் யாரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையும் எந்த வில்லங்கத்துக்கையும் போகாம லிருக்கிற வழியைப்பாரு மகன்''

என்றாலும் இந்த அராஜகத்தை அவனால் சகிக்கமுடியாம லிருந்தது. ஏற்கெனவே அடக்குமுறைக்கு எதிராகப் போராடிக்கொண் டிருக்கிறோமென்றால் சமாதானம் பண்ணவென்று வந்த இந்த அன்னிய அரசின் ராணுவம் பண்ணும் அத்துமீறல்கள் அவர்கள் எங்களைக் குறைந்த பட்ஷம் உணர்ச்சிகளும் சுரணையுமுள்ள மனிதர்களாகவாவது கருதுகிறார்களாவென எண்ண ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது.

தாய் சொன்னதைக் கேட்பது மாதிரியிருந்த சிவகுமாரன் யாரும் அறியாமல் இங்கே இந்தியச்சிப்பாய்கள் செய்கிற அத்துமீறல்கள் எல்லாவற்றையும் தான்கண்டபடியே ஆங்கிலத்தில் எழுதி அவர்களது அச்சுவேலி முகாமின் முன்னே வைத்திருந்த "முறைப்பாடுகள், ஆலோசனைகள" பெட்டிக்குள் போட்டுவிட்டான்.

அன்றிலிருந்து அவர்கள் வளவுக்குள் படையினன் ஒருவன் கூடவராதது கண்டு தனது முறைப்பாடு நல்லவேலை செய்யுது என்று உள்ளூர மகிழ்ந்துகொண்டிருந்தான். மூன்று நாட்கள் கழித்து வீட்டுவாசலில் ஒரு ராணுவ வண்டிவந்து நிற்க திபுதிபுவென பூட்ஸ்கால்கள் ஓடிவரும் சப்தம்.

வந்தவர்கள் கதவைப் படபடவென அறைந்தார்கள். அவன் அப்பா அம்மா சகோதரிகள் அனைவருமே பயத்தில் உறைந்து போயிருக்க சிவகுமாரன் வேறேதும் செய்யத்தோன்றாமல் கதவைத் திறந்தான்.

முதலில் நுழைந்த முரட்டுச்சிப்பாய் கேட்டான் "இங்கே சிவகுமாரன் என்கிறது யார்?''

"ஏன் நான்தான்.; ''

முதலில் ஓங்கிய அறை ஒன்று கன்னத்தில் பளாரென வீழ்ந்தது. அவன் தன்னைச் சுதாகரிப்பதற்குள் இரண்டாவது அறை மறுகன்னத்தில் விழுந்தது.

"உன்னை விசாரணைக்காக கைது செய்கிறோம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பைக்கூட மாற்றிக்கொள்ள அவகாசம் கொடாது அவன் சட்டையைப் பிடித்துத் தரதரவென இழுத்துப் போனார்கள்.

"ஐயோ என்ரை பிள்ளை அப்பாவி............ இப்ப இரண்டு கிழமையாத்தான் ஜேமனியால வந்து நிக்குது............... ஐயோ இந்த அநியாயத்தைக் கேட்க யாருமில்லையா?" என்றுகொண்டு பின்னால் குளறிக்கொண்டு ஓடிய தாயை எட்டி உதைத்து நிலத்தில் வீழ்த்தினான் ஒரு சிப்பாய். எல்லாவற்றையும் அதிர்ச்சியுடன் பார்த்துக்கொண்டிருந்த அப்பாவுக்கும் போகும்போது பிடரியில் அறைந்துவிட்டுப் போனான் இன்னொருவன்.

முகாமை அடைந்ததும் சிவகுமாரனை தரையில் வீசினார்கள்.

"நீ புலிக்கு வேலைபாக்கிற உளவாளிதானே? "

"இல்லை ஐயா............... நான் யாருக்கும் உளவாளியில்லை."

"இத்தனை நாளா எங்கடா இருந்தாய்?"

"நான் வெளிநாட்டிலையிருந்தன்.............. "

"எதுக்கடா போனே வெளிநாடு ? "

" இங்கை போர் தொடங்கிவிட்டதாலே மேலை படிக்கவோ பிழைக்கவோ ஏலாமலிருந்துது.............. அதுதான் போனன் ஜெர்மனிக்கு."

" ஜெர்மனியில புலிக்கு வேலை செய்திருக்கிறாய் என்ன?."

"இல்லை. "

"எல்லாத் தகவல்களும் எங்களிட்டை இருக்கு, ஏமாற்றிவிடலாமென்று மட்டும் எண்ணவேண்டாம்............... எந்த சிட்டியில இருந்தாய் அங்கே ? "

" பெர்லினிலை ஐயா."

"அங்கே புலியளுக்காக பிரசாரம் பண்ணியிருக்கிறாய் , காசு சேர்த்திருக்கிறாயென்ன............?"

" இல்லை ஐயா. "

"பொய்தானே முழுக்கச் சொல்லுறாய் பன்றிப் பயலே.............. "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே ஒருவன் அவன் மீது ஒருவாளி தண்ணீரைக் கொண்டுவந்து கொட்டினான்.

"வந்தால் வந்தமாதிரிப் போயிருக்கவேண்டியது தானே.................. கொம்பிளெயினா கொடுக்கிறாய் கொம்பிளெயின் ராஸ்கல்? "

கேள்வி முடியமுன் ஒருத்தன் முகத்தைப்பொத்தி அறைந்தான். உதடுகள் கிழிந்து வாய் உப்புக்கரித்தது. கண்ணுக்குள் ஒரே வெண்முகில் முகில்கூட்டம், பத்தாயிரம் அடி உயரத்தில் பறப்பது போலிருந்தது. இருக்கிறேனா இல்லை விழுந்து கிடக்கிறேனா என்று நிதானிக்கமுடியாமலிருக்கையில் பூட்ஸ்கால்களால் இருவர் மாறிமாறி மிதித்தனர்.

மயங்கிப்போய் எவ்வளவு நேரம் கிடந்தானோ தெரியாது.

மெல்ல மெல்ல விழிப்பு வந்தபோது பஞ்சாபி, உருது, இந்தி எல்லாப்பாஷைகளுமே காதில் சேர்ந்து விழ வேறேதோ உலகத்துள் புகுந்துவிட்ட மாதிரியிருந்தது அவனுக்கு. நெஞ்சுக்கூடு வெறுமையாகி விட்டது போலிருந்தது.

"தண்ணி தண்ணி" என்று அரற்றினான்.

தண்ணீர் யாரும் தரவேயில்லை. எழும்பியிருக்கப்பார்த்தான். இயலவில்லை. கைகளும் முழந்தாள்களும் பதறின. அப்படியே இறந்துவிட்டால் நல்லதுபோலிருந்தது.

மீண்டும் மயங்கிப்போனான்.

எத்தனை நேரம் கழிந்திருக்குமோ தெரியவில்லை. மீண்டும் பிரக்ஞை பகுதியாக வந்தபோது சேற்றுக்குள் கிடப்பதுபோலிருந்தது. உருண்டுருண்டாவது ஈரமில்லாத பகுதிக்குப்போக முயற்சித்தான். உடம்பு பூரா நொருங்கியிருப்பது போல் வலித்தது. பூட்ஸால் மிதித்த இடங்களும் நிலத்தில் தேய்த்த இடங்களும் எரிவாய் எரிந்தன. இயலாமல் அப்படியே முனகிக்கொண்டு படுத்திருந்தான்.

அடுத்த நாளாகியிருக்கவேணும், இரண்டு ஜவான்கள் அவனைக் கக்கத்தில் பிடித்து ஒரு முயல்குட்டியைப்போல அலக் காத் தூக்கிச்கொண்டுபோய் ஒரு தலையாட்டிமுன்னே நிறுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையாட்டி ஒரு சிற்றுந்திலிருந்து இறங்கிவந்தான். இறுக்கமாய் அவன் அணிந்திருந்த டிரவுசருள் புகுந்திருந்தன ஒரு சோடி வளைவான கால்கள்!

அதே முத்திரை நடை!

சிவகுமாரனுக்கு நொடியில் அவனைப் புரிந்துகொண்டது.

தேர்தலில் நிற்கப்போகிறானென்றார்களே............ அட............ இதுவா உனக்கு இங்கே கிடைத்த இராஜபதவி?

"ஜெர்மனி- பெர்லினின் இருந்தவனாம். எங்கே நல்லாப்பாத்து சொல்லு. இவன் புலி சப்போட்டர்தானே?"

தலையாட்டி சில விநாடிகள் அவனை உற்றுப்பார்த்தது.

பின் அதன் தலை நிதானமாக மேலும் கீழும் ஆடியது.

(ஈழமுரசு - நினைவுச்சிறப்பிதழ், 1998)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003-7.26
LIBRARY.

# அக்கரையில் ஒரு கிராமம்

ஜீவிதத்தில் ஒரு தடவையேனும் நான் போயேயிருக்காத என் அப்பாவின் கிராமத்திற்குப் போவதில் முதன்முதல் சந்திரத்தரையில் கால் பதிக்கப்புறப்பட்ட நீல் ஆம்ஸ்றோங் குழுவினருக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய பரபரப்பு , ஆர்வம், திறில் எல்லாமே எனக்கும் உண்டானது.

திருச்சி விமானநிலையத்திலிருந்து பஸ் ஸ்ராண்டிற்கு டாக்ஸி ஒன்றைப்பிடித்து வந்து இரண்டு மணிநேரம் காவல் இருந்து புதுக்கோட்டை போகும் பஸ்ஸைப் பிடித்தேன். பஸ் பயணமும் மேலும் ஒரு மணிநேரம் இருந்தது. பஸ் ஸ்ராண்ட்டில் மக்களுடன் மாடுகளும் கலந்து நின்றன . இனி வடகாட்டிற்குப் போகவேண்டும். கூட்டமாக நின்று டீ குடித்துக்கொண்டு நின்ற நடத்துனர்கள், ஓட்டுனர்கள் குழாத்தை அணுகி மெல்ல விசாரித்தேன்.

“ஏங்க..... வடகாட்டுக்கு போறதுக்கு எந்த பஸ்ஸைப் பிடிக்கணும்......? ”

“அந்தா மூணாவதா நிக்குதில்ல டவுண் பஸ்.......... அதுல போய் குந்து....” என்றபடி அந்த பஸ் நின்ற திசையில் டீ கிளாஸை நீட்டினான் ஒருவன்.

பஸ் தில்லைநாயகி என்று நெற்றியில் நாமம் சூடியிருந்தது. சீட்டுக்கள் எதுவும் காலியாய் இல்லை. எல்லாமே நிரம்பி விட்டிருந்தன. பஸ்ஸின் முன் பக்கமாக ஏறி இஞ்ஜினுக்குப் பக்கமாக இருந்த இடை வெளியில் சூட்கேஸை வைத்துவிட்டு ஒரு பக்கமாக நின்றுகொண்டேன்.

டீயைக் குடித்து முடித்து சாவகாசமாக வெற்றிலை போட்டு சிகரெட் எல்லாம் பிடித்த பின்னால் ஓட்டுனரும், நடத்துனரும் வந்து ஏறினார்கள். நம்மவூரில் பிக்குமார் செய்வதைப்போல வண்டியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வாசலால் ஏறிய ஆளுங்கட்சியின் ஏதோவொரு வட்டச்செயலர் ஒருவர் முன்சீட்டில் உட்கார்ந்திருந்தவரை சுட்டுவிரலை மடித்துக் காட்டி எழுப்பிவிட்டுதான் அமர்ந்து கொண்டார்.

ஒரு சிறு முணுமுணுப்புக்கூடயின்றி தனது உரிமையை விட்டுக் கொடுத்துவிட்டு எழுந்து அப்பாவியாக கம்பத்தைப் பிடித்துக்கொண்டு நின்றான் அவ்விளைஞன்.

"வடகாட்டுக்கு ஒரு டிக்கட்" என்றவுடன் நடத்துனர் என்னை ஏற இறங்கப்பார்த்தான்.

"ஏன் திருவரங்குளத்துக்கில்லையா.....? "

"வடகாடு என்கிறேனில்ல........ "

"......இல்ல திருவரங்குளத்திலதான் சிலோங்காரங்க காம்ப்..... இருக்கு...... "

பார்வையிலேயே சிலோன்காரன் என்கிறதைப் புரிந்துகொள் கிறார்கள்.

டிக்கெட்டை எழுதிமுடிக்கமுன்னே அவரிடமிருந்து இரண்டாவது கேள்வியும் ஜனித்தது.

" வடகாட்டில யாரைப்பார்க்க.......? "

இனியும் விட்டா "பொண்டாட்டி முழுகிட்டிருக்காங்களா..... முழுகாம லிருக்காங்களா....? " என்றுங்கேட்பான் போல இருந்தது. எரிச் சலாக இருந்தாலும் அவன் பதிலுக்காக முகத்தையே பார்த்துக்கொண்டு நிற்கிறான். சொன்னேன்.

"தாசில்தாரர் சுந்தரப்பெருமாள்........ "

"அவரை எப்படி..........? "

"அவரு நம்ம பெரியப்பா...... " "

"அப்படீங்களா....... அடடடா! " முன் சீட்டில் மாவட்டத் திற்குப் பக்கமாய் உட்கார்ந்திருந்த இளைஞனை "...ட்டேய்... எழுந்திர்ர் றா.... சாரை யாரென்னு நெனெச்சே......நம்ம பஸ்ஸு மொதலாளியோட மருமவப்பிள்ளடா... அவரு நின்னுக்கிட்டு வாறாரு.....நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்காந்துக்கினு வர்றே....எந்திர்றா..... சார்.......ஒங்க வண்டி சார் இது......... நீங்க ஒக்காந்துக்குங்க....... ”

இளித்தான் .

இவனுடைய அதட்டலுக்குப் பயந்த இளைஞனோ கிஞ்சித்தும் எதிர்ப்பின்றி ஏதோ தெய்வக்குற்றம் செய்தவனைப்போலப் பதறி எழுந்து பவ்யமாக எழுந்து ஒரு ஓரமாக நின்றான்.

“என்னாங்க தப்பு.... ஒங்க பஸ்ஸு.... நீங்க ஒக்காரம....நல்ல ஞாயந்தான் போங்க.... ”

பஸ்ஸில் இருந்த ஜனங்கள் முழுவதும் இந்த சீனை வேடிக்கை பார்க்க...... என்னைத் தோளில் பிடித்து அமர்த்தி இருத்திவிடுவான் போல இருந்தது, வேறு வழியின்றி அமர்ந்தேன்.

திருவரங்குளம் அடைந்ததும் ஒரு இளைஞர் கும்பல் யாழ்ப்பாணத்தமிழ் கதைச்சுக்கொண்டு நின்றது. மார்க்கெட் பக்கமும் இன்னொரு கும்பல். தெரிந்தவர்கள் எவராவது தென்படுகிறார்களா என்று பார்க்கிறேன். ஊகூம்..........

வடகாட்டை அடையவும் மாலை மூன்று மணியாகிவிட்டிருந்தது. கண்டக்டர் சூட்கேஸை எடுத்துக்கையில் தந்து மிக்க மரியாதையாக இறக்கிவிட்டார். அதொரு சிறிய சந்தி. ஒரு சிறிய கூரை வேய்ந்த தேனீர்க்கடையும் , பலசரக்குக்கடையும் மாத்திரம் டல்லடித்துக்கொண்டு இருந்தன. விருட்ஷமாய் நின்ற புளியமர நிழலில் சிலர் உண்டகளைப்போ பசியோ படுத்திருந்தார்கள்.

எந்தப்பக்கம் போவதென்று தெரியவில்லை. தேனீர்க்கடையில் இருந்தவர்களிடம் விசாரித்தேன். அதிலொருவர் கேட்டார்.

“ தாசில்தாரு உறவா.... ” எல்லா விபரமும் அறிந்த பின்னால் வீட்டைக் காட்டுவதென்பதுதான் அவ்வூர்ப்பழக்கம் போல. சொன்னேன்.

“ ஆமா..”

“.........யார் வேணும்.....?”

“........ அவங்க என் பெரியப்பா...... ”

“....அடாடாடா....... யாரு வூட்டையாருவந்து கேட்கிறீக........ (பக்கத்தில் நின்றவனிடம் என் சூட்கேஸைக்காட்டி) வாங்கடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொட்டியை ஐயாகிட்டை....... கல்வூட்டுக்கார ஐயா சீமையில இருந்து வாராக...... மசமசன்னு பார்த்துக்கிட்டு நிக்கிறியே எருமையாட்டம்...."

அவனோ பிடுங்காத குறையாக சூட்கேஸை என்னிடமிருந்து வாங்கிக்கொண்டான்.

" ஐயா ஒரு கடதாசி போட்டிருந்தீங்கன்னா....... பெரிய ஐயா வண்டி அனுப்பியிருந் திருப்பாருல்ல......."

யாரும் எதிர்பாராமல் போய் இறங்கும் என் திட்டத்தை இவர்கள் எப்படித்தான் புரிவார்கள்?

ஒரு பெரஹரா கூட்டம் போல் என்னை ஒரு கும்பல் புடை சூழ நான் முன்னே சென்று கொண்டிருந்தேன். அவர்கள் பாரதி அவாவிய தூண்களும் , கூடமும் , மாடமும் தோப்புமாய் அமைந்திருந்த ஒரு பழைய பங்களாவுக்குக் கூட்டிச்சென்றார்கள். அந்தப்பழைய வீட்டில் முன் விறாந்தையில் ஒரு ஈஸிசேரில் இருந்தபடி பெரியப்பா யாரோ இருவருடன் பேசிக்கொண்டிருந்தார்.

நாங்கள் கூட்டமாக உள் நுழையவும் உரையாடலை நிறுத்திவிட்டு எழுந்து வந்தார்.

கூட்டத்தில் ஒருவன் முந்திக்கொண்டு சொன்னான்.

" ஐயா... சீமையிலிருந்து வாறாக.......! "

பெரியப்பா மூக்குக்கண்ணாடியைப் போட்டுக் கொண்டு என்னைத் தீர்க்கமாகப் பார்க்கிறார்.

"…. சீமையிலிருந்தல்ல..... சிலோனிலிருந்து வர்றேன்....... வாகீசன்... "

பெரியப்பா உடனே கண்டுபிடித்து விட்டார்.

" ..... நீ..... சிவனு பிள்ளையில்ல..... "

" .... ஆமா... "

திடீரென்று இரண்டு தரம் விம்மினார் . பின் மேல் துண்டால் கண்களைத் துடைத்துக் கொண்டு கேட்டார்

" நொப்பன் போன தீபாவளிக்குக் கூட கடதாசி போட்டான் தான் வாரேன்னு...... கடைசியா நீங்கல்லாம் இருங்கன்னுட்டு யாரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிலும் படாம இப்படி கணக்கை முடிச்சுட்டுப் போயிட் டானா...... என்னா அவன் ஒடம்புக்கு....... என்னா சொன்னான்....? சாகறப்ப எங்களையெல்லாம் விசாரிச்சானா....? "

"ஒடம்புக்கு ஒண்ணு என்னு அவர் படுத்ததே கிடையாது பெரியப்பா...... ஒருநா மாலையிலை கொஞ்சம்போல நெஞ்சு வலிக்குதென்னார்..... பிறைவேட் டாக்டர்கிட்ட கூட்டிப்போய் காமிச்சு மருந்து எடுத்தோம். டாக்டரும் பயப்பிடும்படியா ஒண்ணுமேயில்ல......... ரொம்பவும் ஸ்றெயின் எடுத்திட்டா இந்த வயதில வர்றதுதான்....... பெட் றெஸ்ட் எடுத்திட்டா எல்லாம் சரியாயிடும் என்றார். வீட்டுக்கு வந்து இரவு பிரெட் ரோஸ்டும், கோழி சூப்பும் சாப்பிட்டிட்டு நல்லா பேசிச்சிரிச்சிட்டு படுத்தவர்தான்.......... காலைல எந்திருக்க வேயில்ல..!."

பெரியம்மா வந்து என்னை கட்டிப் பிடிச்சுக்கொண்டு சின்னதாய் ஒரு ஒப்பாரி வைத்தார்.

"நரசிம்மன் டீக்கடையிலயில்லா ஐயா வந்து வீட்டை விசாரிக்கிறாக..... இது என்னா கதை........ யாரு வீட்டை யாரு விசாரிக்கிறது........? " என்றபடி என்கன்னத்தில் பெரியம்மா செல்லமாய் இடித்தார்.

கல்வீட்டுக்கு யாரோ சீமையிலிருந்து வந்திருக்காக...... செய்தி ஊர் பூராகப் பரவவும் திமு திமு வென்று வீடு பூராவும் ஜனம் முற்றுகையிட்டது. உரிமையுடன் கூடத்திற்கே வந்துவிட்டவர்கள் உறவினர்களென்றும், தூரத்தே நின்றுகொண்டும், தூணைப்பிடித்துக் கொண்டும் நின்றுபார்த்தவர்கள் பண்ணையில் வேலை செய்பவர் களென்றும் தெரிந்துகொண்டேன்.

பெரியம்மாவைத் தவிர்ந்த ஏனையபெண்கள் அனைவருமே வயது வித்தியாசமின்றி கூடத்தைச் சுற்றியிருந்த நாலைந்து அறைகளின் கதவுகளின் பின்னாலிருந்தும் பார்த்தனர்.

"அவோகளை கூட்டி வரேல்லியா..........? " அசரீரி ஒரு அறையிலிருந்து வந்தது.

" என்ன கேட்கிறாங்க......? " பெரியம்மாவைக் கேட்டேன், அவர் மொழிபெயர்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"....உம்பொண்டாட்டியை கூட்டி வரல்லியான்னு கேட்கிறாள. "

"கேட்கிற நீங்க யாருன்னுதான்....... எனக்குத் தெரியலையே........... இப்பிடி கொஞ்சம் முன்னாலதான் வாங்களேன்...... "

ஆண்கள் சமூகத்துக்கு முன்னால் இலேசில் யாரும் வந்துவிட மாட்டார்கள். உள்ளே தொடர்ந்து மௌனம்.

" உங்களை யாருன்னு பார்க்காம நான் பதில் சொல்லப் போறதில்ல.............! "

பெரியம்மா சொன்னா.

" பார்த்தா அவ உனக்கொரு அத்தைமுறை ஆகணும்......... யேய் ....... வசந்தி வாடி......... சித்த மின்னவாடி...... அவன் கேட்கிறா னில்ல......... "

ஏராளம் வெட்கம் சுமந்து கன்னங்கள் சிவக்கச்சிவக்க சின்னச்சின்ன அடிகள் வைத்து குளுகுளுவென்று என்னை விட இளமையாக ஒரு அத்தை வந்து பத்தடி தூரத்தில் அடுக்கியிருந்த நெல்லுச்சாக்குகளில் ஒன்றின் மூலையைப் பிய்த்துக்கொண்டும், முகத்தை நாற்பத்தைந்து பாகைகள் மேற்காகத் திருப்பி வேலியில் ஓணான் ஏதாவது ஓடுகிறதா என்று ஆய்வது போல் பார்த்துக் கொண்டும் நின்றாள். அவளை மேலும் சங்கடசிரமப் படுத்தாமல் சொன்னேன்:

"அவங்க எஸ்டேட் கொம்பனி ஒண்ணில வேர்க் பண்ணுறாங்க......... லீவ் எடுப்பது கஸ்டம்....... ஆகட்டும் அடுத்தவாட்டி பார்க்கலாம்........ " இதைக்கேட்டதும் உள்ளே ஓடி மறைந்தாள்.

பெரியப்பா சத்தமாகக் கேட்டார்

"....ஏன்டா பொம்மனாட்டிங்களக்கூட உத்தியோகத்துக்கு அனுப்புவாங்களா அங்க.......!"

நாங்கள் கூடத்தில் பேசிக்கொண்டிருக்க உள்ளே முப்பது நாற்பது பேருக்கான பெருஞ்சமையல் நடைபெற்றுக்கொண்டிருந்தது. வெளியே அடுப்புமூட்டி இரண்டு பெரிய தாமிரக்கொப்பரைகளில் வெந்நீர் தயாரானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஐயா அந்த மரக்குத்தியில குந்துங்க....... நான் மொண்டு ஊத்தறேன்” என்றுகொண்டு கீரைக்கொட்டை நிறத்தில் ஒருவன் வந்தான்.

“அதெல்லாம் வேண்டாம் நானே ஊத்திக்கிறேன்......”

“ ...ஐயையோ....... பெரிய ஐயா வைவாரு......நீங்க ஒக்காந்துக குங்க......”

பெரிய பாத்திரமொன்றால் மொண்டுமொண்டு ஊத்தினான். நாலுபேர் குளிக்கப்போதுமான அளவு வெந்நீர்.

குளித்து முடியவும் நான் சாரத்தை உடுத்துக்கொண்டு வந்தேன். பெரியப்பா அலறினார்......

“ ஐயைய்யைய்ய........... இதென்ன லுங்கி கட்டிண்டு........ வேஷ்டி இல்லையா...? அவனுக்கு ஒரு வேஷ்டி கொடுங்கடி...” உத்தர விட்டார். அவர்களுக்கு சாரம் கௌரவமான உடையல்ல போலும்!

நாங்கள் சாப்பிடத்தயாராகவும் வெளியே போயிருந்த பெரியப்பா மகன் ஒருத்தன் மோட்டார்ச்சைக்கிளில் வந்து இறங்கினான். அவன் பெயர்கூட ஞாபகத்திற்கு வரமறுக்கிறது. பெரியப்பா

“ஒன்ட அண்ணாடா ” என்று அறிமுகப்படுத்தவும் மரியாதை யாய் நமஸ்கரித்தான்.

சாப்பாட்டு மேசையில் பெரியப்பா முன்பாக அமர்ந்தபோதுதான் அவருக்காக நான் வாங்கிவந்த Johnny Walker ரின் ஞாபகம் வந்தது. சூட்கேஸில் இருந்ததை எடுத்து வந்து கொடுத்தேன். வாங்கிக் கொண்டவர் “ இதை உள்ள வை” என்று பெரியம்மாவிடம் நீட்டினார்.

“ எதுக்குப் பெரியப்பா உள்ளாற வைக்கிறீங்க...... சாப்பிட முதல் ஒரு சிப் எடுக்கலாமே...... நல்லா பசியைக்கிளப்பும்........ வேணுன்னா உங்களுக்கு நான் கொம்பனி தர்றேன்........ ”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் நான் ஏதோ தகாதவார்த்தை பேசிவிட்டமாதிரி மூச்சை நிறுத்திவிட்டு என்னை ஆச்சரியத்துடன் நோக்கினர். ஓஹோ...... என் வண்டவாளத்தை இங்கே இறக்கியிருக்கப்படாதோ?

"....நீ...... சும்மா தமாஷ்தானே பண்ணிறாய்......... குடிக்கமாட்டாயில்ல......." பெரியப்பா நம்பிக்கையுடன் பார்த்தார். இதோ தப்பிக்க வழி ! சாதுர்யமாய் பயன் படுத்தினேன்.

"....ஆமா பெரியப்பா தமாஷ்தான்பண்ணினேன்..... "

அதைக்கேட்ட பின்னரே எல்லோருக்கும் திரும்ப மூச்சு வந்தது.

பதினைந்து இருபது கறிகள் சமைத்திருந்தார்கள். சாதத்தைப் போட்டுக்கொண்டு முதலில் பொரியல்......பின் கூட்டு.... அதற்குமேலே குழம்பு என்று தனித்தனியே பரிமாறினார்கள். சாப்பிட்டு முடியுந்தறுவாயில் எல்லாமே போதும்......

" சொதியை விடுங்கள்...... " என்றேன்.

" ...அதென்ன கொதி......? "

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். சமையற்காரனை பெரியப்பா கேட்டார்

" ...ஒனக்குந்தெரியாதா...... கொதின்னா என்னன்னு......? "

வெளிப்பிதுங்கிய அவன் பரிதாப முழிகளைப் பார்த்து நானே விளக்கினேன்.

"...ஆகட்டும்..... நாளைக்கு நிச்சயமா பண்ணித்தர்றேன்...................... இன்னிக்கு ரசம் ஊத்திக்கடா ராஜா.." என்று எனக்கு பெரியம்மா ரசம் ஊத்தினார்.

இரவு பத்து மணியாகியும் வீட்டில் கூட்டம் மசமச என்று ஓய்ந்த பாடாயில்லை. அது என் விஜயத்தினால் மாத்திரம் அல்ல தினமும் அப்படித்தான் என்பது பின்னாலேயே தெரிந்தது. என்னதான் குக்கிராமமாய் இருந்தாலும் மின்சாரவசதி இருந்தது பெரிய சௌகரியமாயிருந்தது.

காலை விடிந்து பார்த்தபோதுதான் நேற்று தெரிந்ததை விட அந்த வீடு பெரிய பெரிய அறைகளுடன் இரண்டு மடங்கு பிரமாண்டமானதாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. தாத்தா காலத்தது. சட்டப்படி பார்த்தால் எனக்கும் அதில் ஒரு பங்குண்டு.

சத்யஜித் ரே யின் படமொன்றில்(அந்நியன்?) பல காலம் தேசாந்திரியாய் திரிந்து விட்டு ஊர் திரும்பும் ஒரு பெரியப்பா " எங்கே அவர்கள் தனியாகவே ஆண்டு அனுபவித்துக் கொண்டிருக்கும் சொத்துக்களில் பங்கு கேட்டு விடுவாரோ " என்று எண்ணிஎண்ணி அக்குடும்பம் பூரா அவர் கிளம்பும் வரையில் அவரைக்கண்டு பயப்படும். அது நினைவுக்கு வரவும் எனக்கு சிரிப்பு வந்தது.

பெரியப்பா வீட்டில் எனக்கு எல்லா உறவுமுறைகளிலும் பெண்கள் இருந்தார்கள. மேலும் அயலில் இருந்தும் நிறைய உறவினர் ஆண் களும் பெண்களும் குழந்தைகளுமாய் வந்து என்னைப் பார்த்துவிட்டு
"கண்டிப்பா நீங்க ஊருக்குத்திரும்ப மொதல் எங்க வூட்டுக்கு வந்து சாப்பிட்டுட்டுதான் போகணும்.... " என்று அழைப்பும் விடுத்தார்கள்.

எந்தப் பெண்ணாயினும் ஆண்கள் எதிரில் நின்று பேசவே பயப்பட்டார்கள். பெண்ணியம், பெண்விடுதலைக்கருத்துக்கள் அந்த ஊருக்கு வரவே பயப்படும். வீட்டுப்பெண்கள் கழுவுதல், துடைத்தல், பெருக்குதல், சமைத்துப்போடுதல், வெற்றிலை மடித்துக்கொடுத்தல் என்பவற்றுடன் நின்றுகொண்டார்கள்.

அக்கிராமத்தில் இன்னும் கொஞ்சம் வசதியாக நிலபுலன்கள் இருந்தவர்கள் வீடுகளிலும் பெண்கள் ஆண்களுக்குச்சமதையாக வயல்களிலும் தோட்டங்களிலும் உழைத்தார்கள். ஆடுமாடுகளைப் பராமரித்தார்கள்.

ஏழைவீட்டுப்பெண்கள் மற்றவர்கள் வீடுகளிலும் வயல்களிலும் தோப்புக்களிலும் பாடுபட்டார்கள்.

பெரியப்பா பையன் தன் மோட்டார்சைக்கிளில் என்னை ஆலங்குடி , பேராவூரணி, அறந்தாங்கி என்ற ஊர்களெல்லாம் சுற்றிக்காண்பித்தான்.

போகும் வழியெங்கிலும் வீதியின் இருமருங்குகளிலும் தொடர்ச்சியாக இருபது முப்பது மைல் நீளத்திற்கு புளியமரங்கள் விருட்ஷங்கொண்டிருந்தன. தவிரவும் சில ஊர்களில் முன்னரே நன்கு திட்டமிட்டு நாட்டியிருந்த இயூகலிப்ரஸ் வகை மரங்களை வானுயர ஓங்கி வளர்ந்திருந்தன! பரவலாக எங்கும் குழாய்க்கிணறுகளும் ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்புசெட்டுகளும் அமைக்கப்பட்டு நல்லமுறையில் விவசாயம் செய்துகொண்டிருந்தார்கள்.

கிராமங்களில் அதிகாலைப்பொழுதுகள் உண்மையில் அனுபவித் தற்குரியவைதான். இரவு பெய்தபனியில் நனைந்திருந்த புற்கள் நடக்கும்போது கால்களை நனைத்தன. மேகத்துள் இருந்து வெளிப் படுபவர்கள் போல எங்கோ மைல் தொலைவிலிருந்து பெண்கள் குடங் குடமாக தண்ணீர் மொண்டுகொண்டு பனிப்புகாரூடாக வந்து கொண்டிருந்தார்கள். இத்தனைக்கும் பெரியப்பாவின் வீட்டுக்கு முன்பாக அவருக்கே சொந்தமான தோட்டத்தில் குழாய்கிணறும் பம்புசெட்டும் இருந்தது.

இருந்தும் இவர்களை ஏன் இவ்வளவு தூரம் நடக்கவைக்க வேணும்?

காலை நல்ல வீட்டுத்தயாரிப்பு நெய்யில் முறுகச்சுட்டுத் தந்த தோசைகளை உள்வாங்கிவிட்டு ஒரு ஈஸிசேரிலிருந்து யோசித்துக்கொண்டு இருந்தேன். எதிலிருந்த வெற்றிலைத் தட்டத்தைப் பார்த்ததும் காதல் பிறந்தது. எழுந்து என் பக்கமாக இழுத்தேன்.

"..... இருங்க புது வெத்தலை கொண்டாரேன்..........! "

உள்ளிருந்து ஒரு அசரீரி வந்தது. பார்த்தால் என்னே ஆச்சர்யம்! வசந்தி ஐந்தாறு புதிய வெத்திலைகளைக் கழுவி எடுத்துக்கொண்டு வந்தாள்.

" ........ஆங்........ வாங்க அத்தேய்........ " என்றேன்.

அழகாக வெட்கப் பட்டாள். வெத்திலையைத் தட்டத்தில் வைத்துவிட்டுத் திரும்பியவள் ஏதோ நினைத்துக்கொண்டவள்போல் நின்று கேட்டாள்:

.......ய்யேன் அவாகளை....... கூட்டியாரலை.........? "

" ...அதுதான் நேத்தே சொன்னேனே..................... அவங்களுக்கு அங்கே வேலை இருக்கென்னு...... "

".......சிலோன்பாஷையில சொன்னா நமக்குப்புரியுமா......? அண்ணனுக் கென்னாப்புரியும்............ " (பெரியப்பாவைத்தான் சொல்றாள்)

"...சிலோன்பாஷையில சொன்னனா..........? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...அஃதான்.....இங்கிலீஸு மாதிரி.....நிறுத்தாம பேசிட்டு இருந் தீங்களே......"

"....... அப்ப இரண்டு நாளா நான் கதைச்சதெல்லாம்......ஸாரி பேசிட்டிருந்ததெல்லாம்........ புரியல்லயா...?"

"....சுத்தமா ஒண்ணும் புரியல..... பாப்பா மழலை மாதிரியிருந் திச்சா... ஏதோ பேசிட்டிருக்கிறீங்களேயென்னு கேட்டிட்டிருந்தோம்......

நானு ஒயாவில ரயில் பிடிச்சதிலிருந்து..... வடகாடு வந்து இறங்கிய காண்டம் வரை பகுதிபகுதியாய் பண்ணிய உபந்நியாசங்கள் எல்லாம் வீண்.

இப்போ எனக்கு வெட்கமாயிருந்தது! வார்த்தைகளை இனி தேர்ந்தே பேசுவது என்று தீர்மானித்துக்கொண்டேன்.

"....ஏன் பெரியப்பா..... வீட்டுக்கு முன்னால குழாய்க்கிணறு இருக்கு. சின்னதாய் ஒரு மோட்டரைப் பூட்டி , சின்னதா ஒரு ஓவர்கெட் டாங்கும் கட்டிட்டம்னா....... தண்ணிப்பிரச்ன தீர்ந்திடும்ல...... பாவம் இந்தப்பெண்ணுங்க எம்மாந்தூரம் சுமந்திண்டு வருதுங்க....."

அவருக்கு அது ஒரு பொருட்டாகவே படவில்லை.

"...நீயொண்ணு.....அவாளுக்கும்....தின்னது செரிக்கணும்ல......"

"....பெண்ணுங்க பாவம் பெரியப்பா....ஒரு கொத்தனாருக்கு சொல்லி அனுப்புங்க....."

ஒரு வாரத்திலே டாங் கட்டி முடிந்தது. திருச்சிக்கு ஆளனுப்பி மோட்டர்பம்ப் செற், pvc குழாய் என்பன எடுப்பித்து நானே அவற்றை பொருத்திக் கொடுத்தேன்.

வீட்டு முற்றத்திலே குழாயைத் திறக்கவும் சும்மா பழிங்கன்ன நீர் அருவியாய் கொட்டியது! பெண்களுக்குச் சந்தோஷம் தாங்கமுடிய வில்லை. அவர்களுக்கெல்லாம் நான் ஒரு தேவகுமாரனைப்போல் தென்பட்டேன். பாயாசம், லட்டு, சீடை, முறுக்கு, கொழுக்கட்டை என்றெல்லாம் பண்ணித்தந்து தங்கள் மகிழ்ச்சியைக் காட்டினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் கொம்பனி மாமாவும் குடும்பத்தோடு வந்து என்னைப் பார்த்தார்.

"அடடடா........ இப்படி ஒரு பம்பு பூட்டிக்கலாமென்று இதுவரையில நம்ப மண்டையில தோணாமப்போச்சே.........! " அங்கலாய்த்தார். அவரோடு ஒட்டிக்கொண்டு கொத்தவரங்காய் ஒடிசலாய் வடிவேலு போலிருந்த ஒருவர் சொன்னார்.

"........நமக்கு மின்னயே தெரியும் பம்பு பூட்டிக்கிட்டா தண்ணி வருமென்னு........ பெரியவாளுக்கு நாம புத்திஸொல்ற மாதிரி இருக்கப்படாதேயென்னு இருந்துப்புட்டேன்........ஹி...ஹி...ஹி..... தம்பிக்கு என்னையை நெனவிருக்கில்லா.......? "

" இல்லையே...... நினைவில்லை.... "

குற்றஞ்சுமத்தும் தொனியில் நிலத்தைப்பார்த்து வெட்கப்பட்டுக் கொண்டு கேட்டார்:

" அதுக்குள்ளாக மறந்துபுட்டீக இல்லை.........? "

" இல்லையே..........இப்போதான் மொதல் தடவையே வந்திருக்கேன்....... உங்களைப் பார்க்கிறேன்.......... "

" ....நல்லாய்த்தான்...தமாஷுபண்ணுறீங்க......... ஒங்கள எத்தனவாட்டி உப்புச் சுமந்திருப்பேன்...? "

பெங்களூரில் மருத்துவம் படித்துவிட்டு தனியார் ஆஸ்பத்தரி யொன்றில் பிராக்டிஸ் பண்ணிக்கொண்டிருந்த என் இன்னொரு சித்தப்பா மகள் மலர்மகள் நான் வந்திருக்கிறேன் என்று அறிந்து ஒரு கிழமை விடுப்பு எடுத்துக்கொண்டு வந்திருந்தாள்.

தொழில் தவிர அவளுக்கு கதை, கவிதை, ஓவியம், ஜென்பௌத்தம், அத்வைதம், உபநிஷதம், ஸ்மிருதிகள், தத்துவம் என்று உலகத்து விடயங்கள் எல்லாவற்றிலும் ஆர்வமிருந்தது.

மணிக்கணக்கில் உட்காரந்து பேசுவோம். விவாதிப்போம். கொஞ்ச நாட்கள் கிராமத்தில் பொழுது போக்க நல்லதுணையாக இருந்தாள். பகல் வேளைகளில் இருவரும் சேர்ந்தே ஊர் முழுவதும் சுற்றினோம். ஓவியங்கள் – சிற்பங்களுக்குப் பெயர்பெற்ற சிற்றன்னவாசல், சமணர்குகை எல்லாம் போய்ப்பார்த்தோம் ஆண்கள் சமூகத்தில் பெண்களையே அழைத்து பேசாத, அவர்களைப் பொருட்டாக மதித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அபிப்பிராயங்களையே காது கொடுத்துக் கேளாத அக்கிராமத் தின் பெண்களுக்கு நான் மலர்மகளுடன் உட்கார்ந்து மணிக்கணக்கில் பேசிக்கொண்டிருப்பது பேராச்சர்யமாயிருந்தது!

சும்மா சும்மா கதவிடுக்குகளிலிருந்தும், நடைக்கு அப்பாலிருந்தும் என்னை வேடிக்கை பார்த்த பெண்களிடமும் அப்பப்போ வேண்டுமென்றே ஏதாவது பேச்சுக்கொடுப்பேன். நாட்கள் கழிய மெல்ல மெல்ல தம் படுதாகைகளை நீக்கிக்கொண்டு என்னை நோக்கி வந்தனர்.

அப்படி வந்தவர்களை இன்னும் நெருக்கிவைத்த நிகழ்ச்சி ஒரு காலை நடந்தது.

நானும் மலர்மகளும் அரட்டை அடித்தபடியே இட்லி சாப்பிட்டுவிட்டு அவள் வெற்றிலைபோடுவதால் உடல், பல் நலத்திற்கு விளையும் தீங்குகள் பற்றி அடித்த விரிவுரையைக்கேட்டுக்கொண்டே நான் வெற்றிலைத் தட்டத்தில் நல்ல சீவல்களைத் தேடிக் கொண்டிருக்க வெளிமுன்றலில் இரண்டு துணிவியாபாரிகள் தலையில் துணிப் பொட்டளிகளுடன் தோன்றினர்.

"ஐயா........ நல்ல சின்னாளம் , காஞ்சீபுரப்பட்டு எல்லாமிருக்கு எடுக்கிறீகளா............?

" ஐயா புடவையெல்லாம் உடுத்திறதில்லை..... அதெல்லாம் பொன்னுங்க சமாச்சாரம்........ கூப்பிடு மலர் பெரியம்மாவை..."

புடவையென்றதும்......... இராணித்தேனீயும் கூட்டின் மற்றக் கும்பலும் போல வீட்டிலிருந்த முழுப்பெண்களும் பெரியம்மாவைத் தொடர்ந்து வேடிக்கை பார்க்க வந்தனர்.

என்னதான் நினைத்துக்கொண்டாவோ சொன்னா: " ஆம்புளைக அசலூரு போயிருக்காக....... போயிட்டு இன்னொருவாட்டி வாங்க பார்க்கலாம்.......! "

வியாபாரிகள் முகம் இருண்டு இறுகியதைக் கண்டு கொள்ளாமலே கேட்டா:

" காப்பியோ மோரோ குடிக்கிறீயளா......? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் பெரியம்மா....என்னையைப்பார்த்தா ஆம்பிளை மாதிரித்தெரி யல்லையா.....?" என்றேன்.

"அதுக்கில்ல..... புடவை துணியெல்லாம் பெரியப்பாவை கலந்துக்காம எடுத்தா கோச்சுக்குவார்.... "

" சரி..... இன்னிக்கு நானிருக்கேன்.... பெரியப்பா கோச்சுக்க மாட்டாராம்........ இறக்குங்கப்பா மூடைங்கள....." என்றேன்.

பெரியம்மா இடைமறித்தார்: "...... கொஞ்சம் பொறு ராஜா.... பணமெல்லாம் பெரியப்பா கைலதானிருக்கு........ஒண்ணும் அவசரப்படா தப்பா...... "

"அதுக்கெல்லாம் நானிருக்கேன்றனில்ல...........நீங்க ஒண்ணும் பேசக்கூடாது.....இப்போ செலக்ட் பண்றது மட்டுந்தான் ஒங்க வேலை..... "

அவ மறுக்கமறுக்க முன்கட்டுத் திண்ணையில் நொடியில் கடைவிரிக்கப்பட்டது.

" .......நல்லதாய் பட்டு என்ன இருக்கு காட்டுங்க..... " என்றாள் மலர்மகள்.

எல்லாச்சேலைகளுமே நல்ல இறுக்கமாய் இழைகள் ஓடப்பட்டிருக்க ஜரிகைகளிலும் ஒரு தரமிருக்கவே செய்தது. ஒரு பேட்டியில் பட்டு நெசவாளியொருவர் எப்படி உண்மையான காஞ்சீபுரம் சேலையை இனங்காணுவது என்று விளக்கியிருந்தது ஞாபகம் வந்தது.

" ..காஞ்சீபுரம் பட்ல விஷேஷம் என்னன்னா...... சேலையோடு சேர்த்தே நாங்க முகதலையையும் நெசவு பண்றதில்ல....... முகதலையை தனியே நெசவு பண்ணிட்டு பினனாலதான் உடலோட சேர்த்து இழைப்போம்.. "

வியாபாரிகள் எடுத்து அவள் பக்கமாய் காஞ்சீபுரம் என்று நீட்டியவைகளை ஆராய்ந்து பார்த்தேன். முகதலைப்பகுதி தனியாக இழைக்கப்பட்டே இருந்தது.

" பெரியம்மா ஒங்களுக்கு பிடித்த பட்டுச்சேலை ஒண்ணு எடுத்துக்குங்க......... "

ஏராளம் தயக்கத்தின் பின் ஒரு சேலை எடுத்தார்.

" மலர்மகள் நீயுமொண்ணு எடுத்துக்கோ... No fussing please "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகான காஞ்சீபுரமொன்றைத் தேர்ந்தெடுத்தாள்.

" சரி இன்னொரு பட்டு இதேமாதிரி செலக்ட் பண்றியாடா.... "

" யாரு..... அண்ணிக்குத்தானே.....? போட்டோவில பாத்தது....... என்னைவிட சிவப்பாயிருப்பாங்கல்லே? "

" அண்ணிக்கில்ல... இவ சாந்திக்கு "

எல்லாருமே " .............. ங்ங்ங்...... " என்று ஏககாலத்தில் வாயைப்பிளந்தனர். நான் விளக்கினேன்.

"மத்தப்பெண்டுகள் எல்லாமே சும்மா எட்டவெட்ட நின்று என்னை வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்க அவதான் நேரடியாய் எங்கிட்ட " வீட்டுக்காரியை ஏங்கூட்டி வரல்லேன்னு........? " துணிச்சலாய் கேட்டவ. இந்த வடகாட்டில பெண்ணியம் நோக்கி முதல் அடியை எடுத்து வைத்த அந்த புரட்சிப்பெண்ணின் துணிச்சலைப் பாராட்டி...... என் எளிய பரிசு........! சரி அவவே தனக்குப்பிடிச்சத எடுத்துக்கட்டும்......... எங்க கூப்டு அவளை! "

அதிர்ச்சியிலிருந்து விடுபடாதவள் " வாடி மின்னே.....! " என்று பெரியம்மா அதட்டவும் புதுமணப்பெண் மாதிரி சின்னச் சின்ன அடிகளாக எடுத்து வைத்து வந்து பெரியம்மாவின் முகத்தையே பார்த்துத் தயங்கிக்கொண்டு நின்றாள்.

"உனக்கு எது பிடிச்சிருக்கோ அதை எடுத்துக்க. " என்றேன். சேலை அடுக்குக்குள் ஏதோ கொடுக்கன் இருப்பதைப்போல கையை வைக்கப் பயந்து கொண்டு நின்றாள். மலர்மகள் அவளுக்கு மாட்சான சில சேலைகளை எடுத்துக்காட்டவும் அதிலொன்றைச் சடுதியில் ஈஸிக்கொண்டு உள்ளே மறைந்தாள்.

" இதுக்கு அடுத்த ரகத்தில வேற என்னப்பா இருக்கு...? "

"ஏராளம்....இருக்குசார்.....கோடம்பாக்கம்...... கண்டாங்கி..... கோயம் புத்தூர்........ " என்று அடுக்கிக் கொண்டே எடுத்துப்போட்டான்.

" சரி.....இன்னும் எத்தனை பொண்ணுங்க பாக்கியிருக்கு? "

மலர்மகள் தலைகள எண்ணிவிட்டு சொன்னாள் " ஒம்பது......! "

" சரி.....நீங்க எல்லாரும் இதுல யாருக்கு எது பிடிச்சிருக்கோ ..... ஆளுக்கொண்ணு எடுத்துக்கங்க........ "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" பாத்து எடுங்கடி....... ரொம்பவெல அதிகமெலாம் வாணாம்......."
என்று பெரியம்மா பச்சைக்கொடியைச் சாய்க்கவும்.....

ஒருவரையொருவர் முண்டியடித்துக்கொண்டு சேலைகளை எடுத்தார்கள்.

"You are too generous......!" என்றாள் மலர்மகள்.

சேலைகள் அன்பளிப்பு செய்ததும் , மலர்மகள் கூட இருந்ததும் பெண்களுக்கும் எனக்குமான இடைவெளியை நீக்கி நெருக்கத்தை அதிகரித்துவிட்டிருந்தது!

விடுப்பு முடிவடையவும் மலர்மகள் பெங்களூர் திரும்பிவிட்டாள். இப்போ பெண்கள் எல்லாம் என்னோடு அரட்டைக்கச்சேரிகள் வைக்கவே ஆரம்பித்துவிட்டார்கள். தினமும் மாலைவேளைகளில் ஒரு மாதர்மன்றமே கூடிவிடும்.

மேற்கு நாடுகளில் பெண்கள் என்னவென்னவெல்லாம் சாதனைகள் பண்ணுகிறார்கள் என்றெல்லாம் எடுத்துக்கூறுவேன். பெண்களின் வேலைச்சுமைகளைக் குறைக்க என்னவென்ன நவீன கண்டுபிடிப்புகள் எல்லாம் வந்துள்ளன...... மைக்கிரோ வேவ் அடுப்புகள், வாஷிங் மெஷின்கள், வாக்கும் கிளீனர்கள் என்று விபரித்தேன்.

" இதெல்லாம் இந்தப்பூமியில்தானா.........? " என்பது போன்ற அதிசயத்துடன் அங்கார்ந்து கேட்பார்கள். சொந்த மனைவி உடனிருக்க வீட்டிலேயே வேறுபெண்களைக்கூட்டிக் கொட்டமடித்துக் கொண்டிருந்தவனின் லிங்கத்தை வெட்டி எறிந்த பெண்ணின் துணிச்சல் கதையைச் சொல்லுவதா விடுவதா என்று என்னுள் போராட்டமாக இருந்தது.

நானும் ஊர் திரும்ப இன்னும் நாலைந்து நாட்களேயிருக்க....... ஒரு நாள் வீட்டில் எல்லாருமே இருக்கையில் பெரியப்பா என்னிடம் கேட்டார்:

" ....... ஆமா.... உனக்கு எத்தனை பசங்கள்..........? "

முதலில் என்னைக் கலாட்டாதான் பண்ணுகிறார் என்று நினைத்துச் சும்மா சிரித்துக்கொண்டிருந்தேன். பின்பு மீண்டுந் திருப்பிக்கேட்டார்.

" இல்லை பெரியப்பா நமக்கின்னும் கிடைக்கல........... "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" உண்மையாவா...? "

" நிஜமாத்தான் பெரியப்பா....... "

" அப்ப நீ பேசாம வசந்தியைக்கட்டு! "

நான் சிரித்தேன்.

" அங்க அவ இருக்கிறா இல்லை...? "

" அவ அங்க இருக்கட்டும்...... இவள இங்க கட்டு.......... இந்த வருஷமே பேரனைப்பார்த்திடறேன்....... "

" பாவம்.....அவ ரொம்ப சின்னப்பொண்ணு...... பெரியப்பா........ "

" ....என்னாது . ...சின்னதும்.... பெரிசும்னு...பேசிக்கிட்டு..... ஆணெண்டால் விருட்ஷம்பாங்க.... சும்மா உம்னு சொல்லு......ஜாம்னு முடிச்சுரலாம்.....

-ஏதோ கல்யாணமே முடிந்துவிட்ட மாதிரி குதூகலித்தார்.

உள்ளே வசந்தியை யாரோ கிண்டல் பண்ணுவது ஸ்படிகமாக காதிலே விழுந்தது.

" ......அப்போ ஒனக்கு வூட்டுவேலை மாத்ரந்தானிருக்கும்...... கொடுத்து வைச்சவடி நீ......."

எனக்குள் நான் நெளிந்துகொண்டிருப்பதைப் புரிவார் எவருமிலர்.

பிறகு தினமும் இதேபேச்சை எடுத்து என்னை வற்புறுத்தத்தொடங்கி விட்டார்.

ஏதோ நல்லகாலம்...... " நம்ம கேஸ் கண்டியில் மஜிஸ்திரேட்கோர்ட்டில் இருக்கிறது, எப்பிடியும் இரண்டு மாதத்தில் டிவோர்ஸ் கிடைத்துவிடும் " என்கிற விஷயத்தை முதலிலேயே உளறி இருந்திருப்பேனாயின் நான் அங்கிருந்து மீண்டு வந்திருக்கவேமுடியாது. பெரியம்மா எங்கள் அரட்டை அரங்கப்பக்கமாய் வரும் போதெல்லாம் பொத்தாம் பொதுவில் கேட்பா "........அடி யென்னாங்கடி சொல்லுறாக மவ.....? என்னமும் யோசிக்கிறாகளாமா...? "

மறு நாள் காலை எழுந்து உட்கார்ந்திருக்கிறேன். நேரே என்னிடம் வசந்தி வாறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" எதுக்கு மாமா அம்மாந்தூரத்ல போயி இருக்கீங்க......? "

அவள் மந்திரக்குரலில் மாமா என்றதும் என்னுள் பன்னீர்த்திவலைகள் தூவப்பட மனசு சற்றே ஆடித்தான் போகிறது.

" ஏதோ அப்பா உத்தியோகம்னு போனாரா...... நாங்களும் அங்கேயே பொறந்திட்டோம்...... "

"சரி.....சரி எந்திருங்க....எந்திருங்க.....குளிக்க வெந்நீர் போட்டிட்டேன்.... ஆறிடப்போவுது........ நானே தண்ணியை மொண்டு ஊத்தவா..? "

இது வெறும் வெகுளித்தனத்தாலா......இல்லை யாரும் சொல்லிக் கொடுத்தாங்களா....

புரியவில்லை.

" ஐயையய்ய..... வேண்டாந்தாயீ...... யாரும் என் பக்கத்திலே நின்னாலே என்னால குளிக்கமுடியாதும்மா..... வெந்நீர் போட்டதுக்கு ரொம்பவும் நன்றி ....... நானே குளிச்சுக்கறேன்.... "

குளித்து முடிந்ததும் அவள் என்னருகே இன்னொருமுறை வர நேர்ந்த போது கேட்டேன்:

" வசந்தி ஒனக்கு இப்போ எத்தனை வயசு.......? "

" இருவத்திமூணு......"

" எனக்கு...... நாற்பத்துமூணு தெரியுமோ.... பழைய ஆளுங்கதான் விபரமில்லாம பேசறாங்கன்னா.......பெண்ணியம் பெண்விடுதலை பத்திப்பேசற நானே இதுபோல முட்டாள்த்தனம் எல்லாம் பண்ணலாமா...? "

" ஒங்களை ஆரம்பத்திலயும் புரியல மாமா......... இப்ப புறப்படறப்பவும் புரியலை.........எப்படீன்னாலும் நீங்க படிச்சவங்க...... சரியாய்த்தானே செய்வீங்க..."

பின்பெல்லாம் வசந்தியின் கண்களை நேர்கொண்டு பார்ப்பதைத் தவிர்த்தேன்.

ஊர் வந்ததும் முதற்காரியமாய் ஆங்காங்கே தலையில் வெள்ளியாய் நீட்டிக்கொண்டு நின்றவற்றை கறுப்பாக்குவதற்கு வாங்கிய முழுச் சாயசாதனங்களையும் குப்பையில் சேர்த்தேன்.

மனம் மெல்ல மெல்ல இலேசாகத் தொடங்கியது.

(பெர்லின். 1997) .........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமீகோ

(ஆச்சார விமர்சகர்கள், வாசகர்கள் இதையொரு பாலியல் கதையென்று வகைப்படுத்தலாம். இஷ்டமில்லையென்றால் அடுத்த பக்கங்களுக்குப் போங்களேன். எனக்கொன்றும் நஷ்டமில்லை.)

அது பெர்லினின் பிரபலமான நட்ஷத்திர ஹொட்டல்களிலொன்று. இரண்டு நாட்கள் தங்குவதாயின் ஆக முப்பதினாயிரம் ரூபாய்கள்தான், அதுவும் குறைந்தது இரண்டு மாதங்கள் முன்பே முன்பதிவு செய்திருந்தாலேயுண்டு. இருந்தும் சதாகாலமும் அதன் ஐந்நூறு அறைகளும் நிரம்பி ஜேஜே என்றிருக்கும் . இரண்டு ஆண்டுகள் முன்பு அவர்கள் செய்த ஸ்பூலர் வேலைக்கு ஆள்தேவை என்ற விளம்பரத்தை பத்திரிகையில் பார்த்துவிட்டு ஏதோ ஸ்விமிங் பூல் மேற்பார்வை செய்வதாக்கும் என்று எண்ணிக்கொண்டு இரைந்து கொண்டுபோனேன். முன் அனுபவங்கள் எதையும் விசாரியாமலே உடனடி நியமனம். கார் மெக்கானிக்குகள் அணிவதைப் போலும் கருநீலத்தில் தந்த ஜுனிபோமைப் பார்த்ததும் மனசில் சிறு சம்சயம் குமிழியிட்டது.

நிர்வாகியின் அலுவலகத்திலிருந்து ஒருவன் நிலமட்டத்தின் கீழே பங்கர்போலிருந்த ஒடுங்கலான பல ஆளோடிகளூடு என்னைக் கூட்டிப்போனான். அவன் நடையின் வேகத்திற்கு ஈடுகொடுக்க நான் ஓட வேண்டியிருந்தது. திடீரென ஒரு கதவைத் திறந்துகொண்டு வெம்மையான ஒரு அறையுள் புகுந்தான். அங்கே நடுவில் பாரிய காஸ் அடுப்புக்கள் பத்துப்பன்னிரண்டு எரிந்துகொண்டிருக்க டாக்டர்கள் போல உடையும், உயரமான வெள்ளைத்தொப்பியும் சூடியிருந்த சமையற்காரர்கள் சூழ நின்று மும்முரமாகச் சமைத்துக்கொண்டிருந்தார்கள்.

அவன் தலைமைச்சமையற்காரரை வந்தனித்து இது அஜிதன்........ புது ஸ்பூலர் என்று அறிமுகஞ்செய்தான். ஸ்பூலருக்கு குசினிக்குள் என்ன வேலை என்று எண்ணிக்கொண்டு வலது பக்கம் திரும்புகிறேன். என்னதே போன்ற ஜுனிபோம் அணிந்து முழங்கைவரை நீண்ட இறப்பர்க்கையுறையுள் புகுந்து பெரிய அண்டா ஒன்றைக் கழுவிக் கொண்டிருந்த கறுப்பின அமீகோ(தோழன்) ஒருவன் காதுவரை புன்னகைத்து பில் கிளிங்டனை வரவேற்பது போலக்கையசைத்தான். எல்லாமே கணத்தில் புரிய பெர்லின் அகல வீதியில் காலோட்டமாகவே வீட்டுக்கு ஓடவேணும் போலிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த கணம் வேலையில்லாதிருக்கும் அவலம் மனதில் ஒரு வைராக்கியத்தைப் பிறப்பித்தது. இன்னொரு வேலை தேடிக்கொள்ளும் வரையிலாவது இவ் வேலையை ஏற்போம் என்று துணிய வைத்தது. உள்ளத்ததிர்வுகள் ஓயமுன்பு தோழன் நீட்டிய கையுறைகளுட்புகுந்தேன்.

ஆச்சர்யப்படும் படியாக ஆறு மாசங்களுக்குள்ளாகவே குசினியிலிருந்தும் விடுதலை கிடைத்தது. Banquets என்று விருந்துகள் நடக்கும் ஹால்களைத்தயார்படுத்தும் வேலைக்கு மாற்றினார்கள். சகதோழர்கள் என்மீது பொறாமை மிகப்பட்டனர் என்றால் காரணமில்லாமலில்லை. இங்கு கூட உதவி பண்ண நிறைய்யவே இளசுகள்,சிறிசுகள், சிட்டுகள், மொட்டுகள் அதிகம்! அட அந்தப்புரத்தில இந்த விடலைக்கறுப்பனை நுழையவிட்டால் சிட்டுக்களை லபக்கெனக் கொத்திவிடுவானே என்ற பொருமல்தான். இங்கத்தைய பாடத்திட்டத்தின் படிக்கு ஒருவர் ஹொட்டல் நிர்வாகத்தில் பட்டம் பெறுவதென்றால் இரண்டு ஆண்டுகள் ஹொட்டல் ஒன்றில் சகல பணிகளிலும் பயிற்சி பெறவேண்டும். எனவே ஹொட்டல் நிர்வாகம் படிப்பபவர்கள் ஒவ்வொரு வருஷமும் இளசுஇளசாக புதிசுபுதிசாக வந்து கொண்டேயிருப்பார்கள். வேலை அதிகமானால் ரிஸெப்ஷனிலிருந்தும் ரெஸ்ரோறென்ட் சர்வீஸிலிருந்தும் மேலதிக மயில்கள் வரும்.

பொதுவாக ஐரோப்பாவிலும் அமெரிக்காவைப்போலத்தான் கறுப்பு அமெரிக்கர்களிடம் வெள்ளை இனப்பெண்களிடையே ஏகப்பட்ட மோகம். அவர்கள் ஆணழகனாக இருக்கவேண்டிய அவசியம் ஒன்றுங்கிடையாது. பவர் ஸ்டியரிங்குள்ள கார் மாதிரி சும்மா இழுத்த இழுத்தபாட்டிற்கு வளைந்து வருவார்கள். இவ்வதீத கவர்ச்சிக்கான காரணம் ஒன்றும் இரகசியமானதல்ல. மானுடவியல் மற்றும் பாலியல் ரீதியாக நிரூபணமாக்கப்பட்டுள்ளது என்கிறார்கள் நீக்கிரோவரின் லிங்கம் ஸெக்ஸின்போது பெண்களுக்கு மிக அழுத்தைக் கொடுக்கக் கூடிய வகையில் வேறெந்த இனத்தவரையும்விடப் பருமனாக இருப்பதுதான்.

பெர்லினில் அப்போது நிலைகொண்டிருந்த அமெரிக்கப்படை யினரில் நிறையவே கறுப்பர்களும் இருந்தார்கள். இவர்கள் அதிகஅளவில் கூடக்கூடிய டிஸ்கோதேக்கள், மற்றும் பார்கள், கிளப்களில் ஜெர்மன் சிட்டுக்கள் கூட்டங்கூட்டமாக வட்டமடிக்கும். இவன் கண்ணில் எத்துப்பட்டவுடன் ஏதோ பல நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிச்சயமானவளைப்போல் கையை நீட்டி "ஹாய்ஹனி" என்பான். ஹனி தொற்றிக்கொண்டுவிடும்.

Banquet பார்ட்டிகளென்றால் அதன் பணக்காரத்தன்மைக்கு ஏற்ற விதத்தில் செரமிக் பாத்திரங்கள், பீங்கான்கள் தேர்வுசெய்யப்படும். சில விருந்துகளில் தங்கமுலாம் பூசிய கத்திகள் முள்ளுக்கரண்டிகள் கூடப் பாவிக்கப்படுவதுண்டு. அவ்வாறான விருந்தொன்றுக்காக ஒரு நாள் ஓரறையில் நான் பாத்திரங்களைத் தேர்வு செய்துகொண்டிருக்கும்போது என்னுடன் பேசிக்கொண்டே serviettefis மடித்துக்கொண்டிருந்தாள் புதிதாக வந்திருந்த பயிற்சி மாணவி பெற்றினா. சுழன்று சுழன்று பல துறைகளிலும் சுவாரஸியமாய் புகுந்து வந்துகொண்டிருந்த பேச்சிடையே வெகு இயல்பாய்க் கேட்டாள் "எங்க உன்னுடையதைக்காட்டு பார்ப்பம்;?"

செம்பாட்டு மண்ணிலும் பனைமரங்களுக்கிடையிலும் வளர்ந்த எங்கள் பண்பாட்டு விழுமியங்களை நான் எப்படி அவளுக்கு விளங்கப்படுத்துவேன். சரியான ஹேனப்பயல் என்றே அவளை எண்ணவிடுவது தவிர்க்க முடியாததாகவே இருந்தது.

அனெத்த என்று இன்னொருத்தி தற்செயலாக ஏற்படுவதுபோல போகவும் வரவும் சூட்டு ஒத்தடங்கள் தருவாள். இவர்கள் டிறே நிறைய பீங்கான் பாத்திரங்களை வைத்து எடுத்துக்கொண்டு போகும்போது மற்றக்குறும்புப்பயல்கள் (எம்மவர் பாஷையில் தகாத இடங்களை) தொட்டெல்லாம் விளையாடுவார்கள். கண்டுகொள்ளவேமாட்டார்கள்.

ஹொட்டலின் உள்ளக அலங்காரங்களுக்கு பொறுப்பான ஒபிஸரும் ஒரு கரோலினா என்றொரு பெண்தான். அவள் விரல் நீட்டிய மூலைக்கு அவள் குறிப்பிடும் பொருள் வந்திறங்கும். கரோலினா தன்னை மினைக்கெட்டு அலங்காரம் செய்து கொள்வதேயில்லை. எப்போ பார்த்தாலும் தண்ணீர் பனுக்கிய தும்பைப்பூங்கொத்து மாதிரி ஃப்றெஷாயிருப்பாள். வேலைக்கு வரும்போது ஒருத்தனின் காரில் வருவாள், போகும்போது கூட்டிப்போக இன்னொருத்தன் ஸ்போட்ஸ் காரில்வந்து காத்துக்கிடப்பான். ப்ரெண்டில்லாமல் தன்னால் தூங்கவே முடியாதென்பாள். "அஜிதன் எப்போ நாங்கள் ஸ்ரீலங்காவுக்கு போறது? " வாரத்தில் இரண்டு தடவைக்கு மேலும் கேட்கத்தொடங்கிய பின்னர்தான் அவள் ஸீரியஸாகவே கேட்கிறாள் என்பது எனக்கு விளங்கியது. "உன்னை அழைத்துப்போய் யாரென்று அம்மாவிடம் அறிமுகப் படுத்துவேன்? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸ்ரீலங்காவுக்குப் போகக்கூடிய மாதிரி அங்கு நிலவரங்கள் சரியில்லை......... " என்று சொல்லிச் சமாளித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் காலையில் நான் என்வேலையில் மும்முரமாக இருக்கிறேன் 'Guten Morgen' என்றபடிக்கு வந்து வழமையான கேள்வியைப் போட்டாள். நான் "ஸ்ரீலங்கா...... " என்று முடிக்கவில்லை "உனக்கு நெடுடுக நிலவரஞ்சரியில்லைத்தான்........ " என்றுவிட்டு நான் எதிர் பாராமல் கையைத்தாழ்த்திப் பிடுங்கிவிட்டுப்போனாள். துடித்துப் போனேன். அன்று முழுவதும் விதையின் வலிதரக்கூடிய மிருதுவான நரம்புப்பகுதி அவள் விரலிடை அகப்பட்டு நசுங்கியதால் விண்விண் ணென்று வலித்தது.

இரண்டு மாதங்கழித்து குசினியிலிருந்து அமீகோவும் Banquet க்கு வந்துசேர்ந்தான். இரண்டாம் நாள் கரோலினாவும் அமீகோவும் மதியம் சேர்ந்து சாப்பிட்டனர். பின் வேலைமுடிந்தபோது இருவரும் டாக்ஸியில் போவதைப்பார்த்தேன்.

மறுநாள் அமீகோவிடம் "எப்படியாவது கரோலினாவைக் கட்டிக்கொண்டாயாயின் உன் விசாப்பிரச்சனை தீர்ந்துவிடுமே" என்றேன்.

"எனக்கும் அவளைக்கட்டுவதில் இஷ்டந்தான்........ ஆனால் எக்கச்சக்க நிபந்தனைகள் போடுகிறாள்...... " என்றான்.

கோடை வந்தபோது இருவரும் விடுமுறையைக்கழிக்க அமீகோவின் நாடான கென்யாவிற்குப் போனார்கள். கென்யாவிலிருந்து குதூகலமாகத் திரும்பியதும் தம் திருமணத்தையும் அறிவித்தனர்.

அமீகோவைத் தனிமையில் "என்னாய்ச்சு நிபந்தனைகள்......? " என்று உசாவினேன்.

"அதை ஏன் கேட்கிறாய் அவளே தோற்கும்படியாயிற்று" என்றான் கண்களைச் சிமிட்டிக்கொண்டு.

"ஒன்றுமே புரியலையே...... "

"ஆரம்பத்தில் கரோலினாவின் நிபந்தனைகள் இவைதான்......

ஒன்று – வயது இருபத்தேழுக்குள் இருக்கவேணும்...... இருந்தேன். "

"இரண்டு – 170 செ.மீட்டருக்குக் குறையாத உயரம்... இருந்தது. "

"மூன்று – வேலை இருக்கவேணும் ...... இருந்தது. "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான்கு – தனியாக வீடு வைத்திருக்க வேணும்...... வைத் திருந்தேன்."

"ஐந்து – கார் வைத்திருக்க வேணும்...... ஒன்று இருக்கே."

"ஆறு – மியூசிக் சென்ஸ் இருக்கவேணும்...... டான்ஸ் தெரியவேணும்...... சமாளித்தேன்."

"ஏழு – அது...... கண்டிப்பாய் சங்கதி......... 15 செ.மீட்டர் இருக்கவேணும்...... என்றபோது இது மட்டும் சரிப்படாது மிஸ் என்றேன்......"

"ஏன்......?"

"அப்படியாயின் நான் மீதி இரண்டு மூன்று செ.மீட்டரையாவது ஒப்பரேஷன் செய்ய வேண்டிவருமே......"

(பெர்லின் 1997)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்களுக்கென்று ஒரு குடில் . . .

அன்று நாகர்கோயில் கப்பல்த் திருவிழாவில் தீர்க்கப்படுவது போன்று பாரிய சத்தத்துடன் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஷெல்களும் றொக்கட்டுகளுமாய் தீர்த்தவண்ணமிருந்தார்கள்.

அச்சுவேலி , ஆவரங்கால் , புத்தூர் , சிறுப்பிட்டி , நீர்வேலி போன்ற இடங்களில் சரமாரியாக ஷெல்கள் விழுந்து வெடிக்கத் தொடங்கின.

"ஆமி பலாலி முகாமை விட்டு வெளிக்கிடப்போகுது போல கிடக்கு . . ."

மக்கள் எல்லோரும் பரவலாகப் பேசிக்கொண்டார்கள்.

மக்களும் எத்தனை தடவைகள் என்றுதான் பங்கருக்குள்ளே இறங்கி ஏறுவார்கள். வயதானவர்களுக்கு இது ஒரு கொடுமையான தண்டனை. பாட்டி சிறீமாவோ இப்படி ஒரு தண்டனையை ஒருநாளுக்கு அனுபவிக்க நேர்ந்திருந்தால் அன்று பரலோக யாத்திரையை ஆரம்பித்திருப்பா. இது தன் குட்டியைத்தானே தின்னும் இன முதலைகள் ஆளும் நாடு. ஒரு விடியல் ஏற்படும்வரை அப்பாவிகள் அனுபவிக்கத்தான் நேரும்!

சதா பங்கருக்குள் எப்போதும் முடங்கியிருப்பது எத்தனை நாளுக்குத்தான் சாத்தியம்? வெளியில் வந்து இருந்தாலும் விழுந்து வெடிக்கும் ஷெல்லின் பகுதிகள் ஆளைச் சீவிக்கொண்டு போகலாம். வீட்டிற்குள் இருந்தாலும்தான் . "ஜிவ்" வென்று கூவிக்கொண்டு வரும் ஷெல்கள் கூரையில் விழுந்து வெடித்துச் சிதறலாம். மக்கள் தூக்கமின்றி தவித்தார்கள்.

மார்கழிப் பனியின் குளிர்மை இன்னும் காற்றில் கலந்திருந்த மென்காலை நேரம். சிற்பாசாரி ஆனந்தரங்கர் சந்தியாவந்தனம் முடித்துக் கொண்டு தன் கலைக்கூடத்துள் நுழைந்தார். அதன் நடுவிதானத்தில் மொறீசியஸ் நாட்டிற்கு அனுப்புவதற்காகத் தன் நாலைந்து மாத உழைப்பில் உருவாகி முடியுந்தறுவாயில் கொலுவாய் நின்ற தேவியின் சிலைகளை கைகளைக்கட்டிய வண்ணம் பார்த்துக்கொண்டு நின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிவிகிதத்தில் அம்சமாகச் சமைந்துவிட்ட அங்கங்கள் , நீண்ட விழிகளில் சுடர்ந்த தீட்சண்யம் , நடுவில் இன்னொரு தீபமாய் வளர்ந்த நாசி , வீணையெனத் திடு'ப்பென ஒடுங்கிப் போகும் இடை . இவைகளையெல்லாம் ஒருங்குசேரப் பார்க்கப் பார்க்க அவருக்குத் தன் சிருஷ்டிப்பாற்றல் மீது கர்வம் வளர்ந்தது!

அவர் மனைவி சாந்தாம்மாள் பனை வெல்லத்துடன் தேனீர் கொண்டுவந்து கொடுத்தார். அதைக் குடித்துவிட்டு தன் ஆயுதப் பெட்டியைத் திறந்து பல தினிசில் அரத்தாள்களை எடுத்துவைத்துக் கொண்டு தேவியை 'பொலிஷ்' செய்ய ஆரம்பித்தார். அவர் உதடுகள் அவரையுமறியாமல் ஸ்ரீகனகதாரா ஸ்லோகங்களை உச்சரிக்கத் தொடங்கின.

மீண்டும் மழை பொழிவதைப் போல் ஷெல்கள் விழத் தொடங்கின. யாரோ தெருவில் 'ஆமி அச்சுவேலி , தோப்புப் பக்கமாய் வந்திட்டுதாம்" என்று பேசிக் கொண்டு போனார்கள். 'இருக்காது சும்மா வதந்தியாயிருக்கும் ' என்று நினைத்தபடி மீண்டும் அவர் தன் கருமமே கண்ணாயினார்.

"படா" ரென்று "ஷெல்"ஒன்று விழுந்ததும் , அதைத் தொடர்ந்து மரங்கள் முறிந்தும் கேட்டன. அவர் மனைவி பங்கருக்குள் அவரையும் "ஓடியாங்கோ . . . . ஓடியாங்கோ" என்று அழைத்தபடி ஓடிப்போய் நுழைந்தாள். வேகமாக வந்து பங்கருக்குள் புகுந்து கொண்ட ஆசாரியாருக்கு மூச்சிரைத்தது. பத்து நிமிடங்கள் இடைவெளி விட்டது மாதிரி ஓய்வாயிருந்தது. 'வெளியே போகலாமா' என்று அவர்கள் எண்ணவும் "ஷெல் " ஒன்று விழுந்து வெடித்து நிலமே அதிர்ந்தது. ஒரு பனை உயரத்திற்கு மண் மலைபோல எழும்பி என்ன நடந்ததென்றே பார்க்கமுடியவில்லை. செவிப்பறையும் நெஞ்சும் அதிர்ந்து வலிக்க . . . .

"ஈஸ்வரா . . . . ! " என்று அரற்றினர் இருவரும். புழுதி அடங்கியதும் ஆசாரியார் வெளியில் வந்து பார்த்தார். வீட்டில் பாதியும் உடைந்து சிதறிப் போயிருக்க தரையெல்லாம் கூரை ஓட்டின் சிவந்த சில்லும் சிதறல்களும். இடிபாடுகளைக் கடந்து கலைக்கூடத்தினுள் எட்டிப்பார்த்தவருக்கு மேலும் ஒரு பேரதிர்ச்சி! ஓயிலாக ஒரு நடன பாவத்தில் விரல்களில் "டோலஹஸ்த்த" முத்திரையை எழிலாகப் பிடித்தபடி செல்லமாக கீழ் நோக்கி வளைந்திருந்த தேவியின் இடது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை ஒடிந்து தரையில் கிடக்கிறது . . . ஆசாரியருக்கு உதடுகள் மாத்திரம் துடிக்கின்றன . . . பேச்சேதும் வரவில்லை. 'இவர்கள் உயிருடன் இருக்கிறார்களோ' எனப் பார்க்க வந்த சில அயல் சனங்களும் நடந்த விபரீதம் கண்டு பேச்சடைத்து நிற்கின்றனர்.

எல்லோர் வீட்டுப் படலைகளிலும் விடுதலைப் போராளிகள் தட்டிச் சொல்லிக்கொண்டு போகிறார்கள். "ஆமி வடக்கை "மூவ்" பண்ணுகிறான் . . . . றொக்கட்டால அடிக்கப்போறான் எல்லோரும் உடன் வெளியேறி மட்டுவில் பக்கமாய் போங்கோ . . . . " வீதியில் லோஞ்சர்களும், ஏ.கே 47 களும் படபடத்தன. ஜனங்கள் சிதறித் தறிகெட்டு ஓடினார்கள். இவர்களுக்கும் ஓடவேண்டும் என்பதைத் தவிர அக்கணம் வேறொன்றும் தோன்றவில்லை. இருவரும் பின்வேலிக் கதியால்களை நீக்கிக்கொண்டு தபாற்கந்தோர் ஒழுங்கைக்குள் ஓடினர். மூச்சிரைத்தது. நாலா திசையிலும் மேலும் ஷெல்கள் விழுந்து வெடிக்கவும் இன்னும் வேகம் பிடித்தனர். ஒழுங்கையில் மிதத்திக்கொண்டிருந்த கல்லொன்று ஆனந்தரங்கரின் காலை மோதிப் பெருவிரல் நிகத்தை இரண்டாகக் கிழித்தது! வேதனை தாளமாட்டாமல் விரலைப் பொத்தியபடி அமர்ந்துவிட்டார். ரத்தம் ஒழுகிக்கொண் டிருந்ததைப் பார்த்த சாந்தம்மாள் பதைத்து தன் சேலைத் தலைப்பை கிழித்து விரலைச் சுற்றிக் கட்டுப்போட்டுவிட்டார். காலைக்கெந்திய படியே நடந்து பிரதான வீதிக்கு வந்தால் . . . . இருபத்தைந்து திருவிழாக் கூட்டம் ஒன்றாக அணிவகுத்தது போல யாரும் தம் வாழ்வில் காணாதபடி ஜனக்கூட்டம் சாரசாரியாக சென்றுகொண் டிருந்தது. புத்தூர் சந்தியால் ஜனத்திரளுடன் திரும்பிச் சாவகச்சேரி வீதியில் . . . .

ஒரு அரை மைல் நடந்திருப்பார்கள் . . . . றோட்டில் ஒரு இடத்தில் ஆடுகள் பலியிட்ட இடம்போல இரத்தம் ஓடி உறைந்திருந்தது. வேலியோரமாக தொடையளவில் அறுபட்ட மனிதனின் காலொன்று தனியாகக் கிடந்தது. மேலும் மாமிசத் துண்டங்கள் வீதியில் சிதறிக் கிடக்க ஓரிடத்தில் சிறு குவியலாகவும் கொஞ்சம் மாமிசம் கிடந்தது. எல்லாம் ஷெல்லின் பகுதிகள் பட்டுக் கறுப்பாய் வேகியிருந்தன! அவர்களைத் தாக்கிய ஷெல்களின் கூறுகள் எவ்வளவு உஷ்ணமானவையாய் இருந்திருக்கவேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப் பார்த்து மயக்கமடைந்து விழப்போன சாந்தம்மாளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார் ஆனந்தரங்காச்சாரியார். அவளுக்குத் தெளிக்கக்கூட ஒரு கோப்பை தண்ணீர் எவரிடமும் இல்லாதிருந்தது. முன்னே போய்க்கொண்டிருந்த மக்கள் திரள் மீது ஷெல் விழுந்து வெடித்ததாக சொன்னார்கள். சிதறிப் போனவர் எவரென்றோ எத்தனை பேரென்றோ யாருக்கும் தெரியவில்லை! இந்த அனர்த்தத்தையே பார்த்துக்கொண்டிருந்தால் மேலும் ஷெல்கள் விழலாம் . . . . !

ஜனக்கூட்டம் வேகமாக நடக்க ஆரம்பித்தது!

மக்கள் கூட்டம் கடகங்களுடனும், சூட்கேஸ்களுடனும், சுருட்டிய பாய்கள், அலுமினியப் பாத்திரங்களுடன், நடக்கமுடியாத முதியோரையும் நோயாளரையும் வண்டிகளில் ஏற்றித் தள்ளிக்கொண்டும் அந்திரானை வெளியை அண்மிக்கவும் பத்துப் பதினைந்து ஹெலிக்கொப்டர்கள் இராட்சதக் கழுகுகளெனப் படபடத்துப் பதிந்து வானில் வட்டமிட்டன. ஜனங்கள் " ஐயோ . . . . அழிவான்கள் . . . . சுடப்போறாங்கள் . . . . !" என்று அலறியபடி வயல் வெளியூடாகவும், தரவை வெளியூடாகவும் தறிகெட்டு ஓடினர்.

தாம் பிறந்த மண்ணிலேயே ஏதிலிகளாகநொந்து வெளியேறும் அப்பாவி மக்களிடத்தில் மரண பயத்தை உண்டாக்கி மகிழ வந்த கிரஹாதர்கள் மேலும் சில வட்டங்கள் அடித்துவிட்டுத் திரும்பிப் போயினர்.

சூரியன் கன்னப்பொட்டை எரிக்கத் தொடங்கினான். எல்லோருக்கும் தாகம் எடுத்தது. சின்னக் குழந்தைகளும், சிறுவர்களும் தண்ணீர் கேட்டு அழுதனர். வீரவாணி அம்மன் கோவில் கிணத்தில் பாத்திரம் ஒன்றைக் கட்டித் தண்ணீரைக் குடித்துப் பார்த்தால் ஓங்களிக்கக்கூடிய அளவு உப்புக் கரித்தது!

குழந்தைகளைச் சமாதானம் பண்ணிக்கொண்டே மேலும் நாலு மைல்கள் நடந்து வந்த மக்கள் மட்டுவில் கண்ணகை அம்மன் கோவிலை அடைந்ததும் கேணிப்படிகளில் தடதடவென இறங்கி பாசிகளை விலக்கிவிட்டுத் தண்ணீரை மொண்டு மொண்டு குடித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாடமுடியாத முதியவர்களையும், நோயாளிகளையும் கோயில் பிரகாரத்திலும் மேற்கு மடத்தின் திண்ணைகளிலும் கிடத்தினர். இவ்வளவு தூரத்தையும் நடந்தே வந்ததால் ஆனந்தரங்காச்சாரியரின் விரலில் இருந்து ஏராளம் இரத்தம் வெளியேறியிருந்தது. அவருக்குத் தலையைச் சுற்றியது. மடத் திண்ணையில் சாய்ந்ததுதான் . . . . அயர்ந்து தூங்கிவிட்டார்.

சாந்தம்மாள் "அடையாள அட்டையையும், வீட்டினுள் இருந்த இருநூற்றுச் சொச்ச ரூபாய் பணத்தையுமாவது எடுத்து வந்திருக் கலாமே" என்று அரற்றிக்கொண்டிருந்தார். மட்டுவில், சாவகச்சேரியில் அவர்களுக்கு அவ்வளவு பரிச்சயம் வாய்ந்தவர்களோ உறவினர்களோ இல்லை. கண்ணகை அம்மன் கோவில் முகாமையாளரைத் தவிர கோவிலைச் சுற்றியும் பிரகாரத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டமிருக்க இதில் எத்தனை பேர் அவருக்கு வேண்டியவர்களாகவும், நண்பர்களாகவும், உறவினர்களாகவுமிருப்பார்கள். அவர்தான் யாருக்கு உதவுவார் . யாருக்கு மறுப்பார். "யாரிடமும் போய் தொந்தரவு கொடுக்கப்டாது" என்றே நினைத்திருந்தார்கள்.

மாலை மூன்று மணியானதும் மெல்ல ஆசாரியருக்கு விழிப்பு வந்ததும் மீண்டும் வலியும், பசியும். சூழலின் அவலமும் அந்தகாரமும் சூழ்ந்துகொண்டன. இவைகளை உணராத நிலை தூக்கம் – மரணத்தைப் போலும் தூக்கம். மரணித்துவிட்டால் நல்லது போலிருந் தது. தன்னை நம்பியிருக்கும் சாந்தம்மாள் எங்கே போவாள்? ஒரு பிள்ளையிருந்தாலாவது அது கவனிக்கும் என்று கண்ணை மூடிவிடலாம். மனிதனால் எதனைத்தான் சாதிக்க முடிகிறது . . . . ? வாழ்ந்தது போதும் இனி இறப்போம் என நினைத்தபோதுதான் இறக்கமுடிகிறதா? பட்டுக்கம்பளம் விரித்ததைப் போல, சிலசமயங்களில் சரிவில் இறங்குவதைப் போல, பின் ஏறுவதைப் போன்ற சிரமமாக, கல்லும், பெரியகொத்துக்கட்டிகளும் கொண்டு கிடப்பதான கொழுவி இழுக்கும் முட்களும் புதர்களும் கொண்டு வேதனை தருவதாக, அபூர்வமாக தென்றலும் பரிமளமும் வீசுவதாக . . . . . யாரோ ஒருவன் தன் இஷ்டப்படி போட்டுத் தரும் பாட்டையில்தான் நடக்கிறோம் என்று பட்டது அவருக்கு. சதுரம் தானாக ஓயும் வரையில் வாழ்வைத் தவிர அவருக்கு வேறு எதுவும் செய்யமுடியும் போல் தெரியவில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதிலிகளுக்கு உதவும் தன்னார்வக் குழுக்கள் சமைத்த உணவுகளாய் பொட்டலங்களில் கொண்டு வந்து பரிமாறினர். இருவருக்குமே உணவின் மணம் நாசியைத் தொட்டதும் குடலைப் பிடுங்குவதைப் போல அகோரமாய் பசித்தது. ஆசாரியாரோ வெளியிடங்களில் சாப்பிட்டுப் பழக்கமில்லாதவர். கௌரி தீட்சை பெற்றவர். ரொம்பவும் ஆச்சார அனுட்டானங்களைக் கவனிப்பவர். ஆசாரத்தைக் கடைப்பிடிக்காத உறவினர் வீடுகளிலேயே கையலம்ப மறுப்பவர் . . . . மனைவியின் முகத்தைப் பார்த்தார். பஷன் பழத்தின் தோலைப் போல வாய் சுருங்கியிருந்தது. அவரும் புருஷனைப் பார்த்து உள்ளூரப் பயத்துடன் “சாப்பிடுவோமா“ என்று ஜாடையாகக் கேட்டார்.

“சந்தியா வந்தனம் வந்தனம் செய்யலாமா . . . . ?”

அவரும் மெல்ல இறங்கி வந்திருப்பதை உய்த்தவர், “காலுடைந்து கிடக்கு என்ன மசிராண்டிச் சந்தியாவந்தனம் . . . . ?” என்று எரிந்துவிழுந்தார்.

வாழ்வே ஒரு தாம்புக் கயிற்றில் தொங்கும் போது, ஆசாரமும் அனுட்டானமும் எதுவரையில் சாத்தியம்? உணவுப் பொட்டலங்களை வாங்கிச் சாப்பிட்டனர். அடுத்த வேளைச் சாப்பாட்டிற்கு உத்தரவாதமில்லை. மேற்கொண்டு எந்தத் திசையில் நடப்பதென்று தெரியவில்லை. கையுடைந்த தேவியே கண்முன் வந்து வந்து மறைந்தாள். மீண்டுமொருமுறை மெல்லக் கண்ணயர்ந்து உறக்கமோ இல்லை. விழிப்போ என்று கூறமுடியாத நிலையில், அவருக்குத் தான் விளைந்து குலுங்கும் ஒரு வயல் நடுவே நிற்பதைப் போல் இருந்தது. மெதுவாகக் காற்று வீசவும் அலை அலையாகக் கதிர்கள் தாழ்ந்தும் உயர்ந்தும் விளையாடின. பின் நிஜத்திற்கு மீண்டதும் சிறிது நேர மௌனத்தின் பின் மனைவியைக் கேட்டார்:

“வவுனிக்குளத்திற்குப் போவோமேப்பா. . . . . ?”

வவுனிக்குளம் என்றதும் சாந்தம்மாளுக்கு பெருமூச்செறிந்தது. ஒரு காலம் அங்கே அவர்களுக்கு அரசின் குடியேற்றத் திட்டத்தில் வழங்கிய 5 ஏக்கர் காணி நீர்ப்பாசன வசதியுடன் இருந்தது. சிறப்பாக மழை பெய்து குளம் நிரம்பியிருக்க வேணும். இரண்டு போகமும் விதைக்கலாம். போகத்திற்கு 200 புசல் நெல் விளையும். எழுபதுகளின் ஆரம்பத்தில் இரண்டு மூன்று வருடங்கள் பருவ மழை தவறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகங்கள் பொய்த்துவிட ஏற்பட்ட விரக்தியில் அவ்வூர் வாசியான நாகுமணி என்பவனுக்கு வாய்த்த விலைக்கு விற்றுவிட்டு ஊரைப்பார்த்து வந்துவிட்டார்.

"எமக்கொரு விடிவு வரும் வரையில் ஒரு குடில் போட்டுக்கொண்டு பிழைச்சிருக்க அப்பிடியொரு அரை ஏக்கர் காணி தரமாட்டானா . . . ?" அவர் திரும்பக் கேட்கவும் சாந்தம்மாளுக்கு அதைவிட வேறு மார்க்கம் தோன்றவில்லை. சம்மதித்தாள். எழுந்து மெல்லக் கெந்தியபடி ஆசாரியார் நடக்கத் தொடங்கவும் சீதையெனச் சாந்தம்மாளும் பின் தொடர்ந்தார். மாலைக் கருக்கலில் சாவகச்சேரியை அடைந்தால் அந்நகர் திருவிழாக் கூட்டமொன்றில் "பவர்கட்" ஏற்பட்டது போல் மக்களும் சந்தடியுமாய், ஆனால் இருளில் மூழ்கிப் போய் இருந்தது. டிறிபேர்க் கல்லூரி வளவு, பஸ் நிலையம், சந்தைக் கட்டிடங்கள், நீதிமன்ற வளவு, எதிரில் இருந்த தேவாலயம், புகைவண்டி நிலையம் எங்குமே மக்கள் மக்கள் மக்கள்! பெரிய தேனீக்கூட்டில் தேனீக்கள் இயங்குவது போல் மக்கள் எல்லாத் திசையிலும் சாரியாகவும், தனியனாகவும் இயங்கிக்கொண்டிருந்தனர்.

செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவரை அடையாளங்கண்டு விரல் காயத்தைக் காட்டி முறையிட்டபோது, அவர் இன்னுமொருவரை முதலுதவிப் பெட்டியுடன் கூட்டி வந்து காயத்தைக் கழுவி மருந்திட்டுக் கட்டிவிட்டார். நீதிமன்ற வளவின் கூரை பெயர்ந்த திண்ணையில் ஒரு சிறிய இடம் கிடைத்தது. போட்டுப் படுக்க ஒரு சணல் சாக்குக் கூடக் கிடையாதபடிக்கு ஒரே நாளில் வாழ்வு பறித்தெடுக்கப்பட்டு பஞ்சைப் பராரிகளாக்கப்பட்ட அவலத்தை நினைக்க அவருக்குச் சிரிக்கவும் முடியாமல், அழவும் முடியாமல் மனது விச்ராந்தியாக இருந்தது.

அதிகாலையில் சூரியோதயத்திற்கு முன்னமே எழுந்து கிளாலியை நோக்கி நடக்கத் தொடங்கிய சனக்கூட்டத்துடன் இவர்களும் சேர்ந்துகொண்டு மெல்ல மெல்ல நடந்தார்கள். கிளாலி வந்தடைய மாலையானது. அங்கும் ஏதிலிகளுக்கு உதவுவோர் கஞ்சி வார்த்தனர். பசியில் புறப்பட இருந்த உயிர்கள் இழுத்து மீண்டும் கட்டப்பட்டன. இரண்டு நாட்கள் காத்துக் கிடந்த உயிர் பிழைத்து கடலைக் கடந்து ஆலடிக்கு வந்தனர். கால் தூக்கிவைத்து நடக்க முடியாதபடி உபாதை தந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு சைக்கிள் இளைஞர்கள் அவர்களை கரியரில் இருத்தி கிளிநொச்சியில் கொண்டு வந்துவிடுவதாகவும் அறுநூறு ரூபாய்கள் தரும்படியும் பேரம் பேசினர். கடைசியாக ஐநூறு ரூபாய்க்கு அரை மனதுடன் சம்மதித்தனர். கிளிநொச்சி வந்ததும் "சைக்கிள் இளைஞர்களிடம் தெரிவித்தபடியே" சாந்தம்மாளின் காதுத் தோடுகளை விற்பதற்காக ஒவ்வொரு இடமாக அலைந்தனர். யாரிடமும் அதை வாங்குவதற்குப் பணமில்லை. சிலர் அறாவிலை கேட்டனர். களைத்துப் போன இளைஞர்களில் ஒருவன் கேட்டான் :

"பெரியவரே . இந்தத் தோடு என்ன நிறையிருக்குமென்றீர்? "

"முக்கால் பவுனுக்கு மேலிருக்குப்பா . . . . திருடன் கையில் கொடுத்தாலும் இரண்டாயிரம் ரூபாய் தருவானே . . . . "

"சரி இப்ப என்னதான் விலை வேணுமென்றீர் . . . . ? "

"ஐநூறு கழிச்சுத்தான் கொடுத்தாலும் இப்போதைக்குப் பரவாயில்லை . . . " இன்னும் நமக்கு உங்களோட அலையேலாது. எங்கள் பிழைப்புக் கெட்டுப் போகும் . . . அதனாலை ஒரு தோட்டைத் தாங்கோ . . . . போய்க்கொண்டேயிருக்கிறம்..." இளைஞர்கள் சென்று மறைந்துவிட்டார்கள்!

சைக்கிளில் இருந்து வந்தது கால் 'விண் விண்' ணென்று வலித்தது. முதலில் ஆஸ்பத்திரிக்குப் போனார்கள். அங்கும் ஆயிரக்கணக்கில் நோயாளிகள் நம்பர் எடுத்துக்கொண்டு மரநிழலிலும், தாவாரங்கள் வழியேயும் காத்துக் கிடந்தார்கள். இரண்டோ மூன்று டாக்டர்கள்தான் அவ்வளவு பேரையும் கவனித்தார்கள். மதியம் திரும்பி மூன்று மணியாகியும் இவர்கள் முறை வரவில்லை. கால் வலி தாங்கமுடியாதிருக்கவே வேலியில் இருந்து பிடுங்கப்பட்டது போலத் தெரிந்த பாதிக் கம்பிக் கட்டையை நிலத்தில் போட்டு அதில் தனது வலது காலைச் சற்றே உயரமாக வைத்துக் கொண்டு இருந்தார். வலி சற்றுக் குறைவதைப் போல இருந்தது. சிவந்த அந்த மனிதன் நாலைந்து நாள் வெயிலில் வாடி வதங்கி மழிக்காத கன்னங்களுடன் பரிதாபகரமாய் கால் வலியால் அவதியுறுவது கண்டு தானே சரியான சாப்பாடு இல்லாது . . . . இவ்வளவு தூரம் கல் நடந்த களைப்பால் பூசனிச்செடியைப் போல துவண்டு போயிருந்த சாந்தம்மாள் வழிந்த தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரை ஆனந்தரங்க ஆச்சாரியார் காணாதபடிக்கு இரகசியமாகத் துடைத்துக் கொண்டார்.

ஆசாரியார் ஏன் அம்மரக்கட்டையைக் காலுக்கு உயரமாக வைத்திருக்கிறார் என்பதை உணராத, சட்டை ஒன்றுமே போட்டிராத ஒரு ஏழெட்டுமாதச் சிசுவை மார்போடு இடுக்கிக் கொண்டிருந்த ஒரு ஏழ்மைப் பெண் "ஐயா . . . ஐயா . . . அந்தக் கட்டையைத் தாறீங்களா . . . . ஒரு வேளை பொங்கிப்பேன் " என்று யாசித்தாள்.

அவரின் காலைப் பரிசோதித்த டாக்டர், கிழிந்து போயிருந்த நகங்களை "பெரியவர் விறைப்பூசியில்லை கொஞ்சம் தாங்கிக் கொள்ளுங்கோ" என்றபடி பிடுங்கிவிட்டார். மயங்கியே போய்விட்டார் ஆசாரியார். சற்றுத் தெளிவு வந்தபோது, "ஆஸ்பத்திரியில் இடமேயில்லை . . . . நீங்கள் வெளியில்தான் அட்ஜஸ்ட் பண்ணித் தங்கிக்கொள்ள வேணும் . . . . " என்று டாக்டர் சொல்வது கேட்டது. ஆஸ்பத்திரியை விட்டு வெளியில் வரவும், யாரோ ஒரு பெண் மீதமிருந்த தனித் தோட்டை எண்ணூறு ரூபாய்க்குக் கேட்பதாகச் சொன்னாள் சாந்தம்மாள்.

"சரி . . . . கொடுத்திடு" என்று சைகையால் காட்டினார். அப்பணத்தில் ஒரு சட்டியும், பானையும், கொஞ்சம் அரிசியும் வாங்கினர். இப்போது விறகு தேடவேண்டியதாயிற்று. விறகு வாங்கப் போன சாந்தம்மாள், கூடவே கொஞ்சம் வெங்காயமும் வெண்டைக்காயும், பிஞ்சு மிளகாயும், உப்பும் வாங்கி வந்தார். வீதியோரமாகக் கல்லு வைத்து அடுப்பு மூட்டிச் சாதம் பொங்கிவிட்டு வெங்காயத்துடன் வெண்டிக்காய் மிளகாய், உப்பு, நீர்விட்டு அவித்துச் சாப்பிட்டார்கள்.

ஒரு மாட்டுவண்டிக்காரரிடம் அவர் வைக்கோல் அடைய வைத்திருந்த இரண்டு சாக்குகளையும் விலை கொடுத்து வாங்கினார்கள். அவர்கள் சமைத்த இடத்திற்குப் பக்கமாக இருந்த வீரை மரத்தடியில் இரவு படுக்கலாமென எண்ணியிருந்தனர். சாப்பாடு முடித்துக் கொண்டு சாக்கையும் கொண்டு அம்மரத்தடிக்குப் போனபோது அங்கே வேறொரு குடும்பம் இரண்டொரு பிள்ளைகளுடன் அவ்விடத்தைக் கூட்டித் துப்பரவு செய்துகொண்டிருந்தது. அதுதான் அவர்களது வாடிக்கையான பள்ளிகொள்ளுமிடம் போலும்! அவர்கள் அங்கே தயங்கி நிற்கவும் அவன் அழைத்தான். "ஐயா வாங்க . . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கை இதில தூங்கிக்கலாம் . . . . நமக்குத்தான் இதெல்லாம் பழகிப்போன வாழ்க்கை . . . . இடம் . . . . புதிசா வர்ற விருந்தாளிங்களை உபசரிக்க வேணாமோ . . . . ? "

ஆசாரியாருக்கு வெட்கமாயிருந்தது. சுற்றுமுற்றும் பார்த்தார். இன்னும் பலர் கையில் கிடுகுகளையும், உரப்பைகளையும் வைத்துக் கொண்டு வாகனப் போக்குவரத்து அற்ற வீதியிலே இரவைக் கழிக்க ஆயத்தமாவதைக் கண்டார். ஒரு காலம் யாழ்ப்பாண மேட்டுக்குடியினர் தம்மால் தாழ்த்திவைக்கப்பட்ட ஏழைக் குடியானவர்களுக்கு அளித்த ஆசனங்கள்தான் கிடுகும், சாக்கும்!

மலையகத்திற்குப் பிழைக்க வந்த கூலியான இழித்துப் பழிக்கப்பட்ட ஒரு அன்பன் வெறுங் கட்டாந்தரையைப் பங்குபோடவே – என்ன வெள்ளை மாளிகை விருந்துக்கு உபசரிப்பதைப் போலல்லவா உபசரிக்கிறான்.

தயங்கித் தயங்கி அவர்கள் மரத்தடிக்குச் செல்லவும், அவன் பெண்டாட்டி சொன்னாள், "தோ இந்த ஐயாதான் அப்போதெ இந்த வெறகு கட்டையைத் தந்தார் . . . " அவள் கண்களில் இன்னும் நன்றி மின்னிட்டது.

மரத்தடிச் சந்தோசம் சில மணிகள்தான் நீடித்தது . . . யாரோ மழை வேண்டித் தவமிருந்தது போல் சாமமாகவும் மழை கொட்டத் தொடங்கியது. மக்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினர். ஆசாரியாரும் சாந்தம்மாளும் ஆஸ்பத்திரி வளவினுள் நுழைந்தனர். கட்டுப்படுத்த முடியாதபடி ஆஸ்பத்திரியின் எல்லா அறையினுள்ளும் ஜனங்கள்! "தூங்க இடம் வேண்டாம். கால் காயம் நனைந்துவிடாதபடி வைத்துக்கொள்ள ஒரு இடமிருந்தால் போதும் " என்றிருந்தது. "இலங்கையிலும், இந்தியாவிலும், ஆசியாவிலும், ஏன் முழு உலகத்திலுமே மழைக்கு வெயிலுக்கு ஒதுங்க இடமில்லாத எத்தனை பாவிகள் இருப்பார்கள் " என ஆனந்தரங்காச்சாரியார் எண்ணிப் பார்த்தார். "கொஞ்ச நாட்களாகவே தனக்கு ஏற்படும் அனுபவங்களும், அதைத் தொடர்ந்து வரும் புதிய சிந்தனைகளும் " .

அவருக்குச் சிரிப்பு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகு ரம்யமான பொழுதுகளுடன் நுளம்புக் கடியோடு ஜோராகப் பொழுதைக் கழித்துக்கொண்டு மூன்றாம் நாளும் ஆஸ்பத்திரிக்குப் போய் காவலிருந்து காயத்திற்கு மருந்து கட்டிக்கொண்டு வருகையில் யாரோ பஸ் ஸ்டாண்டிலிருந்து ஒரு டிராக்டர் வவுனிக்குளம் - துணுக்காய் புறப்படவிருப்பதாகவும் ஆளுக்கு 250 ரூபாய் வசூலிப்பதாகவும் பேசிக்கொண்டதை அறிந்து இருவரும் போய் அதில் இடம் பிடித்துக் கொண்டனர். 15 ஆண்டுகளுக்கு மேலாக பராமரிப்போ, தார் போடுதலோ இல்லாமல் குன்றுங் குழியுமாக இருந்த பாதை தூக்கித் தூக்கிப் போட்டது. டிராக்டர் வளைந்தும், மடங்கியும், சேறை வாரிப் பெரிய டயரினால் தெளித்துக் கொண்டும் ஓடிக்கொண் டிருந்தது. குடியேற்றத் திட்டத்தில் மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளை ஒரு குடும்பத்தின் அங்கத்தினருள்ளும், இரத்த உறவுடைய சகோதரங்களுக்கும் கையளிக்க முடியுமேயன்றி - வெளியார் எவரிடமிருந்து வாங்கவோ விற்கவோ முடியாதென்று இலங்கைக் காணிச் சட்ட விதிகளில் ஒரு ஷரத்து உண்டு. காணி வாங்கமுதலே இது நாகமணிக்கும் தெரியும். புதிவு விடயமாக காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்ற போது அவர் சொன்னார் "உனது நிலைமை எனக்குத் தெரியுது . . . . நீ ஆனந்தரங்காச்சாரியின் பிறந்த மாவட்ட உப பிரிவான புத்தூருக்குப் போய் அவர்களின் கிராம சேவகரிடம் நீ ஆனந்தரங்காச்சாரியாரின் இரத்த உறவினன்தானென்று ஒரு சத்தியக் கடதாசி பெற்று வந்தால்தான் என்னால் எதுவும் செய்துதரமுடியும்" என்றார். நாகமணி விழுந்தடித்துக் கொண்டு புத்தூர் கிராமசேவையாளர் துரைசிங்கத்திடம் ஓடினான். நாகமணியின் விண்ணப்பத்தை முழுவதும் கேட்ட கிராம சேவையாளர் அமைதியாகவே சொன்னார்.

"நீர் ஆனந்தரங்க ஆச்சாரியாரின் உறவினரல்ல என்பது நான் மனசார அறிந்த விஷயம் . . . . என் மனசாட்சிக்கு விரோதமாக ஒரு சத்தியக் கடதாசி என்னால் தரமுடியாது! யாராவது காசு வேண்டிக்கொண்டு அப்படிச் செய்துதரக்கூடிய கிராம சேவையாளர் யாரும் மாற்றலாகி புத்தூருக்கு வருவினம்தானே . . . . ? அப்போது நீர் உமது காணியை மாற்றிக்கொள்ளலாம் . . ஆசாரியர் ஆனந்தரங்கரை எனக்குப் பலகாலமாய் தெரியும் . . . . மிச்சம் நேர்மையான மனிதன் . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.அவர் என்றைக்குமே உம்மிடம் வந்து எனது காணியைத் திருப்பித் தா .......என்று நிற்கப் போவதில்லை!"

இவருக்கு டிராக்டர் குலுக்கியடித்ததில் பொருத்துப் பொருத்தாத் தேகம் நோ எடுத்தது. மாலையாகவும் மல்லாவிச் சந்தியில் வந்து நின்றது. அவர்களுக்கு இன்னும் இரண்டு மைல்கள் உள்ளே யோகபுரத்திற்குப் போகவேண்டும்.

பழைய நண்பர்கள், தெரிந்தவர்கள் என்று யாருமே கண்ணில் படவில்லை. இளம் தலைமுறையினருக்கோ அவர்களை யாரென்று தெரியவில்லை. இங்கும் அகதிகள்தான் நீக்கமற மறைந்திருந்தார்கள். மற்றப்படி இருபது வருடத்திற்கு முன்பிருந்தது போலவே இன்னுமே ஓலையாலே வேய்ந்த ஏழெட்டுக் கடைகள்தான் இருந்தன. நாகமணிக்குக் குழந்தைகள் இருக்குமோ இல்லையோ. ஒரு விசுக்கோத்துப் பெட்டி வாங்கிக்கொண்டு போகக் கூட இயலாதபடி பணமெல்லாம் தீர்ந்துவிட்டிருந்தது. மெல்ல நடக்கத் தொடங்கினர். சில அகதிகள் மரநிழல்களில் அங்கத்தைய காடுகளிலும் வயல்வெளிகளிலும் கிடைக்கக்கூடிய கொவ்வை, முசுட்டை, சுண்டைக்காய், முளைக்கீரை, பனங்கீரை, புதினை, அகத்தியிலை என்பவற்றில் கறி சமைத்துக் கொண்டிருந்தனர். ஆசாரியாருக்கு சில மர நிழல்களில் இளைப் பாறுகின்ற போது மற்ற அகதிகளிடம் எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள் என்று ஆறுதலாக இரண்டு வார்த்தைகள் பேசவேண்டும் போல் இருந்தது. "நானே பரதேசி . . . இவர்களை விசாரித்துத்தான் என்னாகப் போகிறது " என்று மேலே நடந்தார்.

ஆனந்தரங்காச்சாரியாருக்கு எப்போதும் தன் கலைத்துவத்தின் மீதும் சிருஷ்டியாற்றல் மீதும் அளவிடமுடியாத வித்துவச் செருக்கு இருந்தது.

கலைத்துவம் செறியாத எந்தப் படைப்பையும் அவர் ஆராதித்தது கிடையாது!

எவனொருவனிடம் கலை ரசனையில்லையோ . . . . . அவனால் வாழ்க்கையை அனுபவிக்க முடியாதென்பது அவர் நம்பிய தத்துவம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கலைக்கூடத்தில் சாதாரண மேசை, கதிரை போன்ற பொருட்களைச் செய்விக்க வந்தோரிடம்,

"தம்பி ... இது பட்டுக்குஞ்சம். விளக்குமாறு வேலை பார்க்காதென்றோ – அம்மி கொத்திறதுக்குச் சிற்பி எத்தகையனே? " என்றோ சொல்லி அனுப்பிவிடுவார்.

இன்று, "சூரியர், சந்திரர், பந்துக்கள், சபையோர், அக்னி சாட்சியாக இறுதிவரையிலும் ஏழு முழம் புடவையும், பனியிலும், மழையிலும் காப்பேன் " என்று உறுதியளித்துக் கைப்பிடித்தவளின் பசியைப் போக்க முடியாமல் . . . . கிருஹஸ்த தர்மத்தையே கடைப்பிடிக்கமுடியாத நிலை வந்து விடுமோ என எண்ணுகையில் முதன் முதலாக வாழ்கை பற்றியும், அது காட்டும் கோரப்பற்களைக் கண்டும் பய ந்தார்!

"நாகமணி அரை ஏக்கர் நிலம் எமக்குக் குத்தகைக்காவது தருவான். அதில் ஒரு குடில் சமைத்துக் கொண்டு, ஒரு ஏர் செய்ய வேண்டும். ஓரிணை மாட்டைக் கூலிக்கேனும் பிடித்து இந்த ஈரம் மாற முதலே உழுதுவிட வேண்டும். கொஞ்சம் எள்ளு, கொஞ்சம் மிளகாய், கொஞ்சம் மரவள்ளி, கொஞ்சம் நிலக்கடலை அங்கே போடவேண்டும் சாந்தம் வேணுமென்றால் வாய்க்கால் கரையோரமாகப் பயத்தம் விதைகளையும் பூசணி விதைகளையும் ஊன்றட்டுமே!" மெல்ல நடந்து வந்து நாகமணியின் காணி முனைக்கு வந்தபோது, கண்ணன் மாளிகையைக் கண்ட குசேலரின் பரவசம் பிறந்தது. பொழுது நன்கு மறைந்துவிட்டிருந்தது. அந்தியின் கருக்கல் வானம் சிவப்பாகவும், மன்னார்க் கடற்காற்று துரத்தி வந்த சில மழை மேகங்களையும் கொண்டிருந்தது. பதிவாகச் சில கூழைக் கடாக்களும், நாரைகளும் வவுனிக்குளம் நோக்கிப் பறந்துகொண்டிருந்தன.

படலையில் போய் நின்று "பவ் "யமாக அழைத்தார்.

"தம்பி . . . . நாகமணி! "

"யாரது? "என்றபடி வந்த நாகமணிக்கு இவர்களைப் பார்த்ததும் முகம் இறுகிப் போனது. ஒரு சம்பிரதாயத்திற்காவது "வாங்கோ"என்று சொல்லாமல் மலைத்துப் போய் நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கெட்டுப் போனவன் கிழக்கே போ என்பார்கள் . . . . நான் கொஞ்சம் தெற்காக வந்துவிட்டேன்" என்றார் ஆச்சாரியார்.

எப்படியும் உள்ளே அழைப்பான் என்ற நம்பிக்கையில் உள்ளே பார்த்தனர். அவரே வைத்து விலாட்டு, அம்பலவி, செம்பட்டான் எல்லாம் பெருவிருட்சங்களாக வளர்ந்தும் கனிந்தும் நின்றன. வேலியோரம் நாட்டிய முருங்கை மரங்கள் ஆயிரக்கணக்கில் காய்த்தும் பறிக்கப்படாத காய்கள் முற்றிவெடித்துச் சிதறியுமிருந்தன.

நடுவளவில் இன்னுமொரு கிணறு வெட்டிக்கட்டியிருந்தான்.

நாகமணி தொண்டையைச் செருமிப்போட்டு வேறொரு திசையில் பார்த்துக்கொண்டு வேகமாகப் பேசினான்.

"ஆசாரியார் வயதில பெரியவர் நீங்கள். என்னைக் குறைவிளங்கப்படாது . . . இந்தக் காணிப் போமிற்று இன்னும் என் பெயருக்கு மாற்றப்படவில்லையென்ற விஷயம் உங்களுக்குத் தெரியாமலில்லை. நீங்களிப்ப உங்கடையூரை ஆமி பிடிச்சுப்போட்டானென்று வந்திருக்கிறியள் . . . வந்த ஆமி திரும்பிப் போறதென்றது நாளைக்கோ, அடுத்த வருஷமோ இல்லை ஒருநாளுமில்லையோ என்று ஆரும் அறுதியிட்டுக்கூறேலாது.... நானும் உங்கடை நிலைமையைப் பார்த்து ஒரு பக்கமாயிருங்கோ என்று சொல்லிவிட.... நாளடைவில யாருக்கும் மனது மாறிறது சகஜம்தானே . போய் இயக்கத்தில இது எங்கட காணி . . . . நான் இந்த ஆண்டிப் பயலைக் காணியைக் கவனிக்கச் சொல்லித்தானிருத்தினேன் . . . . இப்ப எழும்பிறானில்லை என்றொரு வழக்கைக் கொடுக்கும் நிலை வந்து.... நான் வெளியேறிற சந்தர்ப்பம் வரக்கூடாது பாருங்கோ....!"

"சீ . . . அப்படியொரு அயோக்கியனென்றோ இந்த ஆனந்தரங்கனை நினைத்துக் கொண்டிருக்கிறாய் . . . . அற்ப மானிடா!" என்று கேட்கவேணும் போல் இருந்தது. வலிந்து மௌனம் காத்தார்.

"இரண்டு லட்சம் பெறக்கூடிய காணியை பதினையாயிரத்தை எறிஞ்சு அமுக்கின கொள்ளைக்காரனெல்லே நீ . . . ."

ஆவேசப்பட்ட சாந்தம்மாளை அடக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏய் . . . . சாந்தம்! அப்படியெல்லாம் நாம பேசக்கூடாது, விலை தலை எல்லாம் முடிஞ்சுபோன கதை. தன் காணியை நாம் மீண்டும் பிடித்து விடுவோமோ என்ற பயம் அந்த மனுஷனுக்கு இருக்கும் போது, மேலும் நாம் தர்க்கித்து, அதனால் மனக்கிலேசத்தை வளர்க்கப்படாது . . . அது நமக்கு . . . நன்மை தராது . . . . ! "

மெல்ல நடந்து தனது பக்கத்துக் காணிக்காரரும் பழைய தோஸ்துமான நடராசாவின் படலையில் போய் நின்று கூப்பிட்டார்கள்.

"நடராசா . . . தம்பி . . . நடராசா! "

"ஐயாதானே போனமாதம் போய்விட்டார்! "

"எங்கை ராசா? "

மேலே வானத்தைக் காட்டினான்

இருவருக்கும் மின்னல் தாக்கியதுபோல அதிர்ச்சி!

"ஏனப்பு . . . . என்ன நடந்தது . . . ? ஒரு காய்ச்சல் தடுமல் என்று படுக்காத மனுஷனாச்சே! "

"கொஞ்சக்காலமாய் அவருக்கு மெல்லிய டயபிட்டீஸ் பிரச்சினையிருந்தது .... ஒவ்வொரு நாளும் ஊசி போடுவிக்க வேணும் . . . இப்பத்தான் ஆஸ்பத்திரியளில மருந்து மாயங்களில்லையெண்டது தெரியுமே . . . . ஒரு நாள் தலையைச் சுத்துதென்று படுத்தார். அடுத்தநாள் போயிட்டார் . . . . "

"நீங்கள் யாரென்று . . . . ? "

"ஐயாவுக்கு என்னைத் தெரியும்"

ஏக காலத்தில் இருவரிடமும் நீண்ட பெருமூச்சுக்கள் எழுந்தன. இப்போது தம்மை அகதியாய் மட்டுமல்ல அனாதைகளாயுமுணர்ந்தனர். கால் போன திசையில் நடக்கத் தொடங்கினார்கள்.

அவர்களுக்கென்றொரு குடில் கிடைக்காமலா போகும்?

**(கணையாழி _1996)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் வரமாட்டான்

நெரிசல் மிகுந்த பெர்லின் மாநகருக்கு வெளியே பத்துக் கிலோ மீற்றர் தள்ளி பூம்பாளைகள் தளைந்து தொங்கத் தொங்க 'பிர்கெ', 'எர்லெ' மரங்களுடன், விதைகளையெல்லாம் நிலத்தில் விசிறிவிட்டு நிற்கும் 'ஹாசெல்', 'வால்' மரங்களும் இலை மறைந்து போகும்படி கனிந்து நிற்கும் 'பியர்ஸ்' 'அப்பிள்' மரங்களும் சேர்ந்து கூட்டணியமைத்துக் கொண்டு, நூறு ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் பரவி விரவி அமைந்த சோலை அது.

அதன் மத்தியில் ஜெர்மன் சான்ஸலரின் கோடைகால வாசஸ்தலத்திற்கு ஒப்ப ஓர் மாளிகை முகப்பில் உரோமானியக் கலைவடிவில் சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டு கனகம்பீரமாக நிற்கிறது.

பணி நிமித்தம் வந்து Spandau என்ற இந்த இடத்தைப் பார்த்தபோது என் பள்ளிக்கூடப் புத்தகங்களில் 'ஆங்கிலக் கவி வில்லியம் வேட்ஸ்வேர்த் வாழ்ந்ததாக வர்ணிக்கப்படும் 'லேக் டிஸ்ரிக்ட்' இப்படித்தானிருக்குமோ' என வியந்தேன்.

இத்தனை ரம்மியமான சூழலில், வெளித்தோற்றத்தில் தொன்மையுடன், ஒரு தபோவனத்தைப்போல அமைதியாய், உள்ளே அதிநவீனத்துவம் நிறைந்த இலத்திரனியல் கருவிகள் கொண்டு விசாலமாய் ஒரு கட்டிடம் எம் நாட்டில் கிடைப்பின் அங்கு ஒரு மருத்துவ வளாகத்தையே அமைத்து விடலாம்.

இங்கும் ஏதோ பரவாயில்லை. சரியானபடி பராமரிப்புக் கிட்டாத குழந்தைகளுக்கும், கொடுமையான பெற்றோரினாலோ பாதுகாவலரினாலோ துன்புறுத்தப்படும் குழந்தைகளுக்கும், அரவணைப்பும் அடைக்கலமும் தருகிறது இந்த மாளிகை!

'இத்தனை செல்வம் கொழிக்கும் நாட்டிலும் அவ்வகை அவலங்கள் உண்டா?' என யாரும் புருவங்களை உயர்த்தலாம். துரதிஷ்டவசமாக 'உண்டு!' வாஸ்தவம். செல்வம் புகுந்து நிவர்த்தி பண்ண முடியாத தளங்கள் சிலவுண்டு. அவை இவை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் குடும்பம், எங்கள் பிள்ளைகள், அவர்களின் வளமான எதிர்காலம் என்ற பொறுப்பான சிந்தனைகளின்றி சதா fantacy, sex என்று அலையும் பிரகிருதிகளுக்கு வாய்த்த குழந்தைகள் - பிறப்பால் மனோ, உடல் வளர்ச்சி குன்றிய குழந்தைகள், பெற்றோரை இழந்து விட்ட குழந்தைகள் - குழந்தையை ஒரு சுமையாக, அதை வளர்க்கும் பொறுப்பை ஏற்க முடியாத சுகவாசி ஜீவன்களின் குழந்தைகள் - முறைகேடான உறவுமுறைகளாலோ, திருமணமாகாமலே கர்ப்பமாகிப் பின் கருக்கலைக்க முடியாதபடி நேர்ந்து பிரசவித்துவிடுகிற குழந்தைகள் - குழந்தைத் தாய்மார் (child mothers ) பிரசவிக்கும் குழந்தைகள் - தீராத பிணியாளர், சித்த சுவாதீனமற்றோர், விபச்சாரிகள், உழைத்து வாழப் பிடிக்காத சோம்பேறிகள், தத்தாரிகள், நாடோடிகள், பரதேசிகளுக்கும் பிறக்கும் குழந்தைகள் - பிறப்பில் சந்தேகம் போன்ற காரணங்களால் அல்லது காரணம் எதுவுமின்றியே பெற்றோரால் வெறுத்து ஒதுக்கப்படும் குழந்தைகள் - குடி, போதைவஸ்துகளுக்கு அடிமையாகி மீளமுடியாது போனவர்களின் குழந்தைகள் - மனோ வக்கிரங்கொண்ட மானிட மிருகங்களிடையே அகப்பட்டுக் கொண்டு இம்சிக்கப்படுகையில் மீட்டு வரப்பெற்ற குழந்தைகள் - இவர்கள் அனைவர்களினதும் சரணாலயம் அது!

முதன் முதலாக . . . சற்றேறத்தாழ நான்கு மாதங்களுக்கு முன் அங்கு மீட்டு வரப்பட்ட பத்து வயதுப்பையன் ஒருவனையும் இவனது ஆறு வயதுத் தங்கையையும் எனக்கு அறிமுகம் செய்தார்கள். “இருவருமே இயற்கையாகப் பிறந்த இயல்பான குழந்தைகள். பேற்றோரின் மோசமான தாபரிப்பாலும் இம்சைகளாலும் வாய் இயல்பாய்ப் பேச முடியாதபடி திக்கு வாய்க் குழந்தைகளாக ஆக்கப்பட்டவர்கள்.” என முன்பே எனக்குச் சொல்லி வைத்தர்கள்.

அக்குழந்தைகள் முதற்சந்திப்பில் என்னை அதிசயமாய்ப் பார்த்தார்கள். நானும் என் மேசையில் அமர்ந்தபடி கிட்ட வரும்படி சைகை காட்டவும், மிரள மிரள விழித்தனர். ‘bitte kommt ihr. . . . keine Angst’ (கிட்ட வாருங்கள்... பயப்பட வேண்டாம்) இருவரும் அறைக்கதவின் கைபிடிகளை ஆளுக்கொன்றாகப் பிடித்து திருகியபடி நின்றனர். இரண்டுமே அழகான குழந்தைகள், துருதுருத்த கண்களும், தாழந் தும்பைப்போல் திடுப்பென மடிந்து கீழிறங்கும் கேசமும் கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருமே அவர்கள் ஒரு தாயின் பிள்ளைகளென்பதை இலகுவில் கூறிவிடலாம்.

இருவருக்கும் கைகளிலும், புயங்களிலும், கால் தொடைகளிலும், முதுகிலும் அப்போது தான் சின்னம்மை வந்தாறியது போன்ற வட்ட வட்டத் தழும்புகள் இறைந்து கிடந்தன. மேசை லாச்சியைத் திறந்து சில lutscher (இனிப்பு வகை)களைக் காட்டி "இவை உங்களுக்குத்தான் வந்து பெற்றுப் போங்கள்.... நான் உங்களை ஒன்றுமே செய்ய மாட்டேன்" என்றேன்...... பையன் கதவின் குமிழ்களை விடுத்து ஒரு சாண் முன்னே வந்து நின்றான். நிறையவே கூச்சப்பட்டான். அவர்களின் கவனத்தைத் திருப்ப வேண்டி "வெளியே மழை பெய்கின்றதா? " என்றேன். இருவரும் "இல்லை" யென்பதாகத் தலையசைத்தார்கள்.

"okay . . . . . komm . . . . . komm . . . . ."

சின்னச் சின்ன அடிகளாய் வைத்து இருவரும் மெல்ல மெல்ல என்னை நோக்கி ஊர்ந்தனர்.

"சீக்கிரம்" என்று அதட்டலாம் போலிருந்தது. வேண்டாம் . . . . . . பயந்து விடுவார்கள்!.

அருகில் வந்ததும் இருவரும் மேசையின் விளிம்புகளைப் பிடித்துக் கொண்டு நின்றார்கள். கண்களில் இன்னும் மிரட்சி, அவர்களை இயல்பாக உரையாட வைக்க வேணுமே? கேட்டேன்.

"உங்களுக்கு என்ன பெயர்? "

"லி லி லி லி லி . . . . . . . . . லியோ"

"ஜெஜ் . . . . ஜெஜ் . . . . ஜெஜ் . . . ." என்று பரிதாபமாக இழுத்தாள் தங்கை.

"ஜெனினா? "

"இல்லை" என்பதாகத் தலையசைத்தாள்.

"ஜெனித்?"

மறுபடி தலையசைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஜெனட்?"

"........"

"சரி ..... நீயே சொல்லு ..... "

"ஜெஜ் .... ஜெஜ் .... ஜெஜ் .... ஜெனி∴பர்! "

பெயரைச் சொல்லிவிட்ட மகிழ்வில் முகம் ஜோதியாய் மலர்ந்தது.

இருவருக்கும் lutschers ஐக் கொடுத்தேன். பெற்றுக் கொண்டு அவர்கள் பாணியில் "danke" (நன்றி) என்றனர்.

"mein name ist ...... Susi" என்றேன்.

"Usi" என்றனர் இருவரும்.

"nein ...... nein (இல்லை) Su .... si" என்றேன்.

"Ssu . . . su . . . . . su . . . . . ."என்றாள் ஜெனி∴பர். "si" என்பதைச் சேர்த்துச் சொல்வது அவளுக்குக் கஷ்டம். அதிக இடைவெளியின் பின் "si" என்றாள். என் பெயரைச் சொல்லிப் பழகியதில் எம்மிடையேயிருந்த அந்நியத் தன்மையின் திரை சற்று விலகியது.

லியோ என் பக்கமாக வந்து நின்றான். கைகளை நீட்டினேன். தயங்கித் தயங்கி என் கைகளைப் பற்றியவன், என் மணிக்கட்டிலிருந்து முழங்கை வரை தடவிப் பார்த்து விட்டுச் சிரமப்பட்டுக் கேட்டான்:

"உன்னையும் நெருப்பினால் சுட்டார்களா? "

"இல்லையே ஏன்? "

"பின்னே ..... ஏன் கறுப்பாயிருக்கு? "

"ஓ . . . அதுவா . . . . ? அது . . . எங்கள் நாட்டில் சூரியன் ரொம்பத்தான் சூடாக எறிக்கும் .... அதனாலிப்படி .... ப்ரௌணாக .... "

ரொம்பத்தான் விளங்கியவர்கள் போல் இருவரும் "Ach... so ? (அப்படியா) " என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையில் சிற்றுண்டி, காப்பி ஆனதும் குழந்தைகளைச் சிறு குழுக்களாகப் பிரித்து அந்தச் சோலையில் உலாவவிடுவது வழக்கம். மீன் தொட்டிகள், Aquarium என்பன இருப்பதால் குழந்தைகள் தம்மிஷ்டத்திற்கு ஓடியாடாதபடி சற்றே கண்காணித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு ஒரு மாலையில் அந்நிலையத்தின் பொறுப்பதிகாரிகளில் ஒருவரும் உளவியலாளருமான டாக்டர் Sela மர பெஞ்சொன்றில் அமர்ந்தபடி லியோவினதும், ஜெனி்ஃபரினதும் பிரச்சினைகள் பற்றியும், அவர்களுக்கு எப்படிப் பேச்சுப் பயிற்சி கொடுக்க வேண்டும் என்பது பற்றியும் எனக்கு விளக்கமளித்தார்.

"துரதிஷ்டவசமாக அவர்களின் பெற்றோர்கள் இருவருமே மீளமுடியாத முடாக்குடியர்கள் . . . . . . " தகப்பனுக்கு spedition ஒன்றில் மாதத்தில் ஏழெட்டு நாட்கள் லொறிக்குப் பாரமேற்றும் வேலை, தாய்க்கும் கொம்பனியொன்றில் கிளீனிங் வேலை, கிடைக்கும் ஊதியம் முழுவதையும் இருவரும் ஒரே வாரத்தில் குடித்துத் தீர்த்து விடுவார்கள்.

போதை மீறினால் எப்போது வீடு திரும்புவார்கள் என்பதெல்லாம் கூறமுடியாது. திரும்பாமலும் போகலாம். வீட்டுக்கு வந்தாலும் பிள்ளைகளின் பசி, பட்டினி, படிப்பு பற்றி அக்கறையில்லை. சதா அடியும் உதையும்தான்! பல தடவைகள் குழந்தைகளை வெளியே குளிரில் தள்ளிக் கதவைச் சாத்தி விட்டிருக்கிறார்களாம்!

ஒரு முறை லியோவின் உடம்பில் சிகரெட்டால் சுட்ட காயம் இருப்பதைக் கண்டு அவன் ஸ்கூல் டீச்சரே Jugenda (குழந்தைகள் கவனிப்பு இலாகா) அவக்குப் போன் பண்ணிப் புகார் கொடுத்திருக்கிறார். அவர்களும் பல முறை வந்து இவர்களுக்குப் புத்தி சொல்லியும், எச்சரித்தும் போயிருக்கிறார்கள்.

ஒரு முறை லியோவும் ஜெனி்ஃபரும் ஸ்கூலால் வீடு திரும்பிய போது வீடு பூட்டிக் கிடந்திருக்கிறது. திறப்பு இல்லாததால் ஒரு பகலும் ஒரு இரவும் வீட்டு வாசலிலே கிடந்து விறைத்திருக்கிறார்கள். இதை அவதானித்த அயல் வீட்டுக்காரி ஒருத்தி பொலிஸுக்கு போன் பண்ணியதில் அவர்களும் தங்கள் பங்குக்கு வந்து எச்சரித்து விட்டுப் போயிருக்கிறார்கள். எல்லாமே எருமை மாட்டில் மழை தூறின கதைதான். குடிக்கப் பணமில்லாத போதோ, அல்லது கணவனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியும் தமக்குள் சண்டை போட்டுக் கொண்டு எரிச்சல் 'மூட்' டில் இருக்கும் போதோ, குழந்தைகள் சிறிது சத்தம் செய்தாலும், அவர்களை நையப் புடைத்துத் துன்புறுத்தும் அவர்கள் போக்கில், சிறிதும் மாற்றமில்லை. தங்கள் சொந்த வீட்டிலேயே...... அரவணைத்து ...... அன்பூட்டிச் சீராட்டி வழிநடத்தல் செய்ய வேண்டிய பெற்றோர்களுக்குத் தினந் தினம் பயந்து நடுங்கியே வாழ்ந்த அவர்கள், அனுபவித்த துயரங்களை முழுவதும் விபரித்தால் யார் உள்ளமும் பதைக்கும்!

அவர்கள் பியர் வாங்கிக் குடிக்க வைத்திருந்த சில்லறையை பசியின் நிமித்தம் எடுத்துப் போய் வெளியில் "கறி வூஸ்ட்" வாங்கிச் சாப்பிட்டார்களென்று லியோவையும், ஜெனிஃபரையும் தாயும் தகப்பனும் திமிறவிடாது கையையும் காலையும் மிதித்துக் கொண்டு உடல் பூராவும் சிகரெட்டால் சுட்டிருக்கிறார்கள்! அவர்கள் போட்ட அலறலில் ஏதோ விபரீதம் நடப்பதையுணர்ந்த யாரோ பொலிஸை அழைத்திருக்கிறார்கள். பொலிஸ்தான் அவர்களை எம்மிடத்தில் கொண்டு வந்து ஒப்படைத்தார்கள். அன்புக்கு ஏங்கிய பிஞ்சு உள்ளங்களுக்கு அடுத்து அடுத்து ஏற்பட்ட பேரதிர்ச்சிகளால் மூளையின் மென்கலங்களில் விரிசல்கள் ஏற்பட்டுக் குருதிப் பெருக்கு ஏற்பட்டதாலே அவர்கள் ஞாபக சக்தி பாதிக்கப்பட்டுப் போச்சு. விபத்துக்களின் போது மூளையில் அடிபட்டு குருதி உறைவதாலும் இந்நிலை வரலாம். இந்நோயை Aphasie என்பர்.

"இந்நோயின் இதர குணங்கள்? "

"ஏதாவது உறுப்போ இல்லை உறுப்புகளோ கூட இயங்காமல் போகலாம் . . . . அந்த வகையில் லியோவும் ஜெனிஃபரும் கொஞ்சம் அதிஷ்டசாலிகள் . . . . தம் பெயரையே மறந்து போனவர்களை நான் சந்தித்திருக்கிறேன் . . . . கற்றிருந்த வார்த்தைகளை மறந்து போவதால் பேச்சுத் தடைப்படும் . . . . அல்லது எந்த வார்த்தையை எங்கே பாவிப்பதென்பதில் குழப்பமேற்படுவதால் பேச மிகவும் சங்கடப்படுவர். வார்த்தைகளை மறவாது இருந்தாலும் இலக்கணப்படி வார்த்தைகளைக் கோர்ப்பதில் சிக்கலுண்டாகும். சிலர் வெறும் தந்தி வசனங்களைப் போலவே பேச முயல்வர். அல்லது சிலர் இலக்கணப் பிழைகளுடனேயே தொடர்ந்தும் பேசுவர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதை ஒப்பரேஷனால் சரி செய்ய முடியாதா? "

"அடிக்கடி மயக்கம் அல்லது கபாலத்தினுள் தீராத வலி, உபாதையாயிருந்தால் மூளையில் ஒப்பிரேஷன் செய்து குருதி உறைவுகளை அப்புறப்படுத்தலாம் . . . . . ஆனால் எந்த ஒப்பிரேஷனாலுந்தான் மூளையை ரிப்பேர் பண்ண முடியாதே? "

"இவர்ளை குணப்படுத்தும் மார்க்கம்தான் என்ன? "

" Speech Theraphy (பேச்சுப்பயிற்சி) ஒன்றேதான் வழி! "

"மெல்ல மெல்ல அவர்கள் மறந்து போன வார்த்தைகளையும் அவற்றை இலக்கணப்படி பேசவும் எழுதவும் நாங்கள்தான் கற்றுத்தர வேண்டும் . . . . லியோவையும், ஜெனி்ஃபரையும் எந்தக் குறையுமில்லாத குழந்தைகளாக மீட்டெடுக்க முடியும். அந்த நம்பிக்கையில்தான் அவர்களை நான் உம்மிடம் ஒப்படைக்கிறேன்."

"பெற்றவர்கள் பிள்ளைகளைப் பார்க்க வந்து போவதுண்டா? "

"தகப்பன் இதுவரை வந்ததேயில்லை. அந்தப் பிரகிருதி வராமலிருப்பதே இப்போதைக்கு நல்லது . . . . . . அவன் பெயரை எடுத்தாலே குழந்தைகள் நடுங்கிப் போகுதுகள் . . . . ஜெனிபஃருக்கு மட்டும் இன்னும் தாயின் நினைப்பிருக்கு . . . . பாவம் அவளுக்கு ஆறு வயதுதானே? இன்னும் தாயின் சூடும் அரவணைப்பும் வேண்டிய பருவமல்லா? "

"தாய் எப்போதாவது வந்ததுண்டா? "

"இரண்டு மாத முன்பே ஒரு தடவை வந்தாள் . . . . . சரி, வரும் போது தான் ஒரு நல்ல சாப்பாட்டையோ . . . . கடைசி ஒரு Hamburger வாங்கி வருவாளா? . . . . . சுயிங்கம் கொண்டு வந்து தாறா சுயிங்கம்! "

"சனி ஞாயிறுகளில் வந்து பிள்ளைகளுடன் விளையாடிப் பொழுதைக் கழிக்க எல்லாப் பெற்றோர்களையும் அனுமதித்திருக்கிறோம் . . . . . . இரண்டு வாரமுன்னாலே "அடுத்த ஞாயிறு வர்றேன் டொக்டர்" என்று போன் பண்ணினாள். அவளை ஜெனிபஃருடன் கூட பேச வைத்தேன். ஞாயிறும் கழிந்து நாலைந்து நாட்கள் தள்ளி மீண்டும் போன் பண்ணுகிறாள், "போன ஞாயிறு எனக்குச் சரியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Schwer kopf (மிகையாய் குடிப்பதால் உண்டாகும் மண்டைவலி) மன்னிக்க வேணும் . . . . அடுத்த வாரம் வர்றேன்! " . . . . . அடுத்த ஞாயிறாவது வந்தால் தானே? . . . . .

இவர்களுக்கு மிக உயர்ந்த பதிப்பில் வழுவழுப்பான தாள்களில் அழகழகாக வர்ணப்படங்கள், ஓவியங்கள் போட்ட பாடப்புத்தகங்கள். பார்த்தால் எமக்கே இன்னொரு தடவை ஆரம்ப வகுப்பக்களிலிருந்து படிக்கலாம் போல ஆசை வரும். அப்புத்தகங்களை விரித்துப் பார்க்கையில் அவர்கள் கண்களில் தோன்றும் ஆவலும், குமிழும் ஆனந்தமும் வர்ணிக்க முடியாது! நான் ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிப் படங்களின் கீழ் உள்ளவற்றை வாசித்துக்கொண்டு போகவும் லியோவும் சேர்ந்து சொல்வான். பின் படங்களை நான் காட்டிய போது Elefant, Zebra, Pfau (மயில்), Hase (முயல்) – Auto . . . . Schiff, Flugzeug (விமானம்) என்று ஆரம்பத்தில் சற்றே திக்கியும் பின் திருத்தமாகவும் வாசிப்பான். ஒரு நாள் படமில்லாத ஒரு புத்தகத்தில் Elefant சொல்லைக் காட்டி வாசிக்கச் சொன்ன போது முழித்தான். பின் எழுத்தைக் காட்டி தனியே கேட்ட போது E I Z என்றான். I I R என்றான். E I M என்றான். உச்சமான திக்கலுடன்! பின் யானையின் படத்தை காட்டிய உடனே Elefant என்றான் எதுவித திக்கலுமில்லாமல்! எங்களுக்கு அப்போதுதான் விஷயம் ஓடிவெளித்தது!

இவன் நாம் சொல்லிக் கொடுக்கும் வார்த்தைகளை மனதில் வைத்திருந்து பின் படங்களைப் பார்த்ததும் ஒப்புவிக்கிறானேயன்றி எழுத்துக்கும் அவனுக்கும் சம்பந்தமேயில்லை. இனி இவனுக்கும் ஜெனி∴பர் போலவே a,b, c, d, என்றுதான் ஆரம்பிக்க வேண்டும்!

ஜெனி∴பர் இப்போதெல்லாம் என் கைகளைப் பிடித்துக் கொண்டு உலாத்துகிறாள். ரப்பர் பொம்மை போல் அவள் ஸ்பரிசந்தான் என்ன சுகம்! அணைத்தாலோ, லேசாக நெருக்கிக் கட்டிப்பிடித்தாலோ, முத்தங் கொடுத்தாலோ கூச்சத்தில் உடல் வியர்த்துப் போகிறாள்..... அவர்களுக்கு அதெல்லாம் புது அனுபவங்கள்!

ஒழுங்கான பேச்சுப் பயிற்சியில் இப்போதெல்லாம் என்னை "கூ கூ கூ ஊ ஊசி " என்று அழைக்கிறாள். சில வேளைகளில் 'குஷி' பிறந்து விட்டால் தானே ஓடி வந்து அணைக்கவும் செய்கிறாள். நாமெல்லாம் இருக்கையில் 'தாயோ தந்தையோ எவராகிலும் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மை இனிமேல் சிகரெட்டால் சுடவே 'முடியாது' எனத் திடமாக நம்புகிறாள். ஜெனிஃபருக்கு அவள் தாய் அவளிடம் வந்து 'ஒரு கனவில் போல் குலவும் அந்த அரைமணி நேர இன்பத்திற்கான ஏக்கம்' இன்னும் உண்டு.

இன்று காலையில் எழுந்தவுடன் கேட்டாள் "சூ சூ சூ ஊ ஊசி இன்று ஞாயிற்றுக்கிழமையா? "

"இல்லையே . . . . . ஏன்டா? "

"அப்போ எப்பத்தான் ஞாயிறு வரும்? "

அப் பிஞ்சு எழுப்பும் கேள்வியின் 'த்வனி' யைப் புரிந்து கொண்டு ஆதரவாக அவளைத் தூக்கி மடியில் இருத்தி வைத்துக் கொண்டு அவள் கேசத்தை கோதிவிட்டுக் கொண்டே சொன்னேன்:

"ஜெனிஃபர் இன்றைக்கும் இரவு தூங்கி..... நித்திரையால் காலை எழும்பி...... "

"நாளைக்கும் இரவு தூங்கி . . . . நித்திரையால் எழும்பி ...."

"நாளையின்று தூங்கி . . . . நித்திரையால் எழும்பி . . . . "

"அடுத்தநாளும் தூங்கி.... நித்திரையால் எழும்பி ...."

ஜெனிஃபரும் சேர்ந்து கொண்டு ராகத்துடன் சொன்னாள்.

"அடுத்தநாள் தூங்கி . . . . நித்திரையால் எழும்பி . . . . "

"அதுக்கு அடுத்தநாளும் தூங்கி.. நித்திரையால் எழும்பி...."

"எழும்பினால் . . . . ? "

"ஜெனிஃபரின் அம்மா வந்து நிற்பாளே . . . . . ! "

"நிஜமாலுமா . . . . ? "

"நிஜமாலும் . . . . ! "

அவள் தன் பிஞ்சு விரல்களை எல்லாம் நீட்டி இன்னும் எத்தனை நாட்களென எண்ணத் தொடங்குகிறாள் . . . . .

என் நெஞ்சு நெகிழ்கிறது ..... எனக்கு மட்டும் தெரியும்.... அவள் அடுத்த ஞாயிறும் வரமாட்டாள்!

**(லண்டன் நியூஹாம் தமிழர் நலன் புரிக்கழக மலர் - 1996)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணின்று மீளினும்........

சங்கர நாராயணசாஸ்திரிகள் வீட்டின் முன்விறாந்தையில் தன் பூணூலைச் சற்றே தளர்த்தி அதை வயலின் வில்லாக முதுகுக்குக் குறுக்காகப் பிடித்து மேலுங்கீழுமிழுத்துச் சொறிந்து கொண்டு நிற்கவும் பெரிய "வணக்கம" போட்டுக்கொண்டு வந்த தபாற்காரன் அவரிடம் இளநீலக்கவரிலான கடிதம் ஒன்றைக்கொடுத் தான். சாஸ்த்திரியாரிடம் வழக்கமில்லைத்தான் எனினும் அவரின் சீமந்தப்புத்திரன் அனந்து என்ற அனந்தகிருஷ்ணன் அமெரிக்கா விலிருந்து அனுப்பிய கடிதத்தைப் பார்த்த சந்தோஷத்தில் சிலவேளை சந்தோஷம் (இனாம்) ஏதாவது வெட்டலாமென்றொரு மெலிதான நப்பாசையில் ஒரு விநாடி அவ்விடம் தாமதித்தான். அவரோ அவன் நிற்பதையே கண்டுகொள்ளாதவராய் ஆவலோடு கடிதத்தைப்பிரித்து ஓசை நயத்துடன் படிக்கத் தொடங்கினார். சல்லி எதுவும் பெயரப்போவதில்லை என்பதை உய்த்துக் கொண்ட தபாற்காரன் மெல்ல அவ்விடங்கழன்றான். சாஸ்த்திரிகள் கைகள் வாழ்க்கை பூரா தட்ஷிணை, கிரயம், பாகம், காணிக்கை என்று வாங்கியே பழக்கப்பட்டவையன்றி கொடுத்தல் எனப்படும் கிரியையின் பழக்கமோ பரிச்சயமோ இல்லாதவை.

சம்பிரதாய வார்த்தைகள் முடியவும் எடுத்தஎடுப்பிலேயே அனந்து எழுதியிருந்த விஷயம் அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. திடுப்பென ஓசையையும், ராகத்தையும் "கட" பண்ணிக் கொண்டு வேறுயாராவது நிற்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்தார். பின் ஈஸிச்சேரில் போயமர்ந்து கொண்டு மனதோடு வாசிக்கலானார். மேலே படிக்கப் படிக்க நம்ப அனந்துவா இதை எழுதியது என்று அவரால் நம்பமுடியாமலிருந்தது.

உள்ளூர்ப்புரோகிதங்களுடன் மிகவரட்சியாய் இழுபட்டுக் கொண்டிருந்த அவர்கள் குடும்ப ஜீவனம் அனந்து படித்து ஆளாகி கனிமநிறுவனமொன்றில் உத்தியோகமும், அடுத்த ஆண்டே ஜப்பான் அரசு வழங்கிய ஸ்கொலஷிப்பும் கிடைத்தபின்னாலேயே செழிக்கத் தொடங்கியது. ஜப்பான் படிப்புக்களை முடித்துக்கொண்டு அமெரிக்கா வுக்குப்போய் அங்கு பிளாடெல்பியா பல்கலைக்கழகத்தில் கனிமத் துறையில் ஆய்வுகள் செய்யும் ஒரு குட்டி விஞ்ஞானியாகிவிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனந்துவுமோ சின்ன வயதிலேயே படிப்பில் கெட்டிக்காரன் மாத்திர மல்ல, பெற்றாருக்கு அடங்கின பிள்ளை என்றும் பெயரெடுத்துக் கொண்டவன். இல்லாவிட்டால் தனக்கு முப்பத்தைந்து வயதாகியும் கல்யாணமாகாமலிருப்பதைப் பொருட்படுத்தாமல் இன்னமும் தேமே என்றிருப்பானா. சம்பாதிக்கத்தொடங்கிய பின்னால் இரண்டு அக்காள் மாருக்கும் முதலில் திருமணங்களாகட்டும் பிறகு தான் பண்ணிக்கலாம் என்றுதானிருந்தான். சாஸ்த்திரிகள்தான் "சுமையோடசுமையாய் தங்கச்சி மைதிலியையும் கரையேற்றிட்டு கொஞ்சம் நிலம்வாங்கி ஒருவீடுங்கட்டிட்டா நாங்கள் இனிக்குறையொன்றுமில்லை என்று சந்தோஷமாக ஒரு மூலைல ஒக்காரந்திடுவோம்............ நீயும் ஃப்றீயாயிடுவாய் ராஜா" என்று சொல்லிக்கொண்டு அவன் வாழ்க்கை அஜந்தாவில் நிகழ்ச்சிகளை மேன்மேலும் புகுத்தியதால் அவனும் ஆணைகாட்டில் அனலையும் விழுங்குவேனென்று விழுங்கிக் கொண்டுவிட்டான்.

இந்த ஆவணிமாத ஆரம்பத்தில் கோடைவிடுமுறை ஆரம்பிக்கிறதாயும் இரண்டு மாதலீவிலே வருவதாகவும் போனமாதங்கூட எழுதியிருந்தான். இந்தமுறை அவன் திருமணத்தை முடித்தே தீருவதென்று சாஸ்த்திரியாருங்கூட நல்ல பசையுள்ள இடமாகப்பார்த்து ஐந்தாறு ஜாதகங்களும் வாங்கிப்பொருத்த மெல்லாம் பார்த்துவைத்துக்கொண்டு எந்தப்பெண்ணைப்பிடிக்கிறதோ அவனே வந்து தேர்வு செய்யட்டும் என்று தயாராகத் தானிருக்கிறார்.

அதற்குள்ளாக அவனிப்போது எழுதியிருப்பதை வாசிக்க அவருக்கு பெரும் மலைப்பாகவும் நம்பமுடியாமலுமிருந்தது. "பாகீ........ பாகீ........" என்று உள்ளே மனைவியைக் கூப்பிட்டார்.

"என்ன காப்பிதானே........ சித்தே பொறுங்கோன்னா........" பாகீரதியம்மாள் உள்ளிலிருந்து குரல் கொடுத்தார்.

"காப்பியுமில்ல........ மண்ணுமில்ல வந்து அனந்து என்னா எழுதியிருக்கறான்னு பாருடி..........."

"ஏன்னா அனந்து கடிதம் வந்துதா........... ஏர்ப்போட்டுக்கு எப்போவரணுமின்னு எழுதியிருக்கானா..........."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏய் அசடு........ அவன் வரப்போறதேயில்லையாம்........... தான் வேறு பொண்ணு பார்த்திருக்கிறானாம்.......... கூசாமல் எழுதியிருக் கான்டி........ "

"அபச்சாரம்....... அபச்சாரம்........ என்னா ஸொல்றேள்........ வெள்ளைக்காரிய கட்டிக்கப்போறானாமா........... இதுதான் ஐஞ்சு வருஷமின்னேயே அடிச்சுண்டேன் அவனுக்குமொரு கால்கட்டு போட்டிடலாம்னு கேட்டேளா........... இனி அடிக்கழுவாதவள ஆத்துல வைச்சு யாரு மாரடிக்கறது......... " அலறினாள்.

"அந்தளவுக்குப் போயிடுவானாடி நம்ம பய............ எல்லாம் இந்தியப்பொண்ணுதான்......... அதுவும் பிராமணப்பொண்ணு தானாம்....... ஏதோ பெரீய்ய படிப்பெல்லாம் படிச்சு அமெரிக்காவுல விண்வெளி ஆராய்ச்சி பண்றதாம். என்னென்னவோ வெல்லாம் எழுதியிருக்கான்டி நீயே படிச்சுப்பார்......... " கடிதத்தைநீட்டினார்.

"நேக்கு எங்கேன்னா எழுத்தெல்லாம் தெரியறது.............. எல்லாம் முகிலாட்டம் புகாரா தெரியிறது........ சித்த நீங்களே படியுங்கோ...... "

இதற்குள் ஆபீஸுக்குப் புறப்பட்டுவிட்ட கணவனை வழியனுப்புவதற்காக வெளியில் வந்த மைதிலி அப்பா கையில் வெளிநாட்டுக் கடிதமிருப்பதைப் பார்த்துவிட்டு "ஏம்பா அண்ணா கடிதமா........... " என்றாள் ஆவலுடன்.

"அவன் கடிதமல்லடி வேட்டு........ "

"என்னப்பா சொல்றேள்......... "

"அற நனஞ்சப்பறம் குளிரென்ன கூதல் என்னா............ இந்தா நீயே உரக்கப்படி அவன் எழுதியிருக்கறத எல்லாரும் நன்னா கேட்கட்டும் " என்று கடிதத்தை அவளிடம் நீட்டினார்.

"என்னப்பா பயமுறுத்தறேள்......... "

" அட......... படீன்னா.......... "

அன்பான அப்பாவுக்கும், அம்மாவுக்கும் நமஸ்க்காரத்துடன் எழுதிக்கொள்வது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இங்கு சௌக்யம். அங்கும் உங்களுடைய ஷேமத்திற்கும் பகவான் அருள் பாலிப்பானாக.

இங்கு தமிழ் பெண்ணொருத்தி அஸ்றனோடிக்ஸ்ல பி.எச்டி எல்லாம் பண்ணிட்டு ஸ்பேஸ் அட்மினிஸ்டிரேஷன் துறையில விஞ்ஞானியாயிருக்கா. சைதன்யா என்று பேர். சைதுன்னு கூப்படறது. வடமாள், முப்பது வயசு , ஆத்ரேயகோத்ரம், ரோகிணி நட்ஷத்ரம்.

சமீபத்தில பத்திரிகைலகூடப் படிச்சிருப்பீங்களே விண் வெளிக்குப்போயிட்டு வந்த முதல் இந்தியப்பெண்ணென்று அவதான். இன்டர்நெட் மூலமா அவ நட்புக்கிடைத்தது. அப்புறம் நேரில பார்த்துப்பழகிய பின்னால என்னைக் கட்டிக்க ரொம்ப இஷ்டமாயுள்ளா. அவ ஜாதகத்தின் கொப்பி பின்னிணைத்துள்ளேன். உங்கள் சம்மதம், பொருத்தம் என்பன எப்படியென்று அறிய ஆவலாயுள்ளேன்.

மைதிலியையும் மைத்துனரையும் ஷேமம் விசாரித்தேனென்று சொல்லவும்.

பின்னர் விபரமான கடிதம் எழுதுகிறேன்.

இப்படிக்கு

உங்கள் அன்பையும் ஆசீர்வாதங்களையும் நாடும்

அன்புமகன் அனந்தகிருஷ்ணன்

"என்னா சைதுன்னு கூப்பிடுவானாமா............ ரொம்பத்தான் நெருங்கிப்பழகிட்டாங்களோ............." என்று பாகீரதியம்மாள் நெட்டுயிர்க்க

"அண்ணா அத்தனை பெரிய ஸ்டாரையே மடக்கிட்டாரா..... அதிஸ்டக்காரன்தான்............– என்று மைதிலி வாயைப்பிளந்தாள்.

"அவ உலகம் வியக்கறமாதிரி பெரீய்ய்ய ஸ்டாராவே இருந்துட்டுப்போகட்டும்....... ஆனா அது கலியாணத்துக் கெல்லாம் சரிப்பட்டுவராது.......... "

"ஏன்னா.......... "

பாகீரதியம்மாள் கேட்க எல்லாரும் சாஸ்த்திரியாரின் முகத்தைப்பார்த்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நானும் பேப்பர்ல படிச்சதுதான். மூணு வேத்து ஆம்படையாளோட விண்வெளியில மூணுமாசம் சஞ்சாரம் பண்ணிட்டு வந்த பொண்ணை இந்த ஆத்தில மருமகளாக்கிக்கிறதா......... ஹூம்......... "

"இதென்ன ஸ்பேஸ் ரிசேர்ச்ஸுக்கு ஆத்து ஆம்பளகள கூட்டிண்டெல்லாம் போகமுடியுமா மாமா.......... "

என்று மருமகன் சொல்லவும் மைதிலி கலகலவென்று சிரிக்கவும், சாஸ்த்திரிகள் கண்களில் ஜுவாலை கனன்றது. மாமனின் முறைப்பைப் பொருட்படுத்தாது அவன் ஆபீஸுக்குக் கிளம்பினான்.

சிரிப்பவர்களைப் பற்றியெல்லாம் சாஸ்த்திரிகளுக்குக் கவலையில்லை. மூக்குப்பொடியைச்சிட்டியைத் திறந்து ஒரு சிட்டிகை எடுத்து ஆழமாக உறிஞ்சிவிட்டு லெட்டர்பாடை எடுத்து மேசையில் வைத்துக்கொண்டு நிதானமாக எழுதலானார்

அருமை மகன் அனந்துவுக்கு ,

நீ அனுப்பிய ஜாதகம் பார்த்தேன். அது கொஞ்சமும் உனக்குப் பொருந்தி வரவில்லை. அதோட அந்தப்பொண்ணுக்கு ஆயுசுபலம் வேறு கம்மியாயிருக்கு. அவ விண்வெளிப்பயணம் இதுகளிலயெல்லாம் ஈடுபடுறா என்பதும் அதைத்தான் உறுதிப் படுத்துது. இங்கு உனக்கு ரம்பை ரதிகளாட்டம் பெண்கள் ஐந்தாறு பேரைப் பார்த்து வைத்திருக்கிறேன். விடுமுறைக்கு வந்துபார்த்து ஒருத்தியை நீயே இஷ்டம்போலத் தேர்ந்தெடுத்துக் கொள். திருமணத்தை ஜமாய்த்துவிட நாங்களாய்ச்சு. அம்மாவும் அதுதான் நல்லதுங்கறா.

உனக்கு எல்லா ஐஸ்வர்யங்களும், சௌக்யமும் கிட்ட எம் ஆசீர்வாதங்கள்.

இவ்விடம் எல்லோரும் ஷேமம்.

இப்படிக்கு உன் அப்பா

**(பாலம் பெர்லின் – 1998).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணத்துப்பூச்சியுடன் வாழ முற்படுதல்..........
## (1)

சித்தார்த்தன் கனீத்தாவுடன் என்றுதான் விமான நிலையத்தில் வந்து இறங்கினானோ அன்றிலிருந்து பேர்லின் தமிழ் வட்டகை அவனை ஏதோ மழலையர் தோட்டத்தில் குண்டுவைத்த ஒரு கிரிமினலைப்போலவும், மனுஷசமூகத்துக்கே ஒவ்வாதவொரு பிராணியைப் போலவும் வினோதமாகப் பார்க்கிறது.

முப்பத்தியிரண்டு வயதாகியும் கட்டைப்பிரமச்சாரியாய் தனிமையில் கிடந்து மறுகியபோது அவனைக் கண்டேகொள்ளாத, அவனுக்காகப் பரியாத தமிழ்ச்சமூகம் இப்போது ஒரு தாய்லாந்துக் குமரியைக் கொண்டுவந்து இறக்கி விட்டான் என்ற மாத்திரத்தில் இவனால் எமது கலாச்சாரம், பண்பாடு, மரபுகள் எல்லாமே சீரழிந்து போய்விட்டதென்று கூவுகிறது.

எங்கிருந்து கனீத்தாவைக் கூட்டிவருகிறான் என்ற சூட்சுமம் மட்டும் பிரத்தியட்ஷமாகிச்சென்றால் நித்திரையிலேயே அவனை அடித்துக் கொன்றுவிடுவார்கள்.

"என்ன மச்சான்.................... சப்பட்டையொண்டைத் தள்ளி யந்திட்டியாம்..............?"

"இவளுக்குச் சப்பட்டையில்லை............ வேணுமெண்டால் வந்து பார்.............."

இவனுடன் கொஞ்சநாள் ஒன்றாக வேலை செய்த நடுவயதுக்காரர் ஒருவர்:

"இவ்வளவு காலமும் ஒழுங்காயிருந்திட்டு திடீரெண்டு இப்பிடிக்குறுக்கை இழுப்பீரெண்டு நான் கனவிலும் நினைக் கேல்ல...... சய்க்................. இரண்டு நாள் பாங்கொக் 'பார்க்கப் போன' உம்மோட தொத்திக்கொண்டு வந்தவள் எண்டால் ஐட்டம் சமசியந்தான்....................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுக்கும் காசு களஞ்சைக் கனக்க வீட்டில வைச்சிருக் காதையும்...... அள்ளிக்கொண்டு பறந்திடு வாளவ..............."

றெடிமேட் நற்சான்றிதழும், எச்சரிக்கைப் பத்திரமும் ஒன்றாகவே வழங்கினார்.

இன்னொருவர் ரெலிபோனில்:

"ச்சாய்!............ தோட்டக்காட்டிலை இருந்தெண் டாலும்............. ஒரு தமிழ்ப்பெட்டையாய்ப் பார்த்துக் கூட்டியராதையுமன்............... இனிப்பிள்ளையளுமல்லே ' ஞங் சொங் ஷுங் ' எண்டப் போகுதுகள்......"

வெகுவாகக் கரிசனைப்பட்டார்.

"அங்கைதான் பாரும் முதல்ல ட்றை பண்ணின் னான்.............. ஆனால் அங்கையிருந்து யாரும் ஜெர்மனிக்கு வரத்தயா ரில்லையாம்..... உம்மடை தமிழ்ப்பற்றையிட்டு எனக்குச் சதுரம் முழுக்கச்சிலிர்க்கு தெண்டால் பாருமன்.........."

"மலையகத்துப்பெண் என்றால் இரண்டாந்தரந்தான்" என்ற கருத்து ஜென்மத்தில் கீரிமலையைத் தவிர வேறொரு மலையையும் கண்ணால் கண்டிராத பேர்வழிகளிடம்கூட ஜீன்ஸில் பற்றி, பிளேனில் தொற்றி, ஜேர்மனியில் வந்து இறங்கிவிட்டிருக்கும் அழகை என்னவென்பது?

இதுவரையில் ஒரு நாளும் சித்தார்த்தனுடன் முகங்கொடுத்தே பேசியிருக்காத வெகுதூரத்து உறவு மாமியொருவர் வலியவே போன்பண்ணி ஒரு மணிநேரம் உபதேசங்கள் நிறைந்த ஒரு விரிவுரை எடுத்தா. அதன் சாராம்சமாவது:

"அவளவை சாகஸக்காரியளாம்............ குடும்பத்துக்கெல்லாம் துண்டாய் ஆகாதாம்............... ஏதோ **செலவழி**ச்சுக் கூட்டி வந்தனீர் கொஞ்சநாளைக்கு வைச்சிருந்திட்டு கலைச்சுவிடும் ". என்பதுதான்.

"கட்டினவள மாதிரி வெளியிலயெல்லாம் கூட்டிக்கொண்டு திரியவேண்டாமாம்............ உலகம் முழுக்க விஷயம் நாறிச்சென்றால் பிறகு அறவே ஒருத்தரும் பெண்தராயினமாம்................"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப ஏன் இவ்வளவு காலமும் ஒருத்தரும் முன்வந்து பெண்தரவில்லை?" என்று அமுக்க அமுக்க எழுந்துகொண்டிருந்த ஸ்பிறிங்கேள்வியை உள்ளே மடித்து மடித்து இருத்தினான்.

அந்த மாமியிடமே கல்யாண வயதில் ஒன்றுக்கு இரண்டு குமருகளிருக்கு, இரண்டுக்கும் லண்டன், கனடாவில எக்கவுண்டன்ட், இஞ்ஜினியர் றேஞ்சில மாப்பிள்ளைகள் தேடுகினம்.

இதெல்லாம் முதலிலேயே சித்தார்த்தன் எதிர்பார்த்ததுதான். இருந்தும் அவற்றைப் பக்கமாகத் தூக்கிப்போட்டுவிடும்படி, அவனுக்குத்தைரியம் தருவதெல்லாம் கனீத்தாவின் வெளிப்படையான போக்கும், மனதை நெக்குருக வைத்துச் சிறைகொள்கிற மாதிரி பல்வேறு தினுசுகளில் வெள்ளையாக அவள் அவ்வப்போது காலும் மந்திரப் புன்னகைகளுந்தான்.

ஒரு சமயம் ஈச்சஞ்கொட்டைப்பற்கள் முழுவதையும் காட்டி அப்பாவிச்சிறுமியாய், ஒரு சமயம் ஏராளம் வெட்கம் கலந்து, ஒரு சமயம் பச்சைக் குழந்தைமாதிரி , ஒரு சமயம் சரசமும் காதலும் சொட்ட, ஒருசமயம் குறும்பாக, ஒரு சமயம் ஸ்நேகபாவமாய், ஒரு சமயம் தாய்மையும் கருணையும் கனிய................ வாழ்வின் அறுந்தும் தொடர்ந்தும் வரும் திட்டுக்கள் , கோணல்கள், சரிவுகுழிகள், வழுக்கல்கள், இருட்டுக்களெனக் கலந்து வரும் அனைத்து யதார்த்தங்களையும் மறக்கச்செய்துவிடும் இந்த ரசங்களையெல்லாம் கவனிக்கும் எவருக்கும் மனதுள் செல்லமாய் கடிக்கும்.

இயல்பிலேயே மயக்கம் தோய்ந்த அவள் விழிகளிலே இவைகள் தவிர எதற்கோவான ஒரு ஏக்கமும், கொம்பு தேடும் ஒரு கொடியின் பரிதவிப்பும் சித்தார்த்தனை என்னவோ செய்தது.

பத்து நாளே உறவில் அவனை அறியாமலே அவளை ஜீவிதபரியந்தம் அணைத்து வரித்துக்கொள்ளும் உறுதியான காபந்துக் கரங்கள் அவனுள்ளிருந்து எழுந்துகொண்டுவிட்டன.

சித்தார்த்தனும் அவன் அத்தியந்த நண்பன் அமலனும் சேர்ந்து பலநாளாகத் திட்டமிட்டுக்கொண்டுதான் தாய்லாந்துக்கு சிங்கப்பூருடாக புறப்பட்டார்கள்.

ஆனால் அமலனோ முதலிலேயே சொல்லிவிட்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மச்சான்........... ஊரிலயிருந்து கனகாலமாய் அம்மா கொழும்புக்கு வாறதுக்கு முயற்சி பண்ணிக்கொண்டு இருக்கிறா............. சிலவேளை கப்பல் ஓடத்தொடங்கி அவ கொழும்புக்கு வந்திட்டாவேயென்றால்............... நான் தாய்லாந்து விஜயம் கட் பண்ணிக் கொழும்புக்குத்தான் போவன்............"

சிங்கப்பூர் வந்து இறங்கியதும் தமிழ் உணவகங்களும் தோசையும், போளியும், இடியப்பமும், வாழையிலையில் மரக்கறி சாப்பாடும், கோயிலும் குளமும், நோக்கின திக்கெங்கிலும் புடவையிலும், பஞ்சாபியிலும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்புடன், தென்பட்ட தமிழ்ப் பெண்களுமாக ஏதோ யாழ்ப்பாணத்துக்கே வந்துவிட்டமாதிரி அவர் களுக்குக் குதூகலமாயிருந்தது.

அவர்கள் தங்கியிருந்த அந்த ஹொட்டலிலும் வெளிநாடு களுக்குப்போக வந்த நம்ம ஆட்கள் நிறையப்பேர் தங்கியிருந்தார்கள். அவர்கள்தான் முதலில் இவர்களை தெக்கோ மார்க்கெட், ஹனிபாஸ், கல்யாணசுந்தரம், கோமளவிலாஸ், வீரமாகாளி அம்மன்கோவில் என்று கூட்டிச்சென்றார்கள். ஒரு நாளிரவு செட்டிநாடு ஹொட்டலில் காடைக்கறியுடன் சாப்பிட்டுவிட்டு வந்து அக்கும்பலிடையே பீடா சக கோல்ட் லீஃப் புகையுடன் பேசிக்கொண்டிருக்கும் போது சித்தார்த்தன்:

"நாளைக்கு தாய்லாந்து எம்பாஸிக்கு விசாவுக்குப் போக வேணும்." என்று உளறினான்.

அமலன் கண்ணைக்காட்டி புடையனைப்போல "உஸ்உஸ்" என்று சீறி எச்சரிக்கவும் சித்தார்த்தனுக்கு ஒன்றுமாய் விளங்க வில்லை.......... அவன் அலங்க மலங்க முழித்துக்கொண்டிருக்க அமலன் ஜெர்மனில் சொன்னான்:

"தேவையில்லாத இடத்தில், தேவையில்லாத ஆட்களின் சமூகத்தில், தேவையில்லாத தகவல்களைக் கொட்டாத குரங்கே! "

" அப்படி என்னத்தைச் சொல்லிப்போட்டன்? "

"தாய்லாந்துக்குப் போறனெண்டு ஊளையிட்டாய்............."

"ஓ....... ஜா....... மை காஷ்....... மை ப்ளைட்......... மை ட்றிப்........ யாருக்கென்ன நஷ்டம்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“குரங்கே............ மேற்கிலிருந்து சிங்கப்பூருக்கு வாற சனம் சுழிச்சுப்போட்டு பிறகேன் பாங்கொக்குக்கு ஓடுறதெண்டு இஞ்சை எல்லாருக்கும் தெரியும்................. தேவையில்லாம வாயைக்கொடுத்து நாறாதை..........”

“ஆமோ........... அப்படியுமொன்டிருக்கோ.........?”

“அப்ப நாங்கள் தாய்லாந்துக்குப் போகயில்லையெண்டு எல்லாருக்கும் சத்தமாய் சொல்லட்டே.............?”

மறு நாள் காலையே அமலனின் தாய் கொழும்புக்கு வந்து சேர்ந்துவிட்டதாக தகவல் வரவும் அவன் எயர்லங்காவில் அங்கே பறக்கவும்.............

சித்தார்த்தன் தன் கூட்டத்தைக் காய்வெட்டிவிட்டு தனியே டாக்ஸியில் போய் தாய்லாந்து விசா எடுத்துக்கொண்டுவந்து மறுநாள் பாங்கொக் பறந்தான்.

சிங்கப்பூரைப்போன்றே பாங்கொக் வீதிகளிலும் அவ்வப்போது தேமதுரத்தமிழோசை காதில் வந்து விழவேசெய்தது. வெளிநாடு செல்ல முயலும் ஈழத்தமிழருக்கு இது இரண்டாவது தரிப்பு. அவர்கள் மத்தியில் தானேதோ வேற்றுக்கிரகத்திலிருந்து வந்தவன் மாதிரி நடந்து கொண்டான். பெட்ச்புரி றோட்டில் ஒரு மதறாஸ் றெஸ்ரோறன்டில் பிடித்துக்கொண்ட ஈழவர் சிலரிடம் கூசாமல் “ ஐ கம் ஃப்றம் ஷிஷேல்ஸ்........... நேட்டிவ் ரமில்............. பட் ஐ கான்ட் ஸ்பீக்......... யூ சீ.” அவிழ்த்தான். அவர்களில் பொழுதுபோகாத யாராவது தன் கிரியாம்சைகளை வேவுபார்க்கலாமென்ற முன்னெச்சரிக்கையில் சற்றே ஒதுக்காக சிலோம் பக்கமாய் ஒரு ஹொட்டலில் தன் அறையை எடுத்துக்கொண்டான்.

முதல் நாள் பூங்கா , கடற்கரை, திறந்தவெளி உணவகங்கள் என்று சுற்றிப்பார்த்தான். இரண்டாம் நாள் காய்கறி, பழங்கள் குவிந்துள்ள மார்க்கெட்டுகளெல்லாம் போய் அங்கு என்ன புதிதாகக் கிடைக்குதென்று அலசினான். கொழும்பிற்போலவே புளிப்புக் குறைவான மாங்காய்த் துண்டங்களைத் தோல்சீவி அம்பரல்ல, கெக்கரிக்காய், அன்னாசி நறுக்குகளுடன் கோர்த்து குச்சியில் கோர்த்து உப்பும் மிளகுப்பொடியும் தூவி விற்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிளகாய் வெங்காயம் போட்டு தாளித்த ஆவிபறக்கும் பெரிய சுண்டல் கடலையுடன் இறால் பொரியலைக் கலந்து விற்றார்கள். மேலும் பன்னிரண்டு வருஷங்களாய் கண்ணாலும் காணாமலிருந்த றம்புட்டான் பழம், விதைகளற்றுத் தேனாக இனித்த கொய்யாப்பழம், செவ்விளனி, மாம்பழம் என்று கண்டதெல்லாவற்றையும் வாங்கி ஆசைதீரச்சாப்பிடுகையில் எதுக்கும் அமலனும் கூட வந்திருந்தால் இன்னும் ஜாலியாயிருந்திருக்குமென எண்ணினான்.

றெடிமேட் உடுப்புகள் விற்கும் கடையொன்றில் நிற்கையில் மேலே வந்து விழுந்து மார்பால் உரசிவிட்டு அவனைக் கடந்து அப்பாலே போன ஓர் விடலைப்பெண் நின்று திரும்பிப்பார்த்துக் கண் ணடித்தாள். அன்று மாலை இன்னொருத்தி கூட்டத்துடன் நடக்கை யில் அருகாக வந்து பிருஷ்டத்தில் ஸ்பரிசித்தாள். வேளி நாட்டுக் காரன் எவனுக்காவது டொலரில் விலைபோக பின்னும் முன்னும் இளசுகள் அலைந்துகொண்டிருந்தன.

சித்தார்த்தனுக்கு காலையில் அரும்பி, மதியம் போதாகி, மாலையில் மலர்ந்துவிட்டிருந்த நோய் வெளியே புறப்படச் சொன்னது. ஹொட்டலுக்கு வெளியில் நின்றுகொண்டிருந்த டாக்ஸிகளில் ஒன்றில் ஏறி " இரவு நேரம் பாங்கொக்கில் என்னப்பா விஷேஷம்?" என்றான்.

கேட்ட பின்தான் அக்கேள்வி அபத்தமானதாகப்பட்டது. இவன் மனதைப் படித்துக்கொண்ட டிரைவர் சொன்னான்.:

"றோசாப்பூக்கொத்துகளாட்டம் பெண்கள் பாங்கொக்கில் மாதிரி உலகத்தில வேறெங்கும் பார்க்கமுடியாதே! "

அப்பதிலில் தன்னாட்டுப் பெண்களையிட்டான அவனது கர்வமும் ஏகமாய்க் கலந்திருந்தது.

"பார்த்தால் போச்சு.........." அசுவாரசியமான தொனியில் சொல்லிவிட்டு வெளியே வேடிக்கை பார்த்தான்.

டாக்ஸி 'கேள்ஸ் கார்டன்' என்றொரு நைட்கிளப்புக்கு விரைந்தது. பாரிய வளவொன்றில் அமைந்திருந்த அக்கிளப்பின் வெளிவளாகத்திலும் உள்ளேயும் நிறைந்திருந்த வெள்ளைக்காரர் களைப் பார்க்க திரும்பவும் ஜெர்மனிக்கே வந்துவிட்டது போலிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்படுகையில் இருந்த தைரியம் மறைய மனதில் கூச்சமும், தயக்கமும் கூட்டணி சேர்ந்தன.

"ச்சே இந்த அமலன் வெளிக்கிட்ட மாதிரியே என்கூட வந்திருந்தால் எனக்கேன் கால் பின்னுது............... கடைசியில் தனியேவிட்டிட்டு காலை வாரிவிட்டானே இடியற்.......... " என்று சபித்தான். இதயத்தின் அடிப்பு வேகம் சற்று ஆர்முடுக தேகம் வியர்த்தது.

தான் வேற்று உலகம் ஒன்றுக்கு வந்துவிட்டமாதிரி உணர்ந்தான். கோல்ட் லீஃபை பற்ற வைத்துக்கொண்டு சிந்தித்தான். "நூற்றுக்கணக்கான கனவான்கள் இதே நோக்கத்தில் வந்திருக்க நான் எந்தக்கொம்பனுக்குப் பயப்பிடவேணும்? இப்படி உள்ளூர வென்றாலும் உதறல் எடுத்துக்கொண்டு நிற்கிறது எவ்வளவு அவமானம். "

தனக்குத்தானே தைரியமூட்டிக்கொண்டு இப்படிக் கிளப்புகள் ஆயிரம் கண்டவனின் பாவனையில் பார்வையில் ஒருவித அலட்சியத்தை வரவழைத்துக்கொண்டு டையை சரிபண்ணி இறுக்கிவிட்டுவிட்டு கம்பீரமாக உள்ளே நடந்தான்.

உள்ளே இப்படியான இடங்களுக்கேயான வண்ணங்களில் ஊதா, றோஸ், வயலற் ஹலோஜன், நியோன் விளக்குகளின் ஒளிவெள்ளம்.

"என்டர் த டிறகன் " படத்தில் வருவது போன்று பதினாறு திக்கிலும் கண்ணாடிச்சுவராலான பாரிய கூண்டொன்றுக்குள் ஒரே இளங்குட்டீஸ்களாகக் குவித்துவிட்டிருந்தார்கள். சுற்றிச்சுற்றி ஆட்கள் அக்குவாறியம் பார்ப்பது போல் சுவரில் மூக்குகள் உரசப் பார்த்துக்கொண்டிருக்க வெள்ளை சூட் அணிந்திருந்த மாமா ஒருத்தர் ஒவ்வொரு பெண்ணினதும் அங்க லாவண்யங்களை ஆங்கிலத்தில் விதந்து வர்ணித்து அவர்களின் விலையையும் மைக்கில் சொல்லிக்கொண்டிருந்தார். ஒரு நாளைக்கான அவர்களின் விலை மூவாயிரத்திலிருந்து ஐயாயிரம் பாத்துக்கள் வரையிருந்தது.

ஒருத்தியை யாராவது வாங்கிக் கூட்டிக்கொண்டு போய்விட்டால் அவ்விடத்திற்கு ஒரு புதியவள் ஒருவள் நுழைவாள். சித்தார்த்தனிடம் வந்த மாமா " ஹே ஜங் மன்............ சொர்க்கத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ப ஊற்று இவள்தான்............ நன்றாகச் சரசம் புரிவாள்.......... உனக்காகத்தான் ஜனித்தவள். " என்றமாதிரிச் சொல்லிக்கொண்டு போக அவன் காட்டிய திசையில் பார்த்தான். பிந்துகோஷ் மாதிரி ஒருத்தி இவனைப்பார்த்துப் புன்னகைத்தாள். அப்போதே அவனுக்கு அவன் விலா எலும்புகள் நொருங்கிக் கேட்டது. அவன் முகம் போனபோக்கைப்பார்த்து ஆயிரம் பாத்துக்கள் குறைத்துக்கொண்டு கொடுக்கலாமென்று காதைக்கடித்தான்.

அவளைவிட்டுவிட்டு சீமை முயல்மாதிரி பயந்துகொண்டும், தோற்றத்தில் அப்பாவி மாதிரியுமிருந்த ஒருத்தியைச் சித்தார்த்தன் வாங்கினான். மாமா மைக்கில் " நம்பர் 23 "என்றதும் அவள் எழுந்து கூண்டின் பக்கவாட்டிலிருந்த ஒரு அறைக்குள் நுழைந்தாள்.

பணம் செலுத்தியானதும் அவளின் போட்டோ ஒட்டியிருந்த ஒரு பத்திரத்தைக்காட்டினார்கள். மெடிகல் ஃபிட்னெஸ் சேர்டிபிகேட் என்பதைத்தவிர மீதமெல்லாம் தாய்மொழியில் கிளறியிருந்தது.

ஜீன்ஸூள் நுழைந்துகொண்டு நொடியில் அறைக்குளிருந்து புறப்பட்டு வந்தவள் காலங்காலமாக அவனையே காதலித்தவளைப் போல சித்தார்த்தன் கைவிரல்களைக் கோர்த்துக்கொண்டு போய் டாக்ஸியில் ஏறினாள்.

டாக்ஸியில் என்ன அவளுடன் பேசுவது என்றே அவனுக்குத் தெரியவில்லை. சற்றுத்தூரம் போனதும் அவளே பேசினாள் :

"சாருக்கு எந்த ஊர்? "

"பிறந்தது ஶ்ரீலங்கா............ இப்ப இருக்கிறது ஜெர்மனி."

"ஏன் அவ்வளவு தூரத்தில? "

சித்தார்த்தனுக்கு கொஞ்சம் புழுகவேணும் போலிருந்தது, அல்லது சமாளிக்கவுந்தான் இயலாது.

"உத்தியோகம் " என்றான் யோசிக்காமல்.

ஹொட்டல் அறைக்குள் வந்ததும் ஜக்கெட்டை கழற்றி ஹாங்கரில் போட்டுவிட்டு கட்டிலில் அமர்ந்துகொண்டு முதலில் பசிக்குதென்றாள். மேசையில் இருந்த மெனுவை அவளிடம் கொடுத்து "வேண்டியதை ஓடர்பண்ணிக்கொள் "என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்விஸை போனில் அழைத்து தனக்கானதை ஓர்டர் பண்ணிக்கொண்டே"சாருக்கு"என்றாள். ஒரு பெண்ணுடன் ஹொட்டல் அறையில் தனிமையில் இருக்கும் அனுபவம் தரும் பரபரப்பே இன்னும் அடங்கியிருக்கவில்லை அவனுக்கு. சும்மாதானும் எதையோ ஓர்டர் பண்ணிச் சாப்பிடுவதாகப் பெயர்பண்ண அவள் இறால் , கோழி என்று பல ஐட்டங்களை வருவித்து நன்கு ரசித்துச்சாப்பிட்டாள்.

சாப்பாடானதும் சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக்கொண்டு "உனக்கும் வேணுமா?" என்று அவளுக்கும் ஒன்றை நீட்டினான்.

"உவ்வே" என்று குமட்டிக்காட்டித் "தன்னிடம் கெட்ட பழக்கங்கள் எதுவும் இல்லை" என்றாள்.

அடுத்து என்ன செய்வது............... எப்படி ஆரம்பிப்பது ஒன்றும் தெரியவில்லை. அவள் ஜீன்ஸையும் கழற்றி ஹாங்கரில் போட்டுவிட்டு வந்துஇரண்டு கைகளையும் தலைக்கு மேலே உயர்த்திச்சோம்பல் முறித்தவாறே கொட்டாவியும் வேறு விட்டுக்கொண்டு "ஒரே அசதி............ நான்கொஞ்சம் சீக்கிரமே படுக்கலாமா? "என்றாள்.

" என்ன காரணம் அவ்ளோ அசதி...........? "

"இரண்டு பேர் "விரல்களில் காட்டினாள்" ஒரு ஜப்பான் காரனும், ஒரு பிரெஞ்ச்காரனும் இன்று பகல் பூரா என்னைப் பிசைந் தெடுத்துவிட்டார்கள்......... "

"உண்மையாகவா.......? "

பிரேஸியரை அவிழ்த்துக்காட்டினாள். எலுமிச்சை நிறத்ததான சின்னமார்புகள் சிவந்து அங்கங்கே கன்றிப்போயிருந்தன.

"பகலிலும் வேலைசெய்வீர்களோ.......? "

"எப்போதுமென்றில்லை.......... கேஸ் வந்தால் போன் பண்ணுவார்கள். "

"போகாமலுமிருக்கலாந்தானே.........?"

"பணம் வேண்டியிருக்கே........... அதுவும் நாளைக்கு எனக்கு மெடிகல் செக் அப் ஐந்நூறு பாத்துக்கள் அழுதால்தான் டாக்டர் சேர்டிபிக்கேட் தருவான். "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003-7-26
LIBRARY.

"இன்று நான் நாலாயிரம் பாத்துக்கள் கொடுத்தேனே................ உனக்கு அதில் எத்தனை கிடைக்கும்? "

"அவங்கள் கமிஷன் நூறு போக, மீதியெல்லாம் அரசாங்கத் துக்கு டாக்ஸ் கட்டிவிடுவார்களாம். ஐநூறுதான் தந்தார்கள். "

"உண்மையாகவா.......? "

தன் ஹான்ட் பாக்கைத்திறந்து ஐந்து நூறு பாத் தாள்களை எடுத்துக்காட்டினாள்.

"சரி நான் உனக்கு ஆயிரம் பாத்துக்கள் தாறேன். "

"தாங்ஸ்........... மிகவும் நல்ல மனது உங்களுக்கு..........! "

சிகரெட்டை அணைத்துவிட்டு சித்தார்த்தனும் போர்வைக் குள் புகுந்துகொண்டான். எனினும் முன்னேறத் தயக்கமாயிருந்தது. தன்னை இதுவரை வருத்திக்கொண்டிருந்த காமத்தில் பாதி விடை பெற்றுக்கொண்டுவிட்டது போலிருந்தது. சும்மா அவள் மேல் கையைப்போட்டு இடையைக் கட்டி நெருக்கினான். வெந்நீர்ப்பை மாதிரி வெதுவெதுப்பாயிருந்தது. எனினும் பணத்துக்கே வந்தவ ளாயினும் ஏற்கெனவே கசங்குப்பட்டு வந்திருப்பவளை இன்னும் தான் முகர்வது தர்மந்தானோவென மனதின் ஒருமூலை தத்துவ விசாரம் செய்யவும் இறுக்கத்தைச் சற்றே தளர்த்தினான்.

அவள் "விஷயத்தைச் சீக்கிரம் முடித்தீர்களாயின் நான் சற்றே தூங்குவேன் கொன்டெமை எடுங்கள்......... " என்றாள்.

" என்ன.........கான்டெமா? "

"........... ம்.....கொன்டெம்! "

" ஏன் நீ கொண்டாரல்லயா? "

"...........ப்ச்! " என்ன கேள்வியிது என்ற மாதிரிப்பார்த்தாள்.

" ரொம்ப அவசியமா...................? "

"பின்னே உங்களுக்கு எயிட்ஸில்லையென்று எப்படி நம்பிறது? "

" நியாயந்தான் , நான் எந்தவொரு பெண்கூடவும் இதுவரை போனதேயில்லேடி" என்பதைச்சொன்னால்கூட இவள் நம்பிவிடுவாளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன.................... இப்படி எத்தனை பேர்தான் வாக் குறுதி கொடுத்தார்களோ................. இப்படி ஒரு தொழில் பண்றவள் நம்பவுங்கூடாதுதான். இவளுடன் பேசித்தன்னை நிரூபிக்க முயற்சிப்பது அபத்தமாயிருக்கும்.

“நிஜமாக நீ கொன்டெம் கொண்டுவரவில்லையா............ ? ”

“பெண்ணைக் கூட்டிவரமுன் கொன்டெம் வாங்கி வைத்துவிடவேண்டுமென்று உங்களுக்குத்தெரியாதா? ”

ஏதோ தினப்படி அவனுக்கு இதுதான் தொழில் என்பது மாதிரிக்கேட்டுவிட்டுக் கைகளைக் கொட்டிச்சிரித்தாள்.

அவனுக்குத் தன் முட்டாள்த்தனம் உறைத்தது.

“பத்து மணியாகிறதே கொன்டெம் எங்கே கிடைக்கும் இனி..........? ”

“கடைகள் எல்லாம் பூட்டியிருப்பார்கள்........... ச்சொச்சொ.........”

றிஸெப்சனில் விசாரிக்கலாமென்று போனைச்சுழற்றினான். பெண்குரலொன்று “ஹலோ கான் ஐ ஹெல்ப் யூ ?”என்றது. வெட்கம் அவனைப் பிடுங்கித்தின்ன “சொறி” என்றுவிட்டு றிசீவரை வைத்தான்.

அசதியில் இருப்பவளை வெளியில் அனுப்பி “எப்படியாவது கொன்டெம் கொண்டுவா” என்று அனுப்புவதும் நியாயமாகப் படவில்லை. நான் போய் இனியாரை விசாரித்து............. கொன்டெ முக்காக பாங்கொக் வீதிகளில் லோலோவென்றலைந்து.................. வெட்கக்கேடு. மீண்டும் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். ஒன்றுமில்லாமல் இரவெல்லாம் இவளுடன் என்ன ஜென் பௌத்தம், கொன்பூஸியஸ் பற்றியா விசாரம் செய்யமுடியும்.......... விடியும்வரை எப்படித்தான் இவளுடன் கட்டிலைப்பகிர்ந்து கொள்வது? அவளைத் திரும்பிப்பார்த்தான். கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தாள். பணத்துக்காக வாறவளிடம் எதையும் அனுபவிக்க முடியாதென்று சும்மாவா சொன்னார்கள்.

எரிச்சல் அதிகமாக அவளிடம் சொன்னான்: “நீ வீட்டுக்குப் போறதென்றால் போ.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் திடுப்பென எழுந்து கட்டிலில் உட்கார்ந்தாள். சித்தார்த்தன் அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண் டிருந்தவனைக் கேட்டாள்"

"நிஜமாகவா? "

"யெஸ்........... "

"ஏன் என்னைப்பிடிக்கலையா.............? "

"பிடித்தென்ன...... மிஸ்........... கொன்டெம்தான் இல்லையே? "

"உங்கள் நிலையை நினைத்தால் எனக்கு பரிதாபமாக விருக்கு............... ஆனாலும் கொன்டெம் இல்லாமலென்பது படுபயங் கரமான றிஸ்க்................. அப்படியே நாலு இடத்தில் நேர்ந்தால் சுகாதாரமாயிருக்காதே...........? "

யார்யாரெல்லாம் தன்மீது பரிதாபப்படுகிறார்கள் என்பதை நினைக்க எரிச்சல் இன்னும் அதிகமாகியது.

"உன் நியாயத்தை ஒப்புக்கொள்வதால்தான் சொல்கிறேன்..... நீ...... போகலாம். "

"ஒன்றும் கோபமோ வருத்தமோ இல்லையே............? "

" இல்லை. "

ஆயிரம் பாத்துக்களை இழக்கவேண்டியிருக்குமே என்பதால் பிறகும் அவள் தயங்கிக்கொண்டு நின்றாள்.

அவன் பர்ஸை எடுத்து ஆயிரம் பாத்துக்களை எண்ணவும் அவள் முகம் பிரகாசித்தது.

"நீங்களாகத்தான் என்னை அனுப்பிவைத்தீர்களென்று ஒரு துண்டும் வேணும். "

டைரியில் ஒரு தாளைக்கிழித்து எழுதிவிட்டு அதில் ஆயிரம் பாத்துக்களையும் வைத்து மடித்துக்கொடுத்தான்.

நன்றியுடன் பெற்றுக்கொண்டு அவனை அணைத்து நெற்றியில் முத்தமிட்டுவிட்டு வணங்கி விடைபெற்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறு நாள் டாக்ஸிக்காரன் சித்தார்த்தனைத் தூரத்தில் கண்டதும் பெரிதாக ஸலாம் வைத்தான்.

" கொம்பனி எப்படி? "

இவன் உதட்டைப்பிதுக்கியதைப் பார்த்துவிட்டு சொன்னான் :

"உங்கள் டேஸ்ட் எனக்குப்புரிகிறது சார்.......... உங்கள் டேஸ்ட்டுக்குத் தகுந்த மாதிரிப்பெண்கள் கிராமங்களில்தான் கிடைப்பார்கள்......... என்ன ஒரு இருநூறு கிலோ மீட்டர்வரை பயணம் செய்ய வேண்டிவரும்......... "

"அதனாலென்ன............... "

அவன் வந்த நோக்கமே அதுதானே.

## (2)

அன்றே 200 கி.மீட்டர் தொலைவிலிருந்த சராபுரி "நம்ம பக்கத்து ஊர்ப்பெயர் மாதிரியில்லை?" என்ற ஊருக்குப் புறப்பட்டார்கள். சற்றே மலைப்பாங்கான பகுதி அது. ஐயன்னா, ஓவன்னா வளைவு வீதியில் காரை இலாவகமாக ஓட்டிக்கொண்டே டாக்ஸிக்காரன் சொல்லிக்கொண்டு வந்தான்.

"நாகரீகம் பரவாத கிராமம் அது. நீங்கள் இங்கே ஒரு நாளைக்கு அழுத பணம் அங்கே ஒருவாரத்திற்குப்போதும். பேயிங் மருமகனாக.... அவர்கள் குடும்பத்தில் உங்களை ராஜா மாதிரி உபசரிப்பார்கள். "

சராபுரி சேர்ந்து முதன்முதலில் அவன்கூட்டிப்போன இடமே சித்தார்த்தனுக்குப் பிடித்துப்போய்விட்டது.

இருபதுக்கு உள்ளும் புறமுமான வயதிலும், தோற்றத்திலும் அதிகம் வித்தியாசமில்லாமல் லட்டும், ஜாங்கிரியும் மாதிரி இரண்டு பெண்கள் இருந்தார்கள். மாலிகா , கனீத்தா என்று இருவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகளாம். யாரை வேணுமானாலும் வைத்துக்கொண்டு இரண்டுவாரங்கள் தங்க 3500 பாத்துக்கள் என்றார் (அப்பன்) மாமா.

எடுத்த எடுப்பிலேயே ஐயாயிரம் பாத்துக்களை வீசி அவர்களை அசத்தினான் சித்தார்த்தன்.

என்ன வகைச்சாப்பாடெல்லாம் பிடிக்குமென்று கனீத்தாவைக் கொண்டு மாமி கேட்பித்தார். உள்ளதே அரைகுறை , அதிலும் அவர்கள் பேசும் ட, ஸ, ல, ள பேதங்களற்றுச் சர்வ சமத்துவம் பேண அவர்கள் நசித்துச் சப்பியபின்னால் செப்பிய ஒரு வகையான மழலை ஆங்கிலத்தை வார்த்தைகளைப் புரிந்துகொள்ள அசாதாரண திறமை வேண்டியிருந்தது. முதலில் குளிக்க வெந்நீர் போட்டுத் தந்தார்கள். குளித்துமுடிந்ததும் ஒருத்தி பெரிய "துவாயைக்" கொண்டு வந்து தலையை நன்கு உலர்த்திவிட்டாள். இன்னொருத்தி பெண் களுக்குச் செய்வதுபோல் அகில்புகையைக் கொண்டுவந்து பிடித்தாள்.

சூப்பர் சாப்பாடானதும் இருபெண்களையும் மாமியாரே அனுப்பிவைக்க அவர்கள் அவனின் இடமும் வலமுமாக வள்ளி தெய்வானையென வந்து நின்றனர்.

முதற்பார்வையிலேயே கனீத்தாவின் கண்களின் அதீத காந்தம் அவனை ஈர்த்துவிட்டிருந்தது. அவளிடமே அவர்கள் அவனுக்கு காட்டிய அறையினுள் தன் "சூட்கேஸைக்" கொண்டு போய் வைக்கச்சொன்னான்.

அவனது முதலிரவு அலாதியாய் அமைந்தது. மகா அனுபவஸ்த்தன் போல ஒரு சிப்பம் கொன்டெம் எடுத்துப் போயிருந் தான். ஒன்றுக்குத்தானும் வேலையிருக்கவில்லை. இவன் "எல் போட் கேஸ்" என்பதைப்புரிந்துகொண்டு அவனுக்கேற்ற விதத்தில் படு பாந்தமாக கனீத்தா அனுசரித்தாள். சித்தார்த்னுக்கும் அவளை விவரிக்க முடியாத வகையில் பிடித்துப்போனது. போகப்போக கனீத்தாவுடனான பிணைப்பின் ஆழம் அதிகமாகி அவளை ஒரு விலைமாது என நினைக்கவே அவனால் முடியவில்லை. அவனுக்கும் அவளுக்கும் ஏதோ ஜென்மஜென்மாந்தர உறவிருப்பதாகவும் அதன் தொடர்ச்சி யாகத்தான் தான் தாய்லாந்து வந்து அந்தக்கிராமம் சராபுரியில் அவளைச்சந்திக்க நேர்ந்ததாகவும் எண்ணினான். வாலிபம் வந்தநாள் முதற்கொண்டு தான் கொண்ட காமத்திற்கும் விரகத்திற்கும் முதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் அர்த்தம் கற்பித்தவள் யாராக இருந்தாலென்ன அவளுக்கு தன்னை ஒருவிதத்தில் நன்றிக்கடன் பட்டவனாக உணர்ந்தான். அவளைப்பிரிந்துவிடுதல் என்பது அவனால் முடியாதிருக்கும் போலிருந்தது.

மறுநாள் காலை பனிமூட்டம் படிந்தொடுங்கி வெளிச்சம் தோன்றவும் ஜன்னல் வழியே கீழே மலையின் அடிவாரத்தில் வீதிகளும் வீடுகளும் உருவாகின. வெளியே செல்வதற்காக புறப்பட்ட மாமா இவன் அறைக்கு வெளியே வரும்வரை காத்திருந்து சொல்லி விட்டுத்தான் போனார்.

"ஏனப்படி............? "

"அதுதான் வழக்கம்."

மதியம் இவன் குளிப்பதற்கு ஆயத்தமாகவும் "மைத்துனன் " என்று சொல்லிக்கொண்டு ஒரு இளைஞன் வந்தான். மூத்தபிள்ளை யான அவனுக்குத் திருமணமாகிவிட்டதாவும் இப்போ இரண்டு வீடுகள் தள்ளியிருப்பதாகவும் கனீத்தா சொன்னாள். அரை லிட்டருக்கும் மேல் ஒலிவ் எண்ணெய் கொண்டுவந்து அவனை ஒரு சிறிய மரவாங்கில் படுக்கச் சொல்லிவிட்டு, அவனுடம்பெல்லாம் தேயோதேயென்று சூடுபறக்கத்தேய்த்து மசாஜ் செய்துவிட்டான். சுகம்ம்ம்மாக இருந்தது. சித்தார்த்தன் அவனுக்கு நூறு பாத்துக்கள் கொடுக்கவும் வாங்கிக்கொள்ள கடைசிவரை மறுத்துவிட்டான்.

மாலை கனீத்தாவுடன் அந்த ஊரைச்சுற்றினான். ஊரை வளைய வரும் சிறிய அருவியும் , அதன் சிறு நீர்வீழ்ச்சியும் , எங்கும் கோப்பியும், சோயாவும் பயிரிட்ட தோட்டங்களுமாக பசுமையாக இருந்தது சராபுரி.

இன்னொரு நாள் அங்கு கூடும் சந்தையை போய் வேடிக்கை பார்த்தான். அங்கும் அவனது விருப்பத்திற்குரிய செங்கரும்பும் இளநீர்க்குலைகளும் நிறைய வந்திருக்கவே புகுந்துவிளையாடினான்.

சராபுரியின் யார்வீட்டு வெள்ளைக்கார மருமகனோ ஒருத்தன் முகத்தில் தேன்நிலவுக்குகளை மாறாமல் ஒரு தாய்லாந்துக்காரியை அணைத்துக்கொண்டு அங்கே வந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இரவு வாடகைக்கார் வைத்துக்கொண்டு திருவிழா நடந்த பங்சொங் என்ற பக்கத்துக்கிராமத்திற்கு கனீத்தாவுடன் போய்நாட்டுக் கூத்தும் கிராமிய நடனங்களும் பார்த்தான். நம்மூர் நாட்டிய நாடகங்கள்போல ஆனால் பாவங்களும் , முத்திரைகளும் குறைவான பல நடன நிகழ்வுகள் அங்கே நடைபெற்றன.

மாமியார் வேறு இறைச்சி , நண்டு, கணவாய், இறால், எனத்தினம் ஒரு சமையல் வேளைக்கொரு சூப்பென்றாக்கி அவனைத் திக்குமுக்காடப் பண்ணிக் கொண்டிருந்தார்.

ஒரு கிழமை கடந்துவிட்டிருந்தது. கனீத்தாவுடன் சுற்றோசுற்றென்று ஊரைச்சுற்றியாகிவிட்டது. எனினும் பிரிதலை மனதால் எண்ணிப்பார்க்கவே கஷ்டமானதாக இருந்தது.

ஒரு நாள் அவளுடன் பேசிக்கொண்டிருக்கையில் " நீ என்ன உசத்தி?" என்று அறிவுஜீவித்தனமான எதிர்க்கேள்வி யெல்லாம் போடமாட்டாள் என்ற துணிவில்.

"எதற்கு இப்படியான ஒரு வாழ்க்கை முறை? "என்றான் நோவேற்படாதவாறு. "அல்லது உங்களை எப்படிச் சந்தித் திருப்பேன்.............? "

அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு அவன் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் கீழே பார்த்தாள். சற்று இடைவெளிவிட்டு தன் கவுணின் பொத்தான் ஒன்றைத்திருகியபடி சொன்னாள்:

"அப்பாவுக்கு குறைவான வருமானம்......... நான்தான் குடும்பத்தை கவனிக்கவேணும்........ மேலே கொண்டு வரவேணும்......... நிறைய பணம் சம்பாதித்து ஸ்திரமான நிலைக்கு வந்து ஒரு சூப்பர் மார்க்கெட்டும் கட்டிக்கொண்ட பின்னால் நான் சுதந்திரப்பறவை யாகிவிடுவேன்........... "

வெகுளித்தனமாகச் சொல்லிவிட்டு மலர்ந்தாள்.

"அதற்கிடையில் எயிட்ஸூம் வந்து விடலாமல்லவா......"

மீண்டும் இரண்டு நிமிடங்கள் நிலத்தைப்பாரத்து மௌனம் காத்தபின் சொன்னாள் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எயிட்ஸ் கொலனியில கொண்டுபோய் குடியேற்றி விடக் கூடிய ஆபத்தும் இருக்குத்தான்............ ஆனால் வேற வழி எதுவும் எனக்குத்தெரியல்லே.......... வாழ்க்கை அவ்வளவு தூரம் எங்களுக்கு அபாயகரமானதாகவும். இறுக்கமானதாயிருக்கு சார்..... “

பணம் அதிகம் சம்பாதிக்க விரும்பியவர்கள் தங்கள் வயதுக்கு வந்த பிள்ளைகளை இலகுவான மூலதனமாக்கிச் சம்பாதித்தனர். அது அங்கீகரிக்கப்பட்ட தேசியத்தொழிலாக குற்ற வுணர்வோ லஜ்ஜையோ வின்றி தேசம் முழுவதும் நடை பெறுகிறது.

“என்னோட உனக்கு எப்பவும் வாழ இஷ்டமா கனீத்தா......? “

“ நான் அவ்வளவு பேராசைக்காரியில்லை............. “

“நான் உன்னைக் குஷிப்படுத்துவதற்காகப் பேச வில்லை.... “

“நிஜமாலுமா.............? “

“நிஜமாலும்.......... “

“நடக்கக்கூடியதா..........? “

“நடக்கும்.............. “

“அப்போ என்னையும் ஜெர்மனிக்கு கூட்டிப்போய்விடுவீர் கள்......... இல்லை................ “

“போவேன்......... “

“என் கனவுகள் எல்லாம் எளிதாய்விடுமில்லை...................?“

அவன் கேள்வியின் ‘த்வனி’ முழுவதையும் அவள் இன்னும் புரிந்துகொள்ளவில்லையென்றே பட்டது.

பெர்லினில் அவர்கள் விமானம் தரையிறங்கியது. கண்களை அகல விரித்துவிரித்து எல்லா இடங்களையும் அதிசயித்துப் பார்த்தாள்.

விஷயம் கேள்விப்பட்ட நண்பர்கள் வீட்டில் அவர்களை வேடிக்கை பார்க்கக்கூடினர்.

சித்தார்த்தன் வீட்டிலிருக்காத, மற்றும் வேலைக்குப் போன நேரங்களில் வந்திருந்த நண்பகளிலொருவன் “நானும் போய் கூட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறதுக்கு தாய்லாந்தில ஒரு பொம்பிளை ஒழுங்கு பண்ணித்தரேலு மோ......? " என்றானாம்.

இன்னொருவன் தான் சாப்பிடக்கொடுத்த கடலையால் தன்னையே சுண்டிப்பார்க்கிறானாம்.

இன்னொருவன் "சோக்கான குட்டி"என்று கன்னத்தில கிள்ளிறானாம்.

இவர்களெல்லாம் "தங்களோடையும் அவள் படுக்கவந்திடு வாள்" என்று நினைக்கிறார்கள் போல. சித்தார்த்தன் கண்டிப்பாக அவளிடம் சொல்லி வைத்தான்.

"ஃப்ரெண்டென்று சொல்லிக்கொண்டு நானில்லாத நேரம் வாற ஒரு நாயையும் உள்ளே எடுக்காதே. "

சித்தார்த்தன் வேலையால் வந்ததும் பொழுதுபோக்குக்காக ஒவ்வொருதினமும் ஒவ்வோரிடத்துக்கு அவளை அழைத்துப் போனான். சில நாட்கள் கழித்து மாலை நேர ஜெர்மன் வகுப்பொன்றிலும் அவளைச் சேர்த்துவிட்டான்.

ஜெர்மன் இலக்கணம் அவளுக்கு புரியவே முடியாம லிருந்தது.

"ஏன் சித்தார்த்தன்.............. அவசியம் நான் ஜெர்மன் படிக்க வேணுமா?"

"அப்போதானே பார்ட்ரைம் ஜொப்பென்றாலும் கிடைக்கும்"

" கிடைத்து............."

"வீட்டுக்கு நீ பணம் அனுப்பவேண்டாமா............. உன் கனவுகள் நிறைவேற வேண்டாமா.............?"

"சரி......" என்றாள் மூன்றாம்பிறை ஸ்ரீதேவிமாதிரி மன்னையுடன்.

ஒரு மாதம் கழித்து பெர்லின் திரும்பிய அமலன் நேராக அவனிடம் வந்து "காழ்......... காழ்........... காழ்.......... " என்று கத்தினான். "வாழைப்பழத்தை வாங்கிச் சாப்பிட்றாவென்டால் தோலையும் மடியில கட்டிக்கொண்டு வந்து நிக்கிறியே வெலுத்தி................ நான் கொழும்பிலேயே அறிஞ்சிட்டன். "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுக்குள்ள அங்கேயும் நாறிட்டுதுதே................ நாறட்டும். ஆனால் குதிக்கிற உங்களில் ஒருவரேனும் என் உணர்ச்சிகளின் இரசாயனத்தை கொஞ்சமாவேனும் புரிஞ்சுகொண்டு பேசுகிறீர் களில்லையே எண்டதுதான் என்னுடைய ஆதங்கம். "

"இருக்குமிருக்கும்................ முன்னபின்ன காணாமலிருந்திட்டுக் கண்டறியாத "ஒண்டை"க்கண்டால் உப்பிடித்தான் சிலருக்குப் பித்தம் தலைக்கேறிச் சித்தம் பிசகிறதாம்............... பிறகு இந்தமாதிரி விளங்காத்தனமாய் எல்லாம் புசத்துவாங்களாம்................ ஃப்றொயிட் சொல்லியிருக்கிறார். விசர்பிடிச்ச குக்கனே எக்கேடாவது கெட்டுத் தொலை."

"அதென்ன குக்கன்? "

"விசர்பிடித்தால் வாலைத் தொங்கப்போட்டுக்கொண்டு, நாக்கால ஒழுக ஒழுக அலையுமே நாலுகால்ல............ கண்ட இடத்தில அடிச்சுக்கொல்லுவாங்கள்....... அதைத்தான் உம்ம லெவலில் சற்றே கௌரவமாய் உரைக்கவேண்டி சங்கத்தமிழில் உரைத் தோம்......... "

அமலன் போனபின்பு கனித்தா அவனிடம் கேட்டாள்:

"ஏன் உங்கள் ஃப்ரெண்ட் கோவிச்சிட்டுப் போறார்? "

"அவனுக்குக் கொஞ்சம் எரிச்சல் தாறமாதிரியான பைல்ஸ்வியாதி....... அதோட இப்பதானே ஊரிலிருந்து வந்தவன்........ தண்ணி வித்தியாசத்தில் சலமும் வேற கடுக்குதாம்.................. "

" பொய்....... பொய்...... பொய்........ நீங்கள் ஒன்றும் என்னைச் சமாதானப்படுத்த முயலவேண்டாம்............. உங்க ஃப்ரெண்ட்ஸ் எவருக்குமே நீங்கள் என்னைக்கட்டிக்கொள்றது இஷ்டமில்லை. இது எனக்குப் புரியாமலில்லை................ "

"உனக்கு நானாச்சு கண்ணா........... நீ கண்டுகொள்ளாத எந்தப் பிரமஹத்தியையும்........... "

வசந்தம் வாழ்விலும் வெளியிலும். இயற்கையும் இசையும்கூட முன்னதைவிட இன்பம் தருவனவாக இருந்தன. அவளுடனான கூட்டில் வாழ்வின் அவன் திறந்தே பார்த்திராத புதிய கதவுகள் பல திறந்துகொண்டன. பிரேமை தரும் புதிய அனுபவங்களால் இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழவேண்டிய ஆசை வந்து புது உற்சாகம் பிறந்தது. தன்னை இந்த வாழ்வுக்காய் புதிதாகப் பிறந்தவனாய் உணர்ந்தான்.

ஒரு சனிக்கிழமை சித்தார்த்தன் கனீத்தாவையும் காரில்கூட்டிக் கொண்டு காய்கறிகள் வாங்குவதற்கு ஆசியன் கடை ஒன்றுக்குப் போனான். அவனுக்குப்பிடித்தமான குரங்குவாலன் பயற்றங்காயும், நல்ல பிஞ்சு வெண்டைக்காய்களும் கிடக்கக்கண்டு கடைக்காரரிடம் ஒவ்வொரு கிலோ போடச்சொல்லவும் இன்னொரு உதவியாளர் உள்ளேயிருந்து கமறினார் "

"அது ஊத்தவானின்ரை ஓடருக்கு எடுத்துவைத்திருக் கிறன்..................... "

கடைக்கார இளவல் நெளிந்துவிட்டு ஒரு அசட்டுச்சிரிப்புடன்;

"அண்ணை குறை நினைக்காதையுங்கோ....... உந்த இரண்டு ஐட்டத்திலயும் எங்களுக்கு நெடுங்கால வாடிக்கையாளர் ஒருவரிட மிருந்து பவ்பத்துக்கிலோ ஓடர் இருக்கு.......... இருக்கிறதே போதும் போல தெரியேல்ல................ இண்டைக்கு வேற மரக்கறியில பார்த்து எடுங்கோ........... சோக்கான முத்தல் பலாக்கொட்டையெல்லாம் அங்காலயிருக்கப் பாத்தியளே............ அடுத்த முறையாகட்டும் உங்களுக்கு நான் வேண்டிய மரக்கறி எடுத்து வைத்துத் தாறன். " என்று சொல்லிக்கொண்டிருக்கவும் நடுத்தரவயது தாய்லாந்து மாமி ஒருவர் காரில் வந்து பெரிய கூடையுடன் இறங்க கடைக்காரின் காய்கறிகளின் இருப்பில் பாதி வெண்டைக்காய் பயற்றங்காயுட்பட அவருக்கே வியாபாரமாகியது. அவர்தானாம் ஊத்தவான்.

கனீத்தாவைக் கண்டவர் மிகவாஞ்சையுடன் வந்து அவளுடன் பேசி அவளைப்பற்றி விசாரித்தார். அவள் என்னை அறிமுகம் செய்யவும் எனக்கும் நமஸ்கரித்தார். அவரது ஊரும் சர்மொபுரிக்கு மிகச்சமீபம்தானாம். திரும்பத்திரும்பச் சொல்லி மகிழ்ந்தார். இவள் போன் நம்பரைக்கேட்டு வாங்கிக்கொண்டார்.

" எதுக்காம் இத்தனை காய்கறி? "

கடைக்கார இளவல் கனீத்தாவை மேற்கண்ணால் பார்த்துக்கொண்டு மீண்டும் நெளிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அவ தாய்ப்பெண்கள் ‘வேலை செய்யிற’ கிளப்பொன்றுக்கு சாப்பாடு சப்ளை பண்ணிறவாம்............ “ என்றுவிட்டு இரகசியமாக கண்ணடித்தான்!

கனீத்தா கண்டபடி இறைந்துகிடக்கும் புத்தகங்களை யெல்லாம் தூசுதட்டி ஷெல்ஃபில் அடுக்கிவைத்தாள், ஜன்னல்களுக் கெல்லாம் புது கேட்டின்கள் தைத்துப்போட்டாள். உடுப்புகள் எல்லாவற்றையும் கழுவி ஸ்திரிபோட்டாள், பாத்றூம் உட்பட வீடு முழுவதும் பளிச்சென்று துலங்கியது. சமையலையும் முடித்து வைத்துவிட்டு அவனை எதிர்பார்த்திருப்பதில் தமிழ் மரபுபேணும் குடும்பப்பெண்களை ஒரேயடியாய் தூக்கியடித்தாள்.

அவனுக்கு எங்கிருந்தோ வந்தவள் எதற்காகத் தனக்கு இப்படியெல்லாம் பண்ணவேண்டும் என்றிருந்தது. எல்லாம் ஏதோ கனவில் நடப்பது போலவும் இந்தக் கனவு கலைந்துவிடாதிருக்க வேணுமென்று ஏக்கமாயும் இருந்தது.

நாளாக ஆக கனீத்தாவுக்கும் வீட்டைச்சுத்தம் பண்ணுவது வும், ஜெர்மன் வகுப்புக்குப் போய்வருவதுவும் தினப்படி நேரசூசிகை போட்டதுபோல் செய்ய லேசாக அலுப்புத்தட்டத் தொடங்கியது.

சித்தார்த்தனுக்கும் அவளின் நூடில்சையும் , சூப்பையும் சாப்பிட்டுச்சாப்பிட்டு நூடில்சைக் கண்டாலே புரட்டத்தொடங்கியது.

ஒரு வித்தியாசம் இருக்கட்டுமேயென்று தமிழ்நாடு றெஸ்ரோறன்டுக்குக் கூட்டிப்போனால் கனீத்தாவுக்கு உறைப்பும், புளிப்பும், கறிபௌடர்வாசமும், கொத்துமல்லியிலையும் அறவே பிடியாது, சரியாகச் சாப்பிடமாட்டாள்.

சீனாவோ தாய்லாந்து றெஸ்ரோறன்டுக்குப் போனால் அவனால் அனுபவித்துச் சாப்பிடமுடியாதிருக்கும்.

ஒரு நாள் சித்தார்த்தனுக்கு எண்ணங்கள் தாறுமாறாக ஓடிக்கொண்டிருந்த போது ஐந்திணைக்கவிதை ஒன்று ஞாபகம் வரவும் புன்னகைத்தான்.

இதைக்கவனித்துக் கொண்டிருந்த கனீத்தா “தனிமையில் என்ன மோனப்புன்னகை?” என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒன்றுமில்லை ஐந்திணை ஐம்பது என்றொரு பழைய இலக்கியத்தில் முன்பு படித்த கவிதை ஒன்று ஞாபகம் வந்துது அதுதான்................ "

"நல்ல வேடிக்கையாக இருக்குமோ?"

"அல்ல.......... காதலை , அன்பை , விட்டுக்கொடுத்தலை உணர்த்துவதாக இருக்கும்......... ஒரு அற்புதக்கவிதை. "

"சொல்லுங்கள் பார்க்கலாம். "

" சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென்றெண்ணிப் பிணைமான் இனிதுண்ண வேண்டி கலைமா – தன்

கள்ளத்தின் ஊச்சம் சுரமென்பதென்ப காதலர்

உள்ளம் படர்ந்த நெறி....................... '

அதாவது காட்டில் மேய்ந்துகொண்டிருந்த ஒரு ஜோடி மான்களுக்குக் கடுமையான தாகம் எடுத்ததாம். எங்கும் நீருக்காக அலைந்து அலைந்துவிட்டுக் கடைசியில் ஒரு சுனையை அடைந்தபோது அது வற்றி ஒரு சொற்ப தண்ணீரே அங்கு காணப்பட்டுதாம். ஆவல் மிகுதியால் இரண்டு மான்களுமே நீரில் இறங்கி வாயைத் தண்ணீரில் வைத்துக்கொண்டாலும் சுனையிலுள்ள நீர்மட்டிலும் சற்றும் குறையவே காணோமாம்.

கலைமானோ பாவம் பெண்மான் தாகம் தாங்கமாட்டாதது அஃதே குடிக்கட்டும் என்று தான் குடிப்பது போலப்பாவனை பண்ண, பெண்மானோ ஆண்மானுக்குத்தான் தாகம் அதிகம் அதுவே முழுவதையும் குடிக்கட்டும் என்று நினைத்து தானும் சும்மா குடிப்பதுபோலப் பாவனை பண்ணிற்றாம்................ "

கன்தாவுக்கு கவிதையினதோ, கவிதை சுட்டும் சம்பவத்தின் நயமோ சிறிதும்பிடிபடவில்லை. நல்லூரில் சந்தனம் குடித்த வெள்ளைக்காரன் போல விளங்கிய பாவனையில் அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தாள்.

இவளுக்கு தான் தொப்ளர் இபெஃக்ட்டைப் புரியவைக்க நேர்ந்தால் எப்படியிருக்கும் என எண்ணிப்பார்த்த சித்தார்த்தன் வாய்விட்டே சிரித்துவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன வந்தது உங்களுக்கு இன்றைக்கு..............? ” என்றாள் கனீத்தா கோபமாக.

ஒரு மனைவியிடம் கிடைப்பதெல்லாம் இவ்வளவுந் தானா.........? கவிதை, இலக்கியம், தத்துவம் சார்ந்த அவனது தேடல்களை அவளுடன் விசாரம் செய்ய முடியவில்லை யென்றால்............ தவித்தான்.

காதலிகூட இருந்து பாட்டுக் கலந்திடவேண்டும் என்று அவாவியவன் அனுபவமென்ன சாதாரணமானதா?

அவளின் இதயத்தை என்னதான் புரிய முயற்சித்தாலும் விளைவு ஏதோ ஃபில்டர் கண்ணாடியால் பார்த்த மாதிரி மொழிபெயர்ப்புக் கவிதை படித்தமாதிரியான அனுபவந்தான்.

அவளுக்கும் அப்படித்தான். என்னதான் பேசினாலும், எவ்வளவுதான் பேசினாலும் ஏதோ பொச்சம் அடங்காதமாதிரி யிருந்தது.

ஊத்தவான் ஒருநாள் நலங்கேட்டுப் போன்பண்ணினாள். போன்தானே பேசுகிறாள் பேசிவிட்டுப்போகட்டும்................ என்று சித்தார்த்தன் நினைக்கவும் கனீத்தா டெலிபோன் றிசீவரைப்பொத்திக் கொண்டு “அவளை எப்போது வீட்டுக்கு அழைக்கலாம்?”என்றாள்.

“ வேண்டாம் “ என்று சைகையால் காட்டினான்.

கனீத்தாவின் முகம் முதல் தடவையாக இருண்டது. தாயில் எதையோ சொல்லிவிட்டு றிசீவரை வைத்தாள். உதடுகள் துடித்துக்கொண்டிருக்க கண்களிலிருந்து சில வைரமுத்துக்கள் நிலத்தில் குதித்தன.

“நான் மனம்விட்டுப் பேசக்கிடைத்த ஒரே நட்பு, அவ இங்க வாறதும் உங்களுக்குப் பிடிக்கவில்லை............... நீங்கள் சொன்ன பிரேமை இவ்வளவுதானா....................?” விம்மினாள்.

சித்தார்த்தனுக்கு உள்ளூரக் கலவரமாகிவிட்டிருந்தது. சமாளித்துக்கொண்டு அவளைச் சமாதானப்படுத்தினான்.

“இது இந்த அளவுக்கு உன்னை நோகவைக்கும் என்று நான் நினைக்கவேயில்லை டியர்............... “

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊத்தவான் எங்கள் வீட்டுக்கு வர்றது உங்களுக்கு கௌரவக்குறைச்சல் என்று நினைக்கிறியள்................. எனக்குத் தெரியும்."

"கௌரவக்குறைச்சல் என்பதெல்லாமில்லை........... எதுக்கு அவ சினேகிதம்..........., இங்கே ஜேர்மன்காரர்களைக் கல்யாணம்செய்த தாய் நாட்டுப்பெண்கள் எல்லாரும் சேர்ந்து ஒரு கிளப்பே வைத்திருக்கிறார் களாம்.............. அட்டிரஸை எடுத்து ஒருநாள் போனமென்றால் எத்தனை பேரைச்சந்திக்கலாம்...... "

"ஊத்தவான் எனக்கு அயலூர்க்காரி என்பதுதான் உங் களுக்குத்தெரியுமே.......... அவமாதிரி மற்ற வேறுயாரும் என்மேல பட்ஷமாயிருக் காயினம்.............. அவ எனக்கு விசாஎல்லாம் புதுப்பித் துத்தாறன் என்டிருக்கிறா................ "

சித்தார்த்தனுக்கு இப்போது சுரீரென்று பற்றிக்கொண்டு வந்தது. தேவையில்லாமல் விசா புதுப்பித்துத்தருகிறேன்.............. அதுஇது என்று தங்கள் வீட்டுவிடயங்களில் மூக்கை நுழைக்கும் ஊத்தவானின் நோக்கங்கள் நிச்சயம் நல்லதாயிருக்காது.

"அப்ப விசா எப்பிடிப் புதுப்பிப்பது என்பது தெரியாமலோ உன்னைக் கூட்டிக்கொண்டுவந்தனான்.................?"

"அதற்கேன் மனிதர் இப்படிச்சீறுகிறார்" கனீத்தாவுக்கும் பிடிபடவில்லை.

அன்று முழுக்க மன்னையைத் தூக்கிவைத்துக் கொண்டிருந்தாள்.

" சரி சரி ஒரு நாளைக்கு அவளைக் கூப்பிடு.............. " என்றதும் மீண்டும் முகம் முழுநிலவானது.

ஒரு நாலுநாள் போயிருக்கும்: சித்தார்த்தன் வேலையால் மாலை திரும்பவும் கனீத்தா ஒரே பாட்டும் கூத்துமாய் ஸெற்றிக்கும் ஸோபாவுக்குமாகக் குதித்துக்கொண்டிருந்தாள். இயல்பிலேயே அவளுக்கு டிவி, ஷம்பூ விளம்பரங்களில் வருபவர்களைத் தோற் கடிக்கும் கருகருவென்ற நேரான கேசம். அதில் அன்று செறிவான சிறுசிறு பின்னல்கள் பின்னிவிட்டுத்தலையில் பல நிறங்களில் மணிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோர்க்கப்பட்டு குறுக்கும்மறுக்குமாக வலை வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

"என்ன இதெல்லாம்;..................?"

"இன்று ஊத்தவான் வந்திருந்தாவே..........."

சரி............ எவளாவது வந்து தொலையட்டும்........... இவள் மூஞ்சியை இறக்கிவையாமல் இருந்தால் சரிதான்.

"அவதான் இதெல்லாம் எனக்குப் பண்ணிவிட்டா........" தலையைப் பல கோணங்களிலும் சரித்துச்சரித்துத் தன் அலங்காரத்தைக் காட்டினாள் குழந்தை மாதிரி.

"வேறை.............?"

"ஃப்றைட் றைஸ், ஜியாஸி "இது உள்ளே பொடி பண்ணப்பட்ட இறைச்சி, வெஞ்சனங்கள் சேர்த்து நிரப்பப்பட் டிருக்கும். விருந்துகள் விழாக்களின்போது ஆவியில் வேகவைத்துத் தயாரிக்கப்படும பஸ்டா வகையிலான ஒரு சீன உணவு. பார்வைக்கு சின்னச்சின்ன சமோஸாக் களைப் போலவிருக்கும், காரமான சோஸ் எதனுடனாவது தொட்டுக் கொண்டு விளையாடினால் சும்மா கூவும். " எல்லாம் கொண்டு வந்தாவே........."

## (3)

கனீத்தாவின் பெற்றோர்களிடமிருந்து கடிதங்கள் ஒழுங்காய் வந்தன. சித்தார்த்தனையும் சுகம் விசாரித்து எழுதியிருக்கிறார்கள் என்று வாசித்துச்சொல்லுவாள்.

ஊத்தவானும் ஏதோ கட்டிக்கொடுத்த மகளைச் சீராட்ட வாற மாதிரி மாதத்தில் இரண்டு மூன்று தடவைகள் வந்து போய்க்கொண்டிருந்தாள்.

இலையுதிர்காலம் ஆரம்பித்து விட்டிருந்த ஒரு மாலை சித்தார்த்தன் வழமைபோல் வேலையால் ஒரு சீப்பு பியருடன் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்ஸரை அழுத்தினான். கலகலத்துக்கொண்டு வந்து கதவைத்திறக்கும் கனீத்தாவைக் காணவில்லை.

'சொல்லிக்கொள்ளாமல் எங்கும் போகமாட்டாளே.............. கடைகளில் குளிர்காலத்து சேல்ஸ் நேரம்............ எங்கேயாவது ஷொப்பிங் போயிருப்பாள்.' என்று எண்ணிக்கொண்டு தனதுதிறப்பினால் கதவைத்திறந்து உள்ளே வந்து காத்திருந்தான்.

இரவு ஏழே முக்கால் மணியுமாகியது. கனீத்தா வந்தபாடில்லை. பொலீஸுக்குத் தகவல் கொடுக்கலாமா என நினைத்தான். ஊத்தவானுடன் எங்காவது வெளியே போயிருப் பாளோ... அப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் எதையும் செய்யும் வழக்கமில்லையே.............. ஊத்தைவானின் டெலிபோன் நம்பர் எங்காவது எழுதிவைத்திருக்கிறாளா பார்க்கலாமென்று அலுமாரியைத்திறந்தான். அவளுக்காக அவன் முதன்முதல் வாங்கிக்கொடுத்த வெள்ளிமருவிய சூட்கேஸைக் காண வில்லை.

ஏதோ விபரீதமாக நடந்துவிட்டதென்பது புரிந்தது. அடுத்து என்ன செய்வதென்பது தெரியவில்லை. அவள் பிரிந்து போகவேணுமென்று முடிவெடுத்தால் நான் வற்புறுத்த முடியாதுதான். எதையும் சொல்லிக்கொண்டு செய்திருக்கலாமே........... ஆசியாக்கடை இன்னும் பூட்டியிருக்கமாட்டார்கள். அவர்களுக்கு போன் பண்ணினான்.

"தம்பி உங்களிட்ட நிறைய காய்கறிகள் வாங்குகிற அந்த தாய்லாந்து மனிசி ஊத்தவான் என்று அவவின்ர டெலிபோன் நம்பர் அல்லது அட்டிறஸ் தெரியுமோ...........? "

"டெலிபோன் நம்பர் தேடினால் எடுக்கலாந்தான்............. ஆனால் எனக்கு அவவின்ரை அட்டிறஸ் தெரியும்............. பல தடவை அவவீட்டுக்கு நானே நேரேபோய் சரக்கு சப்ளை பண்ணியிருக்கிறன்"

" நல்லது................ சொல்லும் "

"Rehberge U- Bahn இல இறங்கினால்............... ட்றெயின் போற திசையில வலப்பக்கமாய் இரண்டாவது வீடு. "

காரை எடுக்கப்போனவன் ஒரு கணம் இந்நேரம் டிராபிக்குக்குள்ளால் நூற்றெட்டு சிக்னல்களில் நின்று நின்று போவதைவிட ட்றெயினிலேயே போனால் சீக்கிரம் போய்விடலாம் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கொண்டு விரைந்துபோய் C-ghizg; "சுரங்க ரயில் " பிடித்தான். இடையில் Adenauer Platz என்ற சந்திப்பில் இறங்கி ட்றெயின் திசைமாறவேண்டி அதற்கான நகர்படிகளை நோக்கி ஓடுகிறான். எங்கிருந்தோ ஒரு பாலஸ்தீனி இளைஞன் இவனைக் கண்டுவிட்டு குளவியாய் அவனை நோக்கி ஓடிவந்தான்.

"ஹேய்...........மன்......... ஹேய்............. "

"என்ன? "

"என்னிடம் ஹஷீஷ் வாங்கு. " ""

"வேண்டாம். "

"ஏன் வேண்டாம;? "

"நான் பாவிப்பதில்லை....... "

"ஏன் பாவிப்பதில்லை.............?"—

"பழக்கமில்லை. "

"ஏன் பழக்கமில்லை? "

"................."

"தொலை!............. கஞ்சல் பாக்கிஸ்த்தானி. "

அத்தையின் பாடல்ல. குத்தியன்........... ம்ம்ம். இவனுடன் பேச்சை வளர்த்தினால் அடுத்த படலம் அவன் சட்டையைப் பற்றிக்கொண்டு புரள்வதாய்த்தானிருக்கும்............. அதற்கு இப்போ நேரமில்லை. கத்தியெடுத்துச் சொருகவும் தயங்காது இந்தக்கும்பல். பகவானே தம் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், கல்வியையும் தொலைத்துவிட்டு வழிதவறி நிற்கும் இந்த மாஃபியாக்குழந்தைகளை இரட்ஷியும். கன்னத்தில் போட்டுக்கொண்டு அடுத்த ட்றெயின் வரும் மேடைக்கு ஓடினான்.

வீட்டைக்கண்டுபிடிப்பதில் எதுவித சிரமமுமிருக்கவில்லை. பஸ்ஸரை அமுக்கவும் ஊத்தவானே கதவைத்திறந்தாள்.

" கனீத்தா இங்கே வந்தாளா..............? "

" ஜா........ வந்தாள். அடுத்த அறையிலிருக்கிறா...... "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வதியும் அறையை மருவிய இன்னொரு அறையைக்காட்டிவிட்டு அவள் உள்ளே நகர்ந்தாள். சித்தார்த்தன் அந்த அறைக்குள் நுழைந்தான்.

உள்ளே ஒரு கட்டிலில் அசோகவனத்துச் சீதைமாதிரி அமர்ந்திருந்தாள் கனீத்தா. அவனைக்கண்டதும் நிதானமாக எழுந்துவந்தாள்.

"எதுக்கு இப்பிடி... சொல்லாமல் கொள்ளாமல்................"

சற்றே திறந்திருந்த கதவை முற்றாகச் சாத்திவிட்டு வந்தவள் முதல்தடவையாக அவன் கண்களை நேர்கொண்டு பார்ப்பதைத் தவிர்த்தாள். கண்கள் லேசாக ஈரங்கொண்டு மின்னின. அக்கணம் அவனுக்கு அவள் யாரோ ஒரு அந்நியள் மாதிரிப்பட்டாள்.

"சித்தார்த்தன் நீங்கள் நல்லவரில்லை...... மிக........ மிக....... மிக.... மிகவும் நல்லவர். ஆனால் எனது வாழ்க்கை அங்கேயில்லை என்று எனக்கு படுகுது..... உங்களுக்கு எதிரில் நின்று நான் போகிறேன் என்று சொல்லிவிட்டுப் புறப்படும் மனத்தெம்பு எனக்கில்லை................"

"உன்னை யாரும் பயமுறுத்தினார்களா........... என்ன நடந்தது......... சொல்லு கனீத்தா."

தலையை இரண்டு பக்கமும் மெதுவாக ஆட்டினாள்.

"பின்னே விட்டிட்டுப் போக இப்ப என்னதான் வந்தது.............. உன் மூளையை யார் கழுவிவிட்டது யார்..........? உனக்கு இதெல்லாம் வேண்டாத சகவாசமென்று நான் ஆரம்பத்திலேயே சொல்லிவைச்சது இதுக்குத்தான்................. "

"சித்தார்த்தன்............. என் மூளையை யாருமே சலவை செய்யேல்லை.... நீங்கள் வீணாக ஊத்தவானைச் சந்தேகிக்க வேண்டாம், அவர் நல்லவர், என் விஷயத்தில் அவர் தலையீடு ஒன்றுமேயில்லை. பூஜ்யம். எனக்கு வழி வேறொன்று இருக்கிறது எனக்குப்படுகிறது....... எதிர்காலம் பற்றி எனக்குத்தெரிகின்ற காட்சிகளை யும், கோலங்களையும் இரண்டாவது மொழி ஒன்றில எடுத்துச்சொல்ல எனக்கு திறமை இல்லாமலிருக்கு. வருந்துகிறேன். இது நானே எடுத்துக்கொண்ட தீர்க்கமான முடிவுதான், இதற்குள் எவருடைய நிர்ப்பந்தமுமில்லை, சத்தியம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனக்கு நான் என்னதான் குறைவைத்தேன்............?"

" நீங்கள் எனக்கு ஒரு குறையும் வைக்கவில்லை.............. ஆனால் எனக்காக நீங்களாகவே பல குறைகளை ஏற்படுத்திக்கொண்டும், ஏற்றுச் சகித்துக்கொண்டும் வாழுகிறீர்கள்............ அதுதான் எனது துன்பம்."

"என்ன சொல்ல வர்றே நீ............ "

"அவள் தன் மழலை ஆங்கிலத்தில் செப்பியதன், செப்பமுயன்றதன் சாராம்சம் இது."

"சித்தார்த்தன்.... என்னைப்பாருங்கள்... நல்ல தாம்பத்யம் என்பது வெறும் மோகங்களாலோ, செக்ஸினாலோ அமைந்து விடுவதில்லை..... அங்கே ரசனைக்கலப்புகளும், கருத்துப் பரிமாற்றங்கள் இதெல்லாம் இருக்கவேணும், அப்போதுதான் அது சுவைபடும்....... எங்களுடைய வாழ்க்கையைப் பாருங்கள்..... குறைந்தபட்ஷம் எங்கள் சாப்பாட்டு ரசனையாவது ஒத்துப்போகிறதா வென்று....... நான் கிராமத்தில் பிறந்து நாகரீகம் தெரியாமல் வளர்ந்துவிட்ட ஒரு பட்டிக்காட்டுப்பெண். உங்களின் கவிதையிலும், இலக்கியத்திலும், தத்துவத்திலும் எனக்கு எக்காலத்திலும் ஈடுபாடு வரப்போவதே யில்லை..... எனக்காக நீங்கள் உங்களின் எத்தனையோ உறவுகளையும் நண்பர்களையம் இழந்து விட்டீர்கள்.... உங்களின் சிறந்த சிநேகிதன் என்று நீங்கள் சொல்ற அமலனே இப்போ வீட்டுக்கு வாறதில்லை...... உங்கள் பெற்றோரை நினைத்தாலே எனக்குப் பயமாகவே இருக்கிறது................ இந்த ஒருத்தியால் அவர்களையும் நீங்கள் இழக்கப்போவது எனக்குப் புரியாமலில்லை....... எந்தக்காலத்திலும் உங்கள் தாயாரிடம் உங்கள் மருமகளை இன்ன இடத்தில் பிடித்து வந்தேன் என்று சொல்லிவிட முடியுமா..............? யோசித்துப்பாருங்கள். நீங்களே சொல்றபடி பொம்மை மாதிரி இந்த உடலைத்தவிர வேறென்னதானிருக்கு என்னிடம்............? நீங்கள் இலட்சிய வாழ்வொன்றை உங்கள் ரசனைக்கேற்ப ஏற்படுத்திக்கொள்ள முற்றிலும் தகுதிகளும் வாய்ப்புக்களும் கொண்டவர். பாயவே தெரியாத இந்தக்குதிரையோட சேர்ந்து நீங்களும் நொண்டுவதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது தர்மம் இல்லை. தெரிஞ்ச தேவாங்கு என்பதற்காகத் தோழில்போட்டுகொண்டு அவதிப்பட வேண்டிய அவசியமில்லை. இலேசாகவும் உல்லாசமாகவும் பனிச்சறுக்கல் மாதிரிப்பயணிக்கக்கூடிய உங்கள் கால்களுக்குள் புகுந்துகொண்டு இடைஞ்சல் பண்ணிக்கொண்டு நான் சமாதானமாக இருப்பேனென்று நினைக்கிறீர்களா.......... அதில எனக்குச் சம்மதமோ, இஷ்டமோ இல்லை. எனக்கு நன்றாகவே தெரியுது........ எனது பாதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறொன்று. அதிலதான் நான் பயணப்படவேணும், பயணப்படவும் முடியும். அதனால் அந்தப்பாதைக்குத்தான் நானிப்போ வந்திட்டன். அதில எப்பிடி சறுக்கப்போறேனென்றது எனது விதி. என்னோடு சேர்ந்து வர்றதென்பது, உங்களுக்கு முற்றிலும் புதியதும் துன்பமான அனுபவமாயுமிருக்கும், உங்களால அது முடியவும் முடியாது. என் மேலான பிரேமையால சமூகத்தையும், உறவுகளையும் கணக்கிலெடுக்காது என்னோடு வாழவிரும்பும் உங்களுடைய தியாகத்தையும், மனோதைரியத்தையும் நான் போற்றுகிறேன். ஆனால் இந்தப்பிரிவு எங்களிருவருக்கும் நல்லது. என்னைப் புரிந்துகொள்வீர்களா சித்தார்த்தன்?"

அன்று நள்ளிரவாகும்வரை அவர்கள் விவாதித்துக் கொண்டார்கள்.

அடுத்த கோடையில் ஒரு நாள் தற்செயலாக பிஷ்மார்க் வீதியில் தாய்லாந்து, தாய்வான், பிலிப்பின்ஸ் என்று கிழக்காசிய இளசுகளாலேயே செறிந்ததும் **Butterflies** என்று திருநாமங் கொண்டதுமான செக்ஸ்பார் அருகே சித்தார்த்தனின் காருக்கு முன்போன டாக்ஸியொன்று நிறுத்தப்பட வேறும் இரண்டு குமரிகளுடன் கனீத்தா இறங்கிப்போவதைக் கண்டதும் அவன் ஹோர்ணை அடித்தான்.

"ஹாய்.............. சித்தார்த்தன்................ " என்று கண்கள் விரிய குதூகலத்துடன் கைகளை அசைத்துக்கொண்டு ஓடி வந்தாள்.

"எப்பிடியிருக்கிறீர்கள் சித்தார்த்தன் சௌக் கியமா......?"

" சௌக்கியமே......... "

நீ.......... எப்படி...?"

"சௌக்கியத்துக்கு குறைவில்லை..... புதுசா கார் பழக ஆரம்பித்திருக்கிறன்............ சீக்கிரம் லைசென்ஸ் கிடைத்திடும;....... "

" அப்படியா.............சந்தோஷம்;........ "

" ஊரிலிருந்து கடிதங்கள் எல்லாம் வருகிறதா.........?"

"வந்துகொண்டேயிருக்கு.......... எல்லோருமே சௌக்கியமாம். இவளைப்பார்த்தாயா..... எந்நாட்டுக்காரிதான் வந்து ஒரு வருஷமே யாகவில்லை, அதற்குள் தங்களூரில் புதுவீடு வாங்கி விட்டாளாம்.... நானும் வெகு விரைவில் ஒரு சூப்பர் மார்க்கெட் வாங்கி விடுவேன்.....!"

அவள் கண்கள் கனவுகளால் நிரம்பியிருந்தன.

(சரிநிகர் - 1999)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் வீதி

மாலைச்சூரியன் குழம்பை அள்ளி எவரோ ஒரு பிராட்டி வான்முகடு முழுவதையும் மெழுகிவிட்டிருந்தாள்.

உருகும் தங்கத்தின் தகதகப்பில் சேஷ்த்திரம் முழுவதும் பொன்மஞ்சளாய் ஜொலித்துக்கொண்டிருந்தது.

நாங்கள் நடந்துகொண்டிருந்தோம்.

எம்பாதையில் மண்குளித்து விளையாடிக்கொண்டிருந்த வால் நெடுத்த கெண்டைக்குருவி ஒன்று எழுந்து பறக்கப்பஞ்சிப்பட்டு எமக்கு முன்னே தத்தித்தத்திச் சென்றது.

நாமும் விடாது தொடரவும் கீசி வைதுவிட்டு எழுந்து பின்னோக்கி அரைவட்டமடித்துப் பறந்துபோய் மீண்டும் அதே இடத்தில் மண் குளித்தது.

தொடுவானத்திலிருந்து இன்னும் பெயரிடாத ஆயிரம் வர்ணங்கள் மையம் நோக்கி மெல்ல வந்து சேர்ந்தன. வழமையான நீலம் விடுப்பில் சென்றிருந்தது. குறுக்குமறுக்காக போர்விமானங்கள் கோடிழுத்துச் சென்றது போல் அடிவானத்தில் பல கோலங்கள் உண்டாயின. வெளிர மின்னற்கொடிகள் சிலதோன்றித் துளிர்த்து

தழைத்தோங்கி சடுதியில் மறையவும், நடுவானம் அரிந்து வைத்த கறுத்தக்கொழும்பான் மாம்பழமென செஞ்சிவப்பாகியது.

நவீன ஓவியங்கள் போலும் சில கட்டமைப்புக்கள் தோன்றின. அடிவானத்தில் ஒளிரும் நியோன் விளக்குகள் போலும் குண்டுகுண்டாக ஊதாவர்ண எழுத்துக்களாலன தெளிவான கவிதை ஒன்று தோன்றி மறைந்தது.

பின் இன்னொரு கவிதை..... அது மறைய இன்னொன்று.....அது மறைய இன்னொன்று...... ஒரு கணம் வானமெங்கும் கவிதைகள் இறைந்து கிடந்தன. எதைப்படிப்பது..... எதை விடுவது...........?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமே சிருஷ்டியின் நோக்கமும், பிரபஞ்ச இரகசியங்களும் கூறும் மந்திரக்கவிதைகள். படிக்க முதலே மறைந்து மறைந்து போயின. ஓவியங்களிலிருந்து ஒறேஞ்சிலும், ஆப்பிள்பச்சையிலும், குருவிச்சம்பழ நிறத்திலும், இதழ்களால் ஒளி உமிழும் மலர்கள் மலர்ந்தாடின. வானவீதியில் முண்டாசு கட்டிய மனிதர்கள் மாடுகளை ஓட்டிச்சென்றனர். மலர்கள் எவற்றையும் மாடுகள் மிதத்துச்சேதஞ் செய்யாதிருக்க வேண்டுமென மனது கவலை கொண்டது.

இந்த ஜென்மத்தில் அந்த இடத்திற்கு முன்னெப்போதாவது வந்ததாக ஞாபகம் இல்லை. மலைப்பாங்கான குளிர்வலயத்தில் வளரக்கூடிய பன்னங்கள், நெஃப்ரலொப்பிஸ், அந்தூரியங்களும்உலர் வலயத்திற்கான மூங்கிற்புற்கள், இலாமிச்சை(வெட்டி), அலரி, அன்னமுன்னாச்செடிகளும் மண்டிய புதர்க்காட்டினூடாக அந்தப்பாதை நீண்டு கட்புலஎல்லையில் அடிவானத்தைத் தொடுவது போலத்தோன்றி னாலும் அதற்கு அப்பாலும் நீண்டது.

பாதையை ஒட்டி இருமருங்கிலும் செறிந்த தேக்குமரக்காடுகள் இருந்தன. கடந்து செல்லச்செல்ல ஓக், பைன் மரங்களும் அடர்ந்து வானத்தை நோக்கிச் சென்றன.

நாங்கள் நடந்துகொண்டிருந்தோம்.

எங்கள் தேகம் முழுவதும் ஹீலியத்தால் நிரப்பப்பட்டதுபோலும் மிக லேசாக இருந்தது. சிறு ஈரத்திற்காக துள்ளியபோது கூட முப்பது மீட்டர் தூரத்திற்கும் அப்பால்போய் விழுந்தோம். கனவும் நனவும்போல இரு அனுபவங்களைத் தொடர்பு படுத்தக்கஷ்டமாக இருந்ததால் நேரத்தை உணரமுடியவில்லை.

முன்பொருமுறை ஹஷீஷ் புகைத்தபோது கிடைத்த அனுபவம் மாதிரியிருந்தது.

இதைப்புகைக்கத்தொடங்கி அரைமணியிருக்குமா......... ஒரு மணியிருக்குமா....... அல்ல ஐந்தாறு மணிகளுக்கும் அதிகமா.....?

தற்செயலாய் துருத்திய அறிவு கேட்கிறது.... எந்தச்சிகரெட்டாவது மணிக்கணக்கில் புகையுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி..... அப்ப ஒரு பத்து நிமிஷந்தான் இருக்கும். மணி என்பது என்ன..... நிமிஷம் என்பதென்ன...... புரியமுடியாது மீண்டும் குழப்பியது. அனுபவங்களே மாயையோ..........?

நாங்கள் நடக்கத்தொடங்கி எவ்வளவு நேரமிருக்கும்........?

எவருக்குமே தெரியாது. இதை எண்ண சிரிப்புச்சிரிப்பாய் வந்தது. நான் பாட்டிற்கு இளித்துக்கொண்டிருக்கப்படாது. என் கௌரவம் என்னாகும். பட்டென நிறுத்திக்கொள்கிறேன்.

அவள் கண்டுகொண்டால் என்னை என்னவென்று நினைப்பாள்?........ என்னவாவது நினைத்துவிட்டுப் போகட்டுமே...... ஏன் நான் யாருக்காக வேனும் வாழ்ந்துகொண்டிருக்கிறேனா........? இல்லைத்தான்.

ஆனாலும் நான் அவள் மதிப்பிலிருந்து சரிந்து போதலாகாது.

ஏன்.....?

அவள் என்னை நம்பி வருகிறாள்....... என் பிரக்ஞையில், சித்தத்தில், அறிவில், திறமையில் நம்பிக்கை வைத்து........ தனி வழியில்.

அவளைத் தனிவழியே அழைத்துச்செல்லத் துணிந்தது என் பலமா..... பலவீனமா? தெரியவில்லை. கேட்டது 'அழகியபெண் ' என்றதும்....... கொஞ்சம் பரிவு, கொஞ்சம் காபந்துணர்வு, கொஞ்சம் ஆசை பிறந்ததென்னவோ உண்மைதான்.

நவீனபெண்ணியவாதிகள் முதல் இரண்டும் "டூப்" மூன்றாவதுதான் நிஜம் என்பார்கள். ஏன் நான் பொய் சொல்ல வேணும்.........?

நிலவில் இருப்பதைப்போல......பெண்ணின் அருகில் இருப்பதும் சுகமே. இவ்வுணர்வுகள் இயல்பூகமாக என் ஜீன்ஸ் வழி வந்தவை.

காமம் தோன்றவில்லையா........?

தோன்றுவதாவது........ அது எப்போதுதான் இல்லாதிருந்தது.....?

ஒவ்வொரு இதயத்துடிப்பிலும்...... ஒவ்வொரு உணர்வின் தெறிப்பிலும்

கலந்தேகிடக்கிறதே. காமம் நீங்கிய நான் அசாத்தியம்.

அதைச்சொல்லவில்லையே.......?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கேள்வியில் உனக்கப்படியில்லை என்கிற பாசாங்கிருக்கு...... இருக்கட்டும். ஒவ்வொரு துளி இரத்தத்திலும்...... தசையிலும் அது உறைந்திருப்பதை உணர்ந்திருந்தும் பலரிடமும் இப்பாசாங்கிருக்கு.

திரும்பிப்பார்க்கிறேன்..........

அவள் வந்துகொண்டிருக்கிறாள். ஆரோக்கியமான ஒல்லியான உடல்வாகு இடையில் வைன்கிளாஸை மாதிரி மேலும் ஒடுங்கிப்போகிறது. மெல்லிய ஊதாகலர் பின்னணியில் அடர்கத்தரிப்பூ வர்ணத்தில் சின்னச்சின்னப்பூக்கள் உடலெங்கும் செறிந்த கைத்தறிச் சேலையைக் கச்சிதமாக உடுத்தியிருக்கிறாள்.

தனி முத்துப்பதித்த தோடுகள் அழகுபடுத்தும் பெரிய காதுமடல் களைத் தொடரும் கன்னக்கதுப்புக்களில் படர்ந்திருந்த மென்பூஞ்சு ரோமங்களிலும், அம்மாலை ஒளியில் மஞ்சள் குளித்தது போலிருந்த அவள் தோற்றத்திலும் ஏராளமாய் பெண்மை வழிந்தது.

பெரிய்ய தோற்பையொன்று தோளில் தொங்க முந்தானையின் ஒரு தலைப்பை எடுத்துப்போர்த்தியிருக்கிறாள்.

முதலில் அவள் முகத்தையும் விழிகளையம் கவனிக்கப்படாது என்பதில் பிடிவாதமாயிருந்தேன். கவனித்தால் அவை ஹறிகேசனாகிய என்னை விடுத்து எனக்குள்ளே இன்னொருவனுடன் பேசும். அவன் நொடியில் பலஹீனகேசனாகி விடுவான். அவள் விழிக்கோளங் களிருக்கே......... கொக்கயின் பார்ட்டி........

அவை கால்பவைதான் எவ்வகைக் கதிர்கள்? சும்மா பட்டமாத்திரத்தில் சித்தம் தடுமாறிப்போகுதே......

கூடாது...... அவைகளை நான் நோக்கவேகூடாது...... நெப்போலியன் சுண்டெலிக்குப்பயப்படும் இந்த இரகசியம் அவள் அறியவேகூடாது.

## 2

அவள் என்னை நம்பி வருகிறாள்.

தன் உடமைகளைப் பறித்து விடமாட்டேன் என்று நம்புகிறாள். தன்னைப்பறித்து விட மாட்டேன் என்றுநம்புகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் உயிரைப் பறித்துவிடமாட்டேன் என்றும் நம்புகிறாள்.

என்னைத்தொடர்ந்து வருகிறாள்.

அவள் என் அருகாக வரட்டும் என்று என் நடையின் வேகத்தைச் சிறிது தளர்த்தினேன்.

அருகில் வந்ததும் கேட்டாள்: "உங்களுக்குள்ளேயே பேசிக்கொள் வீர்களோ......... "

"அவ்வப்போது பேசிப்பேன்..... தர்க்கிப்பேன்...... சண்டையெல்லாங் கூடப்பிடிப்பேன்........ வெளியில தெரியாது........ ஆனால்..... விடயத்தின் உஷ்ணந்தாங்காது போனால் மட்டும் வார்த்தைகள் எப்போதாவது தெறித்து வெளியில் விழுவதுமுண்டு....... "

"இப்பவும்....ஏதோ விழுந்தாப்போல...... "

"இருக்கலாம்.... ஒரு விவாதமொன்று நடந்துகொண்டிருந்தது.... "

"சுவாரஸ்யமானதாக இருந்தால் நானும் பங்கேற்கலாமா.......... ரொம்ப அந்தரங்கமானது என்றால்........ வேண்டாம்......... "

"அந்தரங்கமாவது........ அறிவார்ந்த விஷயமென்றால் எனக்கு எல்லாமே வெளிப்படைதான்..... "

"என்னவாம்.......? " (குரலில் கொஞ்சம் கிசுகிசுப்புடன்)

"பெண்களாலதான் உலகமே அழகாகிறதென்கிறேன்...... இல்லை என்கிறது உள்ளேயிருந்து ஒரு முரட்டுக்குரல்...... "

" எப்படி ......? "

"பெண்கள் பூஞ்செடிகளைப் போல அழகும் வனப்புமாய் இருக்கிறார்கள்....... ஒரு பூஞ்சோலை ஊரின் எழிலைக்கூட்டு வதில்லையா....... அப்படித்தான். "

"ஆண்கள் பார்வையில் என்றிருந்தால்.........சரி"

"அப்போ..... ஆண்களுக்கொரு உலகம்..... பெண்களுக்கொரு உலகமென்று இருக்கவேணும் ........ ஒரு பெண்ணின் அழகை இன்னொரு பெண் ஒத்துக்கொள்ளமாட்டாளா என்ன...........? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒத்துக்கொள்ள மாட்டாள் என்றில்லை........ ஆனால் ஆணுக்கும் பெண்ணுக்கும் அழகுணர்ச்சியில வேறுபாடு உண்டு....... ஆணுக்குப் பெண்ணிடத்தில் கவர்ச்சி ஏற்பட அவமீதான காமந்தான் காரணம் "

"இல்லை... என்றலை..... காமம் என்பது ஒன்றும் விலக்கப்பட்ட சபிக்கப்பட்ட வஸ்த்தோ, உணர்வோ இல்லையே..... இன்னும் சரியாகச் சொல்லப்போனால்...... காமந்தான் வாழ்வின் அடிப்படையே என்பேன்....... அனாதியிலிருந்தே பெண்தான் ஆணை ஆகர்ஷிப்பவளாக இருந்திருக்கிறாள்.......... "

"பெண் போதைப்பொருள் அல்ல என்ற வாதமிருக்கே.....? "

"இல்லை என்றலை...... பாலை, பழமையை வைச்சு ஒருத்தரை இன்னொருத்தர் ஆளுமை செய்யறது தப்பிலுந்தப்பு....... ஆனால் ஆண் பெண்ணிடையேயான இயல்பான லயிப்பை கேலியாக்குதலோ, ஆகாதென மறுத்தலோ மடமையான குருட்டாம்போக்கே என்பேன்....... நீ இதைத்தான் ரசிக்கலாம், இதை ரசிக்கவேகூடாது என்று யாருக்கு யாரும் கட்டளையிட முடியாது...... இந்த உரிமை உலகத்தில யாருமே எடுத்துக்கொள்ள முடியாது. ஹோமோஸெக்ஸுவல்ஸை பாருங்கள்..... நாம தப்பு என்றதால இல்லையென்றாகிவிடுமா.......? "

"இதை பெண்ணிலைவாதிகள் ரொம்ப விவாதிக்கிறாங்க இல்லை.? "

"விவாதிக்கிறாங்க சரி..... ஆனால் ரொம்ப வரட்டுத்தனமாயிருக்கு... பெண்களில்லாத உலகத்தில ஆண்களும், ஆண்களில்லாத உலகத்தில பெண்களும் உற்சாகமாயிருக்க மாட்டார்கள்... சின்னச்சின்ன வேற்றுமைகளைப் பெரிது படுத்திக்கொண்டு ஆணும் பெண்ணும் தர்க் கிச்சு அடிச்சுக்கொள்றத போல முட்டாள்த்தனம் வேறில்ல..... -

"அப்போ.... என்னசெய்யலாங்கிறீங்க.....? "

"முதல்ல..... இந்த வேண்டாத விவாதங்கள நிறுத்திட்டு.......

ஆணும் பெண்ணும் சேர்ந்து அறிவு பூர்வமா சிந்திச்சு இந்த உலகத்தை இன்னும் அழகா.... ரம்யமா பண்ணவேணும். அன்பை

பரவிப்பரவி எல்லைகள் அற்றதாய் இதை விஸ்த்தரிக்கவேணும்...... எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா...... என்று பூரிக்கிறானே.... ஒரு கவிஞன்..... இருப்பதை நுகர்வோம் களிப்போம் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" கடவுள் நம்பிக்கை வர்றதா.....? "

"ஆஸ்த்திகனாகவோ.... இல்ல நாஸ்த்திகனாகவோ இருக்கக்கூடிய ஞானம் இன்னும் எனக்குக்கைவரவில்லை என்பதே சரி. "

மாலைக்காடு இன்னும் மஞ்சள் குளித்துக்கொண்டிருந்தது.

வானத்தில் பொருளும் நடையும் புதிய கவிதைகள் மேலும் பல தோன்றித்தோன்றி மறைந்து கொண்டிருந்தன.

"எதுவரை படித்தீர்கள்? " என்றேன்.

"ஆரம்பத்திலே சூனியம் தவிரத்து எதுவுமேயிருக்கவில்லையாம். பின்பு எங்கிருந்தோ இவையெல்லாம் மெல்ல மெல்ல வந்து சேர்ந்துதாம். சிக்கல் கொண்டுதாம்........ இந்தச்சிக்கலை அதன் கட்டமைப்பை புரியற மாதிரிக் கொஞ்சம் படித்திருக்கேன்......... ஆனா இதெல்லாம் எதிலிருந்துதான் வந்தன...... ஏன் வந்தன...... எதுக்குச் சிக்கல் கொண்டன...... எதன் வழிகாட்டலில போய்க் கொண்டிருக் கின்றன……. இதுகள்தான் புரியமாட்டேங்கிறது. "

"நான் அந்தக் கவிதைகளைக் கேட்டேன்..... "

"நம்ப பாரதி கவிதைகள் மாதிரி எல்லாம் எளிமையாய்த்தான் இருந்தன..... ஆனாலும் எதுவுமே அர்த்தம் பிடிபடல்ல...... உங்களுக்கு.....? "

"நான்கூட வேகமாய்ப்படிக்கிற வகையில்லை...... ஒரு கவிதையைத்தானும் முழுசாய்ப்படித்து முடிக்கல..... சில கவிதைகள் மெற்றாஃபிஸிக்ஸ் பற்றிப்பேசின மாதிரியிருந்துதே?"

பிரபஞ்ச இரகசியத்தைப் பிட்டுவைக்கிற மந்திரக்கவிதைகளை அநியாயமா மிஸ் பண்ணிவிட்டோமோ........ கவலையாயிருந்தது.

மனிதநடமாட்டமே இல்லாதிருந்த அந்தப்பிராந்தியத்தில் அக்கவிதைகளைப் புரிந்துகொண்ட ஜீவனேதாவது இருக்குமா என்று சுற்றுமுற்றும் பார்த்தேன். சில கழுதைகள் ஆவரசுப்புதர்ப்பக்கமாக மேய்ந்துகொண்டு நின்றன.

3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆறாவது, ஏழாவது, எட்டாவது புலன்கள் நீங்கள் நினைப்பதுண்டா.......? "

கடித்துக்கொண்டிருந்த தேன்புல்லைத் துப்பிவிட்டு "விளக்கமாகச் சொல்லுங்கள் " என்றாள்.

"இப்போ எம்மைச்சுத்தி எத்தனை ரகமான மின்காந்த அலைகளில எத்தனை மொழிகளில எத்தனை விதமான இசைகள் மிதந்து கொண்டிருக்கே...... எதையாவது கேட்கிறோமா....... "

"இல்லை"

"அதை வடித்துச் செவியில செலுத்த ரேடியோ என்றொரு சாதனம் தேவைப்படுகுதில்ல...... இது போல எமது புலன்கள் கடந்த சக்திவீச்சுக் கள் இந்தப் பிரபஞ்சவெளியில எமக்குப் புலப்படாம இருக்கலாம் ...... இன்னும் பல மில்லியன்

வருஷங்களில பரிமாணம் அடைந்திருக்கப்போற மனிதன் அந்த சென்ஸ்களை எல்லாம் உணர்பவனாயிருப்பான் அவனுக்கு பிரபஞ்ச இரகசியங்கள் எல்லாம் புரிவதாயிருக்கும். "

"அவன் அந்த சென்ஸ்களையெல்லாம் அடைகிறவரையில் இருக்கிற தலைமுறை மனிதர்கள் பூமியை விட்டுவைத்திருப்பார் களா.......... "

"சும்மா ஒருஎதிர்பார்ப்புத்தான்..... "

"இந்த மாயைத்தத்துவம் பற்றி என்ன நினைக்கிறீங்கள்........ –

"அது என்னை நல்லாக் குழப்புது..... "

"எப்படீன்னு சொல்லுங்க.. "

"அது வஸ்த்துக்கள் எதையுமே இல்லேன்று நிராகரிக்குதில்ல.......

எமக்கு சென்ஸ்..... அதாவது புலனுணர்ச்சி இருக்கிறதாலதான் எமது இருப்பையும், பிறவஸ்த்துக்களையும், பிரபஞ்சத்தையும், சூனியத்தையும் சொல்லமுடியுது....... ஸ்த்தூலவுடம்பு கொண்டிருக்கிற பொறிகள் இந்த உலகத்து வஸ்த்துக்களோட பெறுகிற அனுபவங்களாலதான் மனுஷனுக்கு அறிவோ, ஞானமோ பிறக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஞானத்தின் பிறப்பிடம் இருப்பிடம் வேற மனசா ஆத்மாவா என்றொரு கேள்வி இருக்கு..........

மனசு என்று வைச்சா அந்த மனசைக்கொண்டிருக்கிற ஸ்த்தூல உடம்பு மாயை, அதன் அறிவு, ஞானம் எல்லாமே மாயை என்று நிறுவலாம்.........

ஆத்மா என்றாகிறபோது இவ்வளவு ஞானம் வாய்த்திருந்தும் எதுக்குப் போய் கன்மாவில சிக்குப்படிறது என்பது புரியல........

மேலும் கன்மாவின் வேலைகளைப் பார்க்கிறபோது ஏதோ பழிவாங்கற மாதிரியெல்லாம் படுது...... தவிர நான் கொஞ்சம் ஆச்சர்யப் படற மாதிரி ஒரு தியறி இருக்கென்றால்......... அது அத்வை தந்தான்......... "

"அதாவது சத்து, சித்து, சிவம் என்னாமல் எதையாவது புரியும்படி பேசறதா.......? "

"அத்வைதம் எதையுமே மறுக்கல்ல....... ஒன்றேயான பிரமத்தின் வேறுபட்ட தோற்றங்கள்தான் இப்பிரபஞ்சத்தின் வஸ்த்துக்கள் என்று விபரிக்குது...... இதில அற்புதம் என்னவென்றால் தத்துவம் விஞ்ஞானத்திற்கு முந்திப்போய் எலக்ரோன் நுணுக்குக்காட்டி இல்லாம லேயே மூலகங்களுக்கு இடையேயுள்ள ஒற்றுமையைச் சொல்லுது......... இது ரொம்ப அபூர்வமான விஷயந்தான்....... ஆனால் இதுகள் எதனாலுந்தான் உயிர், சிருஷ்டிப்பு, அதன் நோக்கங்கள் இதுகள்ல எனக்குத்தெளிவு கிடைக்கல......... பரமாத்மாவே ஆணவம், கன்மம், மாயையால பற்றுண்டு ஜீவாத்மாவாகி பின் பிறப்புக்களால ஸம்ஸ்காரம் பண்ணிக்கொண்டு பரமாத்மாவா ஆகிறதென்கிறதைதோ என் பிரக்ஞை ஒப்புதில்ல........... "

"விஞ்ஞானி நாப்பது மில்லியன் வருஷங்களுக்கு முன்னே பூமியில் உயிர இருக்க வாய்ப்பேயில்லையென்று அடிச்சேசொல்லிடறான்........ அப்போ அதுக்கு முன்ன ஸம்ஸ்காரம் எல்லாம் எங்க நடந்திச்சாம்? "

"வேறொரு மண்டலத்திலயாயிருக்கலாம்....... "

விழுந்து விழுந்து சிரிச்சாள். அவள் கனிந்து மகிழ்ந்து குலுங்கிச்சிரிப்பது மனதில் எங்கேயோ செல்லமாகக்கடிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த உலகத்தில நீங்கள் பார்த்து ரொம்ப அதிசயிக்கிற..... அல்லது உயர்வானது என்று கருதிற விஷயந்தான் என்ன.....? "

"இந்த உயிர் எங்கிற விஷயமும் பிரம்மம் மாதிரியே எங்க அறிவுவட்டத்தில சரியா பிடிபடாமத்தான் இருக்கு........ அதை விடுத்துப்பார்த்தால்....... நான் மனித உணர்ச்சிகளைத்தான் சொல்லு வேன்....... ஏன் மனிதன் என்று குறிப்பிட்டுச் சொல்கிறேன்னா மற்ற விலங்குகளில அது அவ்ளவா பரிணாமிக்கவில்லை...... இந்த உலகத்தை இன்னும் அழகாக்கிடறதா...... இல்லை கொளுத்திடறதா என்று தீர்மானிக்கறது நாளைய மனுஷன்ட உணர்ச்சிகளின் கைக்குவந்தாச்சு........ உலகத்து வளங்களை நுகர்றதில மனுஷருக்குள்ள சமத்துவம் இல்லை என்கிற அடிப்படை உண்மை ஒருத்தனுடைய உணர்வில தாக்கினதாலதான் பொதுவுடமைத்தத்துவமே தோன்றிச்சு. இன்றைய உலகில யார் அதிநாகரீகன் என்றால்...... எவனொருவனிடம் சூப்பர் ஸென்ஸிடிவ் மனம் இருக்கோ அவன்தான் என்று கையைக்காட்டுவேன்......... அஹிம்சை கருணை காருண்யம் என்கிறதெல்லாம் ஹை ஸென்ஸிடிவ் மனதாலதான் சாத்தியம். முழுதா விபரித்துவிடமுடியாத அபூர்வஉணர்ச்சிகளை அருட்டக்கூடியசக்தி கலை, இலக்கியம், இசை, இயற்கையழகு இதுகளுக்கும் இருக்கிறதால நான் இவைகளில்லயும் லயித்துப்போவதுண்டு......... "

இப்படிப் பேசிக்கொண்டே போனோம்.

## 4

ஒரு திண்மக்கோணத்துக்கு (Radian) ஆயிரத்திற்கும் மேல் ஒளிர் வெள்ளிகள் நிறைய சேஷ்த்திரம் பகலாகியது. ஒவ்வொரு முகிலும் ஒவ்வொரு வர்ணத்தில் தோய்ந்துகொண்டு எல்லாத்திசையிலும் சுயாதீனமாய் திரிந்துகொண்டிருந்தன.

கட்சி மாநாடொன்றுக்குச் சென்று திரும்புபவர்கள் போல அனில்களின் கூட்டமொன்று எதிர்த்திசையிலிருந்து வந்துகொண் டிருந்தது. கடந்து செல்லும் எந்தவொரு அனிலாவது எம்மை ஏறிட்டும் பார்க்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையாவது மிதித்துவிடாமலிருக்க பாதங்களை நிதானமாகத் தூக்கி வைத்து நடந்தோம்.

பின் ஒரு கூட்டம் அகிழான்கள் வந்தன. சில பாத்தினடியில் புகுந்து கிச்சுக்கிச்சுமூட்டின. அவள் பயந்துபோய் பதிவாயிருந்த கொய்யா மரமொன்றின் கிளையொன்றில் ஏறிக்கொண்டாள். அகிழான்கள் கடந்து போனபின் என்னைத் தொடர்வதற்காக ஓடிவந் தாள்.

"அகிழானுக்கே பயந்தாலெப்படி... இனிக்கரடிகூட வரலாம்."

"சும்மா பயங்காட்டாதீங்க.. வரும்போது பார்த்துக் கொள்ளலாம் ."

" நீங்கள் வந்த பின் கரப்பான் 'டைப' பா........? "

" அதிபுத்திசாலி........... சாமர்த்தியசாலி.......... தைர்யசாலி.......... என்று நினைப்பதற்குரிய எவருடைய உரிமையையும் நான் மறுக்கேல்ல........"

இரண்டு பக்கமும் ஈரலிப்பான பள்ளமான வயற்காட்டுப் பிரதேசங்களிருக்க நடுவே அணையைப் போன்றவொரு மேட்டுத் திடலில் பாதை தொடர்ந்தது. மேலே செல்ல இருமருங்கிலும் இருவாட்டி வயல்களில் சோளம் விளைந்து கதிர தள்ளியிருந்தது.

அவள் கீழே இறங்கிப்போய் நல்ல பால் பருவத்தில் பொத்திகளை முறித்து வந்து மடலையும் குந்துகளையும் நீக்கிச் சுத்தம் செய்துவிட்டுப் பவ்யமாக என்னிடம் நீட்டினாள். தானும் ஒன்றைக் கடித்து 'சூப்பராயிருக்கு' என்றபடி இன்னும் பக்கமாக வந்தாள்.

"சோளமென்றால் உங்களுக்குப்பிடிக்குமா............? " கேட்டேன்.

"பொதுவா அடுப்பில ஏத்தாம கிடைக்கிற இயற்கையான காய்கனிகள்ல இஸ்டம் அதிகம். இளனி.........கரும்பு........கெக்கரி............. இப்படியொரு பட்டியலேயிருக்கு. "

"சரி.............. இப்படி பிடித்த விஷயங்களாய் இன்னும் கொஞ்சம் சொல்லுங்களேன்............ "

"மைல்கணக்கில நீள்ற பட்டியல்லயிருந்து............ எதைச்சொல்றது எதை விடறது........... ரொம்பக்கஷ்டம்........... ஏதோ கொஞ்சம் முயற்சி பண்றேன். "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பண்ணுங்க........"

"ஆனந்தவல்லி என்கிற என்னை."

"வெண்ணிலாவென்றல்லா கூப்பிட்டார்கள்?"

"என் ஒரிஜினல்பேர் ஆனந்தவல்லிதான்.............. ஏன் கர்நாடகமாயிருக்கா?"

"அப்படி நான் சொல்லேல்லையே."

"யாருமே நேர்ல உன் பேர் கர்நாடகமாயிருக்கென்று சொல்லிடமாட்டாங்க....... குறிப்பா ஆண்கள்னா............... ஆ..... அதுவா.......–லவ்லி.....ஸ்வீட்–என்பாங்க."

"ஏதோ ஆண்கள் என்றாலே பெண்களோட போட்டிபோடவென்றே ஜனிக்கிற ஜென்மங்கள் மாதிரித்தான் நீங்களும் நினைக் கிறீங்கள்.............சரி....மேல."

"எங்க குடும்பம்.........., எங்க ஃபிலோசபி புரொபெஸர் அச்சுதனைப்போல இன்டெலெக்சுவலா.......... ஈகோவில்லாம......... உண்மையான நேசத்தோட பழகுகிற ப்ரெண்ட்ஸ்........., மற்றும் துறை போந்தமேதைகள், ஞானிகள், பெரியவா இவர்களுடைய அருகாமை, குழந்தைகள், பூக்கள், மரங்கள், பச்சைப்புல்வெளிகள், தோப்பு....... மலை, அருவி, கடல் என்று இயற்கையை அனுபவிக்கப்பண்ற பயணங்கள், உழைப்பும் நம்பகமுமான ஒரு கார், மழை, நாளையைப்பற்றின கவலையில்லாமலிருக்கும் பறக்கும் ஒரு பறவை, சுதந்திரமாய் நீந்திற ஒரு மீன்........ போதுமா?"

"இன்ரெறெஸ்டிங்........... இன்னுங்கொஞ்சம்."

"புத்தகங்கள், Zenனோ இல்லை Confuciousஸோ தத்துவங்கள், நாவல், கவிதை, பரதநாட்டியம், கர்நாடகஇசை........"

"வாவ்...............!"

"என்ன?" என்பதாகப்பார்த்தாள்.

"இத்தனை விஷயங்களுமே எனக்கும் பிடித்தவையென்றால் நம்புவீர்களா.....?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நம்புவேன். "

"நானென்றால் இந்த முதற் பட்டியலிலே இன்னுமொன்றையும் தப்பாம சேர்த்துக்குவேன். "

மீண்டும் அதே 'வித' மாகப்பார்த்தாள்.

"அது ரொம்ப பேர்ஸனல்............ அந்தரங்கம்..... ஆனா நான் இதுல உண்மை பேசிறேனென்றால் சொல்லியே ஆகணும்.

அது........ வந்து........வந்து....."

"தைரியம் பத்தலயா......... சொல்ல? "

"ச்சே.......... அப்பிடியெல்லாமில்ல."

"அப்ப........ இருந்தா சொல்லிடுங்களேன். "

"காதலுடன் கூடிய செக்ஸ்.........!"

விழிகளை மேலே எறிந்துவிட்டு 'காட்ச்' பிடித்தாள். அதை ஆமோதிப்பு என்பதா.......மறுப்பு என்பதா...........கிண்டல் என்பதா........? சரி விஷயத்தை மாற்றவேண்டும்.

"கர்நாடக இசை என்றால் என்ன? " என்றேன்.

"கர்ணம் எங்கிறது காது. செவிப்புலனுக்கு அதனால கிரகித்துக்கொள்ளக்கூடிய மேல்-கீழ் ஸ்ருதி எல்லைகளிருக்கு. இது விலங்குக்கு விலங்கு வேறுபடக்கூடச்செய்யும்......... மானுஷச்செவியில புலனாகக்கூடிய எல்லா இசைவகையும் கர்நாடக இசைக்குள்ள அடக்கம்...........!"

"ரொம்பத்தான் ஆசை........ சரி. நீங்கள் இசை கற்றுக்கொண்டீர்களா?"

"கற்றுக்கொண்டது கொஞ்சம்......... கேட்டது அதிகம். "

"பாடுவீர்களோ...........?"

"அடிக்கடி பாடுவேன்.................. எனக்குள்ளேயே அலாதியாய் ஆலாபனைகள் பண்ணிக்கொண்டு, சில வேளைகளில மிகமிக விஸ்த்தாரமாய்ப் முடிவேயில்லாம கற்பனைகளை வளர்த்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு.................. பாடிக்கொண்டேயிருப்பேன்........ ஆனா பார்க்கிற யாருக்கும் தெரியாது. "

"இப்போ எனக்காகவும்."

இயல்பாக முதலில் வெட்கப்பட்டாள். வானத்து மஞ்சள் முகத்தில் தெறிக்கிறது. சமாளித்துக்கொண்டு 'பிகு' ஏதுமில்லாமல் பாட ஆரம்பித்தாள்.

தாழ்தொனியில் பூஞ்சிறகொன்று காற்றில் அசைந்து அசைந்து மிதந்து வருவதைப்போல ஹிந்தோளத்தை மிக மிருதுவாக ஆலாபனை பண்ணினாள்.

ஸ்ருதி மெல்ல மெல்ல மேலே ஏறி, ஏறிவிட்ட பட்டமொன்றின் வாலைப்போல அங்கங்கு சுழித்தும் ஒடித்தும் துடித்தும் ஜாலங்கள் காட்டியது.

ஒரு வண்ணத்துப்பூச்சி பறக்கப்போதுமான லேசான பிரயத்தனத்துடன் அனாயாசமாய் சந்து பொந்துகளிலெல்லாம் புகுந்தும் நுழைந்தும் மீண்டது. அந்த ரசானுபவத்தில் திளைத்துச்சிலிர்த்து என்ன இவள் கூடப்பறக்கிறேனா, நடக்கிறேனா என்பது புரியாமல் மயக்கமாக விருந்தது. வளமான பிரயோகங்களாலான ஆலாபனை முடிந்து அவள் தரையிறங்கவும் " சபாஷ் " என்றேன்.

"நிஜமாலுமா.............?"

"நிஜமாலும் இத்தனை அற்புதஞ்செய்வீரகளென்று நான் நினைக்கவேயில்லை!"

தலையைச்சாய்த்துப் பாராட்டை ஏற்றுக்கொண்டு " மேலே பாடவா........? " என்றாள்.

"ஜோராய்! "

"மா... ரமணன்..........உமாரமணன்....... மலரடி பணி மனமே தினமே..."

பாபநாசன்சிவன் கீர்த்தனை. எத்தனை கேட்டாலும் திகட்டாத காந்தர்வக்குரலில் நிரவல் செய்து ஸ்வரங்களில் மந்த்ரங்களைத் தூவும் கற்பனைகள் காட்டி சாஹித்யத்தில் பாவங்களை உருகி ஓடவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளம் போட நான் தடுமாறவும் கையில் -ரூபகம்- காட்டித்தந்தாள். கார்வைகளும் அதில் ராகத்தைத்தெறிக்க வைக்கும் நளினம்பொருந்திய அசைப்புகளும் கூடவே பிருகாக்களும் என்னே சுகம்! இதயத்தின் மிக ஆழத்திலிருந்து வானவில்லொன்று பிரவகித்து உயிர்பூரா வியாபிக்க மனம் சிறைப்பட்டுப்போகிறது.

கீர்த்தனை முடிந்ததும் என்னையும் ஏதாவது பாடும்படி வற்புறுத்தினாள்.

"இவ்வளவு சுதி சுத்தமாய்..........நுட்பமாயெல்லாம் பாட வராது.......... ஏதோ கொஞ்ச நாள் வீணை படிச்சேன். அதுக்கான நேரத்தை ஒதுக்கி உழைச்சு என் குருத்தினிக்கு நான் 'sincere' ராயில்லை................ அதனால பாதியில நிறுத்திட்டன்."

"பரவாயில்லை....... முடிஞ்சவரையில தெரிஞ்சமாதிரி பாடுங்க..... இங்க வேறு யார்தானிருக்கா........ கலையின்றதே கற்றுக்கொள்றதும் தெரிஞ்சுக்கிறதுமான விஷயந்தானே?"

அவள் விடுகிறமாதிரியில்லை. எதைப்பாடுவது.......... என் கீழ் மத்திமக்குரலுக்கு ஏற்றதாயிருக்க வேணுமே......... ? யோசித்துவிட்டு ஹம்சநந்தியில் நேரடியாகவே

"ஸ்ரீநிவாஸ திரு வேங்கடமுடையாய்

ஜெயகோவிந்த முகுந்த அனந்த

தீனசரண்யன் எனும்பெயர் கொண்டாய்

தீனன் எனைப்போல் வேறெவர் கண்டாய்- ஸ்ரீநிவாஸ

ஜெகம் புகழும் ஏழுமலை மாயவனே

திருமகள் அலர்மேல் மங்கை மணாளனே

ஜெக நாதா சங்குசக்ரதரனே

திருவடிக்கபயம் அபயம் ஐயா -ஸ்ரீநிவாஸ "

என்று பாடிமுடித்தேன்.

"பரவாயில்லை நல்லாவே பாடறீங்களே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கும் தெரியும் இது பரவாயில்லை ரகந்தான்.

நீங்க வற்புறுத்தினதுக்காக ஏதோ முயற்சி பண்ணினேன் இதெல்லாம் ஸங்கீதத்துக்குள்ள வராது. "No... No... No... You are too modest.... நல்லா ஸாதகம் பண்ணினாத்தேறிடுவீங்க எங்க இன்னொன்று.

ஐயையோ இன்னொன்றா அவ்வளவுக்கு வருத்திக் கொள்ளத் துணிஞ்சாச்சா சரி ஒரு தில்லான?

சூப்பர்

ஸ்ரீ ரஞ்சனியில் மஹாராஜபுரத்தார் தானே கொம்போஸ் பண்ணி அடிக்கடி பாடும் தில்லானா ஒன்று ஞாபகம் வசிகிறது.

**தகதீம் ததீம் நாகிருதீம்**

**ததோம் திருதீம் திரனா தனதிரனா**

**நாகிருதாறி தோம் திருதிம்**

**நாகிருதாறி தோம் திருதீம்**

**வுரிகிட தீம் தரிகிடதீம் தரிகிடதீம்**

**வுரன தீம் திரனா திரனா**

**ஆடதக தரிகிடதீம் தக்கிட தரிகிடதீம்**

**தாகிட ததீம்த தக தனாங்கு தகதீம்**

**தனாங்கு தக தீம் தனாங்கு தா தீம் தளாங்கு தக தீம்**

கையில் "ஆதி" போட்டவள் கைப்பையை என்னிடம் தந்துவிட்டு மெல்லிய விரல்களைக்காற்றில் வீசி நளினமாக ஆடினாள்

கலை தரும் வகை தெரியாத பரவசத்தில் ஆழத்தோய்ந்தோம். வானாகவே இந்தியில் 'பஜன்' ஒன்று பாடவும் இலேசான அவள் குரல் வானம் வரை ஏறிப்பின் காட்டுப்புலம் முழுவதும் பரவ களைப்பின்றி நாம் நடந்தோம்.

கீழே பதவில் தாழ்நிலவயலிடையே குட்டையொன்றில் பொன்வானம் பிரதிபலித்துப் பாரிய தங்கத்தாம்பாளமென மின்னியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் நடக்கையில் சிறிய கண்மாயொன்று வந்தது. அதிலே அமர்ந்தோம். வயல்களுக்கான பாசனவாய்க்காலொன்று அதன் கீழே கிளுக் கென்றது.

“சாப்பிடலாமா? “ என்றாள்

“ஏது“

“புளியோதரை கொண்ணந்திருக்கிறேன்.“

தன் தோற்பையைத் தூக்கிக்காட்டினாள். வாய்க்காலில் கையை அலம்பிவிட்டு சாப்பிட்டோம். வாழைமடலில் கட்டியிருந்த புளியோதரை கட்டுச் சாப்பாட்டுக்கேயுரிய வாசனையுடன் திவ்யமாக விருந்தது.

மீண்டும் நடக்க ஆரம்பித்தோம். வானத்து நட்ஷத்திரங்கள் ஒவ்வொன்றாக மெல்ல விடைபெறத் தொடங்கின. பாதையின் இருமருங்கிலும் நின்ற நாணல்களும், பால்மொண்டிகளும் பூனைவாலொத்த குந்துகளாலும் கதிர்களாலும் எம்மைத்தடவின.

கோவை, கூழாம்பழங்களை வைத்து நன்னிக்கொண்டிருந்த சிறு குரங்குகள் நெற்றியில் கைவைத்து எம்மை நோக்கிவிட்டு விரைந்து மரங்களில் தாவின. எமது காலரவத்தைக் கேட்ட குழிமுயல்கள் குட்டிகளுடன் விரைந்துபோய் புதர்களுள்ளும், பற்றைகளுள்ளும் ஒளிந்துகொண்டன.

மேலே நடந்து செல்லவும் பாதை மணற்பாங்கானதாக மாறியது. வருவது ஒரு ஆற்றுப்படுக்கையாக இருக்கலாம். அதை ஊர்ஜிதம் செய்வதுபோல காற்றும் அதீதமான குளிரை அள்ளிவந்து போர்த்தியது.

குளிருதே ஸ்வெட்டரைக் கொண்டு வந்திருக்கலாம்.

ஆமாம் எடுத்து வந்திருக்கலாந்தான் என்றேன் நானும் என்னிடமும் ஸ்வெட்டர் இருப்பதைப்போல்.

தனியாகப் பறந்து வந்த கொக்கு ஒன்று தன் இடது சிறகைப்பதித்து அரைவட்ட “டைவ்“ அடித்துத் திசையை மாற்றிக்கொண்டு பறந்தது. மீதமிருந்த வெள்ளிகளும் ஓய்வெடுக்கச் செல்லத் தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றின் படுக்கையிலிருந்து தொடர்ந்த மணற்பாதை புல்லுகளும் செடிகளும் செறிந்து வளர்ந்த மண்பாதையாகியது. அதைக்கவனித்தே நடக்க வேண்டியிருந்தது. நடைப்பாதையை விட்டுக் கொஞ்சம் விலகினாலும் தொட்டாற்சுருங்கியும் நாயுருவியும் கால்களைப் பிராண்டின.

முழுக்கக் காய்ச்சிய இரும்பைப்போல தகதகத்துக் கொண்டிருந்த வானம் மெல்ல மெல்ல ஆறிப்போக வயல்வெளிகளின் பின்னே தெரிந்த காடுகளும் இருட்டில் இல்லாமற்போயின.

மேலே செல்ல மிருதுவாகவும் பாதங்களுக்கு சுகமாகவுமிருந்த மணற்பாதை ஈரமானதாகக் காணப்பட்டது. பாதை மெல்லச் சரிவாகச் சென்று பள்ளத்தில் இறங்கியது. எங்கே சிலுங் சிலுங் சிலுங் கென்று சிற்றருவியொன்று நடந்துகொண்டிருந்தது. பாலியாறு என்பது இதைத்தானோ? ஆழம் அதிகமில்லை. இலகுவாகக் கடந்து வெளியேறினோம்.

வானத்தில் புள்ளிப் புள்ளியாக மினுக் மினுக்கென்று வெளிச்சங்கள் தெரிந்தன. அவை ஏதேனும் வீடுகளிலிருந்து வரும் வெளிச்சமா இல்லை. காவற் கொட்டில்களிலிருந்து வருகின்றனவா தெரியவில்லை. வேட்டைக்குப் போபவர்களின் சூழ்களாகக் கூட இருக்கலாம். இருள் அதிகமாக அதிகமாக என்னை நெருங்கி நெருங்கி நடந்தாள். அவள் நாசியும் என் தோட்பட்டையும் ஒரே உயரமாகவிருந்ததால் அவள் மூச்சின் உஷ்ணம் என் கழுத்தையும் தோட்பட்டையையும் சுட்டது. அந்த நெருக்கமும் அவளிடமிருந்து வந்த பெண் வாசனையும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சமயத்தில் தோளும் தோளும் உராய்ந்தன. பல தடவைகள் பாதையிலிருந்த கிடங்குகளில் காலிடறுப்பட்டு விழப்போனாள். அடுத்த தடவை அவள் காலிடறியபோது தெறிவினையாக அவள் இடது கையைப்பற்றினேன். பாதஇரசம் கொண்ட பாத்திரத்தினுள் கையைப் புதைத்த மாதிரி சில்லென்றிருக்கிறது. இது எதனால் பயத்தினாலா?

நான் அவள் கையைப்பற்றிக் கூட்டிப்போவது ஒன்றும் தப்பாகப்படவில்லை. மிகவும் நியாயமாகவே இருந்தது. அவளும் ஆட்சேபிக்கவில்லை. பூனைவால் பூவைப்போல மிருதுவாயிருந்த அவள் விரல்களுக்கு வலிக்காமலும், அதேவேளை பறிபட்டுவிடாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுக்கு அழுத்தமாகவும் பற்றிப்பிடித்தேன். குளிர்ந்திராத அவள் கையும் நேரமாக ஆக உஷ்ணமாகிறது. இந்த ஸ்பரிஸத் தொடுப்பூடாக ஏதோவொரு அதிர்வெண்ணில் மாய அலையொன்று என்னுள் செலுத்தப்பட என்னுள்ளிருந்த ரயில் எஞ்சின் அருட்டப்பட்டு அதன் பகுதிகள் சூடாகி ஜிவ்ஜிவ் என்கிறது.

அந்த ஸ்பரிசம் தேவையாகவுமிருக்கிறது. என்தொடுகை மட்டும் அறுந்துவிட்டால் உயிர் இயங்காதுபோகச் சத்தியற்றுச் சாய்ந்துவிடுவேன் போலுமிருந்தது.

இந்த உரிமை எப்படி என்று சிந்திக்க விருப்பமில்லாதிருந்தது. இடையில் அந்த சண்டைப்பிரகிருதி விட்றா கையை அயோக்கியப் பயலே என்றால் அந்த சுகத்தை இழந்து போய்விடுவேனோ? இந்தப் படவாவின் முகத்தை இப்போது கண்ணாடியில் பார்க்க வேண்டும். என்ன திருடனைப் போலிருப்பான்.

இது ரொம்பவும் தப்பென்றால் அவள் கையை உதறிவிட்டிருக்கலாமே அவளும் என்னைப்போலவே தன்னுள் போராடுகிறாளோ, கையை உதறுதல் என்னை அவமதித்ததாகவோ புண்படுத்தியதாகவோ இருக்கும் என எண்ணுகிறாளோ?

முழங்காலுக்குக் கீழும் அலம்பல் கட்டால் விளாசியதுபோல சரக் கென்று முள்ளம்பன்றியொன்று அடித்துவிட்டு என்னைத் தேய்த்து உராய்ந்து கொண்டு குறுக்கே ஓடவும் ஐயோ என்று அலறிக்குதித்தவள் தள்ளிக்கொண்டு என்னில் தாவிச்சாய்ந்தாள். எடுத்து மேலே என்ன கரடிதான் விழுந்து பிடுங்கப்போகிறதோவும் தெரியாது அவளும் பயப்பட வேண்டாமேயென்று என்ன முயலாக்கும் என்றேன்.

அவளின் மொத்தலால் மார்பின் மென்மையான ஸ்பரிசம்பட்டு மனம் நெக்கி அலைந்தது. இவ்வளவு பக்கமிருக்கே சும்மா அலையாமல் அள்ளேன்டா பரதேசி. எவன் சொன்னான். என்னை வம்பில் மாட்டிவிட்டும் சொல்லுவானவன். அவனை முழுவதும் நம்பிவிடவும் கூடாது.

என் உணர்ச்சிகளை அவள் முழுவதும் புரிகிறானா ? புரிந்துக் கொண்டுவிட்டுப் ப்பூ இவ்வளவுதானா நீ? என்று துள்ளினாளேயானால் எப்படி நான் நொறுங்கி ஒடுங்கிப்போய் விடுவேன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

என்றோ ஒரு நாள் அரைத்தூக்கத்தில் கேட்டுவிட்டு மறந்துபோன ஒரு ஹிந்துஸ்தானி மெலடி, பின்னால் பலதடவைகள் நான் அதை நினைவில் கொண்டுவர முயன்றும் அதன் கட்டமைப்போ இல்லை சாயலின் ஒரு சிறு கூறுதானோ நினைவுக்கு மறுதரிசனம் தரமுடியாதென்று முரண்டு பண்ணியது. இப்போ வலியவே பூரணமாய்ப் பெருகி வந்து என் இசைப்புலம் முழுவதையும் நனைத்தது.

மின்மினிகள் குறுக்கும் மறுக்கும் பறந்தன. எமது அரவத்தை உணர்ந்து கொண்ட ஆட்காட்டிப்பறவைகள் குரல் கொடுத்தன.

மணற்பாதை அகன்று மணற்பாங்காகி பாதங்கள் ஈரத்தை உணரத்தொடங்கவும் மீண்டும் அருவி குறுக்கிட்டது. அருவியின் இருமருங்கிலும் ஓங்கி வளர்ந்திருந்த மருதமரங்களின் கிளைகள் குனிந்து அருவியைத் தொட்டுக் கொண்டு நிற்பது இருட்டில் பல இராட்சத அரக்கர்கள் அப்படி அணிவகுத்து நிற்பதைப் போலிருந்தது.

அவளையும் அவை அப்படித்தான் பயங்காட்டினவோ என்னவோ உரசல் இப்போது அதிகமாகவேயிருந்தது. இந்தப்பாதையும் அருவியுமென்ன இருட்டில் கில்லித்தாண்டல் விளையாடுகின்றனவா? பின்னல் ஜடையின் பிரிகளைப்போலத் தம்பாட்டில் பிணைந்தும் பிரிந்தும் ஒன்றோடொன்று பின்னிச் செல்கின்றனவே?

நடந்தோம் மறுபடி அருவிவந்தது. இம்முறை நாலைந்து அடிகள் வைத்தவுடனே நீர் மட்டம் முழங்கால்வரை ஏறியது. நடுவில் ஆழம் அரைக்கு மேலேயே போகலாம். முழங்கால்வரை சேலையை மடித்துச் சிரமப்பட்டாள். எனக்கு ஒரேவழிதான் புலப்பட்டது.

கேட்டேன் நான் வேணுமென்றால் சேலை நனைந்துவிடாமல் உங்களைத் தூக்கிக் கொள்ளவா ?

அவள் வேண்டாம் என்று மறுக்கவே அவகாசம் தராது நான் லங்கோட்டுடன் நின்று கொண்டு வேஷ்டியை மடித்து உத்தரீயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலத்தோளில் போட்டுவிட்டு அவளை ஒரு வாழைக் குட்டியைப்போல அலாக்காய்த் தூக்கிக் கொண்டு நடந்தேன்.

ஆழம் இடுப்புவரை இருக்கத்தான் செய்தது. உணர்ச்சிகளை முறிக்கவேண்டிய தண்ணீர் என்னுள் இன்னும் அனலைமூட்டி வளர்க்கிறது. மயிர்க்கால்கள் வேறு சிலிர்க்கின்றன. - கீலா விலிருந்த காதலித்தவளை ஒன்று எங்கிருந்தோ உரத்து விசிலடிக்கிறது.

கொஞ்சம் இறுக்கமாகவே அணைத்தேன்.

மட்டாக அரைத்த மாவினுள் விழுந்து புரண்டு அளைந்த மாதிரி அவள் தேகம் தந்த சுகம் மோடி கிறக்குதடி தலையை

கனியே நினது இன்பம் வேணுமடி! என்று ஏங்க வைத்தது. சற்றே தேவைக்கு அதிகமாகவே கைகள் இறுக்கி அணைத்துக் கொண்டன. தண்ணீர் மட்டம் முழங்காலளவுக்கு வந்தபோது இறங்க எத்தனித்தாள். மேலும் இறுக்கினேன்.

ஒரு மானைப்போலத் திமிறி விடுவித்துக் கொண்டு தள்ளிப்போய் நின்றாள். என் ஆசைகள் அருவியில் கொட்டப்பட்டு சங்கடம் நிறைந்த கணம் நகரா நிற்கையில் அவன் வந்து வந்தனங்கள் ஆனந்தம் என்றான் முன்பொரு முறை சுவரில் ஆணி அடிக்கும்போது விரலில் சுத்தியலால் அறைபட்டுத் துடித்துக் கொண்டிருக்கையில் வந்து வந்தனம் சொன்ன பிரகிருதி அல்லவா? அவளுக்கு சாரி சொல்ல வேணுமா வேண்டாமா என்று குழம்பித் தவிக்கையில் அவன் எந்த ஆணையோ அட்வைசோ தராமல் சும்மா என்னை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். என்னுள் கோபம் பிரவகிக்கிறது!

என் வட்டத்தில் எத்தனை அழகு ரூபிணிகளைக் கண்டு கொள்ளாமல் இருந்திருக்கிறேன். அனைவரும் அவர் அகவைப்பருவத்து மாணவிகள். இயற்பியலில் ஓட்டமின்னியல் பாடம். அன்று கரும்பலகையில் மின்சுற்று ஒன்றை வரைந்து கொண்டிருக்கிறேன். காதில் கேட்கிறது..

மாஸ்டருக்கு வடிவான பல்லடி

போடீ கட்டைத்தாரா அவர் எனக்குத்தான் மாட்ச்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனங்களைக் காதில் போடாதிருந்தால்தான் பாடம் நடத்தலாம். முன் பெஞ்சில் ஒருத்தி கிசுகிசுப்பான குரலில் சொன்னாள்.

இவ உங்களை அத்தானாம்! யாரந்தத் துணிச்சற்காரி?

சட்டெனத் திரும்பினேன். என்னை யே வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த வகுப்பின் ஹீரோயினான அழகி நாணித் தலைகவிழ்கிறாள்.

இன்றைய இச்சலனத்தின் மூலவேர்தான் என்ன?

அவளது கலையா ? எளிமையா? எறிவா? அல்லது என் தனிமையா?

அவள் தொடர்ந்து வரவில்லை. சற்று நின்றேன். வருவதாயில்லை.

எங்குதான் போய்விடப்போகிறாள்? மனது வக்கிரம் கொண்டது. மெதுவாக நடந்தேன். பாதையை விட்டிறங்கி காட்டினுள் மெல்ல ஒளிந்திருப்போமா? அப்போது என்னதான் செய்கிறாளென்று பார்ப்போம்?

வேண்டாம். நிஜமாகவே அவள் என்னைத் தொலைத்து விட்டாளாயின் எவ்வளவு பெரிய நம்பிக்கைத் துரோகம்? நளன் காலத்திலிருந்து வரும் பழி!

அவள் ஓடி வரும் காலடி அதிர்வு கேட்கிறது. அருகில் வந்ததும் மூச்சு வாங்கிய படியே சாரி ஹரிகேசன் என்றாள்.

எதுக்காம் ?

இவள் அருவியில் மூழ்கியே போவதாகவிருந்தால் உங்களைத் தொட்டுத் தூக்க நான் வைத்திருந்திருக்கப்படாது. It's absolutely My fault... I admit it... Yes... I admit it....நானும் ஒரு நிமிஷம் மயங்கிவிட்டேனென்று வைப்போமே. நாளைக்கு உங்களுக்கு இன்றைக்கு என் மேல இருக்கிற அபிப்பிராயம் இருக்காதில்ல?

மாடுகளுக்கு குறியிழுத்த மாதிரி தோலும் உரோமமும் சேர்ந்து கருகும் மணம் காற்றில் எழுந்து வந்து குமட்டியது.

மௌனமாக நடந்தோம். பனியில் குளித்த தேன் புற்கள் பாதங்களை நனைத்தன. உடலின் முன் பக்கம் கெழுத்தி மீனைப்போலவும், பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் டொல்பினைப் போலவுமிருந்த விலங்கொன்று வானில் "டைவ்" அடித்துப்போனது.

நாங்கள் கவனிக்காத கணமொன்றில் சூரியனிலிருந்து உடைத்துக் கொண்டு வந்துவிட்ட ஒரு பெரிய துண்டுபோல் ஒரு வெள்ளி வடகிழக்கில் தோன்றித் துள்ளித்துள்ளி எறித்தது.

எதோ விடிவெள்ளி! என்றாள்

வானத்தின் வெள்ளிப் பனித்திட்டுகளிடையே Sledgeகளில் குள்ளமான மனிதர்களிருக்க அதில் பிணைத்திருந்த ஏழெட்டு நாய்கள் அதை வேகமாக இழுத்துக்கொண்டு வழுக்கின.

"Capra"வின் The Tao of Physics படித்தீர்களா? கேட்டாள்.

கேள்விப்பட்டிருக்கிறேன்.. இனிமேல்த்தான் படிக்கவேணும் ? கீழ்வான விளிம்பில் மெல்லச் சிவப்பேறியது.

"ம்ம்ம் பார்த்தீர்களா வானத்தை அது விடிவெள்ளியேதான்! குதூகலித்தாள்.

மல்லிகை, முல்லை, சம்பங்கி, மருக்கொழுந்து, இரவுராணிப் பூக்களுடன் என்றுமே பார்த்திராத ஆயிரம் மலர்கள் எல்லாமே இதழ்களால் ஒளி உமிழ்வனவாய் வானத்தில் மேலும் பூக்க பவனத்தில் மேலும் சுகந்தம் நிறைந்தது

டெடி பியரைப்போலிருந்த முகிலொன்று தூரத்தே காட்டில் இரகசியமாய் வழுக்கி வழுக்கி இறங்கிக் கொண்டிருந்தது.

இன்னும் பாதை அடிவானம் நோக்கி நீள்வதாயிருந்தது.

ஆனால் தெளிவாகவிருந்தது.

நாங்கள் நடந்தோம்.

UNIVERSITY OF PERADENIYA
2003-7-26
LIBRARY

(இன்னுமொரு காலடி - லண்டன் - 1998)

545997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
2003-7-26
LIBRARY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பொ. கருணாகரமூர்த்தி** இலங்கையில் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1980இன் முற்பகுதியில் புலம் பெயர்ந்து ஜெர்மன் நாட்டின் புகழ்மிக்க பேர்லின் நகரில் வாழ்பவர். புலம் பெயர்ந்து வாழும் படைப்பாற்றல் மிக்க தமிழ் எழுத்தாளர்களில் புகழ் மிக்கவர்.

அன்னாரின் **ஒரு அகதி உருவாகும் நேரம்** கணையாழி தி.ஜானகிராமன் குறுநாவல் போட்டியில் (1994) தேர்வு செய்யப்பட்டது. ஆழமும் விரிவும் வேகமும் கொண்ட இக்குறுநாவல் அவரின் படைப்பாற்றலையும் மொழிச் சிறப்பையும் காட்டும். இக்குறுநாவலுடன் **வாழ்வு வசப்படும்** நாவலும் **மாற்றம்** என்ற குறு நாவலும் தொகுப்பாக 1996ல் வெளிவந்து தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டார். அதே ஆண்டிலேயே **'கிழக்கு நோக்கிச் சில மேகங்கள்'** சிறுகதைத் தொகுதியும் வெளிவந்தது.

இதுவரை 4 குறுநாவல்களும் 50க்கு மேற்பட்ட சிறுகதைகளும் எழுதிய இவரின் **'அபிராமியின் அந்தரங்கக் குறிப்புகள்'** என்ற நீண்ட நாவல் விரைவில் வெளிவர உள்ளது. புனை பெயர்களில் கவிதைகள் அவ்வப்போது எழுதிய போதும் கட்டற்ற சுதந்திரத்துடன் நாவல், சிறுகதைகள் எழுத வேண்டும் என்பதே அவரது கொள்கையாகும். இக்கோட்பாடு கொண்ட அவரது சிறுகதைகளை இத்தொகுதியும் அறிமுகப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org